பக்கங்கள்: முப்பத்திரண்டு+X

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2041 கார்த்திகை 26 ஞாயிற்றுக்கிழமை (12.12.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 016

## அந்தணர் வீட்டில் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் பிரதம குருவும் மகன்மார் இருவரும் படுகாயம்

### சங்கானையில் நேற்றிரவு பயங்கரம்; முகமூடி நபர்கள் மோ.சைக்கிளை அபகரித்துச் சென்றனர்

சங்கானை,டிசெ.12

சங்கானை இழுப்பைத்தாழ் முருகமூர்த்தி ஆலய பிரதம குருவின் வீட்டுக்குள் நேற்றிரவு 8.40 மணியளவில் புகுந்த முகமூடி அணிந்த இனந்தெரியாதவர்கள் பிரதம குருவையும் அவரது இருமகன்மார்களையும் சுட்டும் வெட்டியும் காயப்படுத்திய பின் தப்பிச் சென்றனர்.

இந்தச் சம்பவம் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவத்தில் காயம் அடைந்த சி.நித்தியானந்தக் குருக்கள்(வயது 56), அவரது மகன்மாரான சிவானந்த சர்மா (வயது 32), ஜெகானந்தசர்மா (வயது 26) ஆகியோர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச்சம்பவம் குறித்து தெரிவிக்கப்படுவதாவது :-

பிரஸ்தாப குருக்கள் குடும்பத்தினர். வவுனியாவில் இருந்து புதிய மோட்டார் சைக்கிள் ஒன்றைக் கொள்வனவு செய்து நேற்று வீட்டுக்கு எடுத்து வந்திருந்தனர்.

நேற்றிரவு சைக்கிளில் வந்த மூவர் அவரது வீட்டுக்குள் நுழைந்து அந்த மோட்டார் சைக்கிளை எடுக்க முனைந்தனர்.

பிரதம குருவும் அவரது மகன்மாரும் அதைத் தடுக்கவே அவர்களைச் சுட்டும் வாளால் வெட்டியும் விட்டு மோட்டார் சைக்கிளுடன் மூவரும் தப்பிச் சென்றுவிட்டனர். தாம் வந்த சைக்கிளை அங்கு விட்டு இனந்தெரியாதவர்கள் சென்றுள்ளனர்.

பிரதம குருவின் கழுத்தில் வெட்டுக் காயமும் கையில் சூட்டுக் காயமும் (31ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையின் மனித உரிமை நிலைவரம் உன்னிப்பாக கவனித்து வருகிறது அமெ.

### அந்நாட்டு அமைச்சர் கையொப்பமிட்டு அறிக்கை

வொஷிங்ரன்,டிசெம்பர்12

இலங்கையின் மனித உரிமை விவகாரங்களை தொடர்ச்சியாகக் கண்காணித்து வருகின்றோம். அதில் மாற்றம் ஏதுமில்லை.

அமெரிக்க அரசின் சார்பாக ஜனநாயக மனித உரிமைகள் மற்றும் தொழில்துறை பிரதி அமைச்சர் மைக்கல் போஸ்னர் கையொப்பமிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச மனித உரிமைகள் தினத்தைமுன்னிட்டுவிடுத்துள்ள அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இலங்கையில் கடந்த காலங்களில் நடந்தது என்னவென்பதையும் நாங்கள் அவதானித்துக் கொண்டுதான் இருக்கின்றோம். அது மாத்திரமன்றி ஐ.நா. நிபுணர்கள் குழு இலங்கை விடயத்தில் எப்படிச் செயற்படப்போகின்றது. என்பதையும் மிகவும் உன்னிப்பாக அவதானித்துக்கொண்டிருக்கின்றோம் - என்றுள்ளது.

மனித உரிமைகள் தினத்தை ஒட்டி அமெரிக்கா சர்வதேச மட்டத்தில் வெளியிட்ட அறிக்கையில் இலங்கை நிலைவரம் குறித்தும் கருத்து வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ஒ-ஐ)

## மழையால் கண்ணிகள் அகற்றுவது நிறுத்தம் வலி. வடக்கில் மீள் குடியமர்வில் தடங்கல்

யாழ்ப்பாணம், டிசெ.12

வலி.வடக்கில் மீள் குடியமர்வு நடவடிக்கையில் தடங்கல் ஏற்பட்டுள்ளது. கண்ணிவெடி அகற்றும் பணிகள் மழையால் பாதிக்கப்பட்டுள்ளதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

பலாலி படைத் தலைமையகத்தின் ஊடகப் பிரிவு மேற்கண்டவாறு தெரிவித்தது.

வலி. வடக்கில் கண்ணி வெடி அகற்றும் பணிகள் முடிவடைந்ததும் மீள் குடியேற்றம் இடம்பெறும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதுதொடர்பாக படைத் தலைமையகத்தின் ஊடகப் பிரிவிடம் (31ஆம் பக்கம் பார்க்க)

## ஐரோப்பிய பயணங்களுக்கு நெடியவனிடம் விஸா பெறவேண்டிய நிலைமை வரலாம்

### இப்படிக் கூறுகிறார் சம்பிக்க

கொழும்பு,டிசெ.12

எதிர்காலத்தில் இலங்கையர்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு பயணம் மேற்கொள்ளும்போது புலிகளின் முக்கியஸ்தர் நெடியவனிடம் விஸா பெறவேண்டிய நிலை உருவாகும். இப்படிக் கூறியுள்ளார் அமைச்சர் சம்பிக்க ரணவக்க

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் மாநாட்டின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:-

புலம்பெயர் தமிழர்கள் என்கிற சொல்லை என்னால் ஏற்க முடியாது. ஏனெனில் இவர்களுக்கு இலங்கை என்கிற சொந்த நாடு உண்டு. பொருளாதார நோக்கங் (31ஆம் பக்கம் பார்க்க)




## தீர்வுக்காக ஒன்றிணைந்து செயற்பட தமிழ்க்கட்சிகள் அனைத்தும் இணக்கம்

### 6 பேர் கொண்ட குழுவும் நியமனம்


கொழும்பு,டிசெ.12

இனப்பிரச்சினைக்குப் பொருத்தமான ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைக்கும் வகையில் இணைந்து செயல்பட தமிழ்க் கட்சிகள் அனைத்தும் இணங்கி உள்ளன. பொதுத் தீர்வுத் திட்டம் ஒன்றை எட்டும் வகையில் அடிப்படைக் கொள்கைகளில் இணக்கப்பாட்டை எட்டுவது தொடர்பில் ஆராய்வதற்காக 6 பேர் கொண்ட குழு ஒன்றும் நியமிக்கப் பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுத்த அழைப்பை ஏற்று தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள் நேற்று கூட்டமைப்புத் தலைவர்களைச் சந்தித்துப் பேசினர்.

"தீர்வுக்கான அடிப்படைகளில் இணக்கத்தை ஏற்படுத்துவதே எமது நோக்கம். அதற்காக கூட்டமைப்பு சார்பில் மூவரும் தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தின் சார்பில் மூவரும் அடங்கிய குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது" - என்றார் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன்.

தமிழ் மக்களின் உடனடிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் (31ஆம் பக்கம் பார்க்க)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வடக்கு மாகாண சபை அலுவலகங்கள் யாழ்ப்பாணத்தில் ஜனவரி முதல் இயங்கும்

### நேற்று பால் காய்ச்சி அங்குரார்ப்பண நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், டிசெ.12

வட மாகாண அலுவலகங்கள் யாவும் எதிர்வரும் ஜனவரி முதல் யாழ்ப்பாணத்தில் இயங்கவுள்ளன.

அந்த அலுவலகங்களை இயக்குவது தொடர்பான சமய சம்பிரதாய நிகழ்வுகள் நேற்று நடைபெற்றன.

வட மாகாண சபையின் 7 அலுவலகங்கள் நேற்று பால் காய்ச்சி சம்பிரதாய பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டன.

வட மாகாண சபையின் பிரதம செயலாளரின் அலுவலகம் திருநெல்வேலியிலும், உள்ளூராட்சி அமைச்சின் அலுவலகம் கைதடியிலும், திட்டமிடல் அலுவலகம் கல்வியங்காட்டிலும், கணக்காய்வுத் திணைக்களத்தின் அலுவலகம் நாயன்மார் கட்டிலும், மற்றும் வட மாகாண ஆளுநரின் அலுவலகம் சுண்டுக்குளி காட்டுக் கந்தோர் ஒழுங்கையிலும், கூட்டுறவு ஆணையாளர் திணைக்களம் நல்லூர் அம்மன் வீதியிலும், திறைசேரி அலுவலகம் றக்கா வீதியிலும் நேற்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டன.

நேற்று முற்பகல் 10 மணி முதல் மாலை 5 மணிவரை நடைபெற்ற இந்தச் சம்பிரதாய நிகழ்வுகளில் வட மாகாண பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி, ஆளுநரின் செயலாளர் சி.தங்கராஜன் ஆகியோர் உட்பட அந்தந்தத் திணைக்களத் தலைவர்களும் கலந்துகொண்டனர்.

அடுத்த மாதம் ஜனவரி முதலாம் திகதிமுதல் வடமாகாண சபையின் அலுவலகங்கள் யாவும் யாழ்ப்பாணத்தில் இயங்கவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-9)

# குடாநாட்டில் சிறுவர் தொடர்பான விழிப்புணர்வு வீதி நாடகங்கள்

### இன்று சாவகச்சேரிப் பகுதிகளில்

யாழ்.சமூக செயற்பாட்டு மையத்தினால் (ஜெசாக்), சிறுவர் உரிமைகள் மற்றும் விழிப்புணர்வு தொடர்பான வீதி நாடகங்கள் யாழ்.குடா நாட்டின் பல இடங்களிலும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ். சமூக செயற்பாட்டு மையத்தின் கீழ் இயங்கும் சிறுவர் கழக அங்கத்தவர்களின் ஆற்றுகையில் உருவான மேற்படி வீதி நாடகங்கள் இன்று முதல் நடைபெறவுள்ளன என்று சிறுவர் கழக இணைப்பாளர் ஒருவர் தெரிவித்தார்.

கொழும்புத்துறை றொசாறியபன் சனசமூக நிலைய சிறுவர் கழகச் சிறுவர்களின் இந்த வீதி நாடகம் இன்று காலை முதல் சாவகச்சேரியின் பல கிராமங்களில் நிகழ்த்தப்படவுள்ளது.

சிறுவர் மீதான வன்முறைகள், துஷ்பிரயோகங்கள், அழுத்தங்களை நீக்கும் வகையான விழிப்புணர்வை சமூக மட்டத்தில் ஏற்படுத்தும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த வீதி நாடகங்கள் தொடர்ச்சியாக தீவகம் மற்றும் பல கிராமங்களில் நடத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஒ-135)

# வன்னிப் பகுதி சாதாரண தர மாணவர்களுக்கு பரீட்சை மண்டபங்கள் வசதியில்லை

கொழும்பு, டிசெ.12

வன்னிப் பகுதியில் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவிக்கையில்; தற்போது தேசியப் பரீட்சைகளை நடத்துவதற்கான அமைவிடங்கள் வட பகுதியில் முறையாகஏற்படுத்தப்படவில்லை. முக்கியமாக வட பகுதியிலுள்ள ஐந்து பாடசாலைகளான திருமுறிகண்டி வித்தியாலயம், வன்னிவிளாங்குளம் வித்தியாலயம், பெரிய புளியங்குளம் வித்தியாலயம், ஒலுமடு வித்தியாலயம், மாங்குளம் வித்தியாலயம் ஆகியன இந்தப் பரீட்சையை நடத்துவதற்கான அடிப்படை வசதிகள் இல்லாத நிலையில் கஷ்டங்களை எதிர்கொள்கின்றன.

இந்தப் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் மேற்படி பரீட்சையை எழுதுவதற்காக மாங்குளம் மகா வித்தியாலயத்தில் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால் இந்தப் பாடசாலையிலும் பரீட்சையை நடத்துவதற்கான வசதிகள் இல்லை. பரீட்சை மண்டபத்தின் கூரைகள் மழையின்போது ஒழுகுவதால் தளபாடங்கள் ஈரமாகவுள்ளன. இதனால் மாணவர்கள் பரீட்சை எழுதும்போது ஈரத்தில் கஷ்டப்பட வேண்டிய நிலையில் உள்ளனர் என்றும் தெரிவித்தார். (க)



சங்கானை இலுப்பைத்தாழ் முருகமூர்த்தி கோயிலடியில் நேற்று இரவு இடம்பெற்ற சூட்டுச் சம்பவத்தில் படுகாயமடைந்த ஆலய பிரதம குரு சி.நித்தியானந்தக் குருக்கள் அவரது மகன் சிவானந்தசர்மா ஆகியோர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள். (9)

# பனம் பொருள் உற்பத்தியாளர் தரச் சான்றிதழ் பெறுவது அவசியம்

### பனை அபிவிருத்திச் சபை அறிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.12

பனம்பொருள்களைக்கொண்டு உற்பத்தியில் ஈடுபடுவோர், அதற்கான தரச் சான்றிதழைப் பெற்றுக்கொள்வது அவசியமானது. தவறுவோர் மீது சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவித்துள்ளார் பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பனையிலிருந்து பெறப்படும் பதநீர், பனங்கள், பனங்கிழங்கு என்பவற்றை மூலப் பொருளாகக் கொண்டு உற்பத்தியில் ஈடுபடுவோர் உற்பத்திப் பொருள்களுக்கான தரச் சான்றிதழைச் சபையிலிருந்து பெறுதல் வேண்டும். அந்தத் தரச் சான்றிதழ் இன்றி உற்பத்தியில் ஈடுபடுவோர் மீது பனை அபிவிருத்திச் சபை சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்துள்ளது.

போலியான கலப்படம் மிக்க உற்பத்திப் பொருள்கள் சந்தையில் இப்போது அதிகளவில் விற்பனைக்கு வந்துள்ளதாக எமக்கு அதிக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

எனவே தான் போலியான தயாரிப்புகளைத் தடுத்துத் தரமான உற்பத்திகளை மேற்கொள்ளும் நோக்குடனேயே உற்பத்தியாளர்களுக்கு இவ்வாறான அறிவுறுத்தலை விடுத்துள்ளோம் - என்றார். (த-14)

# நூல் அறிமுக விழா

யாழ்ப்பாணம், டிசெ.12

கா.வைத்தீஸ்வரன் எழுதிய "உணவே மருந்து" என்னும் நூல் அறிமுக விழா எதிர்வரும் 19ம் திகதி மாலை 4.30 மணிக்கு இணுவில் கிழக்கு சிவகாமி அம்பாள் கல்யாண மண்டபத்தில் பி.கனகசபாபதி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக உலக சுகாதார தாபனத்தின் ஆலோசகர் வைத்திய கலாநிதி ந.சிவராசா தம்பதியர் கலந்து கொள்வர். சிறப்பு விருந்தினர்களாக த.கந்தசாமி, செ.இலகுநாதன், டாக்டர் மு.பஞ்சலிங்கம், வை.சி.பரமலிங்கம், க.காலிங்கராசா, கா.நடராசா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்வார்.

நூலின் முதற்பிரதியை த.தேவிகபாவன் பெற்றுக்கொள்வார். நூலின் வெளியீட்டுரையை செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகனும், கருத்துரைகளை கவிஞர் சோ.பத்மநாதன் ஆசிரியர், ந.விஜயசுந்தரம் ஆகியோரும் வழங்குவர். (201)

# சேறும் சகதியுமாகக் காணப்படும் மருதனார்மடம் பொதுச் சந்தை

வலி.வடக்கு, டிசெ.12

மருதனார்மடம் பொதுச் சந்தையில் வெள்ளம் தேங்கி நிலம் சேறும் சகதியுமாகக் காணப்படுவதனால் சந்தைக்குச் செல்லும் பொதுமக்கள், வியாபாரிகள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

சந்தை வளாகம் அண்மையில் பெய்த மழை காரணமாகச் சேறும் சகதியுமாக் காணப்படுகின்றது. குறிப்பாக விவசாயிகள் பொருள் நிறுக்கும் இடம் ஆகியன வெள்ளம் தேங்கிக் காணப்படுவதால் பொருள்களைக் கொண்டுவரும் விவசாயிகளும், வாங்க வரும் பொதுமக்களும் சிரமங்களை எதிர்கொள்வதாக கூறப்பட்டது.

சந்தைக் குத்தகை மூலம் பல லட்சம் ரூபாவை வருமானமாக பெறும் பிரதேச சபை சந்தைக்கு வரும் விவசாயிகள், பொதுமக்கள் ஆகியோரின் தேவைகள் குறித்து கவனம் செலுத்த வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மழை பெய்தும் தமது பொருள்களை நிறுக்கும் இடத்துக்கு வெள்ளத்தின் மத்தியில் காவிச் செல்வதில் பலத்த சிரமத்தை எதிர்கொள்கின்ற போதும் பிரதேச சபை இதுவரை இப்பகுதியைத் திருத்தி வெள்ளம் தேங்காது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை எனக் குற்றஞ்சாட்டப்படுகிறது. (த-86)

### ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சை நாளை

# அனுமதி அட்டை வழங்க மறுக்கும் அதிபர்களுக்கு எதிராக நடவடிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.12

நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகும் ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கு அனுமதி அட்டை வழங்க மறுக்கும் அதிபர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

வடக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்களில் சிலரின் அனுமதி அட்டைகளை வழங்க அதிபர்கள் மறுப்பதாக வெளிவந்துள்ள தகவல் தொடர்பாக கருத்து வெளியிடுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

பரீட்சைக்கு விண்ணப்பித்த எந்த மாணவருக்கும் அனுமதி அட்டை வழங்க மறுப்பது நியாயமற்ற செயல். அவ்வாறு அனுமதி அட்டை வழங்க மறுக்கும் அதிபர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

அனுமதி அட்டையை அதிபர் வழங்க மறுத்தால் கோட்டவலயப் பணிப்பாளர்களுடன் தொடர்புகொண்டு பரிகாரம் பெற முடியும்.

அப்படியும் பரிகாரம் கிட்டாவிட்டால் நேரடியாக ஆள் அடையாளத்தை நிரூபிக்கும் ஆவணத்துடன் பரீட்சை மண்டபத்துக்குச் சென்று பரீட்சை மேற்பார்வையாளருடன் தொடர்புகொண்டு தற்காலிக அனுமதி அட்டை பெற்று பரீட்சைக்குத் தோற்றலாம்.

அனுமதி அட்டை வழங்கப்படாவிட்டால் இந்த நடைமுறையைப் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்கின்றேன் என்றார் அவர். (ஒ-ஐ)

# இரவிரவாக நடைபெற்ற மாநகர சபை ஊழியர்களின் பணிகள்



யாழ்ப்பாணம், டிசெ.12

யாழ்.ஸ்ரான்லி வீதியிலுள்ள நீர் விநியோகக் குழாய் சேதமடைந்ததால் யாழ்.மாநகர சபை ஊழியர்கள் இரவிரவாக பணிகளை மேற்கொண்டனர்.

ஸ்ரான்லி வீதியூடாக நாவாந்துறைக்கு செல்லும் நீர் விநியோகக் குழாயே இவ்வாறு சேதமடைந்தது.

அப் பகுதி மக்களுக்கான நீர் விநியோகம் தடைப்படாத வகையிலும் போக்குவரத்து நெருக்கடிகளை தவிர்க்கும் முகமாகவும் இந்தத் திருத்த வேலைகள் இரவிரவாக மேற்கொள்ளப்பட்டதாக யாழ்.மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்தார்.

இதேவேளை -

நேற்றிரவு 9 மணியளவில் அவ்விடத்திற்குச் சென்ற மாநகர முதல்வர் அங்கு நடைபெற்ற திருத்தப் பணிகளை பார்வையிட்டார்.

இந்தத் திருத்த வேலைகள் இன்று முற்பகல் 9 மணியளவில் பூர்த்தியாகும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனடோலும் பச்சைத் தண்ணீரும்

இன்று ஆயுதங்களின் வெடியோசை இல்லை, அபாய விமானங்களின் பறப்புக்கள் இல்லை, மக்களின் அவலச் சாவுகளில்லை,நிலத்துக்குள் பதுங்கி வாழ வேண்டிய அச்சுறுத்தலும் இல்லை. மொத்தத்தில் பிரிட்டனிடமிருந்து இலங்கை சுதந்திரம் பெற்றதை விடவும் இப்போதுதான் மக்கள் மேற்கண்ட அபாயங்களிலிருந்து 'சுதந்திரம் பெற்றி ருக்கிறார்கள் என்பதை எற்கத்தான் வேண்டும்.

சர்வதேசத்துக்கு இலங்கை அரசு பறைசாற்றுவதெல்லாம் இலங்கையில் இப்போது சமாதானம் நிலவுகின்றது, பயங்கரவாதம் கட்டுப்படுத்தப்பட்டு போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது என்றுதான். தற்போது இலங்கையில் போர் நடக்கவில்லை என்பது உண்மைதான். ஆனால் இதில் ஒரு திருத்தத்தை மேற்கொண்டால் மட்டுமே தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்வர். அது 'ஆயுதங்களால் ஆள்களை இப்போது சுடுவதில்லை' என்ற மாற்றம்தான்.(இதிலும் மக்களுக்குச் சந்தேகம் உள்ளது) இவற்றை விட மற்ற எல்லா வழிகளிலும் மக்கள்மீது நெருக்கடிகள் தொடரவே செய்கின்றன.

போரை முடிவுக்கு கொண்டு வந் தமை பற்றிய அரசின் அறிவிப்பு, இலங்கைக்கு உதவிகளும் ஒத்தாசைகளும் வழங்கிய நாடுகளின் பார்வைக்கு மிகச்சரியானது - பாராட்டுக்குரியது. ஆனால் நெருக்கடிகளை அனுபவித்த, அனுபவித்துக்கொண்டிருக்கும் மக்கள் பார்வையில், உண்மையில் போரும் அது சார்ந்த பிரச்சினைகளுக்கும் முற்றுப் புள்ளி வைக்கப்படவேயில்லை. இதை வெளிநாட்டிலிருந்து இலங்கை வந்த சென்ற இராஜதந்திரிகளும் அரசியல்வாதிகளும் புரிந்து கொள்வர். இலங்கையில் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டாலும் தமிழ்மக்களின் பிரச்சினை தொடர்கிறது என்ற பாணியில் இலங்கை வந்து சென்ற இராஜதந்திரிகள் பலரின் கருத்துக்கள் அமைந்துள்ளன.

அரசின் மாய யுத்தத்தை சரி எனவும், தேவை எனவும் ஏற்கும் நாடுகளின் நிலைப்பாட்டை 'தலையிடியும் காய்ச்சலும் தனக்கு வந்தால் தெரியும்' என்ற பழமொழிதான் சரியாக வெளிப்படுத்தும். இந்த நாடுகளிடம் தமிழ் மக்கள் கேட்பதும் இதைத்தான். காய்ச்சல் என்றால் - சரி பனடோலைப் போடு என்று காய்ச்சல்காரனைப் பார்த்துச் சொன்னால் மட்டும் போதாது. காய்ச்சல், தலையிடி என்பன வேறு ஏதோவொரு நோயின் அறிகுறியே தவிர, உண்மையில் அது ஒரு வருத்தம் அல்ல என்பதை எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டும்.

இதைப்போலவே தமிழ்மக்களின் அடிப்படைப் பிரச்சினையும் பார்க்கப்படவேண்டும். இன்றைய அபிவிருத்திகளெல்லாம் வெறும் பனடோல்களும், பச்சைத்தண்ணீரும் மட்டுமே என்பதே உண்மை. இவற்றையும் தாண்டி, தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினை ஒன்று உள்ளது. அது சரியாக அணுகப்பட்டுத் தீர்க்கப்பட வேண்டும். அதை விடுத்து மக்கள்மீது கெடுபிடிகளை அதிகரித்து, அவர்களைச் சலிப்படையச் செய்வது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதாகவே அமையும்.

வடக்கு - கிழக்கைப் பூர்வீகமாகக் கொண்ட தமிழ் மக்கள் தமது வாழ்வுரிமைக்காகப் பல்வேறு வழிகளில் போராட்டங்களை முன்னெடுத்தனர். அவை அகிம்சையில் தொடங்கி ஆயுதப் போராட்டம் வரை தொடர்ந்தன. ஆனால் இவை தமிழ் மக்களுக்கு அழிவுகளையும் ஆறாத வடுக்களையுமே இறுதியில் தந் துள்ளன.

இப்போது தமிழ் மக்கள் தமக்கே உரிய சமய, கலாசாரங்களைப் பின்பற்ற முடியாத அச்சுறுத்தலான சூழலுக்குள் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். இதற்கு கிளிநொச்சியில் உள்ள பாடசாலைகளில் தேசிய கீதத்தை சிங்களத்தில் பாட மாணவர்கள் வலியுறுத்துதல், யாழ்ப்பாணம்,கிளிநொச்சி போன்ற இடங்களில் கார்த்திகை விளக்கீட்டை கொண்டாடப் படையினர் தடை விதித்தமை, கடந்த 27ஆம் திகதி ஆலயங்களில் பூசை வழிபாடுகளை நிறுத்துமாறு உத்தரவிட்டமை போன்ற சம்பவங்களே போதுமானவை. இனிவரும் நாள்களில் தமிழ்மக்கள் குறித்த உணவைத்தான் உட்கொள்ள முடியும் என்றும் சீருடை அணிந்தவர்கள் கட்டுப்பாடுகளைப் போடலாம். இதைத் தமிழ்மக்கள் கேட்டு நடக்கவேண்டிய கட்டாயமும் ஏற்படலாம்.

இலங்கையில் தமிழினத்துக்குப் பிரச்சினை இருக்கின்றது, அவர்களின் பிரச்சினை உரிய முறையில் தீர்க்கப்பட வேண்டும் என்பதை மஹிந்த அரசு ஏற் கத் தயாரில்லை. இதை அவரின் கருத் துக்கள் மூலமும் செயல்பாடுகள் மூலமும் உணர முடிகின்றது.

'நான் இனப்பிரச்சினைக்கு நல்ல தீர்வொன்றை வைத்திருக்கிறேன். அதை தமிழ் அரசியல் கட்சிகள் குழப்பாது ஏற்க முன்வரவேண்டும்' என 'த ஹிந்து' பத்திரிகைக்கு ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார். இதிலிருந்தே ஜனாதிபதி தன் வாய்மொழி மூலமேதான் வைத்திருக்கும் தீர்வை தமிழ் மக்கள் ஏற்கமாட்டார்கள் என்பதை வெளிப்படுத்துகிறார்.

அண்மையில் தமிழ் கட்சிகளின் அரங்கத்துடனான சந்திப்பின்போது ஆக்ரோஷமாக கொழும்பில் தமிழ், முஸ்லிம் மக்கள் ஆதிக்கம் செலுத்த முடியுமானால் வடக்கில் சிங்கள மக்களைக் குடியேற்றுவது தவறு என்று எப் படிக்கூற முடியும்? என்றும் வடக்கிலுள்ள இராணுவ முகாம்கள் அகற்றப்படமாட்டாது என்றும் தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி.இதன்போது தமிழ் மக்களின் சொத்து விவரத்தையும் அவர் பட்டியலிட்டுக் காட்டியுள்ளார்.

மஹிந்தவின் செயற்பாடுகள் எல்லாவற்றிலுமிருந்து தெரிவது தமிழ்மக்களுக்குத் தனிப்பட்ட பிரச்சினையோ, தேவையோ இப்போது கிடையாது என் அவர் எண்ணுகிறார் என்பதே பொது வாக எல்லா மக்களுக்கும் பிரச்சினைதான். இது வடபகுதி மக்களின் தனிப்பட்ட பிரச்சினை அல்ல. எனினும் தமிழ்மக்கள் 'சுதந்திரமாக, போதிய வசதிகளுடன் வாழ்கின்றனர் என்பதே ஜனாதிபதியின் கருத்துகளின் எதிர்வு கூறலாக வுள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தில் இடம்பெயர்ந்த பகுதிகளில் அரைகுறையாக மீள்குடியமர்த்தப்பட்ட மக்கள் போதிய வசதிகள் இன்றி தரப்பாள் கொட்டகைகளில் தங்கியுள்ளனர். மாரி மழையில் வீட்டு வசதி, மலசலகூட வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் எதுவும் இந்த மக்களுக்கு முழுமையாக ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. இந்த நிலையில் தொற்று நோய்கள் ஏற்படும் அபாயம் இங்கு ஏற்பட்டுள்ளது.

மொத்தத்தில் தனது பதவியையும் குடும்ப ஆட்சியையும் தக்கவைத்து, பரம்பரை உடைமையாக இலங்கையை மாற்றத் திட்டமிடும் ஜனாதிபதி நாட்டுக்குள் இனங்களுக்கிடையில் நிலவும் பிரச்சினையில் கொண்டுள்ள தெளிவு - அக்கறை- என்பது மக்கள் மத்தியில் சந்தேகங்களையே எற்படுத்தியுள்ளன.

அரசின் செயல்பாடுகளைத் தொடர்ச்சியாகக் கண்டித்து வரும் எதிர்க்கட்சி வர்ணிப்பது போல அரச பயங்கரவாதம் இப்போது இலங்கையில் தலைதூக்கியுள்ளது என்றே எண்ணத்தோன்றுகின்றது.

பச்சோந்தி முகத்துடன் நாட்டுக்குள் ஒரு செய்தி,வெளியில் வேறு செய்தி என அரசாங்கம் தான் நினைக்கும் காரியங்களை செய்து வருகிறது.தமிழ் மக்களின் சுதந்திரம்,சமத்துவம் என்பவற்றை நசுக்கி அவர்களின் பாரம்பரியங்களை அழித்தும், கலை, கலாசாரங்களைச் சீரழித்தும், அவற்றின் மீது கட்டுப்பாடுகளை விதித்தும் மறைமுக யுத்தத்தை இவர்கள்மீது அரசு தொடர்கின்றது. குறிப்பாக ஆயுத முனையில் மக்களை வைத்து மறைமுகஅரசியல் யுத்தம் ஒன்றை அரசு தமிழ்மக்கள்மீது தொடுத்துள்ளது.

தனிநாடு கோரிப் போராடியமைக்காக ஒரு இனம் சிதைக்கப்பட்டுள்ளது. இன்னமும் சிதைக்கப்படுகிறது. பச்சைக் குழந்தைகளைக் கூட சிறையில் வைத்து சித்திரவதை செய்கிறது அரசு. இதுவே தமிழ் மக்களுக்கு அரசு கொடுக்கும் விமோசனமாகவும் கருதிச் செயல்படுகின்றது. இந்த நிலைமாறும் போதே மக்கள் உண்மையான சுதந்திரத்தை அனுபவிக்க முடியும்.

திப்பிலி



# சந்தியடிச் சோமு

## மக்களை மந்தைகளாக நினைக்கின்ற மே(ல்)தாவிகள்

மனசுக்குக் கஸ்ரமான அலுவல்கள் நடக்குது பாருங்கோ. போன கிழ்மை முழுக்க சந்தியடியில மனப்பாரம் நீங்க நிறையக் கொட்டி தீர்த்துப் போட்டம். மழை வேற தொடச்சியா சிணுங்கி அழுது அதுவும் என்னை மாதிரியே கொட்டித் தீர்த்துப் போட்டுது.

மழைக்கு நிலம் கசியிறதால, வீடு ஒரே ''பசபச'' எண்டு ஒட்டுது. எங்கட மனசும் அப்படித்தான் வலிக்குது பாருங்கோ! கால் குளிராம இருக்க சாக்கை வாங்கிப்போட்டுட்டு அதில காலை வச்சுக்கொண்டு, பேப்பருகளை வாங்கிப் பாத்தால் அதில கிடக்கிற செய்திகள் வேற நெஞ்சை நெருடுது.

மழை கொஞ்சம் ஓஞ்ச நேரமாப் பாத்து சைக்கிள எடுத்துக்கொண்டு ரவுன் பக்கமா போனன். ஸ்ரான்லி வீதியால ஓடேக்க, ஒட்டோக்கள் கொஞ்சம் வரிசையா தேசியக்கொடியைக் கட்டிக் கொண்டு 'பறந்துது'. நான் சைக்கிலால இறங்கி வழி விட்டு ஓரமா ஒதுங்கிட்டன். உவர், லண்டன் போய் வெற்றியோட(....?) மீண்டு வந்த மகராசனுக்குச் சார்பான சுலோகங்கள் கொஞ்சத்தை ஓட்டோவில பிடிச்சுக் கொண்டும் போனாங்கள். அப்பத்தான் விளங்கிச்சுது லண்டனில நடந்ததுக்கு ஸ்ரான்லி ரோட்டில பதிலடி நடக்குதெண்டு.

ஆளுங்கட்சி ஆக்களில ரெண்டு பேர் நான் பெரிசா நீ பெரிசா எண்ட தக்காட்டுறத்துக்காக – ஆளுக்கொரு கோலத்தில நல்ல பிள்ளைப் பேர் எடுக்க நடத்தினது தானாம் உதெல்லாம் எண்டு பின்னால அறிஞ்சன். பாவம்! அதுகள்! எங்களைப்போல அப்பாவிப் பொது மக்களக் கிள்ளுக் கீரையா, இல்லை இல்லை... எடுப்பார் கைப்பிள்ளையா வைச்சுக் கெட்டித் தனமா ஏமாத்தலாமெண்டு அவையள் நினைக்கினம் பாருங்கோ. அது தான் அவலம். ஜனநாயகத்தின்ர பெயரால நடக்கிற திருகு தாளங்கள் தான் இனிவரும் காலம் எண்டது தெளிவாப் புரியுதானே உங்களுக்கு. என்ர கடைசிக் காலத்தில இதையெல்லாமும் பாக்க வேணும் எண்டு விதி....

முன்னொரு காலத்தில புலிக்கு எதிரா என்னென்ன குற்றச்சாட்டுக்களை வைச்சினமோ அத்தனையையும் தாங்களும் இப்பவே செய்யினம் பாருங்கோ. எல்லாரும் மக்களைக் கெட்டித்தனமா மந்தைகளாக்கிற மெண்டு நினைச்சு சில பல ஊடகங்களையும் துணைக்கு வைச்சுக் கொண்டு கொக்கரிக்கினம். ஆனா ஒண்டு மட்டும் வெட்ட வெளிச்சம் பாருங்கோ. சனங்கள் இத்தனைக்கும் மத்தியில தெளிவா நிதானமா இருக்குதுகள்.

அதை விடுவம் ஆளும் கட்சி ஜனநாயகவாதிகள் சந்தியில நின்று நல்ல பிள்ளைப் பேரெடுக்க மல்லுக்கட்டுறதுதான் இப்பத்தைய 'ட்ரென்ட்' எண்டு கம்பஸ் வாத்தி ஒருத்தர் சொன்னார். சந்தியில நாங்கள் இருக்கிற குந்துக்குப் பக்கத்தில இருக்கிற கடைக்கு பாண் வாங்க வந்த இடத்தில அந்த மனுசன் இப்பிடிச் சொல்லிச்சு. ''இப்ப கன்னை பிரிஞ்சு நிண்டு எல்லாத்துக்கையும் தலையை ஓட்டுறதுதான் நடக்குது சோமண்ணை'' எண்டார் வாத்தியார். அவர் 'லைட்டாப்' பொருமிப் போட்டுப் வெளிக்கிட்டிட்டுடார். வெறுவாயை வச்சே கிழமைக் கணக்கில மெல்லுற எங்களப் போல ஆக்களுக்கு அவல் கிடைச்சா விடுவமே.

அந்த இடத்தில நான் அவரிட்ட ஒண்டையும் கேக்கேல்ல. பிறகு ஆறுதலா ஒரு நாள் போய் என்ன ஏதெண்டு விசாரிச்சன். கம்பசில உள்ள பெரிய பதவிக்கு இப்ப கிட்டடியில போட்டி நடந்ததாம். விசயம் போட்டி போட்டாக்களப் பற்றியில்ல. ஊர் உலகத்தில பெரிய மனிச ரெண்ட கோதாவில மூதவைக்கு நியமிச்சாக்கள் தெரிவு விசயத்தில இரு கன்னையாப் பிரிஞ்சு நின்று மல்லுக் கட்டினமாம். தன்னட்ட பதவியை வாங்கிக் குடுக்கிற 'அங்குசம்' இருக் கெண்டு மார்தட்டிற ஆளுங் கட்சிக்காறர் ஒருத்தர் போட்டியில நிக்கிற ஒருத் தருக்காக வக்காளத்து வாங்கிறார். மற்றப் பக்கத்தில தியேட்டர்காரர் வேறொருத்தருக்காக வரிஞ்சு கட்டிக் கொண்டு நிக்கிறாராம்.

கட்சி அரசியல் கல்விக்கூடங்களுக்கை பரப்பி ஆணிவேரை பாழாக் கிற அலுவல்களை திட்டம் போட்டு செய்யினமாம். இருக்கிற ஒரே கம்பசையும் குழப்பறதுக்கு கும்மாளம் நடக்குது என்று அந்தாள் மனம் புழுங்கிச்சுது. இவ்வளவுக்கும் கம்பஸை புலியள் தங்கட கையளுக்கை வச்சுக் கொண்டு எல்லாத்தையும் பாழாக்குகினம் என்று தலையால அழுதவையள்தான் இவை.

இன்னும் கேவலம் என்னெண்டால் கம்பஸ் மூதவையின்ர மாதிரிக் கூட்டங்கள் இப்பவெல்லாம் அடிக்கடி தியேட்டரில நடக்குதாம். அவர் கூட்பிட்டா கும்பிடாக் குறையா இந்த மூத்தவை எல்லாரும் அங்க கேள்விக்கு இடமின்றி ஆஜராகினமாம். உந்தப் பதவிப் போட்டிக்கு முன்னாலையும் மூதவைக்காரர் எல்லாரையும் கூப்பிட்டு தான் சொல்லுற ஒரு ஆளத்தான் விசியா ஆக்குங்கோ எண்டும் சொன்னவராம் தியேட்டர்காரர். நாங்கள் எல்லாம் பாத்துச் செய்யிறம் எண்டு மண்டைய ஆட்டிப் போட்டு வந்திருக்கினம் இவையளும்.

எண்டாலும் இப்ப கன்னை கட்டிக் கொண்டு நிண்டு அவருக்கா இவருக்கா 'சப்போட்' எண்டு போட்டி போடுகினமாம். அயல் நாட்டு குப்பை அரசியல் இங்கையும் பரவி பட்டி தொட்டியெல்லாம் பாழாக்கப் போகுது எண்டு என்ர சிநேகிதம் ஒண்டு சொல்லுது.

பக்கத்து அயல்நாட்டில கம்பஸ் பதவிகளுக்காகக் கட்சிகளுக்குப் பின்னால திரியிறது போல இங்கையும் வருமென்று அந்த படிச்ச பெரிய வர் சொன்னார் எண்டு என்ர சந்திச் சிநேகிதங்களிட்ட சொல்ல. அதுக்கு சந்தியில குந்தியிருந்த கனகண்ணை சொன்னார், ''இப்ப நடக்கிறதைப் பாத்தால் இங்கையும் அப்படி நடக்கத் தொடங்கிட்டுது போலத்தானே இருக்குது. காலம் பிழை உதுகளைக் கதைக்காதைங்கோ எண்டு சொல்லிப்போட்டு அந்தாள் எழும்பிப்போட்டுது.

விதியை நோகிறதா....? இல்லையெண்டால் 'அவன்' செய்த சதியை நோகிறதா..? எண்டதுதான் எனக்கு விளங்கேல்லை...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒக்ஸ்போர்ட் சம்பவத்தை திசை திருப்பவே கரு மீது அபாண்டமான குற்றச்சாட்டு

## ரவி கருணாநாயக்க கூறுகிறார்

கொழும்பு, டிசெ.12

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் பேச முடியாமல் போன சம்பவத்தை திசை திருப்பவே அரசு கரு ஜயசூரியமீது அபாண்டமான குற்றச்சாட்டுகளைச் சுமத்தி சேறு பூசுகிறது என்று குற்றம் சாட்டினார் ஐ.தே.க. உறுப்பினர் ரவி கருணாநாயக்க.

நிதி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இப்படிக் கூறினார்.

அதேவேளை, இந்த அரசிடம் நிலையான ஒரு தேசிய பொருளாதாரக் கொள்கை இல்லை. சென்ற வருடம் வரவு - செலவுத் திட்டத்தில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. 69 லட்சம் தனியார்துறை ஊழியர்களின் நிதியைக் கொண்டே இன்னும் அரசை நடத்துகின்றனர்.

தனியார்த்துறை ஊழியர்களின் சேமலாபநிதி, ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பனவற்றை பல்வேறு துறைகளில் முதலீடு செய்துள்ளது. அதன் மூலம் 28வீதம் வருமானம் பெறுவதாக நிதி அமைச்சின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் ஊழியர்களுக்கு ஆறுவீதம் முதல் 10வீதம் வரை மட்டுமே வட்டியாக வழங்கப்படுகிறது.

இதனால் ஊழியர் சேமலாப நிதிக்கும் - ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கும் வழங்கப்படும் வட்டி வீதம் 24 வீதமாக அதிகரிக்கப்படவேண்டும்.

பங்குச் சந்தையில் பாரிய மோசடிகள் இடம்பெற்றுள்ளன. மத்திய வங்கி ஆளுநரின் உறவினர்கள் இதில் சம்பந்தப்பட்டுள்ளனர். அவசியம் எனில் அவர்களின் பெயர்களையும் வெளியிடத் தயார்.

இன்று பங்குகளை வாங்குகிறார்கள். நாளை விலைகளை அதிகரிக்கின்றார்கள். மறுநாள் அவற்றை விற்கின்றனர். பொதுமக்களின் நிதி இப்படித்தான் சுரண்டப்படுகின்றது. நேற்று நடைபெற்ற பொதுக்குழுக்கள் கூட்டத்தில் இறப்பர் கூட்டுத்தாபனத் தலைவரும் அதிகாரிகளும் திக்குமுக்காடிப்போனார்கள். 1998 ஆம் ஆண்டு முதல் 2002ஆம் ஆண்டு வரையிலான கணக்கு அறிக்கைகள் அவர்களிடம் இல்லை. இதுதான் இன்றைய நிதி நிர்வாகம்.

தபால் திணைக்களம், மின்சாரசபை, ஹோட்டல் கூட்டுத்தாபனம் என்பன பெரும் நஷ்டத்தில் இயங்குகின்றன. எப்போதுமே தேசிய லொத்தர் சபை நஷ்டத்தில் இயங்கியதில்லை. ஆனால் இம்முறை லொத்தர் சபையும் நஷ்டம் காட்டி உள்ளது.

இன்று நாட்டில் அரிசி விலை அதிகரித்துள்ளமைக்கு அரசைச் சேர்ந்த நான்கு பிரமுகர்களே காரணம் என்று விவசாயத் துறைகள் அமைச்சர் கூறி உள்ளார். பொதுமக்களின் நிதியில் அமைச்சர்கள் சுகபோகம் அனுபவிக்கின்றனர். அமைச்சர்களின் இடைப்பட்டிகள் தளர்த்தப்பட்டுள்ளன. பொதுமக்களின் பட்டிகள் இறுக்கக் கட்டப்பட்டுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் நான்கு நிறுவனங்கள் மட்டுமே தனியார் மயப்படுத்தப்பட்டன. ஆனால் இன்றைய அரசு 98 நிறுவனங்களைத் தனியாரிடம் ஒப்படைத்துள்ளது.

இன்றைய அரசிடம் உறுதியான பொருளாதாரக் கொள்கை இல்லை. இதனைத் தொடர்ந்து கடைப்பிடித்தால் சீரழிந்த பொருளாதாரத்தைத் தான் அடைவோம். தவறான நிதிக் கொள்கையினால் நம்நாட்டு நாணயப் பெறுமதி வீழ்ச்சி அடைந்துள்ளது. பொதுமக்களின் நிதி சுரண்டப்படுகிறது. இதனை நாம் சுட்டிக்காட்டினால் எங்களைத் தேசத்துரோகிகள் என்று நாமம் சூட்டுகின்றார்கள் என்று கூறினார் ரவி கருணாநாயக்க. (உ)


## திருவாசக முற்றோதல்

அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான திருவாசக முற்றோதல் 21.12.2010 செவ்வாய்க்கிழமை காலை 7.30 மணியளவில் மேற்படி ஆலய முன் மண்டபத்தில் ஆரம்பமாகும். ஆர்வலர் அனைவரும் கலந்து கொள்ளுக.

நிர்வாகம்.

## சிறுநீரகம் தேவை

லண்டனில் வசிக்கும் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 35 வயதுடைய இளைஞன் ஒருவருக்கு O குறூப் இரத்தம் உடைய ஒருவரின் சிறுநீரகம் உடன் தேவை.

சிறு நீரகத்தை வழங்கும் நபருக்கு பொருத்தமான அளவு நிதி வழங்கப்படும். அத்துடன் லண்டனுக்கு அழைத்துச்சென்று 2 வருடங்களுக்கு அங்கு தங்கியிருப்பதற்கான ஏற்பாடுகளும் செய்து தரப்படும். உடனடியாகத் தொடர்புகொள்ளவும்.

0771965117, 021 3212246


## 31ஆவது பிறந்தநாள் நினைவுகள்



### திருமதி பிருந்தா நவநீதன்

(முகாமைத்துவ உதவியாளர்)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 12.12.1979 | 28.08.2010 |

இருப்பவர்கள் சிலர்
இருந்தும் இறந்தவர்களாய்
இறந்தும் இருப்பவளாய் - என்
இதயத்தில் என்றும்.

கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். (107250) கணவர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பரமேஸ்வரி அழகரத்தினம்

(ஓய்வுபெற்ற ஆசிரியை)

உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப் பிடமாகவும் கொண்ட பரமேஸ்வரி அழகரத்தினம் நேற்று (11.12.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் (காட்டு வைரவர் கோயில் முகாமையாளர்). அன்னார் செல்லம் தம்பதியரின் மகளும், உடுவிலைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், அழகரத்தினத்தின் (ஓய்வு பெற்ற, நில அளவைத் திணைக்கள களஞ்சியக் காப்பாளர்) அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

கற்பகப்பிள்ளையார் கோவில் வீதி,
உரும்பிராய் மேற்கு, உரும்பிராய். 021-3737904 (சி/573981) தகவல்: கணவர்.

### ராசரத்தினம் துரைராஜா (வேவி மாமா)



வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் சில்லாலையினை வசிப்பிடமாகவும் தற்போது வவுனியா, திருநாவற்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ராசரத்தினம் துரைராஜா நேற்று (11.12.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வவுனியா,
நாவற்குளம்.
தகவல்: குடும்பத்தினர்
திரு.திருமதி சிவானந்தன்.

### பரீட்சைக்குத் தோற்றும் 175 முன்னாள் பெண் போராளிகள்

வவுனியா, டிசெ.12

நாளை ஆரம்பமாகவிருக்கும் ஜி.சீ.ஈ. (சாதாரண) தரப்பரீட்சையில் விடுதலைப் புலிகளின் முன்னாள் பெண் போராளிகளும் தோற்றவிருக்கின்றனர்.

பூந்தோட்டம் புனர்வாழ்வு முகாமில் இருந்து 175 முன்னாள் பெண் போராளிகளே பரீட்சைக்குத் தோற்றுகின்றனர்.

இறுதிக்கட்ட யுத்தத்தின்போது இராணுவத்தினரிடம் சரண் அடைந்த இவர்கள் [illegible] புனர்வாழ்வு பெற்று வருகின்றனர். (உ-ஐ)

## மரண அறிவித்தல்கள்

### பரமு குமாரவேலு (காரைநகர்)



காரைநகர், வெடியரசன் வீதியைப் பிறப்பிடமாகவும் கலை வாணி வீதி, வடலியடைப்பை வசிப்பிடமாகவும் கொண்ட பரமு குமாரவேலு நேற்று (11.12.2010) சனிக்கிழமை இறைபதம் எய்தி விட்டார்.

அன்னார் ஆச்சிமுத்துவின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2010) ஞாயிற்றுக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலைவாணி வீதி,
வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.
தகவல்: மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

### கந்தையா சிவசுப்பிரமணியம்

(முன்னாள் உரிமையாளர், சிவயோகா ஸ்ரோர்ஸ், கொழும்பு)



தன்னை, களபூமி, காரைநகரைப் பிறப்பிடமாகவும், 124/1, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சிவசுப்பிரமணியம் நேற்று முன்தினம் (10.12.2010) வெள்ளிக்கிழமை இரவு சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - பொன்னம்மாவின் மருமகனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை காசிநாதன் தம்பதியரின் பெறாமகனும், காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும், பரமேஸ்வரன் (லண்டன்), மகேஸ்வரன் (லண்டன்), யோகேஸ்வரன் (பாங்கொக்), யோகேஸ்வரி (இத்தாலி), குகனேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவயோகராணி (லண்டன்), சிவரூபி (லண்டன்), சிவதர்சினி (பாங்கொக்), சிவகாந்தன் (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமனாரும், மயூரி, மிதுலன், நிவேதிக்கா ஆகியோரின் அன்புப் பேரனும், தவமணி, காலஞ்சென்றவர்களான சிவபாதசுந்தரம், சிவபாக்கியம் மற்றும் சிவபாலன், சிவஞானம், சிவராசா, சிவலட்சுமி, சிவயோகவதி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பாலசுப்பிரமணியம் (M.M.B கிளிநொச்சி), சாம்பவி (லண்டன்), புனிதவதி, கணேசன் (நெடுங்கேணி), இராசரத்தினம் (ஜேர்மனி), சறோஜினி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு சுந்தரம்மா தம்பதிகளின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.12.2010) திங்கட்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கா.சிவஞானம்,
124/1, இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம். 021-2229127
தகவல்: மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

### திருமதி இந்திராதேவி சங்கரலிங்கம்



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டை தெற்கை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட லண்டனில் வசித்து வந்தவரான திருமதி இந்திராதேவி சங்கரலிங்கம் 10.12.2010 வெள்ளிக்கிழமை மலேசியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரலிங்கத்தின் (ஓய்வுபெற்ற உதவி முகாமையாளர், இலங்கை வங்கி) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - பாக்கியரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றசவர்களான செல்லத்துரை - பாறுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் டாக்டர் சுதாகரி(லண்டன்), சுதேஷ் (நோர்வே), பிரஷாந்தன் (கொழும்பு) ஆகியோ ரின் பாசமிகு தாயும் டாக்டர் குணதிலகன் (லண்டன்), தர்மினி (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமியும் லக்ஷனா, நந்தனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ் சென்ற கார்த்திகேயன் மற்றும் விமலாதேவி (U.K) முருகேயன் (வட்டுக்கோட்டை), காலஞ் சென்ற பாலாதேவி மற்றும் குமரேயன் (மலேசியா), காலஞ்சென்ற காங்கேயன் மற்றும் அகிலாண்டதேவி (மலேசியா), சந்திரதேவி (மலேசியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2010) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு (மலேசியா நேரம்) மலேசியாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வட்டுக்கோட்டை தெற்கு,
வட்டுக்கோட்டை.
தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## எழுபதுகளுக்குச் சமாந்தரமாக...

போர் முடிவுற்ற பின்னர், வடக்கிலும் கிழக்கிலும் விவசாய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர், நாட்டின் விவசாயத்துறை குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டு வருகிறது. இவ்வாறு மூத்த அமைச்சர்களில் ஒருவரான சரத் அமுனுகம நாடாளுமன்றத்தில் சிலாகித்துப் பேசியுள்ளார்.

யாழ்ப்பாண விவசாயிகள் முன்னர் ஒரு காலத்தில் அதிக வருமானம் பெற்ற தரப்பினராகி விளங்கியவர்கள், நாட்டுக்குத் தேவையான மிளகாயையும் வெங்காயத்தையும் உற்பத்தி செய்து அவர்கள் முன்னிலை வகித்தவர்கள் என்று ஞாபகப்படுத்தி பாராட்டியும் உள்ளார்.

அமைச்சர் அமுனுகம நாடாளுமன்றத்தில் தெரிவித்த தகவல்கள் சரியானவை; உண்மையானவை. மிளகாய் மற்றும் வெங்காயச் செய்கையில் யாழ்ப்பாண விவசாயிகள் கொடிகட்டிப் பறந்ததை மறக்க இயலாது. பல விவசாயிகள் ஆடம்பரமான கல்வீடுகளைக் கட்டியது, மிளகாய், வெங்காயச் செய்கையினாலேயே என்பது மறக்கக்கூடிய ஒன்றல்ல.

அதேபோன்று, வன்னி மாவட்டத்திலும் மிளகாய், வெங்காயச் செய்கைகளால் அங்குள்ள பிரதேசங்களின் பொருளாதார வளம் தழைத்து ஓங்கியதை மறந்துவிட முடியாது. கிளிநொச்சியில் விளைந்த மிளகாயையும் முல்லைத்தீவில் - குறிப்பாக விசுவமடுவில் - விளைந்த வெங்காயத்தையும் கொள்வனவு செய்வதற்காகத் தென்னிலங்கை லொறிகள் வந்து காத்து நின்று முண்டியடித்து வாங்கியதும் நேற்றுப் போன்று ஞாபகத்துக்கு வருகிறது.

ஆனால், யாழ்ப்பாண மாவட்ட விவசாயிகளும் சரி, வன்னி மாவட்ட விவசாயிகளும் சரி இன்னமும் அந்த நிலைமைக்கு உயரவில்லை; எட்டியும் பார்க்கவில்லை என்பதனை அரச தரப்புக் குறித்துக்கொள்ள வேண்டும்.

மிகக்குறிப்பாக, போரினால் இடம்பெயர்ந்து, இப்போது மீளக்குடியமர்ந்துள்ள வன்னி மக்கள் - அவர்களில் சுமார் 80 சதவீதமானவர்கள் - விவசாயத்தையே தமது பிரதான தொழிலாகக் கொண்டவர்கள். அவர் கள் நிம்மதியாக வசிக்கமுடியாத நிலை. வீடுகள் எது வுமில்லை. தறப்பாள் கொட்டில்களிலும், தகரக் குடி சைகளிலும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். உழவு இயந்திரம் உட்பட்ட விவசாய உபகரணங்கள் இன் னும் தாரளமாகக் கிடைக்கவில்லை; அவற்றை வாங்கு வதற்குப் பண வசதியும் இல்லை.

போரின் பின்னர் அகதி முகாம்களில் இருந்தவர்களில் பல இளைஞர்கள் சந்தேகத்தின் பேரில் இன்னமும் தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டிருக்கிறார்கள்; அல்லது புனர்வாழ்வு முகாம்களில் முடங்கிக்கிடக்கச் செய்துள்ளது அரசு.அவர்கள் விடுவிக்கப்படும் வரை அவர்களின் பெற்றோருக்கு - குடும்பங்களுக்கு - உதவி வழங்கப்பட வேண்டும் என்று தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தின் தூது கோஷ்டியினர் நாட்டின் தலைவரிடம் கேட்டவேளை -

எவர் எவருக்கு எவ்வளவு தொகைப் பணம் வங்கிக் கணக்கில் உண்டு என்ற தகவல் தெரி விக்கப்பட்டதே அன்றி, உதவி வழங்குவது குறித்து பதில் எதுவும் கிடைக்கவில்லை.

இத்தகைய அரச அணுகுமுறையின் கீழ், வன்னிப் பெருநிலப்பரப்பைச் சேர்ந்த விவசாயிகள் விளைபொருள் உற்பத்தியில் எவ்வாறு ஈடுபட முடியும்? தமது அன்றாட வாழ்க்கையை எவ்வாறு தமது உழைப்பில் கொண்டு செலுத்த இயலும்?

யாழ்ப்பாண மாவட்டத்தில் கூட, தெற்கில் இருந்து பல வகை- நானாவித நிறுவனங்களும் வந்துகால் ஊன்றுகின்றன, வர்த்தகம் செய்கின்றன. ஆனால் இந்த மாவட்ட மக்களின் மூவகையான பிரதான தொழில் பிரிவுகளுக்கு பெரிதாக உதவு வ தாக இல்லை. இப்பிரதேச மக்களின் புலம்பெயர் உறவுகள் அனுப்பும் பணத்தில் ஒரு பங்கை, பெரும் நுகர்ச்சிப் பொருள்களைக் காட்டி பணத்தை கறக்கும் மூலோபாயங்களுடன் - தந்திரோபாயங்களுடன் - தெற்கு நிறுவனங்கள் இங்கு பெரும் எண்ணிக்கையில் கால் பதித்து வருகின்றன!

அரசாங்கத்தின் செயற்பாடுகள் தானும் யாழ். மாவட்டத்தின் தொழில் வளர்ச்சி மற்றும் பொருளாதார விருத்திக்கு அடித்தளம் அமைப்பவையாக இன்னும் இல்லை. அபிவிருத்தியும் பொருளாதாரக் கட்டமைப்பும் இன்னமும் நிலத்தில் கீழ் மட்டத்திலேயே உள்ளன.

மொத்ததில், விவசாயம் உட்பட பிரதான தொழில்களையும் ஏனைய அபிவிருத்தி சார் உட்கட்டுமானங்களையும் உயர்த்தினால் மட்டுமே - போலித்தனத்தைத் தவிர்த்து அவற்றில் உண்மையுடன் பற்றுறுதியுடன் செயற்பட்டால் மட்டுமே - மூத்த அமைச்சர் சரத் அமுனுகம சுட்டியவாறு தமிழ் மாவட்டங்களை 1980 களுக்குச் சமாந்தரமாக மீள்விக்க முடியும். அரசும், தனியார்துறையினரும் அந்த வழி நாடுவது எப்போது....?

# நாட்டில் மீண்டும் வன்முறை எழுவதை தடுக்கும் பொறுப்பு மதகுருமார்களுக்கு

## ஹெல உறுமய தலைவர் கூறுகிறார்




யாழ்ப்பாணம்,டிசெ.12

மீண்டும் ஒரு யுத்தம் நாட்டில் இடம் பெறாமல் இருக்க மக்களை வழிப்படுத்த வேண்டிய பொறுப்பு இந்து - பௌத்த சமயக் குருமார்களுக்கு உள்ளது என ஹெல உறுமய கட்சியின் தலைவர் அத்துரலிய ரத்னதேரர் தெரிவித்தார்.

இந்து - பௌத்த சமயக் குருக்களிடையேயான கலந்துரையாடல் ஒன்று நேற்று சனிக்கிழமை ஆணைப் பந்தியிலுள்ள சர்வதேச இந்து மதக் குருமார் ஒன்றியத்தின் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் உரை நிகழ்த்தும் போதே அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்தார்.

ஒன்றியத் தலைவர் சபா வாசுதேவக் குருக்கள் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வின் போது தேரர் மேலும் தெரிவித்தவை வருமாறு-

இந்து - பௌத்த குருமார்களாகிய நாம் அரசியல் வாதிகளை விட அதிகளவில் நாட்டின் அபிவிருத்திக்குப் பங்களிக்க வேண்டும். எங்களால் மட்டுமே மக்களின் மன நிலையில் மாற்றத்தைக் கொண்டு வர முடியும். அரசியல் வாதிகள் தமக்குப் பலமாக மதத்தைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

எனவே இந்து- பௌத்த குருமார்களுக்குப் பெரிய பொறுப்புள்ளது. அதாவது இந்தத் தேசத்தில் இரத்தமும், கண்ணீரும் சிந்தாமல் இருப்பதற்காக மக்களை வழிப்படுத்த வேண்டிய பொறுப்பே அதுவாகும். அநேகர் நினைக்கின்றனர் இந்து மதத்தின் ஒரு பகுதியே பௌத்த மதம் என்று. ஆனால் இரண்டு மதத்திலும் ஒற்றுமையான விடயங்கள் பலவுள்ளன.

பௌத்த மதம் இந்தியாவிலுள்ள மதங்களை விட வித்தியாசமானது ஆனால் இலங்கையில் இந்த இரண்டு மதங்களிலும் நிறைய இணைப்புக்கள் உள்ளன. எனவே நாம் எப்படி யுத்தம் செய்ய முடியும்.

சமஷ்கிருத ரீதியாக நாம் இணைக்கப்பட்டுள்ளோம். நாகதீபத்தில் பௌத்த குருக்கள் வழிபாடுகளை மேற்கொள்ளும் போது எம்மை பௌத்தர்களாக யாரும் விமர்சித்ததில்லை நிச்சயமாக இரண்டு மதங்களதும் ஆகமங்கள் இணைந்து கொள்வதன் மூலமே நாட்டில் முன்னேற்றம் ஏற்படும். ஐம்பது வருடங்களுக்கு முன்னர் இந்த இரண்டு ஆகமங்களையும் இணைத்துக் கொண்டிருந்தால் நாட்டில் இரத்தமும், கண்ணீரும் சிந்தவேண்டி ஏற்பட்டிருக்காது. நாம் மக்களுடன் இணைந்து செயற்பட வேண்டும்.

நான் யாழ்ப்பாணம் வந்த போது தான் புரிகிறது இங்குள்ள மக்களுக்கு நிறையப் பிரச்சினை இருக்கிறது என்பது. மக்களுடைய முதன்மையான பிரச்சினை மக்கள் விடுதலையடைய வேண்டும்.மக்களுக்கு உணவு, உடை, இருப்பிடம், சுகாதார வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும். அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப் படவேண்டும். நாம் யாழ்ப்பாண மக்களுடன் ஆத்மாத்த ரீதியாக இணைந்து கொள்ள வேண்டும். எமது நாட்டில் இடம் பெற்ற அழிவுகளுக்கு என்ன காரணம்? எமக்கு சரியான தலைமைத்துவம் இல்லாமையே ஆகும். அரசியல் வாதிகள் சுயநலமானவர்களாக இருக்கின்றனர். மக்கள் மிகவும் பலவீனமானவர்களாக இருக்கின்றனர்.

எமது கடமை மக்களைப் புத்திசாலிகளாக்குவதே மக்கள் பலமடையும் போது அரசியல் வாதிகளும் சரியான வழிக்கு வருவார்கள். தமிழ் மக்கள் மத்தியிலிருந்து கலைஞர்கள், விஞ்ஞானிகள், வர்த்தகர்கள் உருவாக வேண்டும். உள்ளூர் உற்பத்திகளுக்கு முதன்மை கொடுக்கும் வர்த்தகர்கள் தேவையாக இருக்கின்றனர்.

தேசத்தின் துன்பத்தை அனைக்கக் கூடிய வீரர்கள் தேவை. உருவாகுவார்கள் என நம்புகிறேன் என்றார். இந்த நிகழ்வின் போது இந்து குருமார் ஒன்றியப் பிரதிநிதிகள், ஈ.யு. லங்கா நிறுவனத் தலைவர் எம்.பி.எஸ். இராமச்சந்திரன், பிரபல சிங்கள நடிகையும், நாடாளுமன்ற உறுப்பினருமான திருமதி மாலினி பொன்சேகா உள்ளிட்டோர் இதில் கலந்து கொண்டனர். (த.7-14)

## பனை, தென்னைவள சங்கக் கட்டடங்களுக்கு நேற்று அடிக்கல்

யாழ்ப்பாணம் டிசெ.12

பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் இரண்டு கட்டடங்களுக்கு அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுச் சனிக்கிழமை இடம்பெற்றது.

கோண்டாவில், சங்கானை ஆகிய இரண்டு இடங்களிலுமே இவ்வாறு அடிக்கல் நடப்பட்டது.

பனை அபிவிருத்திச்சபையின் தலைவர் பசுமதி சீவரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு அடிக்கற்களை நட்டு வைத்தார்.

இந்த இரண்டு சங்கங்களுக்கும் 25 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

(த-14)

## நாளை

| | | |
|---|---|---|
| கார்த்திகை 27 | | 13.12.2010 திங்கட்கிழமை |
| திதி: | : | ஸப்தமி காலை.06.27 வரை |
| நட்சத்திரம் | : | பூரட்டாதி முழுவதும் |
| சுபநேரம் | : | 12.20-01.50 வரை |
| ராகுகாலம் | : | 07.50-09.20 வரை |

திருவெம்பாவை ஆரம்பம்

## இன்று எமது வாழ்வு நிலை என்ன?

இன்றைய நற்செய்தியில் இறைமகன் இயேசு திருமுழுக்கு யோவானைப் பற்றி எடுத்துரைப்பதையும் குறிப்பாக மனிதராய் பிறந்தவர்களுள் திருமுழுக்கு யோவானைவிட பெரியவர் எவரும் தோன்றியதில்லை என்று சான்று பகர்ந்திருப்பதை (மத் 11:2-11) நாம் தியானிக்கின்றோம். அதேவேளை இந்தத் திருமுழுக்கு யோவானைப் பற்றி நான்கு நற்செய்தியாளர்களும் குறிப்பிட்டிருப்பதை நோக்குகின்றபோது - அவர் கடவுளால் திட்டமிடப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்காக அனுப்பப்பட்டவராகவும்.




ஒளி யைக் குறித்து சான்று பகர்ந்தவராகவும், கேள்விகளுக்கு அச்சமின்றி பதிலளிப்பவராகவும், அதிகாரத்துடன் உண்மைகளை உறுதிபடப் பேசுபவராகவும், அநீதியான செயற்பாடுகளை கண்டிப்பவராகவும், பாவமன்னிப்பு வழங்கி திருமுழுக்குக் கொடுத்து கடவுளுக்கு உகந்த மக்களை ஒன்று சேர்ப்பவராகவும் காணப்படுகின்றார்.

இப்படிப்பட்ட நிலையில் அவர் வாழ்ந்து வந்த போதிலும் தான் ஆண்டவரின் பார்வையில் பெரியவரென்றோ, தூய ஆவியினால் முற்றிலும் ஆட்கொள்ளப்பட்டவரென்றோ, வல்லமையான இறைவாக்கினரென்றோ, இயேசுவின் உறவினரென்றோ, நான்தான் அவருக்கு திருமுழுக்குக் கொடுத்தேன் என்றோ மக்கள் பலரை ஆண்டவர் பக்கம் திருப்பினேனென்றோ பெருமை பாராட்டவில்லை. மாறாக தாழ்ச்சி உள்ளவராகக் காணப்படுகின்றார். என்னை நோக்கிப் பாருங்கள் என்று கூறவில்லை.மாறாக இதோ கடவுளின் ஆட்டுக்குட்டி என்று இயேசுவைக் காட்டுகின்றார். அத்துடன் இயேசுவின் மிதியடிகளை தூக்கிச் செல்ல தகுதியில்லை என்று கூறுவதுடன் அவர் செல்வாக்கு பெருக வேண்டும் எனது செல்வாக்குகுறைய வேண்டுமென்று கூறி தன்னையே தாழ்த்துகின்றார். இன்று எமது வாழ்வு நிலை என்ன? திருமுழுக்கு யோவானைப் போன்று உண்மை, தாழ்ச்சி, நேர்மை, சாட்சி, வழிகாட்டல், பிறவன்பு, மன்னிப்பு போன்ற நற்குணங்கள், நற்காரியங்கள் எம்மிடம் உள்ளதா? அல்லது பெருமை, தன்னலம், மேட்டின்மை, வீண்பேச்சு, பழிவாங்கல் போன்றவை நம்மை ஆட்கொண்டுள்ளதா? சிந்திப்போம்.

க. அருள்நேசன்
குருநகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Don't Worry

## பெறுமதி வாய்ந்த பட்டப்படிப்பு ஒன்றை IDM சாவகச்சேரியில் இன்றே ஆரம்பியுங்கள்

### Let's HaNDs Together

ஆம் உயர் தேசிய பட்டயகல்வியின்(**HND**) ஊடாக ஓர் பெறுமதி வாய்ந்த பட்டப்படிப்பு ஒன்றை வெல்வதற்கு எம்முடன் இணைந்து கல்விகற்றுக்கொண்டிருக்கும் பல மாணவர்களுடன் நீங்களும் இணைந்து ஒரு பட்டதாரி ஆகும் அரிய சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள்.

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் (University of Wolverhampton) மற்றும் முகாமைத்துவ துறையில் (New BuckUniversity) போன்ற சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களின் பெறுமதி வாய்ந்த பட்டம் (Degree) ஒன்றினை வென்றிடுங்கள்.

01 தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில்

**HND In Software development**

(There are 5 Titles in final year)

- Software Engineering
- Bussiness IT
- Computing
- Project Management
- Software Development

| | | |
|---|---|---|
| Semester 6 | B.Sc.(Hons) Specialized in IT Degree<br>Software Development<br>ICT System Support<br>Multimeadia | University of Wolverhampton |
| Semester 5 | | |
| Semester 4 | Higher National Diploma(Specialized in)<br>Software Development<br>ICT System Support<br>Multimeadia | edexcel advancing learning, changing lives |
| Semester 3 | | |
| Semester 2 | IDM Premier Diploma (Specialized in)<br>Software Development<br>ICT System Support<br>Multimeadia | |
| Semester 1 | | |

மற்றும் **HND in ICT System support**

02. முகாமைத்துவ கல்வியில் **HND in Business management**

**1+1 Option now**
**@**
**IDM Chavakachcheri**

**ஒரு வருடம் இலங்கையிலும்**
**மற்றைய வருடம் பிரித்தானியாவிலும்**
**கல்விகற்கும் வாய்ப்பு**


March 2011 Enrollments now open
For batch 1 On or Before Dec 15 2010
For batch 2 On Or Before Dec 30 2010

# Don't Miss IT

IDM Chavakachcheri

5 - 1/1, Kandy Road, Chavakachcheri.
Tel: 021 7 200 600 / 021 2 270 270
e-mail : idmchava@yahoo.com






# Green Grass

## மங்களகரமான திறப்புவிழா அழைப்பு

### உல்லாச விடுதியும் உணவகமும்

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விகிர்தி வருடம் மார்கழி மாதம்
**12 ஆம் நாள் இன்று (12.12.2010) ஞாயிற்றுக்கிழமை**
**நண்பகல் 12 மணி முதல் 3 மணி**
வரையுள்ள சுபவேளையில்
குளிரூட்டப்பட்ட விருந்துபசார மண்டபத்துடன் கூடியதான

*Hotel Lovusi & Restaurant*

எனும் நிறுவனம் இல.584, ஆஸ்பத்திரி வீதியில்
திறந்துவைக்கப்படவுள்ளதால் அத்தருணம் தாங்களும் வருகைதந்து
நிகழ்வைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.584, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே 021 4925308

உரிமையாளர்:
லவுசி ஹொட்டல் & றெஸ்ரோறண்ட்,
கிறீன் கிறாஸ் ஹொட்டல் & றெஸ்ரோறண்ட்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழர்கள் கடந்த கால அரசியல் யதார்த்தத்தை புரியாததன் விளைவே இன்றைய கையறு நிலை

## அரசறிவியல் துறைப் பேராசிரியர் கீதபொன்கலன்

யாழ்ப்பாணம்,டிசெ.12



தமிழர்கள் கடந்த காலங்களில் அரசியல் யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு செயற்படாமல்விட்டதன் விளைவே இன்றைய கையறு நிலைக்குக் காரணம்.

இவ்வாறு தெரிவித்தார் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் அரசறிவியல் துறைத் தலைவர் பேராசிரியர் ஈ.எஸ்.ஐ.கீதபொன்கலன்.

யாழ்.பல்கலைக்கழகத்தின் நிறுவுநர் சேர்.பொன் இராமநாதனின் குரு பூசைத்தினம் நேற்று முன்தினம் யாழ்.பல்கலைக்கழகக் கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு '20 ஆம் நூற்றாண்டின் முற்பாதியில் தமிழ் அரசியல்; ஒரு பின் நோக்கிய அரசியல் பார்வை' என்னும் தலைப்பில் ஆய்வுரை நிகழ்த்துகையிலேயே பேராசிரியர் கீதபொன்கலன் இவ்வாறு தெரிவித்தார்.

பரமேஸ்வராக் கல்லூரி இயக்குநர் சபைத் தலைவர் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

அங்கு தொடர்ந்து அவர் உரைநிகழ்த்துகையில் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த நூற்றாண்டின் தமிழ் அரசியல் பற்றி நோக்குகையில் ஒரு கட்டமைப்பின் கீழ் 50 ஆண்டுகளை ஆய்வு செய்துவிடமுடியாது என்பது வெளிப்படையானது.

பொன்னம்பலம் சகோதரர்களின் காலப்பகுதி, யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் காலப் பகுதி, ஜி.ஜி.பொன்னம்பலம் காலப்பகுதி என மூன்று காலப்பகுதிகளின் பிரதானமான அரசியல் போக்குகளை அடிப்படையாகக் கொண்டு தமிழ் அரசியலின் பிரதான பிரச்சினைகளை நோக்க முடியும்.

சுதந்திரத்தின் பின்னரான யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளாதிருந்தமையின் முக்கியமான ஒரு பரிமாணம் தனிநாட்டுக் கோரிக்கையுடன் தொடர்புடையது. தனிநாட்டுக் கோரிக்கை என்பது தமிழ் அரசியல் விரக்தியின் தவிர்க்க முடியாத வெளிப்பாடாகும். இருப்பினும் குறிப்பாக பிராந்திய ரீதியான அரசியல் யதார்த்தங்களின் காரணமாக அடையப்பட முடியாத ஒரு இலக்காகவே அது இருந்தது என்பது தமிழ் அரசியலின் முக்கிய மூலக் கூறுகளினால் எப்பொழுதும் புரிந்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

உதாரணமாக இந்தியா ஆரம்பம் தொடக்கம் தனிநாட்டுக்கு எதிராகவே இருந்தது. இந்தியா விடுதலைப் புலிகளைத் தடை செய்தபோது அதற்கு ஆதரவாக சட்ட ரீதியாகக் கூறிய காரணம் புலிகளின் அடிப்படை நோக்கமாகிய தமிழர்களுக்கான தனிநாடு என்பதுதான். தனிநாடு இந்திய இறைமைக்கும் தேசிய ஒருமைப்பாட்டுக்கும் எதிரானது என்பதனால் இந்த இயக்கம் தடை செய்யப்பட வேண்டும் என இந்தியா கூறியது.

இந்த யதார்த்தம் சரியாகப் புரிந்து கொள்ளப்பட்டிருக்குமாயின் சுலோகம் ஒரு அரசியல் கருவியாகப் பயன்படுத்தப்படுகின்ற அதேவேளை சாத்தியமான ஒரு மட்டத்திலான அதிகாரப் பரவலாக்கலை அடைந்து கொள்வதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.

அந்த வகையில் நாம் பல சந்தர்ப்பங்களைத் தவற விட்டிருக்கிறோம். குறிப்பாக 2002 ஆம் ஆண்டின் சமாதான செயன்முறை உண்மையுடனும் புத்தி சாதுரியத்துடனும் முன்னெடுக்கப்பட்டிருக்கலாம். வரலாற்றில் ஒருபோதும் இல்லாத அளவிற்கு அப்போது காணப்பட்ட சர்வதேச சமூகத்தின் பங்குபற்றலை ஒரு பலமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.

தமிழர்கள் எல்லாம் உடையவர்களாக இருந்து ஒன்றும் இல்லாதவர்களாக மாறுகின்ற செயன்முறையின் - அந்த சவப்பெட்டியின் இறுதி ஆணி கடந்த சமாதான செயன்முறையில் வீழ்ச்சியுடன் அடிக்கப்பட்டிருந்தது - என்றார்.

(த-14-319)

# டெங்கு தடுப்புக்கான மருந்து விசிறும் பணி

தென்மராட்சி,டிசெ.12

தென்மராட்சிப் பிரதேசத்தில் மழை வெள்ளம் தேங்கியுள்ள பகுதிகளில் டெங்கு நுளம்புகளின் உற்பத்தியினைத் தடுப்பதற்கான பீரிஜ பக்ரீரியா மருந்து சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு வந்துள்ளது.

இந்த மருந்து விசிறும் பணிகள் பொது சுகாதார பரிசோதகர்களின் தலைமையில் மேற்கொள்ளப்பட்டன.

வெள்ள நீர் தேங்கி நிற்கும் இடங்கள் பற்றிய விவரங்களை தத்தமது பிரிவு பொது சுகாதார பரிசோதகர்களுக்குத் தெரியப்படுத்துமாறு பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

(த-207)

## தேவை.....



முயற்சி: வடபிராந்திய பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்த 103 பொலிஸார் தமிழ் மொழிப் பயிற்சியை நிறைவு செய்தமைக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த வாரம் பலாலியில் இடம்பெற்றது.பிரதிப் பொலிஸ்மா அதிபர், காங்கேசன்துறைப் பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோர் உரையாற்றுகின்றனர். பயிற்சி பெற்ற பொலிஸாரும் படத்தில் காணப்படுகின்றனர். (86)

# மாணவர்களின் அ.அட்டைகள் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம்,டிசெ.12

யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலைகளிலிருந்து ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் 30.11.2010 ஆம் திகதிக்கு முன்னர் கையளிக்கப்பட்ட தேசிய அடையாள அட்டை விண்ணப்பங்களுக்குரிய 2500 தேசிய அடையாள அட்டைகள் யாழ். மாவட்ட அரச அதிபரினால் கொழும்பிலிருந்து யாழ்.மாவட்ட செயலகத்துக்கு எடுத்து வரப்பட்டுள்ளன.

இவற்றைப் பாடசாலை அதிபர்கள் மாவட்டச் செயலகத்தில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு அரச அதிபர் அறிவித்துள்ளார். (த-15)




# பரீட்சை நிலையம் இடமாற்றம்

தென்மராட்சி,டிசெ.12

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தில் ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சைக்கு அமைக்கப்பட்ட பரீட்சை நிலையம் கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்துக்கு மாற்றப்பட்டுள்ளதாக வலயக் கல்வி பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார்.

(201-207)

# கண் சிகிச்சை

தென்மராட்சி,டிசெ.12

தென்மராட்சி மாணவர்களுக்கான விசேட கண் கிகிச்சை நாளை திங்கட்கிழமை காலை 7 மணி தொடக்கம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நடைபெறும்.

யாழ்.போதனா வைத்தியசாலை கண் சிகிச்சை நிபுணர் டாக்டர் க.குகதாஸன் கண் பரிசோதனையை நடாத்துவார்.

(201-207)

# 'நம்ம ஊரில் நத்தார்' நிகழ்வுக்கு ஜனாதிபதியின் பாரியார் வரவில்லை

யாழ்ப்பாணம்,டிசெ.12

ஜனாதிபதி செயலகத்தின் ஏற்பாட்டிலான நம்ம 'ஊரில் நத்தார்' என்ற தொனிப் பொருளிலான நத்தார் கலை நிகழ்வுகள் நேற்று சனிக்கிழமை யாழ். ஓட்டுமடம் மெதடிஸ்த தேவாலயத்தில் நடைபெற்றன.

ஜனாதிபதியின் பாரியாரும் முதன் பெண்மணியுமான சிராந்தி ராஜபக்ஷ இதில் கலந்து கொள்வார் எனத் தெரிவிக்கப்பட்ட போதும் அவர் நிகழ்வுக்கு வரவில்லை.

இந்த நிகழ்வில் சர்வமத குருமார்கள், சிறுவர்கள், இளைஞர்கள் கலந்து கொண்டனர். சர்வமதத் தலைவர்கள், யாழ்.மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோர் மங்கள விளக்கேற்றி நிகழ்வைத் தொடக்கி வைத்தனர்.

முன்னதாக பாண்ட்வாத்திய இசையுடன் விருந்தினர்கள் மானிப்பாய் வீதியில் இருந்து ஊர்வலமாக மெதடிஸ்த தேவாலயத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

நிகழ்வில் யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் மற்றும் பிரமுகர்கள் நாட்டில் சமாதானத்தைக் கருத்தில் கொண்டு சமாதானப் புறாக்களைப் பறக்க விட்டனர்.

காலை முதல் சிறுவர்களுக்கிடையிலான பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன. அதைத் தொடர்ந்து தமிழ் சிங்களக் கலைஞர் அமைப்புக்கள், படையினரின் நத்தார் பாடல்கள், இசை நிகழ்வுகள், நடன நிகழ்வுகள் என்பன இடம்பெற்றன.

போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

ஜனாதிபதி செயலகத்தில் இயங்கும் சர்வமத மற்றும் இன நட்புறவு சிறுவர் பவுண்டேசன் என்ற அமைப்பின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

(த-7-14)

# பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பம் கோரல்

நவாலி,டிசெ.12

இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபை காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் வீட்டு மின் இணைப்பு, அலுமினியம் பொருத்துதல், மேசன், மர வேலை, தையல், நீர்க்குழாய் பொருத்துதல், ஆகிய தொழிற் பயிற்சிகளை வழங்குவதற்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்களை கோரியுள்ளது.

இந்தப் பயிற்சிக்கு விண்ணப்பிப்பவர்கள் ஜி.சீ.ஈ.சாதாரணதரம் வரை கற்றிருப்பதோடு 18 - 30 வயதிற்கும் இடைப்பட்டவராக இருக்க வேண்டும். 6 மாத காலப் பயிற்சி நெறியாக அமையவுள்ளது.

பயிற்சியில் இணைந்து கொள்ள விரும்புவோர் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபை, வலந்தலை, காரைநகர் என்னும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு பயிற்சி நிலையத்தின் பொறுப்பதிகாரி வே.சிறிகுகன் கேட்டுள்ளார்.

பயிற்சிகள் அனைத்தும் 2011 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3 ஆம் திகதி ஆரம்பமாகும். (201-106)

# யாழ். பிரதேச கலாசார விழா

கொழும்புத்துறை,டிசெ.12

யாழ்.பிரதேச கலாசாரப் பேரவையால் நடாத்தப்படும் கலாசாரவிழா 2010 ''கலாசாரம் காத்திட எழுவோம்'' என்னும் தொனிப்பொருளில் நடைபெறவுள்ளது.

யாழ்.பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப.2 மணிக்கு யாழ்.பிரதேச செயலக உதவிச் செயலாளர் திருமதி சுலோஜனி குகன் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரும், சிறப்பு விருந்தினராக மேலதிக யாழ். மாவட்டச் செயலாளர் திருமதி ரூபினி வரதலிங்கம், யாழ்.மாவட்டக் கலாசார உத்தியோகத்தர் திருமதி சு.விஜயரத்தினம் ஆகியோரும் கலந்து கொள்வர்.

கலை நிகழ்வுகளாக யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகளின் வரவேற்பு நடனம், மற்றும் கிராமிய நடனம், திருமறைக் கலாமன்ற கலைத்தூது அழகியல் கல்லூரி மாணவிகளின் கும்மி நடனம், 'கலாசாரம் காத்திட எழுவோம்' என்னும் தலைப்பில் இரா. செல்வடிவேல் தலைமையில் கவியரங்கம், சிறப்பு நிகழ்வாக யாழ். பிரதேச கலாசார பேரவைக் கலைஞர்களின் 'பண்டார வன்னியன்' நாட்டுக் கூத்து என்பன இடம்பெறுமென விழாக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

யாழ்.பிரதேச, தேசிய கலை இலக்கியப்போட்டி 2009, 2010 ஆம் ஆண்டுகளில் வெற்றி பெற்றவர்களுக்கான சான்றிதழ்களும் பரிசுகளும் வழங்கப்படவுள்ளதாக யாழ்.பிரதேச செயலர் திருமதி சுகுனரதி தெய்வேந்திரன் அறிவித்துள்ளார்.

(த-135)

# மாதாந்த உதவிப் பணம் 20 ஆம் திகதி வரை

பொதுசன மாதாந்த உதவிப் பணம், நோய் உதவிப்பணம் ஆகியவற்றை எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை வரை தபாலகங்கள் மூலம் பெற்றுக்கொள்ள முடியும் என வடமாகாண சமூக சேவைகள் பணிப்பாளர் க.சிவகரன் அறிவித்துள்ளார். (ற-121)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

தோற்றம்:
03.07.1945



மறைவு:
11.11.2010

திருமதி
### அப்புலிங்கம் பரிமளம்

கடந்த 11.11.2010 அன்று எமைவிட்டுப் பிரிந்த எமது குடும்பத் தலைவி அவர்களின் மறைவு கேட்டு எமக்கு நேரிலும் தெலைபேசியிலும் மரணச் சடங்கிலும் பங்கு பற்றி ஆறுதல் அளித்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (12.12.2010) ஞாயிற்றுக்கிழமை இணுவில் சிவகாமி அம்மன் திருமண மண்டபத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*கணவர், பிள்ளைகள்,*
*மருமக்கள்,*
*பேரப்பிள்ளைகள்.*

*M.S.வீதி, கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில். 0774047774*

## நாடக விழா

யாழ்ப்பாணம்,டிசெ.12

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் முத்தமிழ் மன்றத்தின் ஏற்பாட்டில் நாடகவிழா நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கலாசாலை ''ரதி லக்ஷ்மி'' மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் வே.கா.கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில் பிரதம விருந்தினராக முதுபெரும் நாடகக் கலைஞர் எஸ்.ரி. அரசு கலந்துகொள்வார்.

இந்த நிகழ்வில் 'பண்டாரவன்னியன்', 'கவரிமான்', 'மதுராதகனம்', 'ஒரு வினாவுக்கு ஒரு விடை மட்டுமா?' ஆகிய நாடகங்கள் மேடையேறவுள்ளன. (ற)

## முதியோர் சங்கங்களின் விவரம் கோரல்

நவாலி,டிசெ.12

வலி.தென்மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள முதியோர்களின் சங்கங்களுக்கு ஐயாயிரம் ரூபா நிதி உதவிகளைப்பெற்றுக் கொடுப்பதற்கு முதியோர் செயலகத்தினால் விவரங்கள் கோரப்பட்டுள்ளன.

சங்கங்களின் விவரங்களை பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் க.முரளி சகல சங்கங்களையும் கேட்டுள்ளார்.

(201-100)

## செல்வச்சந்நிதி ஆலயத்தில் வைத்திய சேவை

யாழ்ப்பாணம், டிசெ.12

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலய பரிபாலன சபையின் ஏற்பாட்டில் வைத்திய சேவை இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிமுதல் 11.30 மணிவரை ஆலய பொது நல்நோக்கு மண்டபத்தில் நடைபெறும்.

இந்த இலவச சேவையில் யாழ். போதனா வைத்தியசாலை பொது வைத்திய நிபுணர் திருமதி கௌரி செல்வரத்தினம், டாக்டர் ரி.குமணன் மற்றும் பல சிரேஷ்ட வைத்திய நிபுணர்களும் வருகைதந்து ஆலயச் சுற்றாடல் மற்றும் அயல் ஊர்களில் உள்ள நோயாளர்களைப் பார்வையிட்டு வைத்தியசேவையும் மருந்துகளும் வழங்கவுள்ளனர் என ஆலய பரிபாலன சபைச் செயலாளர் வி.தெய்வேந்திரன் அறிவித்துள்ளார். (ற)

## பாலர் பராமரிப்பு நிலைய கலைவிழா

தென்மராட்சி, டிசெ.12

சாவகச்சேரி நகர் புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையச் சிறார்களின் கலைவிழா எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி சிவன் கோயில் வீதியில் உள்ள தென்மராட்சி கலைமன்ற மண்டபத்தில் நடைபெறும்.

நிலையத் தலைவர் வை.இராசரத்தினம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், சிறுவர் நன்னடத்தை சேவைத் திணைக்கள ஆணையாளர் வி.விஸ்வரூபன் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன், யாழ்.மாவட்ட சிறுவர் நன்னடத்தை அலுவலர் இ.சிவகரன் ஆகியோரும் கலந்துகொள்வர்.

மேற்படி நிலையத்திலிருந்து பாடசாலைகளில் இணையும் மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெறும்.

## மரண அறிவித்தல்



### திருமதி மைக்கல் மேரிதிரேசா
(தங்கமணி)

மாட்டீன் றோட்டைப் பிறப்பிடமாகவும், 23/1, ஈச்சமோட்டையை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி மைக்கல் மேரிதிரேசா (தங்கமணி) 10.12.2010 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜோன்பிள்ளை- எலிசபேத் தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை- மரியம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற மைக்கல் செல்லையாவின் (ஓய்வுபெற்ற மின் அத்தியட்சகர்) பாசமிகு மனைவியும், சந்திரா, நிர்மலா, ரவி, அன்ரன், ஸ்ரெலா, இசெபல்லா,மாலா, வனிதா, கென்றி, கெனடி, நெல்சன், ஜோன்சன், சியாமளா ஆகியோரின் பாசமிகு தாயாரும், மரியரட்ணம், அல்பேட்பிரான்சிஸ், மக்ரலீன், ஆனந்தி, காலஞ்சென்ற அன்ரன் மற்றும் ஜோய், றெஜி, குமார்எறின், விஜி, நாகராணி, ரதி, ரூபன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், டினேஸ், றொஜர், சிறோமி, சிறாணி, ஆனந்தன், நிரோஜினி, அன்ரனி, மரிக், சோபா, ஆர்த்தி, பிரவீன், பிரியாந்தி, விஜயாந்தி, வினோத், சகிலா, சாள்ஸ், டயானி, நிலானி காலஞ்சென்றவர்களான நிஷாந்தன், றொஷாந்தன் மற்றும் டிலானி, சரண்யா, எரிக்கா, எரிக், மருஷன், கிருத்திகா, யதுசன், தனுஜன், அனுஜன், பானுஜன், சகானா, சோபிகா, கெவின் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்ற செல்வமணி மற்றும் யோகமணி காலஞ்சென்றவர்களான பூமணி, மரியதாஸ் மற்றும் ராணி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (13.12.2010) திங்கட்கிழமை பி.ப.3 மணிக்கு கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, பின்னர் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

23/1, ஈச்சமோட்டை றோட்,
யாழ்ப்பாணம்.

(107227)

## நகரசபை, சாவகச்சேரி
## 2011ஆம் ஆண்டுக்கான ஆதனவரி அறிவித்தல்

சாவகச்சேரி நகரசபையின் (255ஆம் அத்தியாயமான) நகரசபைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் உரிமையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் சார்பில் பின்வருமாறு முடிவு செய்திருப்பதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

01) கட்டளைச் சட்டத்தின் 160(3)ஆம் பிரிவின் நியதிப்படி சாவகச்சேரி நகரசபையின் பரிபாலன எல்லைக்குட்பட்டு அமைந்திருக்கும் நெற்காணிகள் தவிர்ந்த சகல அசையாச் சொத்துக்களிலிருந்தும் வருடாந்தப் பெறுமதியின் 10% மான வரியொன்றினை 2011ஆம் ஆண்டு முறையே மார்ச் 31, ஜூன் 30, செப்ரெம்பர் 30, டிசெம்பர் 31 ஆகிய திகதிகளிலோ அல்லது அதற்கு முன்போ நான்கு கந்தாய தவணைகள் மூலம் செலுத்தப்படவேண்டும்.

02) 2011ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31ஆம் நாளில் அல்லது அதற்கு முன்னர் வருடாந்த விகிதங்கள் முழுமையாகச் செலுத்தப்பட்டால் 10% கழிவு அனுமதிக்கப்படும் என்பதுடன் விகித வருமதியாகவுள்ள அக் கந்தாயத்துக்குரிய முதல் மாதத்துக்குள்ளாக கந்தாய விகிதம் செலுத்தப்பட்டால் 5% கழிவும் அனுமதிக்கப்படும்.

03) மேற்சொல்லப்பட்ட பந்தி 1இன் பிரகாரம் சொல்லப்பட்ட காலங்களில் விகிதங்கள் செலுத்தப்படாதவிடத்து வெற்றுக் காணிகள், வதிவிடங்கள் மீது 15%மும் மற்றும் ஏனைய இடங்கள் மீது 20%மும் விறாந்துக் கட்டணம் அறவிடப்படும்.

04) ஆதனவரி சார்பாக சகல ஆட்சேபனைகளும் ஒவ்வொரு ஆதனத்துக்கும் தனித்தனியாக 31.01.2011ஆம் திகதிக்கு முன்னர் எழுத்துமூலம் இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்கும்படி அன்புடன் வேண்டப்படுகின்றீர்கள்.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி.
10.12.2010.

செல்வி. வீ. சிவக்கொழுந்து,
*செயலாளர்,*
*நகரசபை, சாவகச்சேரி.*

(மி/573948)


## வெளிநாட்டு வேலைவாய்ப்பு
உடனடி வேலைவாய்ப்பு **டோஹா கட்டார்**

டோஹா கட்டாரில் உள்ள பிரபல்யமான கம்பனிக்கு பின்வருவோர் உடனடியாகத் தேவைப்படுகிறார்கள். தகுதியுடையோர் தமது சுயவிபரக்கோவை, பாஸ்போர்ட், புகைப்படம், கல்விச் சான்றிதழ்களுடன் உடனடியாக காரியாலயத்திற்கு வரவும். விரைவில் பயணம்.

| வகை | | தொகை | சம்பளம் (QR) |
|---|---|---|---|
| மேசன் | Masons | 25 | 900 |
| ஷட்டரிங் கார்ப்பென்டர் | Shuttering Carpenters | 15 | 900 |
| இரும்பு பொருத்துனர் | Steel Fixers | 15 | 900 |
| உதவி டைம் கீப்பர் | Asst. Time Keepers | 15 | 900 |
| உதவி களஞ்சியப் பொறுப்பாளர் | Asst. Store Keepers | 15 | 900 |
| பாதுகாப்பு உத்தியோகத்தர் | Security Guards | 25 | 900 |
| மின்னியலாளர் | Electricians | 10 | 900 |
| தொழிலாளர்கள் | Labourers | 70 | 800 |
| A/C திருத்துபவர்கள் | A/C Technicians | 10 | 1200-1400 |
| பைப் வேலை செய்வோர் | Plumbers | 10 | 1200-1400 |
| பைப் பொருத்துவோர் | Pipe Fitters | 10 | 1200-1400 |

1QR = 31 SL RS

அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட சேவைக்கட்டணம் மாத்திரமே அறவிடப்படும். ALJ2248ADVT/10/10

*சேவைகளும் நிபந்தனைகளும்*

* மருத்துவம். தங்குமிடம் இலவசம். * உணவுக்கொடுப்பனவு சம்பளத்தில் உள்ளடக்கப்படும்.
* ஒப்பந்தகாலம் 2 வருடம் நீடிக்கக்கூடியது.
* வேலை நேரம் 08 மணித்தியாலம் + மேலதிக வேலை நேர கொடுப்பனவு, வாரத்திற்கு 6 நாட்கள்.
* இரு வருடங்களுக்கு ஒருமுறை திரும்பி வருவதற்கான விமான டிக்கட் வழங்கப்படும்.
* ஏனைய நிபந்தனைகள் கட்டார் நாட்டு சட்டதிட்டங்களுக்கு அமைவாக.

CRI

**கெப்பிட்டல் ரெக்ரூட்மென்ட் இன்டர்நேஷனல் (பிரை) லிமிட்டட்**
இல 71, முதலாம் மாடி, ஜோர்ஜ் ஆர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 13
தொ : 011-2478319, 011-2478320 பக்ஸ் : 011-2478321
capitalcolombo@gmail.com (கொட்டாஞ்சேனை கார்கில்ஸ் . KFC க்கு முன்னால்)
LI.NO. 2248


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுப்பில் எஞ்சியுள்ள புலி உறுப்பினர்கள் இன்னும் மூன்று மாதத்திற்குள் விடுதலையாவர்

## புனர்வாழ்வு ஆணையாளர் தெரிவிப்பு

முல்லைத்தீவு,டிசெ.12

தடுப்பு முகாம்களில் உள்ள முன்னாள் புலி உறுப்பினர்கள் அடுத்த மூன்று மாதங்களுக்குள் விடுதலையாவரென புனர்வாழ்வு ஆணையாளர் பிரிகேடியர் சுகந்த ரணசிங்க கூறியுள்ளார்.

தடுப்பு முகாம்களில் இருந்து விடுதலையாகிய முன்னாள் புலி உறுப்பினர்கள், தடுப்பு முகாம்களிலுள்ளவர்களின் பெற்றோர் மற்றும் கணவன்மார், மனைவிமார் ஆகியோருக்கான கூட்டம் முல்லைத்தீவு மாவட்டத்தின் 591 ஆவது பிரிகேடியர் தலைமையில் கடந்த 8 ஆம் திகதி முற்பகல் 11 மணி முதல் 2 மணி வரை நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் உரையாற்றும் போது புனர்வாழ்வு ஆணையாளர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில், விடுதலையாகி வரும் புலி உறுப்பினர்களுக்காக ஐ.ஓ.எம். நிறுவனம் சுயதொழில் வேலை வாய்ப்பை வழங்குவதற்கான செயற்றிட்டமொன்றை ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் 400 இக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். தடுப்பு முகாம்களில் உள்ள பிள்ளைகளின் பெற்றோர்கள் தங்களின் பிள்ளைகளையும், மனைவிமார் தமது கணவன்மாரையும், கணவன்மார் தங்களது மனைவிமாரையும் விடுதலை செய்யுமாறு வேண்டிக் கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் புனர்வாழ்வு ஆணையாளர் ஐ.ஓ.எம். நிறுவனத்தின் புனர்வாழ்வுக்கான தலைமை அதிகாரி, நிறுவனங்களின் மாவட்ட இணைப்பாளர்கள், உளவளத்துறை மருத்துவ அதிகாரி, கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட அனைத்து கிராம சேவையாளர்கள், உதவி அரச அதிபர், இராணுவ உயர் அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (க)

# சனசமூக நிலையம் அமைக்குமாறு நல்லூர் கிராம மக்கள் கோரிக்கை

பூநகரி,டிசெ.12

கிளிநொச்சி மாவட்டம் நல்லூர் கிராமத்திற்கு சனசமூக நிலையம் ஒன்றை அமைத்துத் தருமாறு கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்தக் கிராம மக்கள் நாளாந்த விடயங்களையும், உலகப் புதினங்களையும் அறிவதற்கு ஆவலாக உள்ளனர். ஆனால் பத்திரிகைகள் கிடைக்காமையால் இவர்கள் சிரமங்களுக்கு ஆளாகின்றனர். எனவே இந்தக் கிராமத்தில் சனசமூக நிலையமொன்றை அமைப்பதன் மூலம் இந்தக் குறையை நிவர்த்தி செய்ய முடியும்.

அத்துடன் பாடசாலைகளில் கல்வி கற்கும் தமது பிள்ளைகள் வீதிகளில் வீண் பொழுதைக் கழிக்கும் நிலைமாறித் தமது அறிவினை வளர்ப்பதற்குச் சனசமூக நிலையம் உதவுமென்றும் இந்த மக்கள் நம்புகின்றனர். கிராமத்திலுள்ள பெரியவர்கள் வீண் வம்புகளில் ஈடுபட்டு மோதல்களில் முடிவதைத் தவிர்த்து சன சமூக நிலையத்தில் ஈடுபாடு கொள்வதற்கு உதவ வேண்டுமெனவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இந்தக் கிராமத்திலே சனசமூக நிலையமொன்று அமைக்கப்படுமாயின் நல்லூர், ஆலங்கேணி, சாமிப்புலம் போன்ற கிராமங்களைச் சேர்ந்த மக்களும், மாணவர்களும் பயன் பெறுவரெனவும் இதற்காக இந்தக் கிராமத்திலே சனசமூக நிலையத்தை அமைத்துத் தருமாறும் இக்கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(க-406)

# கற்சிலைமடு விநாயகர் ஆலயத்தில் பிள்ளையார் பெருங்கதை விரதம்

முல்லைத்தீவு,டிசெ.12

கற்சிலைமடு ஸ்ரீ விநாயகர் ஆலயத்தில் பிள்ளையார் கதை விரதம் அனுஷ்டிக்கப்பட்டு வந்தது.

இந்த ஆலயத்தில் கந்த சஷ்டி விரதம், திருக்கார்த்திகை விரதம் ஆகியவற்றைத் தொடர்ந்து தற்போது பிள்ளையார் கதை விரதம் அனுஷ்டிக்கப்பட்டது. மார்கழி பிறந்ததும் திருவெம்பாவை விரதமும் அனுஷ்டிக்கப்படவிருக்கின்றது.

தமிழ் மாதங்களில் கார்த்திகை மாதம் தனிச் சிறப்புப் பெற்றதாகும். இந்த மாதம் மனிதருக்கு மன உறுதியை வழங்கக் கூடியது. இல்லற வாழ்விலும் இனிமை தரக்கூடியதால் இதனைத் 'திருமண மாதம்' என்றும் அழைப்பர். அத்துடன் பல விரதங்களும் இந்த மாதத்தில் வருவதால் கார்த்திகை மாதம் தனிச் சிறப்பு வாய்ந்தது.

இதனைக் கருத்தில் கொண்டு கற்சிலைமடு ஸ்ரீ விநாயகர் ஆலயத்தில் பல்வேறு விரதங்களும் சிறந்த முறையில் இப்பிரதேச மக்களால் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றமை காலத்திற்குக் காலம் தொடருகின்றது. (க-500)

# கால்நடைகள் போன்று நடமாடும் யானைகளால் முல்லைத்தீவு மாவட்டத்தில் பயிர்களுக்கு நாசம்

முல்லைத்தீவு,டிசெ.12

முல்லைத்தீவு மாவட்டத்தில் கட்டாக்காலி கால்நடைகள் போன்று நடமாடித் திரியும் காட்டு யானைகள் பாரிய நாசத்தை விளைவித்து வருகின்றன.

இந்த யானைகள் தோட்டப் பயிர்கள், வான் பயிர்கள் என வேறுபாடின்றி அனைத்தையும் அழித்து வருகின்றன. பகல், இரவு என வேறுபாடின்றி இவை குடிமனைகளுக்குள் புகுந்து அட்டகாசம் செய்து வருகின்றன. முத்துஐயன்கட்டுப் பகுதியில் மீளக்குடியேறிய விவசாயியொருவர் 15 ஆயிரம் ரூபா செலவில் தென்னங்கன்றுகளை நாட்டியிருந்தார். இவற்றில் ஒன்றினைக்கூட மிச்சம் வைக்காது இந்தக் காட்டு யானைகள் அழித்து விட்டன. இதைப் போன்று வாழைப் பயிர்களையும் அழித்து வருகின்றன.

இந்தப் பகுதிகளில் நடமாடும் பொது மக்களையும் இவை விட்டு வைக்கவில்லை. இவர்கள் மீது இந்த யானைகள் தாக்குதலை மேற்கொள்வதால் மக்கள் அச்சத்தில் உள்ளனர். அத்துடன் வீடுகளுக்குள் புகுந்து சேதத்தை விளைவிப்பதால் மக்கள் நிம்மதியாக உறங்க முடியாத நிலையிலுள்ளனர். தமது விவசாய நிலங்களைப் பாதுகாப்பதற்குச் செல்வதற்கும் இந்தப் பகுதி மக்கள் தயங்குகின்றனர்.

இந்த யானைகளின் அட்டகாசத்தை ஒடுக்குவதற்கு அரச அதிபர் உடனடி நடவடிக்கை எடுத்துத் தம்மைக் காப்பாற்றுமாறு பாதிக்கப்பட்ட மக்கள் கேட்டுக் கொள்கின்றனர்.

(க-500)

## உடைக்கப்பட்ட தொடுவாய்....



சங்கமிப்பு: இரணைமடுக் குளத்தின் நீரால் ஆனையிறவுக் கடனீரேரி நிறைந்ததால் அதன் தொடுவாய் உடைக்கப்பட்டு நீர் வங்கக் கடலில் கலக்கிறது.




# பாடசாலைகள் தரமுயர்வு

முல்லைத்தீவு,டிசெ.12

ஆயிரம் பாடசாலைகளைத் தரமுயர்த்தும் திட்டத்தில் ஒட்டுசுட்டானில் இரண்டு பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம், இரண்டாம் பிரிவு வலதுகரை அ.த.க.பாடசாலை ஆகிய இரண்டுமே தெரிவு செய்யப்பட்டுத் தரமுயர்த்தப் படவுள்ளன. (க-500)

# பன்றிகளின் தொல்லையால் முட்கொம்பன் மக்கள் பாதிப்பு

பூநகரி,டிசெ.12

பூநகரி முட்கொம்பன் கிராம மக்கள் காட்டுப் பன்றிகளால் பெரும் நட்டங்களைச் சந்தித்து வருகின்றனர்.

இந்தக் கிராமத்தில் பலரும் விவசாயிகளாகவே காணப்படுகின்றனர். இவர்களால் செய்கை பண்ணப்பட்ட மரவள்ளி மற்றும் கிழங்குப் பயிர்கள் காட்டுப் பன்றிகளால் அழிக்கப்பட்டு வருகின்றன. அத்துடன் இரவு வேளைகளில் தென்னை மரங்களிலிருந்து வீழ்கின்ற தேங்காய்களையும் இவை விட்டு வைப்பதில்லை. தற்போது தேங்காயொன்று 50 ரூபாவுக்கு மேல் விற்கப்படுகின்ற நிலையில் பன்றிகளின் இந்த அழிவுச் செயல் மக்களைக் கவலையில் ஆழ்த்தியுள்ளது.

புதிதாக நடப்படுகின்ற தென்னங்கன்றுகளையும் இந்தப் பன்றிகள் அகழ்ந்து வீசுகின்றன. இதனால் இந்தக் கிராம மக்கள் செய்வதறியாது சோர்ந்த நிலையில் உள்ளனர்.

யுத்தமொன்றுக்கு முகம் கொடுத்து அனைத்தையும் இழந்த இந்த மக்கள் மெல்ல மெல்லத் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்த முயலும் போது பன்றிகளின் இந்தத் தொல்லைகள் புதியதொரு நெருக்கடியைக் கொடுத்து வருகின்றது. (க-500)

# முல்லைத்தீவில் கைவிட்ட பொருள்களை மீளப்பெறுவதற்குப் புதிய நடைமுறை

முல்லைத்தீவு,டிசெ.12

முல்லைத்தீவு மாவட்டத்தில் யுத்த காலத்தில் கைவிடப்பட்ட பொருள்களை மீளப் பெறுதல் தொடர்பான புதிய நடைமுறையொன்றை மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார்.

கடந்த காலத்தில் ஏற்பட்ட யுத்தத்தின் போது பல இடங்களில் இருந்தும் மக்கள் இடம்பெயர்ந்து முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த பகுதிகளுக்கு வந்து தமது உடைமைகளை விட்டுச் சென்றனர். பின்னர், இப்பொருள்களை மீளப் பெறுவதற்கு அனுமதி வழங்கப்பட்டு வந்தது. இச் சந்தர்ப்பத்தில் அனுமதி பெற்று சென்றவர்கள் தங்களது பொருள்களை மட்டுமல்லாது அயலில் உள்ள மற்றவர்களது பொருள்களையும் எடுத்துச் செல்வதாகக் கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் இந்த அனுமதி வழங்கும் நடவடிக்கை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தது.

தற்போது புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த உடையார்கட்டு வடக்கு, சுதந்திரபுரம், தேவிபுரம், வள்ளிபுனம், இரணைப்பாலை ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் பொருள்களைக் கைவிட்டவர்கள் மட்டும் (வாகனம் தவிர) தமது விண்ணப்பங்களைப் பொருள்களின் விவரங்களுடன் புதுக்குடியிருப்பு உதவி அரச அதிபரிடம் சமர்ப்பித்து அவரால் தெரிவிக்கப்படும் திகதியில் அந்தந்த காணி உரிமையாளர்களுடன் சென்று தத்தமது பொருள்களை மீளப் பெற்றுக் கொள்ளமுடியும் என முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் தெரிவித்துள்ளார். (க)

# சுகாதாரப் பொதிகள்

முல்லைத்தீவு,டிசெ.12

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் மக்களின் சுகாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் சுகாதாரப் பகுதியினர் சுகாதாரத்தைப் பேணுவதற்கு உதவும் பொருள்களடங்கிய பொதிகளை வழங்கியுள்ளனர்.

கடந்த சில நாள்களாகப் பெய்த கடும் மழையினால் இப்பிரதேச மக்களின் சுகாதாரம் மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தது.

மழை வெள்ளம் இவர்களின் குடிமனைகளைச் சுற்றித் தேங்கி நின்றதால் இவர்கள் பல்வேறு சுகாதாரக் குறைபாடுகளுக்கு ஆளாகி வந்தனர். இதனைக் கருத்தில் கொண்டு இந்த மக்களின் சுகாதார நிலையை மேம்படுத்துவதற்காக சோப்புகள் அடங்கிய பொதிகள் வழங்கப்பட்டுள்ளன. (க-500)

# ஒட்டுசுட்டான் மத்திய மருந்தகத்தில் வைத்திய சேவையை மீள ஆரம்பம்

முல்லைத்தீவு,டிசெ.12

ஒட்டுசுட்டான் மத்திய மருந்தகம் புனரமைக்கப்பட்டு முழுநேர வைத்தியருடன் இயங்கி வருவதால் இப்பிரதேச மக்கள் சிரமமின்றிச் சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர்.

யுத்தத்தின்போது இந்த வைத்தியசாலைக் கட்டடம் அழிவுற்றதால் இதன் செயற்பாடுகள் யாவும் குன்றிய நிலையில், மக்கள் தமது வைத்தியத் தேவைகளைப் பெறுவதில் சிரமங்களை அனுபவித்து வந்தனர். தற்போது இந்தக் கட்டடம் சிறந்த முறையில் புனரமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் முழுநேர வைத்தியர் நியமிக்கப்பட்டுச் சீரான வைத்திய சேவையும் நடைபெறுகின்றது. இதனைவிட அம்புலன்ஸ் சேவையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் மக்கள் சிறந்த வைத்திய சேவையைப் பெற முடிகின்றது.

இந்த வைத்தியசாலை 22 கிராம சேவை அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கு மிகவும் பயனுள்ள வைத்திய சேவையை வழங்கி வருகின்றது.

இதிலுள்ள சில குறைபாடுகள் நீக்கப்பட்டு மேலும் வசதிகள் ஏற்படுத்தப்படுமாயின் இந்த வைத்தியசாலை இப்பிரதேச மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகவே அமையும்.

(க-500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தன்கேணி – தனுவோடைப்பதி

## ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ சிவசிதம்பரேஸ்வரர் தேவஸ்தான கும்பாபிஷேக 45ஆம் நாள் மண்டலாபிஷேக பூர்த்தி விஞ்ஞாபனம்

இன்று (12.12.2010) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி முதல் சிவசிதம்பரேஸ்வரருக்கு 1008 சங்காபிஷேகமும் சிவகாமி அம்பாளுக்கு 108 கலச சங்காபிஷேகமும் நடைபெறும். தொடர்ந்து திரவிய ஹோமம், திரவிய அபிஷேகம், தீபாராதனை நடைபெற்று, விஷேட நாதஸ்வர மேளதாள வாத்தியங்களுடன் சுவாமி வீதிவலம் வருதலும் இடம்பெற்று, அன்னதான நிகழ்வும் இடம்பெறும். சிவனடியார்கள் அனைவரும் கலந்துகொண்டு சிவனருளுக்குப் பாத்திரமாவீர்களாக!

தேவஸ்தான குருமார். பரிபாலன சபை. உபயகாரர்.

(107169)

## பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம் (வ/து)

## பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் கீழ்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு தகைமை உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. பதவி : எழுதுநர் வெற்றிடம் : 03
சம்பளக் குறியீட்டு இல. : 302/15
சம்பள அளவுத் திட்டம் : 9450-75X10 - 80X10 - 11000
**தகைமைகள்:**
அ. கூட்டுறவுப் பணியாளரின் 16 ஆவது சம்பளத் திட்டத்தில் இலிகிதர் பதவியில் 02 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்
**அல்லது**
ஆ. க.பொ.த (சாதா.தரத்தில்) 02 அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம்/ வர்த்தக எண்கணிதம்/ தூயகணிதம், சிங்களம்/தமிழ் மொழி என்பவற்றினை உள்ளடக்கியதாக 06 பாடங்களில் சித்தியும் கூட்டுறவுச் சங்க இலிகிதர் பதவியொன்றில் ஒரு வருடத்திற்குக் குறையாத அனுபவம், கணினித் தகைமை அவசியம்.

2. பதவி : தட்டெழுத்தாளர் வெற்றிடம் : 01
சம்பளக் குறியீட்டு இல. : 305/13
சம்பள அளவுத் திட்டம் : 9950-85X10 - 90X10 - 11700
**தகைமைகள்:**
கணினித் தகைமை அவசியம்.
கூட்டுறவுப் பணியாளரின் 15ஆவது சம்பளத்திட்டத்திலான சிங்களம்/தமிழ்/ ஆங்கிலம் தட்டெழுத்தாளர் பதவியில் இரண்டு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

3. பதவி : வாகனச் சுத்திகரிப்பாளர் வெற்றிடம்: 02
சம்பளக் குறியீட்டு இல. : 314/16
சம்பள அளவுத் திட்டம் : 9200-70X10 - 75X10 - 10650
**தகைமைகள்:**
அ. கூட்டுறவுப் பணியாளரின் 17ஆவது சம்பளத்திட்டத்திலான பதவியில் 01 வருடத்திற்குக் குறையாத அனுபவம்
**அல்லது**
ஆ. 5ஆம் வகுப்பு சித்தியுடன் சிறந்த தேகாரோக்கியம் கொண்டிருந்தல்.

4. பதவி : காவலாளர் வெற்றிடம்: 04
சம்பளக் குறியீட்டு இல. : 315/16
அ. சம்பள அளவுத் திட்டம் : 9200-70X10 - 75X10 - 10650
**தகைமைகள்:**
கூட்டுறவுப் பணியாளரின் 17ஆவது சம்பளத் திட்டத்திலான
ஆ. பதவியில் 01 வருடத்திற்குக் குறையாத அனுபவம்
**அல்லது**
5ஆம் வகுப்புக் கல்வித்தராதரப் பத்திரமும் சிறந்த தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல்.
**வயதெல்லை: 18-45**
கூட்டுறவுப் பணியாளருக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது.

*விண்ணப்பப் படிவத்தை வேலை நாள்களில் சங்கத் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.*

*விண்ணப்பங்களை **27.12.2010ஆம்** திகதிக்கு முன்னதாக **"தலைவர், பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம், பண்டத்தரிப்பு"** என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பி வைக்கவும்.*

**குறிப்பு:**
*விண்ணப்பதாரர் சங்கப் பணியாளரானால் கடமையாற்றும் சங்கத்தினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.*

**தலைவர்,**
பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம், பண்டத்தரிப்பு.

(சி/573937)

விராட் விஸ்வ பிரமனே நமஹ

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



### முருகையா சுரேஸ்குமார்

மலர்வு: 13.04.1968
உதிர்வு: 07.12.2005
திதி: பூர்வபக்க ஸப்தமி

கைப்பிடிக்குள் உன்னை வைத்து
கண்ணின் மணிபோல்
காத்திருந்தோம்
காலமெல்லாம் எம்மை
கண்ணீரில்
தவிக்கவிட்டுத் தனிவழி
சென்றதேன்ன?

உன்பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா,
சகோதர சகோதரிகள் மற்றும்
உற்றார், உறவினர், நண்பர்கள்.

71, பெரியநம்பிரான் வீதி,
வண்ணார்பண்ணை.

(107110)

### வான் விற்பனைக்கு

DAIHATSN (HIJET) MODEL HL---- வான் உடனடி விற்பனைக்கு.
0779218444

### காணி விற்பனைக்கு

திக்கம் சாராய வடிசாலைக்கு முன்பாகவுள்ள RDA றோட்டில் 7¼ பரப்புக் காணி நல்ல சூழலில் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு : 0212263199, 0771513387

### வீடு வாடகைக்கு விடப்படும்

யாழ். பிறஸ் வீதியில் ஆயர் இல்லத்துக்குப் பின்புறமாக 3 அறைகள் கொண்ட எல்லா வசதியும் உள்ள பெரிய வீடு ஒன்று தை மாதத் தொடக்கத்தில் இருந்து வாடகைக்கு விடப்படும்.
அரசசார்பற்ற நிறுவனங்களும் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு : 0778981296
(பிற்பகல் 2 மணிக்குப் பின்பு)

### இறைச்சிக்கோழி விற்பனை

புறொய்லர் இறைச்சிக்கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். கூடுதல் கொள்வனவு செய்வோருக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.
**விஜயகுமார், குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.**

### காணி வீடு விற்பனைக்கு

அம்பலவாணர் வீதி, கற்பக்குணை, உடுவில், சுன்னாகம் என்ற விலாசத்தில் அமைந்துள்ள ஒன்பது பரப்புக் காணியுடன் அமைந்த வீடு, கிணற்றுடன் கூடியது விற்பனைக்குண்டு.
தொடர்புக்கு : 0776959285 / 0776913464

### மணமகள் தேவை

யாழ்ப்பாணம் இந்து கௌரவ குடும்பம் 1977, 34 வயதுடைய B.Sc. Engineer (Pera) ஆகப்பணிபுரியும் நற்குணமுள்ள மணமகனுக்கு (Engineer, Dr., பட்டதாரி) மணமகள் உள்நாட்டில் தேவை.
தொடர்பு : 0750404371

### வீடு வாடகைக்கு

சுதுமலை தெற்கில் 3 அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.
(தொண்டு நிறுவனங்களுக்கு முன்னுரிமை).
தொடர்பு : 0729668721

### தவறிவிட்டது

வைரமுத்து தவபாக்கியம் என்பவரின் தொலைபேசி இலக்கங்கள், விலாசங்கள் எழுதிய நீலமும் றோஸ் கலருமுடைய குறிப்பேடு 23.11.2010 அன்று ஈச்சமோட்டையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஈச்சமோட்டை லக்ஷன் தொலைத்தொடர்பு நிலையத்துடன் தொடர்புகொள்ளவும்.
தொலைபேசி எண் : 0212223331

### காணி விற்பனைக்கு

பழைய இல. (14/1), புதிய இல. 42/9 , வீரமாகாளி அம்மன் வீதியில் (கந்தர்மடம்) யாழ். பல்கலைக்கழகம், நல்லூர் கோயிலுக்கு அருகில் 4 அறையுடன் கூடிய வீடு 4 பரப்புக் காணியுடன் விற்பனைக்கு உண்டு.
(யாழ். நகருக்கு அண்மித்த பகுதியில்)
தொடர்புக்கு : 0750472976

### காணி விற்பனைக்கு

பலாலி வீதியில் 2½ பரப்புக்காணி பங்குக் கிணற்றுடன் விற்பனைக்குண்டு. நல்லூர்ப் பிரதேச செயலகத்திற்கு அருகில்.
தொடர்புகளுக்கு: 0777111400. (107225)

### அனெக்ஸ் வீடு வாடகைக்கு

வயதான தம்பதியருக்கு அல்லது வயதான பெண்ணொருவருக்கு சாவகச்சேரியில் வீடு வாடகைக்குண்டு (அனெக்ஸ்).
தொடர்பு: 0774821956. (107206)

### வீடு விற்பனைக்கு

கோண்டாவில் கிழக்கு, பலாலி வீதிச் சந்திக்கு அண்மையில் குடியிருப்புக்கும் வர்த்தக ஸ்தாபனங்களுக்கும் உகந்த 4¾ பரப்பு வீடு வளவு உடனடியாக விற்பனைக்குண்டு.
தொடர்பு இல.: 0750470859
0213217819.
(107226)

### கஜமுகன் மெடிகெயர்

கரவெட்டி
விசேட வைத்திய நிபுணர் சேவை
தினமும் குழந்தை வைத்திய நிபுணர் வருகை தருகிறார்.
பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்.
T.P.:021 2264875

### VICKEY & MURUGAN WEDDING CARDS

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட டிசைன்களில் இந்து மற்றும் கிறிஸ்தவ திருமண அழைப்பிதழ்கள், புதுமனைப் புகுவிழா, பூப்புனித நீராட்டு விழா, [illegible]

## மின்பாவனையாளர் சேவை நிலையத்திற்கு வாடகைக்கு வீடு தேவை

இலங்கை மின்சாரசபையின் யாழ்.புறநகர் மின் பாவனையாளர் சேவை நிலையம் இயங்குவதற்கு கோண்டாவில் CTB டிப் போவில் இருந்து திருநெல்வேலி தபால் பெட்டிச் சந்தி வரையான பலாலி வீதிக்கு மிக அண்டிய பிரதேசத்தில் அல்லது கோண்டாவில் உப்பு மடச் சந்தியில் இருந்து கொக்குவில் இந்துக் கல்லூரி வரையான காங்கேசன்துறை வீதிக்கு மிக அண்டிய பிரதேசத்தில் இரண்டு வாகனங்கள் தரிக்கக் கூடியதாகவும் மின் கம்பங்கள் இறக்கி வைக்கக்கூடிய இடவசதியும் உள்ள இடம் வாடகைக்குத் தேவை.

*தங்களின் விண்ணப்பங்களை 24.12.2010 ஆம் திகதிக்கு முன்பதாக கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.*

*மின் பொறியியலாளர்,*
*இலங்கை மின்சார சபை.*
*பிரதேச அலுவலகம், சுன்னாகம்.*

(சி/573933)

## பாதுகாப்புச் சேவை

அரச, தனியார் வங்கிகளுக்கான பாதுகாப்புச் சேவைகளுக்கு எமது நிறுவனத்தினால் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மதவாச்சிப் பகுதிகளிலிருந்து ஆள்சேர்ப்பு (ஆண்) மேற்கொள்ளப்பட இருப்பதால் விருப்பமுள்ளவர்கள் எதிர்வரும் 14.12.2010 (செவ்வாய்க்கிழமை) முற்பகல் 9 மணிக்கு காரியாலயத்தில் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்குத் தகுந்த ஆவணங்களுடன் சமூகமளிக்கவும். பாதுகாப்புப்படைப் (பொலிஸ், இராணுவம்) பிரிவில் இருந்து விலகியவர்கள், சிங்களமொழி தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
வயதெல்லை-18இல் இருந்து 55 வரை.

AB, **பாதுகாப்புச் சேவை,**
இல.357, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(சிவன்கோயில் அருகில் - 0718739573)

(107223)

## கண்ணீர் அஞ்சலி





### K.K.சுப்பிரமணியம் (J.P)

கலைஞர்கள் எல்லோர் நெஞ்சமும் கலங்கி
கண்களில் நீர் மல்கி நிற்க
உங்கள் திடீர் மறைவு என்னும்
ஆழ்ந்த துயரம் எமை வதைக்க
ஈடு இணையில்லாத ஈழத்து சிதம்பர
ஈசனடி சேர்ந்தீரோ ஐயா!
நித்தம் நித்தம் ஈரவிழிகளோடு
கலங்கித் தவிக்கின்றோம்
எத்தனை ஜென்மங்கள் எடுத்தாலும்
உங்கள் பிரிவு எமைவிட்டு நீங்காது
உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அகில இலங்கை நாதஸ்வர, தவில் கலைஞர்கள்.

(107201)

## மரண அறிவித்தல்

### திருமதி மோசேஸ் தம்பித்துரை இராசம்மா



மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், கனடாவில் வசித்தவருமான திருமதி மோசேஸ் தம்பித்துரை இராசம்மா 07.12.2010 கனடாவில் இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிரான்சீஸ்-அன்னம்மா தம்பதியரின் மகளும், சந்தர் (கனடா), தாரணி (பிரான்ஸ்), தயானி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் சுகுனா (கனடா), பெனடிக்ற் தர்மா (பிரான்ஸ்), ஜெயமோகன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் தீபன், தீபிக்கா, பிறிஜெட், போர்டின், ஜெசிக்கா, ஜெயசுரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான மரியம்மா, சவரிமுத்து, ஹென்றி மற்றும் மத்தாயஸ், இராசேஸ்வரி, துரைசிங்கம் ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக புனித பிரான்சீஸ் சவேரியார் ஆலயத்தில் நாளை (13.12.2010) திங்கட்கிழமை காலை 7 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பங்கு கொண்டு பிரார்த்திக்குமாறு வேண்டி நிற்கின்றோம்.

*தகவல்:*
றொறன்ரோ, கனடா: சகோதரர்கள் மற்றும்
0014167404521, 0014166094979. குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியின் விசேட பாதுகாவலர்களது பாதுகாப்பு தேங்காய் பாதிக்கும் அவசியம்

உதயன் சபைச் செய்தியாளர்
இரா.புத்திரசிகாமணி

## சபையில் கேட்டவை

''கே.பி. என்ற பெயரைக் கூறியவுடன் எழுந்து ஆரவாரம் செய்கின்றவர்கள்தான் கே.பியின் பிரதிநிதிகள்'' என்று எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் அடையாளம் காட்டினார்.

இப்படியான ஒரு சம்பவம் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில்இடம்பெற்றது. இதனால் சபையில் சிறிது பதற்றமும் ஏற்பட்டது என்றே குறிப்பிட வேண்டும்.

நாடாளுமன்றம் வழமை போல் காலை 9.30 மணிக்கு சபாநாயகர் சமல் ராஜபக்ஷவின் தலைமையில் கூடியது.

வாய்மூலவிடைக்கான கேள்வி நேரத்தில் ஆக ஏழு கேள்விகளுக்கான அறிவித்தல்கள் மட்டுமே ஒழுங்குப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தன.

வழமையாகவே கேட்கப்படும் கேள்விகளுக்கெல்லாம் விடையளிக்கக் கால அவகாசம் கேட்கப்படுவதால் கேள்வி கேட்டு கேட்டுச் சலிப்படைந்து விட்டனர்போலும். அதனால்தான் கேள்விகளும் குறைந்துவிட்டதோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

நேற்றுமுன்தினம் கேட்கப்பட்ட ஏழு கேள்விகளிலும் ஒரு வினாவுக்கு மட்டுமே நேரடியாக விடையளிக்கப்பட்டது. இரண்டு விடைகள் சபாபீடத்தில் வைக்கப்பட்டன. ஏனைய நான்கு வினாக்களுக்கும்விடையளிக்க கால அவகாசம் கேட்கப்பட்டது என்பதும் குறிப்பிட்டுக் காட்டவேண்டிய ஒன்று.

**விவசாயிகளுக்கான ஓய்வூதியம் 1000 ரூபா முதல் 4166 ரூபா வரை**

காலி மாவட்ட ஐ.தே.க. உறுப்பினர் புத்திக பத்திரன விவசாயிகளின் ஓய்வூதியம் தொடர்பாக சில விவரங்களை நிதி அமைச்சரிடம் கேட்டிருந்தார். இக்கேள்விகளுக்கு பிரதிநிதி அமைச்சர் கீதாஞ்சன குணவர்த்தன பதில் அளித்தார்.

1987ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் எட்டாயிரம் பேர் ஓய்வூதியம் பெறுகின்றனர். இவர்களுக்கு இவர்களுடைய பங்களிப்புக்கு ஏற்ப ஆயிரம் ரூபா முதல் 4166/- ரூபாவரை இக்கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன.

இந்த ஓய்வூதியத் திட்டத்தில் 18 வயது முதல் 40 வயது வரையிலான விவசாயிகள் இணைந்து கொள்ளமுடியும். 66 வயதில் மாதாந்தம் ஓய்வூதியம் வழங்கப்படும்.

ஓய்வூதியக் கொடுப்பனவுகளை அதிகரிக்க 2011ஆம் ஆண்டில் விசேட ஓய்வூதியத்திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. இதற்கு அரசு 5 வீத பங்களிப்பை வழங்கும் எனவும் பிரதி அமைச்சர் பதில் அளித்தார்.

எடுத்த எடுப்பிலேயே சகல விவரங்களையும் வெளியிட்ட அமைச்சருக்கு புத்திக பத்திரண நன்றி தெரிவித்தார். இது ஒரு முன்மாதிரியாக அமைந்தால் நல்லது.

**ஒழுங்குப்பிரச்சினையும் மூக்குடைப்பும்**

வரவு-செலவுத்திட்ட விவாதத்தின்போது அடிக்கடி பல சுவையானதும் சூடானதுமான விடயங்கள் இடம்பெற்றன. நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். அஸ்வர்தான் கூடுதலான ஒழுங்குப் பிரச்சினைகளை எழுப்பி சாதனை படைத்தார். ஆனால் அது அவருக்கே பல இடங்களில் சோதனையாகவும் மாறிவிட்டது. அடிக்கடி ஒழுங்குப் பிரச்சினைகளை எழுப்பிவிட்டு சபையைக் குழப்புகின்றீர்கள். இதனைத் தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது என்று சபாநாயகரால் நேரடியாகவே எச்சரிக்கப்பட்டார் ஏ.எச்.எம். அஸ்வர்.

**யானைக்கும் அடிசறுக்கும்**

இப்பொழுது உள்ள ஏழாவது நடாளுமன்றத்தில் இருக்கும் சிரேஷ்ட உறுப்பினர்களுள் ஒருவர் ஏ.எச்.எம். அஸ்வர். நீண்ட காலம் பச்சையிலும் இப்பொழுது சில காலம் நீலத்திலும் இருக்கிறார். எங்கே இருக்கின்றாரோ அங்குள்ள தலைவருக்கு நன்றியுள்ள விசுவாசமானவராக தனது கடமையைச் செய்பவர். நிலையியற் கட்டளைகளை விரல் நுனியில் வைத்துப் பேசுபவர்.

''எல்லோருக்கும் சொல்லும் பல்லி, கஎனிப் பானையில் விழுமாம் துள்ளி'' என்பது போல பத்திரிகை செய்தி ஒன்றை தூக்கிப் பிடித்து பிரச்சினை எழுப்ப முயன்றபோது, என்ன ஐயா எல்லாம் தெரிந்த நீங்களே இப்படி செய்யலாமா? முதலில் நாடாளுமன்ற மரபுகளை நன்றாகத் தெரிந்துகொண்டு வந்து பேசுங்கள் என்று சபாநாயகர் மட்டம் தட்டிவிட்டதும் குறிப்பிடத்தக்கது. இதைத்தான் யானைக்கும் அடிசறுக்கும் என்பார்களே.

**சபையைவிட்டு வெளியேற்றப்பட்ட லலித் திஸாநாயக்க**

இந்த விவாதத் தொடரில் குறிப்பிட்டுக் கூறப்பட வேண்டிய முக்கிய விடயம் ஆளும்கட்சியின் பிரதி அமைச்சர் லலித் திஸாநாயக்க சபாநாயகரால் சபையை விட்டு வெளியேற்றப்பட்ட சம்பவம். கடந்த வாரம் நடை பெற்ற விவாதத்தின்போது சபாநாயகரின்கட்டளைகளைச் செவிமடுக்க மறுத்த பிரதி அமைச்சர் லலித் திஸாநாயக்க சபையில் இருந்து வெளியேற்றப்பட்டார். அதோடு நின்றுவிடவில்லை. வெளியேறாவிட்டால் ஒருவாரத்துக்கு தடைவிதிக்கப்படும் என்றும் எச்சரிக்கப்பட்டார்.

**மேர்வினுக்கு எச்சரிக்கை**

நாடாளுமன்றத்தில் எப்போதும் சலசலப்பை உண்டாக்குபவர் அமைச்சர் மேர்வின் சில்வா. அவருடைய ஆசனத்தில் இருந்த நேரத்தைவிட சபைக்குள் சுற்றித்திரிந்ததும், அடுத்தவர்களின் ஆசனங்களில் இருந்ததும் தான் கூடுதலாக இருக்கும். இரட்டை அர்த்தத்துடன் பேசுவதும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுடன் முஷ்டியை முறுக்குவதிலும் முன்நிற்பவர். இவர் தனது போக்கை மாற்றிக் கொள்ளாவிட்டால் சபையை ஒத்திவைத்துவிட்டு வெளியே போய்விட நேரிடும் என்று அமைச்சர் மேர்வின் சில்வா கடுமையாக கண்டிக்கப்பட்டதும் மற்றும் ஒரு சம்பவம்.

**ஒத்திவைக்கப்பட்ட சபை அமர்வுகள்**

இம்முறை வரவு - செலவுத் திட்ட விவாதத்தின்போது சபை அமர்வுகள் இரண்டு முறை ஒத்திவைக்கப்பட்டன. அமைச்சர்கள் உட்பட ஆளும் கட்சி உறுப்பினர்களின் அளவுக்கு அதிகமான ஆர்ப்பாட்டங்கள் தான் இந்த நிலை ஏற்பட்டதற்கான காரணம்.

**சுற்றி வளைக்கப்பட்ட ஜயலத்**

நாடாளுமன்றத்தில் இடம் பெற்ற விரும்பத்தகாத விடயம். நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தன அமைச்சர்களாலும் ஆளும்கட்சி உறுப்பினர்களாலும் சுற்றி வளைக்கப்பட்டது. லண்டனில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பேசமுடியாமல் போனதற்கு ஜயலத் ஜெயவர்த்தனவும் ஒரு காரணம். புலம் பெயர்ந்த தமிழர்களுடன் சேர்ந்து ஜனாதிபதிக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டார் என்றும் இது ஒரு ராஜதுரோகம் என்றும் கூறியே ஆளும் தரப்பினர் சுற்றிவளைத்துத் தாக்கமுயன்றனர்.

சபைக்குள் வைத்துத் தாக்கப்படாவிட்டாலும் சபைக்குவெளியே தாக்கப்பட்டார் என்றும் அது சபாநாயகருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதை சபாநாயகரும் உறுதிசெய்தார். இந்தச் சம்பவம் ஒரு கறைபடிந்த சம்பவமாகிவிட்டது.

**புலிப் பட்டம் சூட்டப்பட்ட கரு**

ஆளும்கட்சி உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்ட மற்றுமொரு குற்றச்சாட்டுத்தான், கருஜெயசூரிய நாட்டைக் காட்டிக்கொடுக்கும் வகையில் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்குப் பேட்டி ஒன்றை அளித்துள்ளார் என்பது.

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல் குற்ற விசாரணை குறித்து கருஜெய சூரிய வெளியிட்ட கருத்து நாட்டைக் காட்டிக்கொடுக்கும் செயல் என்பது பரவலான கருத்து.

இவை எல்லாவற்றையும் விட ஐ.நா. செயலாளர் பான் கீ மூனால் அமைக்கப்பட்ட நிபுணர்கள் குழு தமது அறிக்கையை வெளியிட சில தினங்களே இருக்கும் வேளையில் கருஜெயசூரியவின் இப்படியான ஒரு அறிவித்தல்தான் அரசுக்குப் பெரும் ஆத்திரத்தை ஊட்டிவிட்டது. அதனால் அவருக்கு 'வெள்ளைப் புலி' எனப் பட்டம் சூட்டிவிட்டார்கள்.

**சபாநாயகரின் நேர்மை**

ஆரம்ப நாள் முதலே ஆளும் கட்சியினர் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்குத் தொடர்ந்து இடையூறுகளை ஏற்படுத்திக் கொண்டே இருந்தனர். எதிர்க்கட்சி உறுப்பினர்களின் பேச்சைக்கூட கேட்க முடியாத நிலையை உருவாக்கினார். ஜயலத்ஜெயவர்த்தனாவை சபைக்குள் விடமாட்டோம் என அமைச்சர்களும், ஆளும்கட்சி உறுப்பினர்களும் ஆர்ப்பாட்டம் செய்து அடம்பிடித்தபோதும் அவற்றை எல்லாம் உதாசீனப்படுத்திவிட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வரப்பிரசாதங்களையும், சிறப்புரிமைகளையும் பாதுகாத்து அவர்கள் அதேதினத்தில் சபையில் பேசவும், விளக்கம் அளிக்கவும் இடமளித்தார். ஒரு இடத்தில் ஜனாதிபதியைப் பற்றிப் பேசும்போது நீங்கள் குழப்பமடைய வேண்டாம். நானும் ராஜபக்ஷ குடும்பம் தான். உங்களுக்கு வேலை இல்லாவிட்டால் வெளியே போய் தேனீர் குடித்துவிட்டு வாருங்கள் என்று ஆளும் கட்சியினரை எச்சரித்தது அவருடைய நேர்மைக்கு ஒரு முத்திரை.

**விலைபோன பியசேன**

அண்மைக் காலம் வரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினராக இருந்து அரசுக்கு எதிராகக் கடுமையாக விமர்சனங்களைச்செய்தவர் அம்பாறை மாவாட்ட உறுப்பினரானபியசேன. அவர் இப்பொழுது ஆளும் கட்சியின் அதிதீவிர ஆதரவாளர்.

கடந்த வியாழக்கிழமை உறுப்பினர் தனது அரச விசுவாசத்தை முழு மூச்சாக வெளிப்படுத்தி விட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் அரியநேத்திரன் உரையாற்றிக் கொண்டிருக்கும் போது வரிக்கு வரி ''பொயின்ற் ஒப் ஓடர், பொயின்ற் ஒப் ஓடர்'' என்று சந்தையில் தேங்காய் விற்பது போல் பொயின்ற் ஒப் ஓடரை ஏலம் விட்டார். அமைச்சர் மேர்வின் சில்வா அவரை முன்வரிசைக்கு அழைத்துவந்து விட்டார். தொடர்ச்சியாக தனது இராஜவிசுவாசத்தைக் காட்டும் வகையில் கூச்சல் போட்டுக் கொண்டிருந்தார் பியசேன.

பொயின்ற் ஒப் ஓடருக்கே தண்ணி காட்டுபவர் அஸ்வர் அப்போது அவர்தான் சபைக்குத் தலைமை தாங்கிக் கொண்டிருந்தார்.

பியசேனவின்ஆக்கிணையைப் பொறுக்க முடியாமல் இரண்டு முறை பியசேனவுக்கு வாய்ப்பளிக்கப்பட்டது. ஆனால் பியசேன கூறியவை பொயின்ற் ஓடர் அல்ல என்று அஸ்வரே நிராகரித்துவிட்டார் என்றால் வேறு யாரால் பொறுக்க முடியும்.

இப்படிப் பல ஆர்ப்பாட்டங்களும் சர்ச்சைகளும், சபை ஒத்திவைப்புகளும் சூடாக இடம்பெற்ற போதும் சில சுவையான சம்பவங்களும் இடம்பெறத்தான் செய்தன.

**தேங்காயுடன் வந்து திகைப்பூட்டிய ரங்கே பண்டார**

கடந்த வியாழக்கிழமை சபையில் இறுதிக்கட்ட நேரத்தில் பேச எழுந்தார் ரங்கே பண்டார. பெருந்தோட்ட அபிவிருத்தியில் தெங்குப் பயிற்செய்கை தொடர்பாக விவாதிக்கப்பட்ட சமயம்.

ஐ.தே.க. எம்.பியான ரங்கே பண்டார கையில் இரண்டு தோங்காய் மூடிகளுடன் எழும்பினார். சபாநாயகர் அவர்களே இதுதான் தேங்காய் என்று கூறினார். ஒரு பாதியின் விலை 35/- ரூபா முழுத் தேங்காய் 70/- ரூபா என்றார்.

இது எதிரணியினருக்கு உற்சாகத்தையும் ஆளும் கட்சியினருக்கு ஆத்திரத்தையும் ஏற்படுத்திவிட்டது. இதனால் சபையில் பெரும் குழப்பம்.

ஒரு வழியாக சபையை அமைதிப்படுத்திய சபாநாயகர் தேங்காய் மூடிகளைவெளியேகொண்டு போகும்படி உத்தரவிட்டார்.

சபாநாயகர் அவர்களே இது இன்று ஒரு அபூர்வப் பொருளாகி விட்டது. அதனை யாரும் கடத்தி விடுவார்கள். அதனால் சபா பீடத்திலேயே ஒப்படைக்கிறேன். அதற்கு ஜனாதிபதியின் விசேட பாதுகாப்பு பிரிவினர் பாதுகாப்பு வழங்கவேண்டும் என்றார். ரங்கே பண்டாரவின் இச்செயல் சபையிலும் கலரியிலும் இருந்த வர்களையும் சிரிக்க வைத்துவிட்டது.

**ஏட்டிக்குப் போட்டியான பாடல்கள்**

விவாதத்தின் கடைசி நாளான நேற்று எதிர்க்கட்சி உறுப்பினரான தயாசிறி ஜயசேகரவும் ஆளும் தரப்பில் அமைச்சர் பீலிக்ஸ் பெரேராவும் பாடும் திறமையை வெளிப்படுத்தினர். வழமையாகவே பிரதமர் டி.எம். ஜயரத்ன தான் பாட்டுப்பாடி சபையை மகிழ்விப்பார். அதனை எல்லோரும்இரசிப்பார்கள். ஆனால், தயாசிறி ஜயசேகர பாட ஆரம்பித்ததும் ஆளும்கட்சியினர் ஆவேசத்துடன் ஆட்சேபனை செய்தனர். ஐயா ஒரு நாட்டின் பிரதமர் இந்தச் சபையில் பாடும்போது இரசிக்கிறோம். ஏன் நான் மட்டும் பாட இடமளிக்க மறுக்கிறீர்கள் என்று கேட்டார். கடைசியில் தன் பாடலை கவியாக மாற்றிக் கூறிவிட்டு பேச ஆரம்பித்தார்.

தொடர்ந்து இரண்டு உறுப்பினர்கள் பேசிய பின் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா பேச ஆரம்பிக்கும்போது பாட ஆரம்பித்தார். இப்போது எதிர்க்கட்சியினர் ஆட்சேபித்து சத்தமிட ஆரம்பித்தனர். பின்னர் அமைச்சர் கவிதை வாசித்து பேச ஆரம்பித்தார்.

இவ்வளவு காலமும் கார சாரமாக இருந்த இந்தச் சபையை இவ் விரு உறுப்பினர்களும் ஏட்டிக்குப் போட்டியாகப் பாடல்களைப்பாடி சபையில்கலகலப்பை கூட்டி விட்டனர் என்பது குறிப்பிட வேண்டிய அம்சமாகும்.

நவம்பர் 22ஆம் திகதி நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியினால் சபையில் வரவு - செலவுத் திட்டம் முன் வைக்கப்பட்டது.

ஜனாதிபதியின் வரவு செலவுத் திட்ட உரை மீதான விவாதம், அதைத் தொடர்ந்து அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக் கீட்டு குழு நிலை விவாதம் என்பன நிறைவு பெறும் வேளையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சபைக்கு வந்து பதில் அளித்து உரையாற்றினார்.

இதனால் தொடர்ந்து வரவு செலவுத் திட்டத்தின் மீது இறுதி வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. பெரும்பான்மை வாக்குகளால் அங்கீகரிக்கப்பட்டது. தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் எதிர்த்து வாக்களிக்காமல் விலகிக்கொண்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிசெ.12

வடமாகாணக் கல்வித்திணைக் களத்தால் வெளியிடப்பட்ட இடமாற்றப்பட்டியலின்படி துணுக்காய், கிளிநொச்சி, மன்னார், மடு, முல்லைத்தீவு, வவுனியா தெற்கு ஆகிய வலயங்களில் இருந்து வலிகாமம் கல்வி வலயத்துக்கு இடமாற்றம் பெற்றுள்ள ஆசிரியர்களுக்கான கலந்துரை யாடல் நாளை திங்கட்கிழமை மு.ப.10 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் அமைந்துள்ள விசேட கல்வி அலகில் நடை பெறவுள்ளது.

எனவே எதிர்வரும் ஜனவரி மாதம்முதலாம்திகதிமுதல்கடமை யாற்றவுள்ள மேற்படி இடமாற்றம்பெற்றுள்ளஆசிரியர்களைத் தவறாது சமூகமளிக்குமாறு வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (201)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஒரே நாள்; ஒரே நோக்கம்; பேரணிகளோ இரண்டு

டிசம்பர் 7 ஆம் திகதி

காலை 8.30 மணி. யாழ். துரையப்பா விளையாட்டரங் கும் அதனை அண்டிய சூழலும் எந்த வித பரபரப்பும் இல்லாமல் வெறிச் சோடிக் கிடந்தது. ஆனால் புல்லுக் குளத்துக்கு முன்னால் உள்ள இராணுவ முகாம் மாத்திரம் மிகச் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. வழமைக்கு மாறாக பெரிய பெரிய 'இராணுவத் தலைகள்' தமது வாகனப்பட்டாளம் சகிதம் வந்து நின்றனர்.

காலை 8.45 மணி

இராணுவமுகாம் அமைந்துள்ள பகுதிக்கு பத்து இளைஞர்கள் எங்கி ருந்தோ வந்தார்கள்.

யாழ்.சிவில் அலுவலகப்-பொறுப் பதிகாரி கேணல் குமுத அந்த இளை ஞர்களுக்கு சிங்களத்தில் ஏதோ சொன்னார். பின்னர் அந்த இளைஞர் கள் துரையப்பா விளையாட்டரங்கின் பக்கமாக நடக்க, குமுத 'சீ.டீ.எம்.ஏ' தொலைபேசியில் உடனேயே யாருக்கோ அனேகமாக ஏற்பாட்டாளர்களுக்காக இருக்கவேண்டும். தகவல்களை அனுப்பத் தொடங்கினார்.

துரையப்பா விளையாட்டரங்குக் கும் கோட்டைக்கும் இடையில் அமைந் துள்ள இராணுவ முகாமுக்குள் சென்ற இளைஞர்கள் 10 பேரும் வெளியில் வரும்போது கைகளில் ஆர்ப்பாட்டத் தின்போது விநியோகிப்பதற்கான சுலோகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியிருந்தனர். அவற்றை எடுத்துக் கொண்டு மீண்டும் புல்லுக்குளம் இராணுவமுகாமுக்குச் சென்றார்கள்.

காலை 9.00 மணி துரையப்பா விளையாட்டரங்குக்கு வெளியே கோட்டை முனியப்பர் கோயிலுக்கு முன்பாகப் பத்துப் பதினைந்து தமிழ் மக் கள் நின்று கொண்டிருந்தனர். ''எட்ட ரைக்கு சிவில் ஒபிஸ்காரர் கூட்டமெண் டாங்கள் இன்னும் அவங்களைக் காணேலை'' இவ்வாறு அவர்கள் தமக்குள் பேசிக் கொண்டார்கள்.

அப்போது புல்லுக் குளத்துக்கு முன் னால் உள்ள இராணுவ முகாமிலிருந்து வந்த இளைஞர்கள் குழுமி நின்ற மக் களிடம் பதாகைகள், ஜனாதிபதியின் படம், தேசியக் கொடி என்பவற்றைத் திணித்தனர்.

தம்மிடம் இவற்றையெல்லாம் ஏன் தருகிறார்கள்? என அவர்கள் தடு மாறிக் கொண்டிருக்கும் போது யாழ்-கொழும்பு சேவையில் ஈடுபடும் சிங்களத்தினாலான வழிப்பயணப் பலகைகளைக் கொண்ட பேருந்து ஒன்று அவ்விடத்தில் வந்து நின்றது. அதிலிருந்து - யாழ்ப்பாணத்துக்குச் சுற்றுலா வரும் இளைஞர்கள் போல ஐம்பது பேர்வரை இறங்கினார்கள்.

இறங்கிய அந்த இளைஞர்கள் ஏற் கனவே இங்கு நின்று கொண்டிருந்த இளைஞர்களை முன்னரே தெரிந்த வர்கள் போன்று கதைத்துச் சிரித்தபடி அவர்களிடமிருந்த கொடிகள், சுலோ கங்களை வாங்கிக் கொண்டார்கள்.

ஒவ்வொரு ஊரினதும் பெயர் பலகையுடன் ஐந்தாறு இ.போ.ச பேருந்துகள் அந்த இடத்துக்கு வந்தன. அதிலிருந்து அழைத்துவரப் பட்ட தமிழ் மக்களும் அவர்களை அழைத்து வந்த சிவில் உடை இராணு வத்தினரும் துரையப்பா விளை யாட்டரங்கில் இறங்கினர்.

சற்றுநேரத்தில் நூற்றுக்கணக்கான ஆட்டோக்கள் எங்கிருந்தோ படையாக வந்து சேர்ந்தன. அந்த ஆட்டோக்களுக் குப் பலிகடாவுக்கு மாலை போடுவது போலத் தேசியக்கொடியும் மற்றும் ஜனாதி பதியின் புகைப்படம் என்பன கட்டப் பட்டன.

யாழ். மாவட்ட சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர் அங்கஜன் ஏற்பாடுகள் எல்லாம் தயாரான பின்னர் அங்கு வந் தார். ஒலிம்பிக் தீபத்தினை ஒருவர் கையிலிருந்து இன்னொருவர் கைக்கு கையளிப்பதைப் போல, குமுத தன்னு டைய வேலைகளை அங்கஜனிடம் கையளித்து விட்டு தனது வாகனத்தில் புறப்பட்டார். அதன் பின்னர் அங் கஜன் தலைமையில் பேரணி புறப் படத்தயாரானது.

அப்போது பதினைந்து மோட்டார் சைக்கிள்களில் நீலப்படை அணியைச் சேர்ந்த யோகராஜன் தலைமையில் இளைஞர்கள் வந்தார்கள்.

மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக கோஷம் எழுப்பியவாறு முற்றவெளி யூடாகப் பேரணி சென்றது.

ஆஸ்பத்திரி வீதியூடாக யாழ். பஸ் நிலையத்தை வந்தடைந்த பேரணி பின்னர் கோவிலைச் சுற்றுவது போல் - யாழ் பேருந்து நிலையத்தை ஒரு சுற்றுச் சுற்றி வந்தது. அதன் பிற்பாடு அங்கஜன் அங்கு வந்திருந்தவர்கள் மத்தியில் உரையாற்றினார்.

மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவித்தும் அவரை வாழ்த்தியும், பிரிட்டன் அரசாங்கத்துக்கு எதிராக வும் புலம்பெயர் தமிழ் மக்களின் செய்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் அவர் உரையாற்றினார். சிறிது நேரம் கழிய அங்கஜனின் உதவியாளர் ஏதோ அவரது காதில் சொல்ல மீண்டும் பேரணி பஸ் நிலையத்திலிருந்து ஆஸ் பத்திரி வீதியூடாக வேம்படிச் சந்தியை நோக்கி நகர்ந்தது.




ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவித்து யாழ்.நகரில் நடந்த ஊர்வலம் ஸ்ரான்லி வீதி வழியே ஸ்ரீதர் தியட்டரைத் தாண்டி வந்தபோது.....

> **அரசுக்குச் சார்பான பேரணிகளை வழமையாக ஏற்பாடு செய்து ஒழுங்கமைக்கும் 'கட்சி' இந்த விடயத்தில் பங்கெடுக்காமை மக்களுக்கு ஆச்சரியத்தையே கொடுத்தது.**

அங்கஜன் தலைமையிலான பேரணி யாழ்.போதனா வைத்திய சாலையை அண்மித்திருக்கும் போது - மறுபுறம் எதிரே பஸ் நிலையம் நோக்கி வேல்முருகு தங்கராஜா தலைமையில் இன்னொரு பேரணி, அதுவும் மஹிந்தவுக்கு ஆதரவு தெரி வித்து வந்துகொண்டிருந்தது. பொலிஸார் - காதலர்களை இணைத்து வைப்பது போல் இரண்டு பேரணியையும் ஒன் றாக இணைத்துவிட்டார்கள்.

பின்னர் அங்கஜன் தலைமை யிலான பேரணியுடன் இணைந்த தங்கராஜா தலைமையிலான பேரணியும் வேம்படிச் சந்தி, ஆரியகுளம் சந்தி ஸ்ரான்லி வீதி, வின்சர் தியேட்டர் சந்தி, கஸ்தூரியார் வீதி, ஆஸ்பத்திரி வீதி என்பவற்றினூடாக நகர்ந்த யாழ்.பஸ் நிலையத்துக்கு மீண்டும் வந்து சேர்ந்தது.

அதேவேளை அரசுக்குச் சார்பான பேரணிகளை வழமையாக ஏற்பாடு செய்து ஒழுங்கமைக்கும் 'கட்சி' இந்த விடயத்தில் பங்கெடுக்காமை மக்க ளுக்கு ஆச்சரியத்தையே கொடுத்தது. அரசில் அங்கம் வகிக்கின்ற அக்கட்சி யின் அமைச்சரோ உறுப்பினர்களோ எவரும் இதில் பங்கேற்காமையும் அங்கஜன் முன்னிலைப்படுத்தப்பட்ட அரசாங்கத்தின் தெளிவான நோக் கத்தையே காட்டுகிறது.

இந்தியாவில் எவ்வாறு காங்கிரஸ் அரசாங்கம் தமிழ் நாட்டில் தி.மு.க வின் ஆதரவை ஒதுக்கிவிட்டு தனித்து நின்று போட்டியிட்டு வெற்றி காண வேண்டும் என்று துடிக்கிறதோ - அது போன்றே மஹிந்த அரசாங்கமும் சுதந்திரக் கட்சி யாழ்ப்பாணத்திலும் வலுவாக உருப்பெற வேண்டும் என்ப தற்கான முன்னேற்பாடாகவும் வட மாகாண சபை தேர்தலில் தமது நிலைப்பாடு என்ன என்பதையும் இப்போதே காட்டத் தொடங்கிவிட்டது.

நாடாளுமன்றத்தில் பசில் ராஜ பக்ஷ அண்மையில் உரையாற்றும் போது 'டக்ளஸ் யாழ்ப்பாணத்தின் அரசனாக இருக்கலாம். ஆனால் அபிவிருத்தி வேலைகள் அனைத்தும் என்னுடையதே' என்றார். இதிலிருந்து அமைச்சர் டக்ளஸ், அரசாங்கத்துக்கு இனிச் செல்லாக்காசுதான் என்பதைச் சொல்லாமல் சொல்லியிருக்கிறார். அடுத்து இந்தப் பேரணியை அங்கஜ னைக் கொண்டு ஏற்பாடு செய்து நடத்தியதன் மூலம் வடமாகாண சபை தேர்தலில் சுதந்திரக் கட்சியின் முதலமைச்சர், வேட்பாளர் யார் என்பதையும் தெளிவுபடுத்திவிட்டது.

இக்கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்ட இளைஞர்கள் யார் என்பதை அவர்களது செயற்பாடுகள் - அவர்கள் யாருடன் பழகிக் கதைத் தார்கள் என்பன பற்றிக் கூறியதிலி ருந்தே உங்களுக்கு விளங்கியிருக்கும். சில இடங்களில் சிவில் அலுவலகத் தில் உள்ள இராணுவத்தினர் முதல் நாளே கடைகளுக்குச் சென்று நாளை காலை 8.30 மணிக்கு துரையப்பா விளையாட்டரங்கில் கூட்டமொன்று உள்ளது அதற்கு வாருங்கள் எனக் கூறினர். வேறு சில இடங்களில் மஹிந்த யாழ்ப்பாணத்துக்கு நாளை வருகிறார் அதற்கு வரவும் என்று இராணுவ சிவில் அலுவலகத்தில் உள்ள வர்கள் கூறியுள்ளனர்.

இவற்றை நம்பி பஸ்ஸில் வந்த பொதுமக்கள் பலரும் இது தான் விடயம் என்றறிந்தவுடன் பேரணியில் பங்கு பற்றாமல் நேரே யாழ். நகருக் குச் சென்றுவிட்டனர். பேரணிக்கு வந்த ஓட்டோக்காரர்கள் பலருக்குக் கூட என்ன காரணத்துக்காகத் தம்மை இராணுவத்தினர் அழைத்துவந்திருக் கிறார்கள் என்று தெரியாது.

நாவற்குழியில் குடியேறிய சிங் கள மக்கள், இராணுவ வீரர்கள், சிவில் உடையுடன் நின்ற இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்கள் ஆகியோரே அதிகளவில் பேரணியை அலங்கரித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் தமது புகைப்படங்கள், செய்தியாளர்களின் கமராவில் சிக்கிக் கொண்டதா? என்பதை அறிய சில செய்தியாளர்களின் கமராக்களைச் சோதனை செய்து பார்க்கவும் தவற வில்லை.

வைத்தியசாலைகளுக்கு முன் னால் ஒலி எழுப்பத் தடை எனும் சட்டம் பேரணி நடந்தபோது மட்டும் வாபஸ் வாங்கிக் கொள்ளப்பட்டி ருக்க வேண்டும். ஏனெனில் யாழ் போதனா வைத்தியசாலையின் முன் னால் சத்தத்துடன் சென்ற பேரணிக்கு எவ்வித இடையூறும் ஏற்படாமல் பொலிஸார் போக்குவரத்துக் கடமை யில் ஈடுபட்டனர். பொலிஸார்தான் அவ்வாறு செய்கிறார்கள் என்றால் பேரணியை நடத்திச் சென்றவர்களுக் குக்கூட அதில் அமைதியாகப் போக வேண்டும் என்று தோன்றவில்லை போலும். அல்லது மஹிந்தருக்கு ஆதரவான கோஷங்களை எங்கும் எழுப்பலாம் என்று எண்ணினார் களோ தெரியாது. இந்த நிலை நீடித் தால் இவர்கள் நீதிமன்றத்துக்குள்ளே

**திலீ**

யும் சென்று சத்தம் போடுவார்கள். பேரணியினை ஏற்பாடு செய்த அங்கஜனினால் குறித்த பேரணி, துரையப்பா விளையாட்டரங்கிலிருந்து ஆரம்பித்து யாழ். பஸ் நிலையத்துட னேயே முடிவடைவதாக முன்னர் அறிவிக்கப்பட்டது. அதுபோன்று பஸ்நிலையத்தில் பேரணி முடி வடைந்த பின்பு உரையாற்றுவதைப் போல அங்கஜனும் உரையாற்றினார். எனினும் திடீரென முடிவடைந்த பேரணி மீண்டும் தொடரக் காரணம் தான் என்ன? என்று இன்னும் புரிய வில்லை.

இப்பேரணிக்கு எதிராக வேல் முருகு தங்கரசா தலைமையில் பேரணி வருகின்றது என்பதாலா அல்லது ஸ்ரீதர் தியேட்டரில் இருப்பவர்களுக் குத் தமது பலத்தை காண்பிப்பதற் காக இந்தப் பேரணி இவ்வாறு நீண் டதா என்பதை ஆண்டவன்தான் சொல்ல வேண்டும். அங்கஜன், தங்கராஜா இருவரும் தனித்தனியே இரு பேரணி களை நடத்தியதிலிருந்து அவர் களின் ஒற்றுமை மக்களுக்கு விளங்கி யிருக்கும்.

இதேவேளை இந்தப் பேரணி தொடர்பான செய்திகளைச் சேகரிப் பதற்காக தென்னிலங்கையைச் சேர்ந்த சிங்களச் செய்தியாளர்களும் வந்தி ருந்தார்கள். பேரணி முடிவில் அங்கஜன், யோகராஜன் ஆகியோரின் கருத்துக் களை அவர்கள் பதிவு செய்தார்கள். அப்போதும் போட்டிபோட்ட தங்கராசா வின் ஆதரவாளர்கள் தங்கராசாவிட மும் கருத்தைக் கேட்டுப் பதிவு செய்யு மாறு அந்தச் சிங்களச் செய்தியாள ரைக் கெஞ்சினார்கள்.

பேரணியை ஏற்பாடு செய்ததிலி ருந்து அங்கு நடப்பவை பற்றி - கிரிக் கெட் நேரடி வர்ணனைபோல - உடனுக் குடன் தனது தலைமைப்பீடத்துக்கு கேணல் குமுத அறிவித்துக் கொண்டி ருந்தார். அந்தத் தலைமைப்பீடம் யாரென்பதும் உங்களுக்குப் புரியும்.

மொத்தத்தில் யாழ்.குடாநாட்டில் இராணுவ ஆட்சி நடக்கின்றது என்ப தற்கு - இந்தப் பேரணிக்கு மக்கள் அழைக்கப்பட்டவிதம்- அவ்வாறு அழைத்தவர்கள் - அழைக்கப்பட்ட முறை- என்பவற்றைவிட வேறென்ன சாட்சி வேண்டும். *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் மகனும் நின் மகனும்

மனம் திரிந்த கைகேயி தன் கணவனிடம் இரண்டு வரங்களைக் கேட்டாள். ஒன்றினால் என் சேய் அரசு ஆள்வது, சீதை கேள்வன் ஒன்றாய்ப் போய் வனம் ஆள்வது எனப் பகன்று நின்றாள். நாவில் விடம் கொண்டு இந்த நாடக மயில் உரைத்த இந்த வரங்களைக் கொடுக்க வேண்டிய கட்டாயம் தசரதனுக்கு.

அவனது நா வரண்டது, மனம் வாடியது, கண்கள் மிகுதியாகக் குருதி சிந்தின, உயிர்போய்விடும் போலிருந்தது. கைகேயியைக் கொன்று விடலாமா என்று கூடச் சிந்தித்தான். அதனால் ஏற்படக் கூடிய பழிக்கு அஞ்சி அதைத் தவிர்த்தான். அவசர நிலையில் கூட புத்தியைக் கட்டுக்குள் வைத்திருக்கும் திடம் தசரதனுக்கு இருந்தது. தன்னைச் சுதாகரித்துக் கொண்டவன் தன் மனையாளோடு பேச்சு வார்த்தை நடத்திப் பார்ப்போம் என எண்ணினான்.

''நீ திகைத்தது உண்டா? பொய் நிலையோர்கள் புணர்த்த வஞ்சம் உண்டோ? உன் நிலை உண்மை சொல், எனது ஆணை'' என வேண்டுகிறான். கைகேயிக்கு ஏதாவது திகைப்பு ஏற்பட்டிருக்குமோ அன்றி வஞ்சத் தன்மையு டையவர்கள் ஏவியதால் அவள் மனம் இவ்வாறு திரிந்ததோ என அறிவதற்காக - நேராகவே மனைவியிடம் கேட்டுவிடுகிறான். ஒரு படி மேற்சென்று சத்தியமும் இடுகிறான். இங்கு சத்தியம் இடுவதிலும் ஒரு மாறுபாடு இருக்கிறது. சற்று முன்னர் கைகேயி, ''முன்னர் எனக்களித்த வரங்களைத் தருவீரா?'' என வேண்டிய போது வாய் விட்டுச் சிரித்தபடி ''வள்ளல் இரா மன் உன் மைந்தன் ஆணை, உள்ளம் உவந்துள செய்வேன் ஒன்றும் லோபேன்'' என உரைத்த தசரதன் இப்போது தனது சுருதியை மாற்றுகிறான். இராமனை இச் சந்தர்ப்பத்தில் இழுத்தால் கைகேயி எரிந்து விழுவாள் என எண்ணுகிறான். 'சீதை கேள்வன் 'என இராமனைச் சுட்டியவள் அல்லவா? எனவே இப்போது தன் மீது ஆணையிட்டே சத்தியம் செய்கிறான்.

ஆனால் தனது நோக்கத்தில் குறியாக இருக்கின்ற கைகேயி இன்னும் கொடுஞ் சொற்களை அள்ளி வீசுகிறாள்.

*''திசைத்ததும் இல்லை*
*எனக்கு வந்து தீயோர்*
*இசைத்ததும் இல்லை; முன் ஈந்த*
*இவ் வரங்கள்*
*குசைப் பரியோய் தரின், இன்று*
*கொள்வேன்; அன்றேல்*
*வசைத் திறன் நின்வயின் நிற்க*
*மாள்வென்'' என்றாள்.*

(கைகேயி சூழ் வினைப்படலம் - 23)

பொதுவாக எல்லோரும் வீசுகின்ற வலிமையான இறுதி ஆயுதத்தைக் கைகேயியும் பிரயோகித்தாள். ''இப்பொழுது கொடுத்தால் பெற்றுக் கொள்வேன். அன்றேல் உன்மீது பழியேற்குமாறு இறப்பேன்'' என மிரட்டினாள். அவள் கூறிய கொடுஞ்சொல், 'தீயினால் சுட்ட பெரும் புண்ணில் கூரிய வேல் பாய்ந்ததற்கு' ஒப்பாகத் தசரதனை வேதனைப்படுத்தியது. இவ்வுலகத்தில் உள்ள பெண்கள் கூட்டத்தையே அழித்துவிட வேண்டும் போலிருந்தது. இருப்பினும் அச்செயல் தகாது என்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

எப்பாடுபட்டேனும் கைகேயியின் மனதை மாற்ற வேண்டும் என அவன் உள்ளம் அவாவுகின்றது. கைகேயியின் கால்களில் வீழ்ந்து வணங்கினான். தன்னாலியன்ற புத்திமதிகளைச் சொல்லிப்பார்த்தான்.

*''கொள்ளான் நின் சேய் இவ்வரசு*
*அன்னான் கொண்டாலும்*
*நள்ளாது இந்த நானிலம்*
*ஞாலம் தனில் என்றும்*
*உள்ளார் எல்லாம் ஓத*
*உவக்கும் புகழ் கொள்ளாய்''*

(கைகேயி சூழ் வினைப்படலம் -

என, உன் புதல்வனாகிய பரதன் ஏற்றுக்கொள்ள மாட்டான் எனவும் இந்த உலகம் அதனை விரும்பாது எனவும் உலகில் நீ புகழ் பெற மாட்டாய் என்றும் உபதேசித்துப் பார்த்தான்.வானவரோ, மன்னவரோ இவற்றை ஏற்றுக்கொள்ளார் என்றெல்லாம் கூறிப்பார்த்தான்.

இரண்டு வரங்கள் கேட்டவளி டம் ஒன்றையாவது கொடுத்து - இடைக் காலத் தீர்வை பெற்றுவிடலாம் என அவன் உள்ளம் எண்ணியது.

''பெண்ணே!
வண்மைக்
கேகயன் மானே!
பெறுவாயேல்
மண்ணே கொள்
நீ; மற்றையது
ஒன்றும்
மற என்றான்''

(கைகேயி சூழ் வினைப்படலம் - 32)



''பரதனுக்கு நாட்டைக் கொடு. இராமன் காடு செல்ல வேண்டுமெனக் கேட்கும் வரத்தை மற எனக் கெஞ்சுகிறான்'' தசரதன். இராமன் காடு செல்ல வேண்டும் என்ற சொற்களைக்கூட அவனால் வாய்விட்டுக் கூற முடிய வில்லை. 'மற்றையது என்றே' அவனால் சொல்ல முடிகிறது. கைகேயி அதற்கும் இரங்குவதாக இல்லை.

தசரதன் தன் எத்தனங்களைக் கைவிடவில்லை. அவளிடம் மீண்டும்

## இலக்கியக் காட்சி - 68

இரந்து கேட்கிறான். முதலாவது வரத்தை வழங்கி விடுகிறேன். இரண்டாவது வரத்தை மட்டும் விட்டுவிடு எனக் கெஞ்சுகிறான்.

*''நின் மகன் ஆள்வான், நீ இனிது ஆள்வாய்*
*நிலம் எல்லாம்*
*உன் வயம் ஆமே, ஆளுதி, தந்தேன்*
*உரை குன்றேன்*
*என் மகன், என் கண், என் உயிர்*
*எல்லா உயிர்கட்கும்*
*நன் மகன் இந்த நாடு இறவாமை*
*நய'' என்றான்*

(கைகேயி சூழ் வினைப்படலம் - 36)

தாய் செய்த மாறுபாட்டிற்காக அப்பாவியாகிய பரதனையே வேற்று நபர் ஆக்கி விடுகிறான் தசரதன். நின் மகன் என்று பரதனையும் என்மகன் என்று இராமனையும் குறிப்பிடுகிறான். இராமனே என் கண், என் உயிர், எல்லா உயிர்கட்கும் நன்மகன் என இராமனைத் தன் பிள்ளை எனப் பாராட்டுகிறான். நின் மகன் - என் மகன் என்று பேதம் வருவித்துப் பேசியமை கூட தசரதன் மேற்கொண்ட ஓர் உத்தியாக இருக்கலாம். பிள்ளைப் பாசத்திற்கு முன்னால் சக்கரவர்த்தியே என்னாவது? இராமனே உயிர் என வாழ்ந்து விட்டான். ஆனால் அப்பாவியாகிய பரதன் என் செய்வான்? தந்தை தசரதன் வாயால் அடிக்கடி 'நின் மகன்' என்று பிரித்தொதுக்கப்படும் துன்பியல் நிலைக்கு ஆளானான். இதைவிட மேலாக நகர் நீங்கு படலத்தில்

*'மன்னே ஆவான் வரும் அப்*
*பரதன் தனையும் மகன் என்று*
*உன்னேன் முனிவா! அவனும்*
*ஆகான் உரிமைக்கு'*

(நகர் நீங்கு படலம் - 49)

என்று 'பரதன் மகன் அல்லன்' என ஒதுக்கப்படும் நிலைக்கும் ஆளாகிறான். இந்த இடத்தில் பரதன் ஓர் அனுதாபத்திற்குரிய பாத்திர மாகவே தெரிகிறான். தாய் விட்ட தவறுக்காகத் தந்தையால் ஒதுக்கப்படும் சோகநிலை அவனுக்கு ஏற்படுகிறது. அப்பாவியாகிய அவன், தாய் செய்த தவறுக்காகத் தண்டிக்கப்படுகிறான். எம் மூத்தோர் விட்ட தவறுகளால் எம் சந்ததியினர் துன்பப்படுவதைக்கூட, இத்தகைய நிலைமையுடன் பொருத்திப் பார்த்து ஆறுதலடைய வைக்கிறதல்லவா?



ச.லலீசன்
(விரிவுரையாளர் -
கோப்பாய் ஆசிரிய கலாசாலை)

# ஆத்ம சாந்தி

நீண்ட நாள் இடைவெளியின் பின் தனக்குரிய வகுப்பறைக்குள் நுழைந்தாள் சாந்தி. உள்ளத்தால் நலிந்து, உடலால் மெலிந்து வந்த அந்த உருவத்தைக் கண்டதும் அங்கும் இங்குமாக நின்றிருந்த மாணவர்கள் தத்தம் இருக்கைகளின் முன் வந்து நின்று கொண்டனர்.

''குட்மோனிங் டீச்சர்''

மழலைகளின் குரல் அவளது இதயத்தில் சாதுவான கலகலப்பை ஏற்படுத்தியிருக்க வேண்டும். வறண்டிருந்த முகத்தில் சிறிது பிரகாசம் தோன்றியது.

''இருங்கோ பிள்ளையள்''

கூறியவாறே சாந்தி தனது இருக்கையில் அமர்ந்து கொண்டாள். அவளது கண்கள் கூர்மையாக வகுப்பறையைச் சுற்றி நோட்டமிட்டு ஓரிடத்தில் வந்து நிலைத்து நின்றது.

''என்ரை கவிதாவைப் போல இருக்கு''

மனம் துணுக்குற்றது. கண்கள் குளமாகின. அவளது செய்கையைக் கண்ணுற்ற நிவேதா எழுந்து நின்று கூறினாள்,

''டீச்சர்! இது... ஜெனிற்றா! இடம் பெயர்ந்து வந்திருக்கிறா.''

இதற்கிடையில் எதிர்பாராத விதமாக அந்த மழலை கேவிக்கேவி அழத் தொடங்கியது. சிதறிப் போன தனது மனத்தை ஒருங்கிணைத்து இறுக்கிக் கொண்ட சாந்தி, அவளது நிலைமையைத் தவறாக விளங்கிக் கொண்டாள்.

''இஞ்சை வாரும் ஜெனிற்றா. ஏன் உமக்கு இந்தப் பிள்ளையளைப் பிடிக்கேல்லையோ....? அல்லது.... பள்ளிக்கூடம் பிடிக்கேல்லையோ..?''

''அதில்லை டீச்சர். இவாவின்ரை அம்மாவும் தம்பியும் சுனாமியில அம்பிட்டுப் போச்சினம். இப்ப.... இவ இஞ்சை அப்பம்மா வீட்டிலை வந்து இருக்கிறா...''

என்ன நினைத்தாளோ.... சாந்தி ஓடிப்போய் அந்தப்பிள்ளையை இறுக்கக் கட்டிக் கொண்டாள். தாயன்புக்




காக ஏங்கிய அந்தப் பிஞ்சு இவளது கைகளுக்குள் சுருண்டு கொண்டது.

இப்படியாக ஆரம்பித்த அவர்களது உறவு நாளடைவில் வலுப் பெற்றது. சாந்தி, ஜெனிற்றாவின் முகத்தில் தன் ஆருயிர் மகள் கவிதாவைக் கண்டாள். ஜெனிற்றாவோ... சாந்தியின் அணைப்பில் தனது தாய் மேரியின் ஸ்பரிசத்தை உணர்ந்து நிறைவுற்றாள். அவர்களது பிணைப்பு இருவருக்கும் பரஸ்பர ஆறுதலைத் தந்தது.

மனைவியையும் மகனையும் ஆழிப் பேரலைக்குப் பறி கொடுத்து விட்ட ஜெனிற்றாவின் தந்தை ஜோன்சனுக்கு முல்லைத்தீவிலிருந்து யாழ்ப்பாணக் கச்சேரிக்கு மாற்றம் கிடைத்தது. ஜோன்சன் காலையில் வேலைக்குப் புறப்பட்டுப் போகும்போது மகளைத் தனது மோட்டார் சைக்கிளில் ஏற்றி வந்து பாடசாலையில் இறக்கி விட்டுப் போவான். இப்போதெல்லாம் ஜெனிற்றாவும் ஆர்வத்துடன் பாட சாலைக்குப் புறப்பட்டு வந்து விடுவாள்.

இத்தனை காலமும் சோகமே உருவாக எதிலுமே பற்றில்லாதவளாய் வாழ்ந்து வந்த சாந்தி, பாடசாலைக்குப் போகத் தொடங்கியதும் சிறிது தெளிவடைந்து விட்டதாகப் பேர்த்தி கருதினாள். நாளடைவில் காலை உணவையும் அவளே சிரத்தையுடன் தயாரித்து மதிய வேளைக்கும் எடுத்துச் செல்வதைக் கண்ணுற்ற அந்த வயோதிபத் தாய் திருப்தியடைந்தாள்.

திடீரென ஒரு நாள் ஜெனிற்றா பாடசாலைக்கு வராமல் நின்று விட்டாள். சாந்தியினால் அந்த ஏமாற்றத்தைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அந்தக் குழந்தைக்காக விசேடமாக வீட்டிலிருந்து அவித்து வந்த இடியப்பமும் உருளைக்கிழங்குப் பிரட்டலும் அவளது 'ஹாண்ட் பாக்'கிலிருந்த 'லஞ்ச் பொக்ஸ்'லினுள்ளிருந்து பெரும் சுமையாகக் கனத்தது. என்ன செய்வதென ஒரு கணம் யோசித்தாள். விடை கிடைத்தது.

அன்றைய தினம் பாடசாலைக்கு

மலரன்னை

லீவு போட்டு விட்டு மாணவி நிவேதா சொன்ன குறிப்பின் வழி ஜெனிற்றாவின் வீட்டைத் தேடிப் புறப்பட்டு விட்டாள். பதைபதைக்கும் மனத்துடன் அந்த வீட்டினுள் நுழைந்தாள். அங்கே.... ஜெனிற்றா படுக்கையில் சுருண்டு கிடந்தாள். நினைவற்றுக் கிடந்தவளின் வாய்மட்டும் புலம்பிக் கொண்டிருந்தது.

''அ...ம்...மா!.....அ...ம்...மா!....''

பதறிப் போனவளாய் சாந்தி அவளது நெற்றியில் கை வைத்துப் பார்த்தாள். அனலாகத் தகித்தது. ''அம்மா! பிள்ளைக்குச் சரியாய்க் காய்ச்சல் காயுது. என்ன மருந்து குடுத்தனீங்கள்?'' அங்கிருந்த வயோதிப மாதுவிடம் கேட்டாள்.

''பிள்ளை! எனக்கொண்டும் தெரியாது. தேப்பன் தான் ஏதோ மருந்து பருக்கினவன். உதிலை கடைக்குப் போய்ச் சோடா வாங்கி வாறனெண்டு போனவன். இப்ப வந்திடுவான்....''

*(20 ஆம் பக்கம் பார்க்க)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலிகள் எச்சரிக்கையாக இருக்கவும்

ஆகாசவாணி செய்திகள் வாசிப்பவர் வரதராஜன் யாழ்.நகரில்
1. பொன்னான மேனியும்
2. பொலிவான கூந்தலையும் தந்து
3. சகல ரோக நிவாரணியாகத் திகழும்

போலியானது | சரியானது

**சித்தாரா பொன்னாங்காணித் தைலத்தில்** போலிகள் நடமாடுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. போலிகளின் நடமாட்டத்தைத் தடுக்க இன்றிலிருந்து தைலப் போத்தலின் மேல் மூடி கண்ணைக் கவரும் வர்ண மூடியாக அச்சிடப்பட்டு சித்தாரா டிஸ்பென்சரி வைத்திய முத்திரை பொறிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது. போலிகளைக் களைவதற்கு வேலியாக அமைவது வர்ணத்தில் வைத்திய முத்திரை பொறிக்கப்பட்ட மூடிகளே, பிளேன் மூடித் தைலம் இனி உங்களுக்கு வேண்டாம். ஆகவே சித்தாரா பொன்னாங்காணித் தைலம் வாங்கும்போது வர்ணமூடியுடன் சித்தாரா டிஸ்பென்சரி வைத்திய முத்திரை குறியீடு உள்ளதா என பொதி செய்யப்பட்ட பெட்டியைத் திறந்து சரி பார்த்து வாங்குங்கள்.

*Manufactured By:*
**Sithara Product**
Puttalam Road, Chilaw.
(Reg.No: 6382) ARPR/No:228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகத்தர்:
**சிவா நறுமணப்பூங்கா**
இல.228, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2567
குறிப்பு: சந்திரச் சந்திக்கு அருகில்

# MBBS / MD

**Lugansk State Medical University**
**UKRAINE உக்கிரேன் - EAST EUROPE**
**Recognized by SRI LANKA MEDICAL COUNCIL**
**With A/Ls → 6 Years**
Minimum : 2C + 1S in Biology, Chemistry and Physics

எமது நிறுவனத்தின் மூலம் அனுப்பப்பட்ட St. Patrick's, St. John's College, Holy Family Convent, Jaffna College, St. Mary's College (Trinco), St. Michael's (Batticaloa) மற்றும் வவுனியா, முல்லைத்தீவு, நுவரெலியா, மாத்தளை மாணவர்கள் தற்பொழுது Ukraine ல் கல்வி கற்கின்றனர்.

**www.lugmedi.com**
Tel : (தமிழில்) 0777 767 818 / 0776 209887
SIC Center, 734, Hospital Road, Jaffna

## ஆசிரியர் பயிற்சி மூலச் சான்றிதழ்

யாழ்ப்பாணம், டிசெ.12

கனேடிய உலகப் பல்கலைக்கழக சேவை நிறுவனத்தின் அனுசரணையுடன் வாழ்க்கைத் தொழில்சார் தொழில் நுட்பவியல் பல்கலைக்கழகம், யாழ். தொழில்நுட்பக் கல்லூரியுடன் இணைந்து நடத்திய தேசிய சான்றிதழ்தர ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ்களின் மூலச் சான்றிதழ்கள் கொழும்பில் இருந்து எடுத்துவரப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பயிற்சியில் கலந்துகொண்ட ஆசிரிய, மாணவர்கள் யாழ்.தொழில்நுட்பக் கல்லூரிக்குச் சமூகமளித்துச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கல்லூரியின் பணிப்பாளர் கலாநிதி என்.யோகராஜன் தெரிவித்துள்ளார். (ஒ-9)

## சேவை

மாணவர்களுக்குரிய டை, மொனிற்றர் பச், பிறிபெக்ட் பச், பிளாஸ்ரிக் அடையாள அட்டை, மெடல்கள், கேடயங்கள், பெயர்ப் பலகை என்பனவற்றை உடனுக்கு உடன் செய்து பெற்றுக்கொள்ள.
**எஸ்.எஸ்.பாஸ்கரன் ஆர்ட்ஸ்**
இல. 381, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0777110610, 0217903020
(அ/572612)

## வீடு, காணி தேவை

நல்லூரை அண்மித்த பகுதிகளில் 2 பரப்புக் காணியும் வீடும் அல்லது வெறும் காணி உடன் தேவை. (தரகர் தேவையில்லை, நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்). தொடர்பு: 0779963186

## German Swiss மொழி வகுப்புகள்

German Swiss, மொழி வகுப்புகள் தமிழ் மொழி பெயர்ப்புடனும் புத்தகம், CDக்களுடனும் ஜேர்மனியில் படித்துவந்த ஆசிரியரால் தினமும் நடத்தப்படுகிறது.
German Institute
10,Palaly Road, Jaffna.T.P.0771604823

## வீடு விற்பனைக்கு

சுண்டுக்குளி, விதானையார் வீதியில் 1½ பரப்புக் காணியுடன் கூடிய வீடும் 3 பரப்புக் காணியுடன் கூடிய வீடும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: S.S. நாதன்
16/3, விதானையார் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 077 6146434

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 15.11.1923
இறப்பு: 04.12.2008

**அமரர் நாகமணி குணரத்தினம்**

அறிவு எனும் கடலின் முத்தே! ஆருயிர்த் தந்தையே!!
அறிவுரைகள் பல தந்தீரே
இவ் அவனியில் வாழ வழிவகுத்தீரே
இன்று ஆண்டுகள் இரண்டு சென்றனவே
உம் நினைவலைகள் நீங்குமோ என்றும்

'இரத்தின பவனம்',
சண்டிலிப்பாய்.

பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள், மருமக்கள்.

## சிவாச்சாரியர்(குருக்கள்) தேவை

நோர்வே (OSLO) வில் அமைந்துள்ள சிவசுப்ரமணியர் ஆலயம் இலங்கையில் இருக்கும் குருமார்களுக்கு நோர்வேயில் சேவையாற்ற ஒரு சந்தர்ப்பம் அளிக்க வேண்டும் என்ற நோக்குடன் செயற்பட்டு வருகின்றது. அந்த வகையில் அடுத்த தடவைக்கான சிவாச்சார்யர்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமையுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

- சிவாச்சாரியர் குருக்களாக இருத்தல் வேண்டும்.
- ஆச்சார்ய அபிஷேகம் பெற்றவரும் சிவாகம முறைப்படி சகல அபிஷேகங்கள், பூசைகள் மற்றும் அனைத்து ஏனைய கிரிகைகளும் தனித்துச் செய்யக்கூடிய தகுதியுடையவராகவும் இருத்தல் வேண்டும்.
- ஆகக்குறைந்தது 5 வருடங்களாவது பிரதம குருவாக சேவை செய்திருத்தல் வேண்டும்.
- 35 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- குடும்பத்துடன் அல்லது தனித்து சேவையாற்றல் வேண்டும்.
- சமய சொற்பொழிவுகள், பிரசங்கங்கள் செய்யக்கூடியவராக இருத்தலுடன் இந்து சமயம் கற்பிக்கக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.
- மேலதிக தகைமைகளாக உயர்கல்வி அல்லது பல்கலைக்கழக பட்டம் பெற்றவர்கள் அல்லது இதற்குச் சமமான கல்வித் தகைமைகள் உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- ஆங்கிலம் பேசத் தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது.
- பதவிக்காலம் ஆகக்கூடியது ஒரு வருடம்
- தகுந்த வேதனமும் தங்குமிட வசதியும் செய்து கொடுக்கப்படும்.

தகுதியுடையவர்கள் ஆகமம் பயின்ற இடம், பணிபுரிந்த இடங்கள் மற்றும் ஏனைய நற்சான்றிதழ்கள், முழுப்படம், பாஸ்போட் பிரதிகளையும் இணைத்துக் கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு 01.01.2011இற்கு முதல் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

SECRETARY,
NORGES HINDU KULTUR CENTER.
POST BOX 85, GRORUD,
0905 OSLO
NORWAY.

மேலதிக தொடர்புகளுக்கு:-
+4799032437

(அ/573434)

## Study Work in Live UK

With Your O/L


isbs
International School of business studies
www.isbs.org.uk
*We are coming to see the future generations On*

JAFFNA - 04th January 2011 @ Yarl Pardy Hotel, Amman Road
VAVUNIYA - 05th January 2011 @ SLRCS Conference Hall, Off Park Road
TRINCOMALEE - 06th January 2011 @ Sunshine Hotel, Green Road
BATTICALOA - 7th January 2011 @ Green Garden Hotel, Kallady
COLOMBO - 08th & 9th January 2011 @ Milestone Holdings, Col 4

Spot Admission for Level 6
**No IELTS**
Minimum Qualification
O/L, A/L with 2 passes & 2 years work experience

Next Intake February & May 2011

Spot Admission for Level 4 & 5
Minimum Qualification
O/L & **IELTS 4** Band



Consultation and Services by
UK Office: A&F Global Consultants, C Ground Floor, TALBOT House, 204-226 Imperial Drive, Rayners Lane, HA2 7HH, United Kingdom. T : +44 20842951100
Sri Lanka Office: Milestone, No 256, Galle Road, Colombo 04, Sri Lanka. T : 011 2555778 E : businesslp@sltnet.lk

abe CTH edexcel

Professionals in STUDENT & FAMILY VISA Consultants WITH OVER 8 YEARS EXPERIENCE

## 31ஆம் நாள் இதய அஞ்சலி



**சூசைப்பிள்ளை மேரி மாகிறேற்**
(செல்வம்)

நம்மைக் கருவறையில் காத்தவளே- இன்று
உங்களைக் கல்லறையில் காக்கும் விதி எமக்கேனோ?
பெற்றெடுத்தவளே உம் தூய முகங்காண
துடிக்கின்றோம் அம்மா துன்பத்தால் தவிக்கின்றோம்
உன்னை இழந்ததை நம்ப மறுக்கிறது எம் மனம்
தேடி அலைகின்றோம்- உன் குழந்தை உள்ளத்தை
தேடி வாராயோ உன் பிள்ளைச் செல்வங்களை
அம்மா நீ வேணுமம்மா எமக்கு- நம்
வாழ்வில் வார்த்தையால் வரையறை வைக்க
முடியவில்லை அம்மா உமது ஆத்மா சாந்தியடைய
எம் இதயங்களை அஞ்சலியாக்குகின்றோம்.

எமது அன்னையின் இறுதிச் சடங்கில் நேரடியாகக் கலந்துகொண்டும் தொலைபேசி மூலமும் மலர்வளையம் வைத்தும் துயர் பகிர்ந்தவர்களுக்கும் எமது இதய நன்றிகளைச் சமர்ப்பிக்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டன்.

42/3, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

## 25ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்: 1935.06.28
மறைவு: 1985.12.09

**அன்ரனிப்பிள்ளை குகதாசன்**
(பாலசிங்கம்)

கட்டிய தாலிக்கும் இட்டிட்ட பொட்டிற்கும்
என்றைக்குமே களங்கம் வைத்திடா- என் கணவா!
உங்கள் விழுதுகள் இன்று ஆலமரமாகி
ஆலமரமிங்கு விழுதாகி விட்டதப்பா
காலத்தின் சதியில் உங்களை நாமிழந்து
25 வருடங்கள் கழிந்தாலும்- இதயத்தின்
பாரமதை இறக்கி வைக்க முடியவில்லையப்பா
நீங்கா உங்கள் நினைவுகளை
நெஞ்சில் சுமந்து நீந்தி வருகின்றேன்- தெப்பமாய்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகளின் பயணத்திற்காய்
உங்கள் கனவுகளை நனவாக்கிய நிம்மதியில்- இன்று
செலுத்துகின்றோம் இதய அஞ்சலி

*இறைவனின் காலடியில் என்றும் உன் ஆத்மா இளைப்பாற*
*இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்*

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(107202)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான No. 1 பிறிமா புறொயிலர் குஞ்சுகள் நியாயமான விலையில் 16.12.2010 காலை விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்யவும்.
(பின்பு 100 வீதம் இறைச்சிக் கோழிகள் திருப்பி வாங்கப்படும்)
**நல்லூர் பாம் சென்ரர்.**
19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம்.
021 222 6944

## YARL BABY NEED & PHARMACY

No. 388, Hospital Road , Jaffna.

நத்தார் மற்றும் வருடப்பிறப்பை முன்னிட்டு எமது ஸ்தாபனத்தில் சிறுபிள்ளைகளுக்கான குறிப்பிட்ட உடுப்புகள் கொள்வனவு செய்பவர்களுக்கு

கவர்ச்சிகரமான விளையாட்டுப் பொருள்கள் இலவசமாக வழங்கப்படும்.

அத்துடன் பேபி பிறேம்ஸ்,கட்டில், வோர்க்கர்,நப்பின்,பம்பஸ்,கவுண், பிரசவத் தாய்மார்களுக்குரிய அனைத்துப் பொருள்களையும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம். T.P.021 222 8013

## புதிய வகுப்பின் புதிய பாட அலகுகள்

1973 - 2013

**Dec.12ல் ஆரம்பமாகின்றன.**

**3ம் கட்ட அனுமதிகள் வழங்கப்படுகின்றன**

- அதிபர்
*The Express Institute*
Irupalai, Kopay.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஏ-9 வீதி அகலிப்பால் ஏற்படும் பாதிப்பைத் தவிர்க்க கரையோரமாகப் புதிய ரயில்பாதை அமைப்பதே சிறந்தது

நிகழ்காலத் தேவைகளையும் எதிர்கால மேம்பாட்டையும் கருத்திற் கொண்டு சாலைகள் அகலமாக்கப்படுவது வரவேற்கப்படவும் ஊக்குவிக்கப்படவும் வேண்டியதே. எனினும் அவ்வாறான செயற்பாடுகளின் போது சொத்துக்களுக்கு ஏற்படும் இழப்புக்கள், அதனை ஈடு செய்வதற்கான கொடுப்பனவுகள், பொது மக்களுக்கு ஏற்படக் கூடிய சிரமங்கள் ஆகியனவற்றை ஈடுசெய்வதற்கான கொள்கைகளையும் நடைமுறைகளையும் கைக்கொள்ள வேண்டும். தேவையேற்படுமிடத்து முதன்மைத் திட்டத்தின் நோக்கம் பாதிக்காத வகையிலான மாற்றுத் தெரிவுகளையும் கவனத்தில் கொள்வது அவசியமானதும், நன்மை தரக்கூடியதாகவும் அமையும். இவ்வகையில் யாழ்.கண்டி நெடுஞ்சாலை (ஏ-9) அகலிப்பின் போது தென்மராட்சிப் பிரதேசத்தில் தோன்றக் கூடிய கள நிலைமைகள், இடர்பாடுகள் என்பவற்றை ஆய்வு செய்வதுடன் அவற்றை வெற்றி கொள்வதற்கான மாற்று வழிமுறைகளையும் இக்கட்டுரை முன்வைக்க விரும்புகிறது.

ஆனையிறவுக்கு அப்பால் இயக்கச்சியிலிருந்து சாவகச்சேரி வரை யாழ்-கண்டி நெடுஞ்சாலையும் ரயில் பாதையும் (தண்டவாளம்) சமாந்தரமாக அமைந்துள்ளமை யாவரும் அறிந்ததே. அதிலும் குறிப்பாக பளையிலிருந்து சாவகச்சேரி வரையிலான தடத்தில் இரு பாதைகளும் மிக நெருக்கமாக அமைந்துள்ளன.

இந்நிலையில் நெடுஞ்சாலையை அகலிக்கும் போது ஒரு புறத்தில் மட்டுமே அகலிக்க வேண்டிய நிலைமை காணப்படுகிறது. அதாவது ரயில்பாதை நெடுஞ்சாலையுடன் நெருங்கியிருப்பதால் அப்பக்கத்தில் அகலிப்பை மேற்கொள்வதற்குத் தேவையான நிலம் இல்லாமல் இருப்பதால், மறுபுறத்திலேயே இருபக்கத்துக்கும் தேவையான அளவை அகலப்படுத்த வேண்டியுள்ளது. அதுவும் மிக நெருங்கிய குடியிருப்புக்களையும் வர்த்தக மற்றும் அரச நிறுவனங்களையும் கொண்ட பகுதிலேயே இந்த அகலிப்பு இடம்பெற வேண்டியுள்ளது. இதன் காரணமாகச் சாலையை அகலமாக்கும் போது தோன்றும் பிரச்சினைகள் இப்பகுதியில் மேலும் கூர்மையடைவதற்கான ஏது நிலைகளே காணப்படுகின்றன. அவற்றுள் முதன்மையானவையாகப் பின்வருவனவற்றை எதிர்வு கூறலாம்.

* குடியிருப்பாளரதும் நிறுவன உரிமையாளரதும் ஒப்புதலையும் ஒத்துழைப்பையும் பெறமுடியாது போதல்.
* பல வீடுகள் முழுமையாக அழிக்கப்படல்.
* பல வர்த்தக மற்றும் அரச நிறுவனக் கட்டடங்கள் முழுமையாக அழிக்கப்படல். குறிப்பாக சாவச்சேரி, கொடிகாமம் போன்ற நகரங்களிலுள்ள கட்டடங்கள் பெருமளவுக்கு அகற்றப்படுதல்.
* மேற்குறிப்பிட்ட வகையில் பாதிக்கப்படுவோருக்கு மாற்று இடங்களை வழங்குவதில் தோன்றக்கூடிய பிரச்சினைகள்.
* மேற்குறிப்பிட்ட இழப்புக்களுக்கு நஷ்டஈடு வழங்குதல், அல்லது புதிதாக அமைத்துக் கொடுத்தல் என்பவற்றில் எதிர்கொள்ள வேண்டிய நிதிப் பிரச்சினைகள்.
* இத்தகைய அகலிப்பினால் ஏற்படும் இழப்புக்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படாத நிலைமையே காணப்படுவதனால் பாதிக்கப்படுவோருக்கு வீடற்ற நிலையும், நிறுவன உரிமையாளர்களுக்குத் தொழில் மற்றும் வருமான இழப்பு ஏற்படுதலும்.



நெடுஞ்சாலையொன்று அகலமாக்கப்படும் போது மேற்குறிப்பிட்ட பிரச்சினைகள் சில ஏற்படுவது பொதுவானதே. எனினும் அவற்றின் தாக்கம் இங்கு கூடுதலாகவே இருக்கப் போகின்றது. ஏனைய இடங்களில் இவ்வாறு அகலிக்கும் போது மதில், வீடு அல்லது கட்டடங்கள் என்பவற்றின் ஒரு பகுதி மாத்திரமே பாதிப்படையும். ஆனால் இங்கு நிலைமை வேறாக உள்ளது. ஒருபுறத்திலேயே இருபக்கத்துக்குமான அகலிப்பு இடம்பெறுவதால் வீடுகள், கட்டடங்கள் முற்றாக அழிவடையும் நிலைகாணப்படுகின்றது.

எனவே இப்பாதிப்புக்களைக் குறைப்பதற்கான மாற்று வழிமுறையாக ரயில் பாதையை இடமாற்றுவது பற்றிச் சிந்திக்க முடியும். இவ்வகையில் இப்போதுள்ள ரயில்ப் பாதையை மீளமைப்பதற்குப் பதிலாக புதிய பாதையொன்றை ஆனையிறவு அல்லது சோரன்பற்றிலிருந்து சாவகச்சேரி வரையும் கரையோரத்தினூடாக அமைப்பது சிறந்த மாற்று வழியாக அமைய முடியும் (படத்தைப் பார்க்க). ஆனையிறவிலிருந்து அல்லது சோரன்பற்றிலிருந்து கிளாலி, கச்சாய், சிற்றூர்களினூடாக சாவகச்சேரி நகரம் வரை இப்புதிய பாதையை அமைக்க முடியும்.

இப்புதிய பாதைக்கான செலவு பழைய பாதையை மீளமைப்பதற்கான செலவை விட ஒன்றும் அதிகமாக இருக்கப் போவதில்லை. ஏனெனில் பழைய பாதையும் முழுமையாக மீளமைக்கப்பட வேண்டிய நிலையிலேயே உள்ளது. இதன் மூலம் பின்வரும் நன்மைகளை எதிர்பார்க்க முடியும்.

* ஏலவே குறிப்பிட்டதைப்போல குடியிருப்பாளர் மற்றும் நிறுவனங்களுக்கு ஏற்படும் இழப்பையும் மீளமைப்பதற்கான செலவையும் குறைத்தல். இதன் மூலம் பொது மக்களின் ஒத்துழைப்பை இலகுவாகப் பெறமுடிதல்.
* ஒப்பீட்டு ரீதியில் பயன் குறைந்ததும், சந்தைப்பெறுமதி குறைந்ததுமான நிலங்களைப் பயன்படுத்தும் வாய்ப்பு.
* புதிய பாதை தற்போது இருப்பதை விட 10 கி.மி. குறைவாக இருப்பதால் கட்டமைப்புச் செலவும், பயணத்தூரமும் குறைவடையும்.
* எதிர்காலத்தில் யாழ்.கண்டி சாலையை மேலும் அகலிக்கும் தேவை ஏற்படுமிடத்து இலகுவான முறையில் அகலிக்க முடிதல்.
* கிட்டத்தட்ட 40 ரயில்க் கடவைகளுக்கான பராமரிப்புச் செலவு குறைவடைவதுடன் அதற்கான ஊழியக் கொடுப்பனவும் இல்லாமல் போகும்.
* விபத்துக்கள் குறைவடைதல்.
* தென்மராட்சியின் பின்தங்கிய பகுதிகள் சில செழிப்படைவதற்கும் மறைமுக வேலை வாய்ப்புக்கள் தோன்றுவதற்கும் வாய்ப்புகள் ஏற்படுதல்.

மறுபுறத்தில் இத்திட்டத்தினால் தோன்றக் கூடிய எதிர்விளைவுகள் பற்றியும் கவனஞ் செலுத்துவது அவசியம். அவற்றுள் முதன்மையானவையாகப் பின்வருவன அமையலாம்.

* கட்டுமானச் செலவுகள் கூடுதல்.

எனினும் தற்போதுள்ள பாதையும் கிட்டத்தட்ட 80-90 சதவீதம் சீரமைக்க வேண்டிய நிலையிலேயே உள்ளது. புதிய பாதை 10 கி.மீ தூரம் குறைவதுடன் ஏற்படப்போகும் நன்மைகளையும் கருத்திற் கொள்ளும்போது மேலதிகச் செலவு புறக்கணிக்கக் கூடிய அளவிலேயே இருக்கும்.

திரு.க.அருந்தவபாலன்

* வடமராட்சிப் பயணிகளுக்கு ஏற்படும் பாதிப்புக்கள்.

தென் பகுதிக்கான ரயில் நிலையச் சந்திப்பாக கொடிகாமமே வடமராட்சிப் பயணிகளுக்கும் இருந்துவந்துள்ளது. மாற்றுத் திட்டத்தின் கீழ் அச்சந்திப்பு, கச்சாய்க்கு மாறும். கொடிகாமத்துக்கும் கச்சாய்க்கும் இடையிலான தூரம் 3 கி.மிற்றருக்குக் குறைவாக இருப்பதாலும் ரயிலுக்கான இணைப்புப் பஸ்கள் இடம்பெறும் என்பதாலும் அப்பயணிகளுக்கு பெரும் சிரமம் ஏற்பட வாய்ப்பில்லை.

* உள்ளூர் பயணிகளுக்கான பாதிப்புக்கள்.

பழைய பாதையின் ஊடாக சங்கத்தானை, மீசாலை, கொடிகாமம், மிருசுவில், எழுது மட்டுவாள் போன்ற இடங்களுக்கு உள்ளூர் ரயில் சேவையின் மூலம் பயணிக்கும் வாய்ப்பு இருந்தது. புதிய திட்டத்தில் அந்தவாய்ப்பு இல்லாமல் போகும். எனினும் நெடுஞ்சாலை அகலிப்பு, தனியார் மற்றும் அரச பஸ் சேவைகளின் பெருக்கமும் மேற்குறிப்பிட்ட இடங்களுக்கு தரை வழியாக இலகுவாகவே பயணஞ்செய்யும் வாய்ப்பை ஏற்படுத்தும்

இவ்விடயங்களை கருத்திற் கொண்டு இப்புதிய திட்டத்திற்கான வாய்ப்புக்களைத் தொடர்புபட்ட துறையினர் அனைவரும் கவனத்தில் எடுக்கவேண்டுமெனத் தென்மராட்சி மக்கள் எதிர்பார்க்கின்றனர். இது தொடர்பான மக்களின் விழிப்புணர்வும், அரசியல் தலைவர்களது விரைந்த முயற்சிகளும் இத்திட்டத்தை வெற்றி பெறச் செய்யும் என எதிர்பார்க்கலாம்.

# வையத்துள் வாழ்வாங்கு வாழ்தல்

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப் படும்''

இக்குறள் எம்மில் பெரும்பாலானவர்களுக்கு தெரிந்த ஒன்றாகும். இதில் குறிப்பிடப்பட்டுள்ள '' வாழ்வாங்கு'' என்ற சொல்லின் பொருள் என்ன? வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பட வேண்டுமென்றால்வாழ் வாங்கு வாழ வேண்டும் என்று கருதலாம். ஆனால் உண்மையில் அது அப்படியல்ல.

எமது உலகியல் வாழ்வின் தன்மை தீர்மானிக்கப்படுதல் இயற்கையின் கைளிலே உள்ளது. இயற்கையின் நியதிகளுக்கு அமைவாக வாழும் போது வாழ்வு நிம்மதி தருவதாக அமைகிறது. ஏனெனில் எமது செயல்கள் இயற்கையில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. அந்தத் தாக்கத்திற்கமைய எதிர் விளைவுகள் ஏற்பட்டு எமது வாழ்வைத் தீர் மானிக்கின்றன. எனவே தான் "நன்றும் தீதும் பிறர்தர வாரா'' என்று கூறப்படுகின்றது.

மேற்கூறிய இயற்கை நியதிக்கமைந்த செயற்பாடுகளே தர்மங்கள் என்று கூறப்படுகின்றன. தர்மங்களுக்கமைந்த வாழ்வு இயற்கையின் நியதிகளுடன் முரண்படாது காணப்படுவதால், ஒன்றுக்கொன்று ஒத்திசைந்து ஒரு இசைவுடன் (லயத்துடன்) இயங்குகின்றன. இயற்கை நியதி பிரபஞ்ச உருவாக்க காலத்துடன் தொடர்பு பட்டது. எனவே தர்மங்களும் பிரபஞ்ச உருவாக்க காலத்திலிருந்து தொடர்வதால் ''சனாதன தர்மம் '' எனப் பெயர் பெற்றது. எனவே வையத்துள் " வாழ்வாங்கு வாழ்தல்'' என்பது எமக்கென அமைந்த தர்மங்களை நடைமுறைப்படுத்துவதேயாகும்.

பொதுவாக '' மனிதன்'' என்ற விடயத்தினுள் உள்ளடங்கும் தர்மங்களும் இதனுடன் சேர்ந்து எமது வாழ்க்கைப்படி நிலைக்கமைவான ஆண், பெண், மாண வன், குடும்பஸ்தர், தொழில்புரிபவர் என்பவற்றிற்கான சிறப்புத் தர்மங்களும் சேரும்.

இந்தத் தர்மங்களை உணர்ந்து கண்டு கொண்டு வாழ்ந்தால் வாழ்வு நிறைவானதாக அமையும். தற்போது இந்தத் தர்மங்கள் எமக்குத் தெளிவற்றதாக இருக்கின்றன. காரணம் தர்மநெறிகள் கடைப்பிடிக்கப்படாமையே. இதைப் பற்றி பகவான் சத்திய சாயிபாபா கூறுகையில் '' பயிர்கள் இருந்த இடத்தில் களைகள் முளைத்து, காலவோட்டத்தில் புதர் மண்டி, பயிர்களைக் கண்டு கொள்ள முடியாமல் போய் விடுவதைப் போலவே தர்மத்துக்கு முரணான செயல்கள் தொடர்ந்து மேலோங்கி இருந்தபடியால், தர்மச் செயல்களை இனம் காண முடியாதுள்ளது. ... போயுள்ள சனாதன தர்மத்தை மீண்டும் ... படுத்தவே நான் அவதரித்துள்ளேன்'' என சத்திய சாயிபாபா கூறுகிறார்.

எமக்கான வாழ்வுப் பாதையைத் தெரிந்து கொள்ள முன்பு, தற்போதைய காலகட்டத்தில் எமது விழுமியங்கள் எவை என்பதைப் பார்ப்போம். எமது சமூகத்தில் '' இந்த காலத்தில் உண்மை பேசி வாழ முடியாது'' (எனவே பொய் பேசலாம்), ''நியாயாத்துக்கு இடம்இல்லை''(எனவே அநியாய வழியில் சென்றாலே முன்னேறலாம்) ''என்ன வழியிலும் பணம் சம்பாதித்து வாழ்வில் முன்னுக்கு வந்தால் சரி'' ( சட்ட விரோத, தர்மத்துக்குப் புறம்பான வழியில் பணம் சம்பாதிக்கத் தயார்) என்பன போன்ற எண்ணக்கரு உள்ளன.

எமது சமூக விழுமியம் தற்போது இருக்கும் நிலை தர்மத்துக்குப் புறம்பானதே. இறைநீதி என்பது எக்காலத்துக்கும் பொதுவானது. இறைசக்தி எக்காலத்திலும் செயற்படுவது. ஆனால் இவற்றில் நாம் நம்பிக்கை இழந்து விட்டோம். இதற்கு உதாரணமாக ஒன்றைக் குறிப்பிட்டுக் காட்டலாம். 1995 ஆம் ஆண்டு வலிகாமத்தில் இருந்து இடம் பெயர்ந்து சென்று 1996 ஆம் ஆண்டு மீண்டும் திரும்பி வந்தோமல்லவா? அப்பொழுது அடுத்த வீட்டிலுள்ள ஓடுகளையும் சீற்றுக்களையும் கழற்றி எமது வீடுகளில் போட்டோம். அத்துடன் அடுத்த வீடுகளில் இருந்த பல பொருள்களையும் களவாக எடுத்து எமது சொத்தாக்கினோம். இத்தகைய விழுமியங்களே எம்முடையவையாக இப்பொழுது இருக்கின்றன. எமது தனிப்பட்ட வாழ்வை நெறிப்படுத்துவதன் ஊடாக எமக்கான நல்வாழ்வைப் பெற்றுக் கொள்ள முடியும். இறைநீதி மாற்றப்படாதது, சர்வவல்லமையானது. எனவே எமது வாழ்வைத் தர்மநெறியில் இட்டு நெறிப்படுத்தும் பொழுது எமக்குச் சந்தோசமும், நிம்மதியும் வந்தமையும். எனவே எம்மை நெறிப்படுத்த சத்திய சாயிபாபாவின் '' வாழ்வாங்கு வாழும்'' முறைபற்றிய சில கூற்றுகளை விளங்கிக் கொள்ள முயல்வோம்.

டாக்டர் இ.சிவசங்கர்

மூன்று மகாமந்திரங்கள் என்ற விடயம் சத்திய சாயிபாபாவினால் கூறப்பட்டுள்ளது.

* கடவுளின் மேல் அன்பு வைத்திரு
* பாவத்துக்கு அஞ்சு
* சமூகத்தில் நல்ஒழுக்கத்தைக் கடைப்பிடி

எனும் இம்மூன்றையும் பின்பற்றுகின்ற மனிதனே உண்மையான மனிதன் என்று அழைக்கப்பட முடியும் என சாயிபாபா கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு பொம்மலாட்டம் நடக்குது.... அது புதுமையாக இருக்குது!

நாட்டில் பல தசாப்தங்களாக பலராலும்,
பல முயற்சிகளாலும்தீர்க்கப்படாத
இனப்பிரச்சினை தீர்வு குறித்து ஒரு திட்டம்
தன் மனதில் உள்ளது, அதனை அரசியல்கட்சிகள் மாத்திரமல்ல....
இங்கு மக்களும் ஏற்க வேண்டும் என்கிறார் நாட்டின் தலைவர்.
''எந்த மக்கள்?'' என்ற வினா இங்கு தொக்கியே நிற்கிறது.

''நான் தர...நீ கைநீட்டி வாங்க, உரிமைகள்
ஒன்றும் பிள்ளையார் கோயில் சுண்டல் அல்ல''
என்ற உண்மையை தமிழ் மக்களாகிய நாம் முதலில்
மனதில் இருத்திக் கொள்ளவேண்டும்.

தீர்வுக்கான மார்க்கமென்பது ''அடுத்த வீட்டுக்காரனிடம் இருந்து
பெறப்படுவதல்ல''பாதிக்கப்பட்ட மக்களிடம்
அவர்கள் தம் அரசியல் கட்சிகள்
தலைமைகளிடம் இருந்துதான் பெறப்பட வேண்டும்.

இதைவிடுத்து தனி மனித எண்ணங்கள்
அதிலும் பாதிப்புகளுக்குக் காரணமானவர் எனக் கருதப்படும்
ஒருவர் இதற்கான தீர்வு தன் மனதில் இருப்பதாகக் கூறுவது
''குரங்கு அப்பம் பகிர்ந்த'' கதையாகவே அமையும்.

''முட்டையின் வெள்ளைக்கரு தனித்தோ
மஞ்சள் கரு தனித்தோ குஞ்சாகி விடமுடியாது.... அதற்கு
மூன்றாவது புறச்சூழல் ஒன்று தேவை''என்பதைப் பிரச்சினையில்
சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் உணர்ந்து கொள்ளவேண்டும்.
கோழி மனமுவந்து அடைகாக்க....முட்டைகள் மேல் அமரும்
போதுதான் இந்தப் புறச்சூழல் எமக்குத் தெரியவரும்.

தலைவர் சுட்டி நிற்கும், அவர் தம் தீர்வை ஏற்றுக் கொள்ள வேண்டிய
மக்கள்பாதிக்கப்பட்ட மக்களென்றால்....
'' கோழியின் சம்மதம் கேட்டு அதன் கழுத்தை அறுக்கும்''
செயலாகவே இதனைக் கொள்ளவேண்டியுள்ளது.

''தமிழ்த் தலைவர்கள் ஒன்றுபட்டுவரவேண்டும் இனப்பிரச்சினை
தீர்க்க...''என்பது '' ஆமையில் மயிர் பிடுங்கச் சொல்லும்''
அதிகாரத்துவக் கட்டளை ஆகும்.இனப்பிரச்சினைத் தீர்க்கப்
பெரும்பான்மை இன அரசியல் தலைவர்கள் ஒன்றுபடுவார்களா?
என்பதெல்லாம் சொல்லப்படாத....கருத்திற் கொள்ளப்படாத....
பெரிய வீட்டு விடயங்கள்!

ஒற்றுமைப்படுவது, ஒற்றுமைப்படுத்துவது,
கருத்தறிவது, குழு அமைப்பது....
இவையாவுமே ''புதிய மொந்தையில் பழைய
கள் வார்க்கும் நிகழ்வுகளே!''

''எலிக்கு உசிர் போகுது... பூனைக்குக் கொண்டாட்டம்'' எனும்
அரசியல் சித்து விளையாட்டுக்கள் பிரச்சினையை
வெகுதூரம் பின் இழுத்துச் சென்றுவிடும்.
இனப்பிரச்சினை என்றொன்று இல்லையென்றே
இல்லாமலாக்கும் பகீரத முயற்சிகளே இவை.
இவ்விலக்கை நோக்கியேகாய்கள் நகர்த்தப்படுகின்றன.
இதனை மாண்புமிகு தலைவர் அவர்களே பகிரங்கமாகச்
சொல்லிவிட்டாரே:''ஒரே நாடு, ஒரே மக்கள்''
''எந்த நாடு? எந்த மக்கள்?என்பதில்தான் விவகாரமே விளைகிறது''

இவைகளின் பின்னால் ஒரு பெரிய சக்தி
மௌனமாகத் தூண்டில் போட்டுமீன்பிடித்துக் கொண்டிருக்கிறது.
''ஓடும் மீன் ஓட உறுமீன் வரும் வரைவாடியிருக்குமாம் கொக்கு'' என்ற
உண்மைகளை தமிழ் அரசியல் தலைவர்கள் உணர்ந்து கொள்வதோடு
தம்முள் ஒரு இறுக்கமான ஒற்றுமையுடன்துரிதமாகச் செயற்படவேண்டிய
காலமிது; காலதாமதங்கள்......
இழுத்தடிப்புகளுக்குக் காலமைத்து விடும்

நவம்பர் 27 இல் பாரதமாதாவின்''கிருஷ்ண விஜயம்''.....
யாழ்.வருகை, திறப்பு விழாக்கள், அடிக்கல் நாட்டுகை, இவை யாவும்
தமிழ் மக்களுக்குஏதோ ஒரு செய்தியைக் கூறி நிற்கிறது.
''சோழியன் குடுமி சும்மா ஆடாது''இன்றைய அரசியல் மற்றும்உலகப்
போக்கில்எதுவும் நடைபெறலாம்... அவற்றை எதிர்வு கூறமுடியாது.

பொதுவாகவே இங்கு....''
ஒரு பொம்மலாட்டம் நடக்குது;
அது புதுமையாக இருக்குது, நாலு பேரு நடுவிலே.....
நூலு ஒருவன் கையிலே!''

ஏ.எம். கமால்.

# போக்குவரவுத் தூரமும் புவியியல் தூரமும்

நவீன போக்குவரத்துச் சாதனங்கள் மூலம் உலகின் பல பிரதேசங்களை ஒரு சில மணி நேரத்தில் சென்றடையக் கூடியதாக இன்று முன்னேற்றம் ஏற்பட்டு உள்ளது. ஒரு பிரதேசத்தின் புவியியல் ரீதியான தூரத்தினைவிட அப்பிரதேசத் தின் போக்குவரத்துத் தூரம் அங்கு பயன்படுத்தப்படும் போக்குவரத்துச் சாதனங் களால் குறுகியதாக்கப்பட்டு வருகிறது.

போக்குவரத்துத் தூரமும் புவியியல் தூரமும் சமுதாய மருத்துவத்தில் நோய்களைக் கட்டுப்படுத்தவும் சுகாதார சேவைகளை இலகுவில் வழங்கவும் கருத்தில் கொள்ளப்படவேண்டியவை.

உதாரணமாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் நெடுந்தீவுக்கான பயணமும் வடமராட்சி கிழக்குக்கான பயணமும் மிகவும் சிரமமாக உள்ளன. இப்பிர தேசங்களுக்கு இலகு போக்குவரவினை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத் தினை அதாவது விழிப்புணர்வை ஏற்படுத்துவது எமது கடமையாகும்.

உதாரணமாக நெடுந்தீவுக்கான பயணம் கூட்டுறவுச் சங்கத்தால் நிர்வகிக்கப் படும் படகுச் சேவை மூலம் ஒன்றுவிட்ட ஒரு தினத்தில் ஒரு தடவை மட்டும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இலகு போக்குவரத்து வசதி மக்களின் அடிப்படை உரிமைகளில் ஒன்று. அதனை நாம் ஏற்படுத்தத் தவறுவது அப்பிரதேச மக்களுக்குச் செய்யும் பாரபட்சமாகவே கருதப்படல் வேண்டும். சிறந்த போக்குவரத்து வசதி மூலம் சுகாதாரத் தேவை களை மட்டுமல்லாது கல்வித் தேவையையும் இலகுவில் பூர்த்தி செய்யலாம்.

வடபகுதி மக்களுக்கு எவ்வாறு உதவுவது என இந்திய அரசு ஆராய்ந்து வரும் நிலையில், நெடுந்தீவில் இருந்து குறிகாட்டுவானுக்கு தினமும் இரு தடவைகள் பயணிக்கக்கூடிய படகுச் சேவை வசதியை ஏற்படுத்த உதவுமாறு அரச நிர்வாகத்தினர் இந்திய அரசைக் கோரமுடியும். இதன் மூலம் நெடுந்தீவுக்கான போக்குவரத்துக்கு ஒரு நாளின் பகல் பொழுது முழுவதையும் செலவிட வேண்டிய நிலையை மாற்றியமைத்து அதற்கான நேர அளவை ஆறு மணித்தியாலங்களா கக் குறுக்கலாம். அதேபோன்று வடமராட்சி கிழக்குக்கு உரிய தரைவழிப் போக்கு வரத்து வசதியை அதிகரிக்க வேண்டும். இவ்வாறே கிளிநொச்சி, பூநகரி, மாங் குளம், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் இடையிலான போக்குவரத்து வசதிகளையும் கூடியளவுக்கு அதிகரிப்பதால் புவியியல் தூரத்தினால் பின்தள்ளப்பட்ட சுகாதார, கல்வி வசதிகளை மேம்படுத்த முடியும்.

டாக்டர் சி.யமுனாநந்தா

# விழிப்போடு நாமிருப்போம்

கலாசார வாழ்வொன்று
சீரழிந்து போகுதுவாம்....!
சீர்தூக்க யாருமின்றி
சின்னா, பின்னம் ஆகுதுவாம்...!

சினம் கொண்டு உறவுகளே!
துணிந்து விடல் வேண்டுமிங்கே
இல்லையெனில் தலைக்கேறி
கண், மண் தெரியாது அழிக்குமிது...!

கெடு குடி சொற்கேளா- என்ற
குறள் வேண்டாமிங்கே
விழிப்போடு நாமிருந்தால்- எந்த
வினையும் எம்மை அணுகாது.....!

சுற்றுலாப் பயணிகளால்
சூழப்பட்ட எம் ஊர்கள்
சுகம் இழந்து போன பின்னர்,
சுதந்திரம் தான் இங்கெதற்கு....!

சொந்தங்களே கேட்டிடுங்கள்
சொர்க்கமென்று இருப்பதெல்லாம் எம்
கலாசாரம் மட்டும்தான் - அதையும்
யாரும் "கூடி" விளையாட விட்டுவிடலாகாது....!

இறைவா உனை இறஞ்சுகின்றோம்
இன அடையாளங்களோடு வாழ- எம்மை
இன்னல் இன்றி விட்டிடையா- இதுவே
எம் இலட்சியமும் ஆகட்டும்.....!

து.திலக், யாழ்ப்பாணம்.

# சமத்துவம் .... சமதர்மம் .....

முகட்டிலிருந்து கொண்டு ஒரு சுண்டெலி கீழே இருந்த பூனையிடம் கேட்டது:
''பூனையாரே, சமத்துவம்-சமதர்மம் என்றால் என்ன?
அண்ணார்ந்து பார்த்த பூனை எலிக்குச் சொன்னது:
''சுண்டெலி, முஞ்சூறு எலி, பெருச்சாளி எலி என்று வித்தியாசம் பார்க்காமல் எல்லாவற்றையும் ஒரே சமமாகப் பிடித்துச் சாப்பிடுகிறேனே... அதுதான் சமத்துவம், சமதர்மம். இறங்கிவா புரியும்.''
(சமகாலத்தில் பல்துறை நிகழ்வுகளுக்கும் மேற்படி ....
உரையாடல் மிகக் கச்சிதமாகப் பொருந்துகிறதல்லவா!)

மு.க பாத்திமா றிஸ்லியா,
பலாலி ஆசிரியர் கலாசாலை.

# புரிந்துகொள் சகோதரா......!

''வாழ்வின் கசப்பான உணர்வுதனை
உன்னோடு பகிர்கிறேன்....!''
என் சொல்லம்புகளால் அவள்
சுக்குப்பட்ட பொழுது
என், உதடுகள் உச்சரித்த
சொற்களின் வலிமையை
நான் புரிந்து கொண்டேன்.

என்
இதயவறையில் நிரந்தரமாய் வாழ-
அவளுக்கு
குடியுரிமை கொடுப்பதற்காய்
துருப்புச் சீட்டாக சீதனத்தைக்
கேட்ட போது வேதனையை மட்டும்
பரிசாகத் தந்துவிட்டு- என்னை
விட்டுப் பிரிந்து போனாள்.
அப்போது தான்
என் சொற்களினால் ஏற்பட்ட வலியை
நான், உணர்ந்து கொண்டேன்.....!

சீதனம் எனும் கொடிய
சொல்லில் சீரழிந்து போன
என்,
சுகமான வாழ்வொன்று
சிதைந்து போனதனால்
சின்னபின்னமான மனதுடன்
தனிமையெனும் தவிப்புக்குள்ளே
தள்ளப்பட்டு,
சீதனக் கொடுமையால் பிரிந்த
குடும்பங்களின் பட்டியலில்,
என் பெயரும் இடம் பிடித்துக்
கொண்டது...!

சோதரா....!
அதனால் தான் சொல்கிறேன்
சீதனமும் அதனுடன் கூடிய
போதனையும் வேண்டாம்,
குடும்ப வாழ்விற்கு நல்ல
புரிந்துணர்வே போதுமானது,
இதை நன்றே பேணிக் கொள்,
நலம் பெறும் - உன்
இல்லற வாழ்வு....!

து.திலக், யாழ்ப்பாணம்.

# நட்சத்திரங்கள் நடுவே உனக்கொரு வீடு

ஒரு ரோஜாச் செடி வளர்ந்து வருகிறேன்
ஒவ்வொரு நாளும் தண்ணீரும் ஊற்றி வருகிறேன்
இதுவரை ஒரு பூ தந்ததில்லை... ஆனால்
நீ எப்படி
பார்க்கும் போதெல்லாம்
ரோஜாவாகவே இருக்கிறாய்....

* * *

வளையல் கடைக்காரனை திட்டினேன்
அழகான உன் கைகளுக்கு
பொருத்தமான வளையல்களை
வீதியில் வெய்யிலில்
போட்டு விற்கிறான்.

* * *

கனவில் நீ
வந்து போனால்- நான்
காலையில் தலையணை
அருகில் தேடுகிறேன் தவறிவிழுந்திருக்குமென
உன் கொலுசுகளை....

நெடுந்தீவு - முகிலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடிசன வீட்டுவசதி தொகை மதிப்பு - 2011
# கிளம்புவதற்கு காத்திருக்கும் பூதங்கள்

இலங்கையின் 14ஆவது சனத்தொகைக் கணக்கெடுப்பை எதிர்வரும் ஆண்டில் 2011 ஆடி மாதத்தில் நிகழ்த்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நவீன தகவல் சேகரிப்பு உத்திகளான Optical Mark Recogniton (OMR), Optical character Recognition (OCR) மற்றும் Intelligent Character Recognition (ICR) என்பவற்றை உபயோகித்துக் கணக்கெடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. 80,000 அளவிலான கணக்கெடுபாளர்க ள், மாவட்ட நிர்வாக அதிகாரிகள், கிராம சேவகர்கள் எனப் பலர் இதில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

சார்க் அமைப்பு நாடுகளிடையே, முதலாவதாக 1871 இல் சனத்தொகை கணக்கெடுப்பை தொடங்கிய இலங்கை, பத்தாண்டுகளுக்கு ஒரு முறை கணக்கெடுப்பை நடத்தி வந்தது. 1871, 1881, 1891, 1901, 1911, 1921 ஆகிய ஆண்டுகளில் கணக்கெடுப்பு நடைபெற்றது. 1931 இல் கொழும்பு மாவட்டத்தில் மட்டும் கணக்கெடுக்கப்பட்டது. இரண்டாம் உலகப்போர் காரணமாக 1941 இல் நடைபெறவேண்டிய சனத்தொகைக் கணக்கெடுப்பு 1946 இலும், 1951 இல் நடைபெறவேண்டிய கணக்கெடுப்பு கொரியப்போரினால் ஏற்பட்ட காகிதத் தட்டுப்பாட்டால் 1953 இலும் நடைபெற்றது. பின்னர் 1963, 1971, 1981 ஆண்டுகளில் நடைபெற்றது.

அதற்குபின் தீவிரமடைந்த உள்நாட்டுப் பிரச்சினை காரணமாக ஒழுங்கு முறையான கணக்கெடுப்பு மேற்கொள்ளப் படவில்லை. 2001இல் நாடளாவிய ரீதியில் சனத்தொகைக் கணக்கெடுப்பை நடத்துவதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதும், 18 மாவட்டங்களுக்கான கணக்கெடுப்பே முழுமையான அளவில் நிறைவு செய்யப்பட்டது. மேல், மத்திய, வடமத்திய, தென், வடமேல், ஊவா, சப்பிரமுவ மாகாணங்களிலுள்ள மாவட்டங்களிலும் கிழக்கு மாகாணத்திலுள்ள அம்பாறை மாவட்டத்திலுமே முழுமையான கணக்கெடுப்பு நிகழ்த்தப்பட்டது. வடக்கில், வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் பகுதியளவில் கணக்கெடுக்கப்பட்டது. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு என்பன ஆரம்பக் கட்டத்திலோ இறுதிக் கட்டத்திலோ கணக்கெடுப்பில் உள்ளடக்கப்படவில்லை. 2001 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் முடிவுகள் சிலவற்றை இங்கு தரவிரும்புகின்றேன்.

★2001ம் ஆண்டு ஆடி மாதம் 17 ஆம் திகதி, கணக்கெடுப்பு தினஇரவு 18 மாவட்டங்களில் இருந்த மக்கள் எண்ணிக்கை 16,929, 689 பேர்.

★குடித்தொகை அடர்த்தி 342 நபர்கள்/ ஒரு சதுர கிலோமீற்றர். எனினும் 25 மாவட்டங்களையும் கருத்திலெடுக்குமிடத்தில் இவ்வெண்ணிக்கை குறையும் எனக் கருதப்படுகிறது.

★18 மாவட்டங்களுக்கான இனப்பரம்பல் விகிதம்:-

சிங்களவர் - 82 %
இந்தியத்தமிழர் - 5.1%
இலங்கை முஸ்லீம் -7.9%

Population in Sri Lanka by Ethnic Group, 1981

| இனக்குழுக்கள் | Number | Percent |
|---|---|---|
| சிங்களவர் | 10,979,561 | 74.0 |
| இலங்கைத் தமிழர் | 1,886,872 | 12.7 |
| இந்தியத் தமிழர் | 818,658 | 5.5 |
| முஸ்லிம் | 1,046,926 | 7.0 |
| பறங்கியர் | 39,374 | 0.3 |
| மலாயர் | 46,963 | 0.3 |
| ஏனையோர் | 28,398 | 0.2 |
| மொத்தம் | 14,846,750 | |

| இனக்குழுக்கள் | Actual Number | Percent | Estimated | Percent |
|---|---|---|---|---|
| சிங்களவர் | 13,876,245 | 82.0 | 14,011,734 | 74.5 |
| இலங்கைத் தமிழர் | 732,149 | 4.3 | 2,233,624 | 11.9 |
| இந்தியத் தமிழர் | 855,025 | 5.1 | 859,052 | 4.6 |
| முஸ்லிம் | 1,339,331 | 7.9 | 1,561,910 | 8.3 |
| பறங்கியர் | 35,283 | 0.2 | 38,388 | 0.2 |
| மலாயர் | 54,782 | 0.3 | 55,352 | 0.3 |
| ஏனையோர் | 36,842 | 0.2 | 37,197 | 0.2 |
| மொத்தம் | 16,929,689 | 100.0 | 18,797,257 | 100.0 |

Population in Sri Lanka by Ethnic Group, 2001

இலங்கைத்தமிழர் - 4.3%
பறங்கியர் - 0.2%
மலேயர் -0.3%
ஏனையோர் -0.2%

★ அதிகளவு சிங்களவரை கொண்ட மாவட்டமாக அம்பாந்தோட்டை (97.1%)யும் குறைந்தளவு சிங்களவரை கொண்ட மாவட்டமாக அம்பாறை( 39.3%)யும் விளங்குஆகின்றது.

★1981ஆம் ஆண்டு கணக்கெடுப்புத் தரவுகளுடன் ஒப்பிடுமிடத்து, கருத்திலெடுக்கப்பட்ட 18 மாவட்டங்களில் இலங்கை முஸ்லிம்கள் அதிகரிப்பை காட்ட, ஏனைய இனங்கள் யாவும் வீழ்ச்சிப் போக்கையே காட்டுகின்றன.

Number and percentage distribution of population by district and ethnicity

| மாவட்டம் | மொத்தக் குடித்தொகை | சிங்களவர் No. | % | இலங்கைத் தமிழர் No. | % | இந்தியத் தமிழர் No. | % | முஸ்லிம் No. | % | பறங்கியர் No. | % | மலாயர் No. | % | ஏனையோர் No. | % |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இலங்கை(a) | 18,797,257 | 14,011,734 | 74.5 | 2,233,624 | 11.9 | 859,052 | 4.6 | 1,561,910 | 8.3 | 38,388 | 0.2 | 55,352 | 0.3 | 37,197 | 0.2 |
| மொத்தம் 18 மாவட்டங்கள் | 16,929,689 | 13,876,245 | 82.0 | 732,149 | 4.3 | 855,025 | 5.1 | 1,339,331 | 7.9 | 35,283 | 0.2 | 54,782 | 0.3 | 36,874 | 0.2 |
| கொழும்பு | 2,251,274 | 1,724,459 | 76.6 | 247,739 | 11.0 | 24,821 | 1.1 | 202,731 | 9.0 | 15,703 | 0.7 | 21,778 | 1.0 | 14,043 | 0.6 |
| கம்பஹா | 2,063,684 | 1,877,545 | 91.0 | 65,302 | 3.2 | 7,621 | 0.4 | 78,705 | 3.8 | 11,093 | 0.5 | 13,683 | 0.7 | 9,735 | 0.5 |
| களுத்துறை | 1,066,239 | 928,914 | 87.1 | 12,665 | 1.2 | 28,895 | 2.7 | 93,293 | 8.7 | 836 | 0.1 | 973 | 0.1 | 663 | 0.1 |
| கண்டி | 1,279,028 | 947,900 | 74.1 | 52,052 | 4.1 | 103,622 | 8.1 | 168,049 | 13.1 | 2,128 | 0.2 | 2,668 | 0.2 | 2,609 | 0.2 |
| மாத்தளை | 441,328 | 353,579 | 80.1 | 24,320 | 5.5 | 23,493 | 5.3 | 38,462 | 8.7 | 402 | 0.1 | 523 | 0.1 | 549 | 0.1 |
| நுவரேலியா | 703,610 | 282,621 | 40.2 | 46,066 | 6.5 | 355,830 | 50.6 | 16,555 | 2.4 | 632 | 0.1 | 1,059 | 0.2 | 847 | 0.1 |
| காலி | 990,487 | 934,751 | 94.4 | 11,079 | 1.1 | 9,275 | 0.9 | 34,688 | 3.5 | 208 | 0.0 | 178 | 0.0 | 308 | 0.0 |
| மாத்தற | 761,370 | 716,974 | 94.2 | 5,161 | 0.7 | 16,672 | 2.2 | 22,133 | 2.9 | 179 | 0.0 | 87 | 0.0 | 164 | 0.0 |
| அம்பாந்தோட்டை | 526,414 | 510,965 | 97.1 | 1,869 | 0.4 | 424 | 0.1 | 5,646 | 1.1 | 88 | 0.0 | 7,255 | 1.4 | 167 | 0.0 |
| யாழ்ப்பாணம் | | | | | | | | | | | | | | | |
| மன்னார் | | | | | | | | | | | | | | | |
| வவுனியா | 1,040,963 | 49,530 | 4.8 | 975,789 | 93.7 | 2,847 | 0.3 | 12,673 | 1.2 | 50 | 0.0 | 7 | 0.0 | 67 | 0.0 |
| முல்லைத்தீவு | | | | | | | | | | | | | | | |
| கிளிநொச்சி | | | | | | | | | | | | | | | |
| மட்டக்களப்பு | 486,447 | 6,345 | 1.3 | 362,431 | 74.5 | 727 | 0.1 | 114,111 | 23.5 | 2,696 | 0.6 | 21 | 0.0 | 116 | 0.0 |
| அம்பாறை | 592,997 | 236,583 | 39.9 | 109,188 | 18.4 | 715 | 0.1 | 244,620 | 41.3 | 1,184 | 0.2 | 225 | 0.0 | 482 | 0.1 |
| திருகோணமலை | 340,158 | 79,614 | 23.4 | 163,255 | 48.0 | 453 | 0.1 | 95,795 | 28.2 | 359 | 0.1 | 542 | 0.2 | 140 | 0.0 |
| குருநாகல் | 1,460,215 | 1,341,237 | 91.9 | 17,585 | 1.2 | 2,972 | 0.2 | 94,544 | 6.5 | 613 | 0.0 | 2,150 | 0.1 | 1,114 | 0.1 |
| புத்தளம் | 709,677 | 523,116 | 73.7 | 48,072 | 6.8 | 2,227 | 0.3 | 133,134 | 18.8 | 735 | 0.1 | 1,214 | 0.2 | 1,179 | 0.2 |
| அநுராதபுரம் | 745,693 | 676,073 | 90.7 | 5,073 | 0.7 | 443 | 0.1 | 61,989 | 8.3 | 179 | 0.0 | 279 | 0.0 | 1,657 | 0.2 |
| பொலநறுவை | 358,984 | 324,403 | 90.4 | 7,034 | 2.0 | 194 | 0.1 | 27,075 | 7.5 | 62 | 0.0 | 48 | 0.0 | 168 | 0.0 |
| பதுளை | 779,983 | 564,752 | 72.4 | 29,542 | 3.8 | 143,535 | 18.4 | 38,798 | 5.0 | 583 | 0.1 | 1,813 | 0.2 | 960 | 0.1 |
| மொனராகலை | 397,375 | 375,691 | 94.5 | 5,754 | 1.4 | 7,493 | 1.9 | 7,800 | 2.0 | 124 | 0.0 | 127 | 0.0 | 386 | 0.1 |
| இரத்தினபுரி | 1,015,807 | 882,017 | 86.8 | 28,740 | 2.8 | 82,591 | 8.1 | 20,690 | 2.0 | 343 | 0.0 | 444 | 0.0 | 982 | 0.1 |
| கேகாலை | 785,[illegible] | 674,665 | 85.9 | 14,908 | 1.9 | 44,202 | 5.6 | 50,419 | 6.4 | 191 | 0.0 | 278 | 0.0 | 861 | 0.1 |

(a) Estimates
(b) Total for the 18 districts which the Census enumeration was completed.

★சிங்களவர்களின் சதவீதம் பதுளை (3%), மொனராகலை (1.8%), இரத்தினபுரி (1.6%), அம்பாறை(1.5%)ஆகிய மாவட்டங்களில் ஏற்றம் காண மற்றைய மாவட்டங்களில் சரிவைச் சந்தித்திருக்கிறது.

★புத்தளம் மாவட்டத்தில் சிங்களவரின் சதவீதம் 8.5% ஆல் வீழ்ச்சி கண்டிருக்க கிட்டத்தட்ட அதேயளவு பெறுமானத்தால் இலங்கை முஸ்லிம்கள் அதிகரிப்பை காட்டியிருக்கிறார்கள்.

★இலங்கை தமிழர் சனத்தொகை கொழும்பில் 1% ஆலும், இரத்தினபுரியில் 1% ஆலும், புத்தளம், காலி மாவட்டங்களில் 0.3% ஆலும் களுத்துறையில் 0.1% ஆலும் அதிகரிப்பை காட்டியிருக்க மற்றைய மாவட்டங்களில் வீழ்ச்சியையே காண்பிக்கிறது. இவ்வீழ்ச்சி 6.8% ஆல் நுவரெலியாவில் நிகழ்ந்திருக்கிறது.

★கணக்கெடுக்கப்பட்ட 18 மாவட்டங்களில் அதிகளவான இலங்கைத் தமிழர் சதவீதம் அம்பாறையில் 18.7% ஆகவும் கொழும்பில் 11.2% ஆகவும் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

★இந்தியத் தமிழர் சதவீதம் உச்சபட்சமாக நுவரெலியாவிலும் அடுத்ததாக பதுளையிலும் காணப்படுகின்றது.

கிறிஸ்துவின் பிறப்புக் காலத்திலிருந்தே மேற்கொள்ளப்பட்டு வரும் சனத்தொகைக் கணக்கெடுப்பு, வெறுமனே ஆள்களை எண்ணுவதுடன் மட்டுப்படுத்தப்பட்ட ஒரு நிகழ்வு அல்ல. நாட்டு பிரஜைகளின் நலன்கள் சம்பந்தப்பட்ட பல விவரங்கள் இதிலே திரட்டப்படுகின்றன.

இனரீதியான பரம்பல், சமயரீதியான பரம்பல், வயது ரீதியான பரம்பல், மாற்றுவலுவுள்ளோர் விபரங்கள், தங்கி வாழ்வோர் எண்ணிக்கை, எழுத்தறிவு, சுகாதார வசதிகள், பொருளாதார நிலைமைகள் எனப் பலதரப்பட்ட விடயங்கள் சனத்தொகை கணக்கெடுப்பு மூலம் அறியப்படுகின்றது. அரசு அமுல்படுத்தும் கல்வி, சுகாதார மற்றும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களின் விளைவுகள் பற்றி அறிவதற்கு இத்தகைய தரவுகளே ஆதாரம்.

இலங்கையின் வடக்கு கிழக்கு பகுதிகளைப் பொறுத்த வரையில் 2011 இல் நடைபெறவுள்ள சனத்தொகை கணக்கெடுப்பு முக்கியத்துவம் மிக்க ஒன்றாக விளங்கப் போகின்றது. கிட்டத்தட்ட மூப்பது ஆண்டுகளாக அமைதி நிலை அற்றுப்போய், அழிவுகளுக்கு உட்பட்டு விருத்தி இழந்த இப்பிரதேசங்கள் இப்போது மீள மீட்சியுறுகின்றன.எனினும் சந்தித்த இழப்புகள் சொல்லிமாளாதவை. 2001 கணக்கெடுப்பிற்கு உட்படாமையாலும்,நேரடி யுத்த களங்களாக இந்தப் பகுதிகளே விளங்கியமையாலும், ஆழிப்பேரலை அனர்த்தத்திற்கு முகம் கொடுத்தமையாலும் கிடைக்கப் போகின்ற முடிவுகள் பற்றிய எதிர்பார்ப்பை இரட்டிப்பாக்கியுள்ளன. திரட்டப்பட்டு வெளிவரப்போகின்ற முடிவுகள் அதனைத் தொடர்ந்து நடைமுறைக்கு வரப்போகின்ற தீர்மானத்திருத்தங்கள் நிச்சயம் ''அதிர்ச்சி வைத்தியம்'' தரப்போகின்றன!

இலங்கையில் விசேடமாக வடக்கு கிழக்கு முழுவதையும் சேர்த்து நடத்தப்பட்ட கடைசிக் கணக்கெடுப்பு நடைபெற்ற 1981இல் இருந்த நிலைவேறு, 2011 இல் இருக்கப் போகின்ற நிலை வேறு.

கடந்த காலங்களில் இடம்பெற்ற பல சம்பவங்கள், இலங்கையில் குறிப்பாக வடக்கு கிழக்கில் சனத்தொகை மற்றும் இனப்பரம்பல் விடயத்தில் ஆழ்ந்தகன்ற செல்வாக்கைச் செலுத்தி இருந்தன. அவற்றுள் பிரதானமான 3 விடயங்கள்:

1. 1983 ஆடி இனக்கலவரமும் அதனைத் தொடர்ந்த புலம்பெயர்வும்
2. அரசபடைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போர்.
3. 2004 டிசெம்பரில் இடம்பெற்ற ஆழிப்பேரலை அனர்த்தம்

1983இல் இடம்பெற்ற 'கறுப்பு யூலை' என வர்ணிக்கப்படும் இனக்கலவரம், நாட்டின் மொத்தக் குடிப்பரம்பலையே மாற்றிப்போட்டது. பெரும்பாலான ஈழத் தமிழரை உலக நாடுகளுக்குப் புலம்பெயர வைத்த பிரதான சம்பவம் இது! 1983 இற்கு பின்னரான சூழல் மெல்ல மெல்லப் பெருமளவிலான தமிழரைத் தாய் மண்ணை விட்டு கிளம்பச் செய்துவிட்டது. புலம்பெயர்ந்து வேரூன்றியுள்ள நாடுகளில் சாதனை படைக்கும் நாம மவர்களின் செவிகளில் இந்த விடயம் அடிக்கடி சுட்டிக்காட்டப்படுவதுண்டு. இன்று கிட்டதட்ட எல்லா நாடுகளிலுமே தமிழர்கள் புலம்பெயர்ந்திருக்கிறார்கள். பத்திரிகைகளில் வெளிவரும் மரண அறிவித்தல்களில் இடம்பெறும் நாடுகளின் அணிவகுப்பு இதற்கு நல்ல ஆதாரம்.

சட்டபூர்வமாகவும் சட்டவிரோதமாகவும் பயணங்களை மேற்கொண்டு தத்தமது இலக்கு நாடுகளை சென்றடைந்த ஈழத் தமிழர்கள் பலர் தம்மை அங்கே ஸ்திரப்படுத்திக் கொண்டுள்ளனர். ஆஸ்திரேலியாவில் 30,000 அளவிலும் பிரித்தானியாவில் 200,000 அளவிலும் கனடாவில் 300,000 அளவிலும் டென்மார்க்கில் 7000 அளவிலும் பிரான்ஸில் 100,000 அளவிலும் ஜேர்மனியில் 50,000 அளவிலும் இத்தாலியில் 25,000 அளவிலும் வாழும் மொத்த தமிழரில் பெரும்பான்மையானோர் இங்கிருந்து சென்ற நமது பக்கத்து வீட்டுக்காரர்களே!

**இந்தியாவில் இப்போதும் 100,000 பேர் அகதிகளாக இருக்கிறார்கள்.**

ஏன் தற்போது கூட, உள்நாட்டு போர் முடிவடைந்து தமிழர்கள் பயங்கரவாதத்தின் கடைவாய்ப் பற்களி லிருந்து மீட்கப்பட்டு விட் டதாக தெரிவிக்கப்படுகின்ற பொழுதிலும், ஈழத்தமிழர்கள் ஆபத்தான படகுப் பிரயாணங்களை மேற்கொண்டு திரைகடலோடிப் புகலிடம் கோரி வருகின்றனர்.

## ஸைடோ சுவாரி

மூன்று தசாப்த வரலாற்றினை கொண்ட உள்நாட்டு ஆயுத மோதல்களில் உயிரிழப்பை சந்தித்த அரசபடைகள், தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் பொதுமக்கள் தரப்புகளில் அதிகம் இழப்புக்களுக்கு முகம் கொடுத்தது தமிழர் தரப்பே. அதிலும் வான்குண்டு வீச்சுக்கள், எறிகணைத் தாக்குதல்கள், கண்ணிவெடி தாக்குதல்கள், படுகொலைகள் என பல வகையான பலிகொடுப்புகளுக்கு தமிழர்களே அகப்பட்டனர். ஆயிரக்கணக்கான தமிழர் இதுவரை கொல்லப்பட்டு விட்டனர். வீக்கிபீடியா தகவலின் படி, 2006 மார்கழி 31 வரையான காலப்பகுதியில் 20,138 தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்கள் பலியாகியிருக்கிறார்கள். கடந்த ஆண்டு சரத் பொன்சேகா, இறுதிப் போரில் மாத்திரம் 22,000 அளவிலான விடுதலைப்புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர் என்று கூறியிருந்தார். இறுதிப் போரின் போது கிட்டத்தட்ட 7000 மக்கள் பலியெடுக்கப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையின் கரையோரப் பகுதியைத் தாக்கி நாசம் விளைவித்த 2004 ஆழிப் பேரலை அனர்த்தம் மனிதப் பேரவலத்தை ஏற்படுத்தியது. முல்லைத்தீவு, திருகோணமலை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மாவட்ட மக்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டனர்.

இதனை விட போரின் மறைமுக விளைவுகளான பொருளாதாரத்தடை, மருத்துவ வசதிகளின்மை, மந்தபோஷணை, இடப்பெயர்வுகள்அதனால் ஏற்பட்ட மன அழுத்தங்கள் என்பனவும் வடக்கில் இன விருத்திக்கான சூழலை மனநிலை யைப் பெருமளவில் பாதித்திருந்தன.

(தொடர்ச்சி 24ஆம் பக்கம்பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

தோற்றம் *28.07.1944* மறைவு *24.11.2009*



### அமரர் கனகராசா சுந்தரலிங்கம் (மணி- சாரதி)

திதி: ஸப்தமி

அன்பிலும் பண்பிலும் எம்மை அரவணைத்த அப்பாவே!
எம்மைப் பிரிந்து ஓராண்டு ஓடி மறைந்தாலும்
உமது பிரிவு எம்மை விட்டகலாது!
அடுத்த பிறவியிலும் எமக்கு நீங்கள் அப்பாவாக
வரவேண்டும் என்று இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

*கடந்த 24.11.2009 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (12.12.2010) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

**இதே நாளில் மகன் - மதன், தாய்- முத்தம்மா, மாமா- கணபதிப்பிள்ளை, மாமிமார்- பாக்கியம், பூரணம், மச்சாள்- நித்தி ஆகியோரையும் நினைவு கூருகின்றோம்.**

நீர்வேலி தெற்கு,
வீரபத்திரர் கோயிலடி.

*உங்கள் பிரிவுத் துயரில் வாடும்:*
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
அண்ணா, மச்சாள், தம்பி, பேரப்பிள்ளைகள்.

*(106826)*

### திருத்தப்படாத வீதியால் மக்கள் நெருக்கடியில்

கொடிகாமம், டிசெ.12

வரணி, குடத்தனை வீதியின் இதுவரை பலகாலமாகத் திருத்தப்படாத பகுதிகள் மழை வெள்ளம் காரணமாக பயணிகள் பயணிக்க முடியாத வகையில் குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது.

இந்த வீதியால் வெள்ளம் தேங்கியுள்ளதால், கனரக வாகனங்கள் பயணிக்கும் போது மிதிவண்டி, உந்துருளி ஆகியவற்றில் பயணிக்கும் பயணிகள் உடலின் மீது சேறடிப்பட்ட நிலையில் பயணிக்கின்றனர்.

இந்த வீதியைப் புனரமைக்கும்படி பல தடவைகள் சுட்டிக் காட்டிய போதும் சம்பந்தப்பட்ட திணைக்களம் பாதையைப் புனரமைப்பதற்கு இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

(204-122)


## மாணவர்களே..! பெற்றோர்களே..!

### A/L இற்குப்பின் அடுத்தது என்ன....?

அனுமதி இலவசம்
தொடர்புகளுக்கு:-
0214922800
0771944886

## மாபெரும் தொழில்சார் வழிகாட்டல் கருத்தரங்கு

கருத்துரை வழங்குவோர்:
நாட்டின் முன்னணி கல்வி, தொழில்சார் வல்லுனர்கள்

இடம்:
"யாழ், மத்தியகல்லூரி, பிரதான மண்டபம்."

காலம்:
20.12.2010 (திங்கள்) - பௌர்ணமி தினத்தன்று

நேரம்:
காலை 9.00 - 12.30 மணிவரை

அனுசரணை:

O/L , A/L மாணவர்களுக்கு
மாலை 3.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை

மிகக்குறைந்த அனுமதிக் கட்டணம் (Admission Fees) முதலாம் வருடத்திற்கு மட்டுமே

## சர்வதேச தரம் வாய்ந்த BBS பாலர் பாடசாலையின் அனைத்து வளாகங்களிலும் January 2011ற்கான புதிய அனுமதிகள்

- 10 வருடமாக சர்வதேச தரத்திலான BBS இன் ஆங்கிலக் கற்கை நெறிகளால் யாழ்குடாநாட்டில் ஆயிரக்கணக்கான சிறார்கள் பயன் பெற்றுள்ளார்கள்.
- இது வரை BBS இன் வளாகங்களில் கல்வி கற்ற ஆயிரக்கணக்கான சிறுவர்களில் 95 வீதமானோர் யாழ்குடாநாட்டின் அதி சிறந்த பாடசாலைகளில் கற்பதற்கு அனுமதி பெற்றிருப்பதுடன் 5ஆம் ஆண்டு புலமை பரிசிலிலும் சித்தியடைந்துள்ளார்கள்.
- யுத்த காலத்திலும் யாழ் சிறார்களுக்கென இயங்கிய ஒரே ஆங்கில மொழிமூல தனியார் பாடசாலை.
- அன்றிலிருந்து இன்று வரை அனைவரும் செலுத்தக் கூடிய ஒரே கட்டணம்.
- உங்கள் வசதி கருதி யாழ்குடாநாட்டின் பல்வேறு இடங்களிலும் சர்வதேச தரத்திலான வளாகங்கள்.

**Dr. Maria Montessori & Canadian Early Learning Method ஆங்கில மொழிமூல பாடசாலை செயற்பாடுகள்.**

### பாலர் பிரிவுகள்

**Play Group ( 2+ சிறார்களுக்கு)**
- Sensorial Activities
- விளையாட்டுகளுடன் கூடிய அதிநவீன கற்கை நெறிகள்.
- Song, Poems, Nursery Rhymes, Drama & Dialogue

**Montessori ( 3+ சிறார்களுக்கு)**
- மொழி அறிமுகம் – ஆங்கிலம் (Speech Skills) – தமிழ்
- எழுத்து அறிமுகம் – ஆங்கிலம் (Writing Skills) – தமிழ்
- எண் பயிற்சிகள் (Arithmetical Operations)
- Sensorial Activities
- Song, Poem, Drama, Dialogue

**Pre School ( 4+ சிறார்களுக்கு)**
- எண், எழுத்து கருதுகோள்
- ஆங்கில பேச்சுத்திறன் செயற்பாடுகள் Audio, Visual
- Sensorial Activities
- Song, Poem, Drama, Dialogue
- அடுத்த கல்வியாண்டுக்கான முழுத் தகுதி நிலை

### பாட விதானம்

- பாடசாலை ஆரம்பம் காலை 7.30
- பாடசாலை முடிவு மதியம் 12.30
- வாரத்தின் 25 மணித்தியாலங்களுக்கான கல்விச் செயற்பாடுகள்
  - Language Skils- English - 5 Hrs
  - Language Skils- Tamil - 4 Hrs
  - Maths - 4 Hrs
  - Sensorial Activities - 2 Hrs
- Song, Poem, Drama, Dialog - 2 Hrs
- Art and Craft - 2 Hrs
- Play Activities - 3 Hrs
- Baratha Natyam - 1.5 Hrs
- Computing - 1.5 Hrs

**எம் அனைத்து சிறார்களும் பங்குபெற்றும் கல்விசார் நிகழ்வுகள்**

- English Day & Concert - ஆங்கில தின கலைவிழா
- Sports Day- விளையாட்டு விழா
- Bharatham Festival- பரத நாட்டிய விழா
- Art & Craft Exhibition- சித்திர கைவேலைக் கண்காட்சி
- Muthamilzh Vizhla- முத்தமிழ் விழா
- Pre-School Graduation and Carol Ceremony

### BBS இன் 10 வளாகங்கள்

| | |
|---|---|
| நல்லூர்: | 140, கோயில் வீதி நல்லூர். |
| கோப்பாய்: | பருத்தித்துறை வீதி, கோப்பாய் மத்தி. |
| நீர்வேலி: | 1ம் கட்டை, இராச வீதி, நீர்வேலி. |
| சாவகச்சேரி: | சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை அருகாமை. |
| மானிப்பாய்-1: | 252, ஆலடி சந்தி, யாழ் வீதி, மானிப்பாய். |
| மானிப்பாய்-2: | சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய். |
| சுன்னாகம்: | Lakshmi(புதிய நீதிமன்ற அருகாமை) கே.கே.எஸ் வீதி, மல்லாகம். |
| புலோலி: | ஸ்ரீ பத்மநாதன் இல்லம், மந்திகை. |
| அச்சுவேலி: | அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை அருகாமை. |
| சங்கானை : | நிகர வைரவர் கோவிலடி, AGA Office அருகாமை |

British Business School
Where Students Come First

வெளிநாடுகளில் தேர்ச்சி பெற்ற கல்வியாளர்களால் சர்வதேச தரத்திற்கமைய நடாத்தப்படும் கல்வி நிலையம்.

## BRITISH BUSINESS SCHOOL

140, கோயில் வீதி, நல்லூர். தொலைபேசி: 021 222 [illegible]296, 077 362 7055, 077 408 3656, 077 664 6357


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவணப் பெட்டகம் 21

# தமது யாழ்ப்பாண அனுபவங்களை ஆவணமாக்கி வைத்த லியனார்ட் வூல்ப்

குறிப்பு :
*யாழ்ப்பாணத்தில் கடமையாற்றிய வேளையில் தமது சிவில் நிர்வாகக் கடமைகளின்போது தாம் பெற்ற அனுபவங்கள் குறித்து 'லியனார்ட் வூலப்' எழுதிய நூலில் அவர் விவரித்துள்ள குறிப்புக்கள் இவ்வாரமும் தொடர்கின்றன.*

யாழ்ப்பாணத்தில் வேறொரு அமைதியான குதிரைப்பாகனை நான் வேலைக்கு அமர்த்திக்கொண்டேன். 1911ஆம் ஆண்டு நான் இலங்கையை விட்டு வெளியேறும் வரை அந்தக் குதிரைப்பாகன் என்னுடன் வேலை செய்தான். 1907ஆம் ஆண்டு என நினைக்கிறேன், அம்பாந்தோட்டைக்குச் சென்று கொண்டிருக்கும்போது எனது குதிரைப்பாகன் "தனது மனைவி செத்துக்கொண்டிருப்பதாகவும் தமிழ் மருத்துவர்கள் வழங்கிய மருந்துகள் அவளைக் குணமாக்கவில்லை எனவும் என்னை வந்து பார்த்து ஏதாவது செய்ய முடியுமா?" என்றும் கேட்டான். நான் எனது மிதிவண்டியை எடுத்துக் கொண்டு சென்று அவளது உடல் வெப்பநிலையைப் பரிசோதித்தேன். அவள் மலேரியாவால் பீடிக்கப்பட்டிருந்தாள். நான் அவளுக்குக் குளிசைகள் கொடுத்துவிட்டு போர்வையால் போர்த்திவிட்டேன். சிறிது நாள்களில் அவள் குணமாகிவிட்டாள். எனக்குச் சோறு கறி மிகவும் பிடிக்கும் என்று அவளுக்குத் தெரிந்திருந்தது. ஆங்கிலேயர்களுக்காகச் சமைக்கப்படும் சோறு கறி அவ்வளவு சுவையாக இருக்காது தான். எனக்கு சோறு கறி சமைத்துத் தரப்போவதாக அவள் வெட்கப்பட்டுக் கொண்டு கூறினாள். அன்று முதல் எனது குதிரைப்பாகனும், மனைவியும்தான் எனக்குச் சோறு கறி சமைத்துத் தந்தார்கள். அவர்கள் சமைத்துத் தந்த சோறு கறி அருமையாக இருந்தது.

செப்ரெம்பர் மாதம் நான் மறுபடியும் யாழ்ப்பாணத்தில் கடமையைப் பொறுப்பேற்றேன். பிறையின் தம்பதிகளின் போக்கில் சற்று மாற்றம் தெரிந்தது. நான் பிறையினிடம் காணப்பட்ட மாறுதல் பற்றி ஆளுநருக்குக் கடிதம் எழுதினேன்.

### மார்ச் 24/ 1907

நான் சுகவீனமுற்றிருந்தேன். எனது நிலைமையைப் பற்றி நானே யோசித்துப் பார்த்தேன். தொடர்ச்சியாக இடம்பெற்ற எதிர்பாராத சம்பவங்களால் மன்னார் மாவட்ட உதவி அரச அதிபர் பதவி வெற்றிடமாகவேயிருந்தது. என்னை மன்னாருக்கு அனுப்பும்படி அரசு, அரச அதிபருக்கு வயர்லெஸ் மூலம் அறிவித்தது.

நான் ஏற்கனவே ஒரு மாதத்தைக் கழித்து விட்டு வந்த இடத்திற்கு அரசு என்னை மீண்டும் போகச் சொன்னது. அங்கே வெள்ளைக்காரர்கள் யாருமேயில்லை. அத்துடன் மன்னார் மாவட்டத்தின் பெரும்பகுதி காடு. ஒருவர் ஒரு பிரதேசத்தைப் பொறுப்பெடுப்பதாயிருந்தால் 2¼ வருடங்கள் சேவையாற்றியிருக்க வேண்டும் என்பது நடைமுறை.

## யாழ்ப்பாணக் கச்சேரியின் வரலாற்றை அறிந்து கொள்வோம்

நான் மன்னாருக்குப் போக விரும்பினேன். அரச அதிபருக்கு என்னை அனுப்புவதற்கு விருப்பமில்லை. காரணம் அவருடைய வேலைகளில் பெரும்பாலானவற்றை நானே செய்துவந்தேன். இளம் உத்தியோகத்தனான நான் மேலும் விடயங்களைக் கற்று அலுவலக உதவியாளராக வரவேண்டும் என்பது அரச அதிபரின் விருப்பம். என்னுடைய மேலதிகாரி 'லீக்கை' மன்னாருக்கு அனுப்புவதே சிறந்தது என அரச அதிபர் வயர்லெஸ் மூலம் அரசிற்கு அறிவித்தார். நீங்கள் விரும்பியபடி செய்யுங்கள் என அரசு, அரச அதிபருக்குத் தந்தி மூலம் அறிவித்தது.

கண்டியில அரசாங்க அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த லூயிஸ் என்னைக் கண்டிக்கு அலுவலக உதவியாளராக வரமுடியுமா? என்று கேட்டார். யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறுவதையிட்டு நான் மகிழ்ச்சியடைந்தேன். இதனை வூல்ப் ஆங்கிலத்தில் பின்வருமாறு எழுதியுள்ளார்.(I was glad to leave Jaffna. பக். 127) யாழ்ப்பாணத்தைப் பற்றிக் கூறுவதற்கு வேறு எதுவுமில்லை.

திரு.லியனார்ட் வூல்பின் குறிப்புகள் இத்துடன் நிறைவுற்றன. திரு.வூல்பின் குறிப்புகளை பின்னிணைப்பாக இணைத்துக் கொள்வோமா? என்றும் யோசித்தேன்.

**தாண்டவன்**

குறிப்பிட்ட காலப்பகுதியில் அதைச் சேர்த்துக் கொள்வதே பொருத்தமானது எனத் தோன்றியது. அதன் காரணமாக இடைச்செருகலாக வூல்பின் குறிப்புகள் இடம்பெற்றன. இனிக் கச்சேரி வரலாறு மீண்டும் தொடரும். (தொடரும்)

# இயற்கை கிருமிநாசினியாகவும், நோய் தீர்க்கும் மூலிகையாகவும் பயன்படும் நொச்சியும், அகிலும்

## நலம்தரும் தெய்வீக மூலிகைகள்

### நொச்சி

வேறு பெயர்கள் - சிந்துவாரம், நிர்க்குண்டி.
தாவரவியற் பெயர் - வைற்றெக்ஸ் நெகண்டோ (Vitex Negundo)
குடும்பம் - வேர்பெனேசியே Verbenaceae
சிங்களப் பெயர் - நிக்க
சமஸ்கிருதப் பெயர் - நிர்குண்டி
ஆங்கிலப் பெயர் - Five Leaved Chast Tree

சிவனுக்குரிய பஞ்ச வில்வங்களில் ஒன்றாக நொச்சியும் விளங்குகிறது. நொச்சியில் பொன் - நொச்சி (மஞ்சள் பூ), கருநொச்சி, மலைநொச்சி, நீர் நொச்சி என்ற வகைகளுண்டு. இதில் நீர் நொச்சி அபரக் கிரியைகளில் பயன்படுத்தப்படுகிறது. கருநொச்சியே மருத்துவத்தில் அதிகம் பயன்படுகிறது.



வேப்பிலை மற்றும் கருநொச்சியிலைகளுக்குப் பூச்சிகளைத் தடுக்கும் தன்மையுள்ளதால் நெல் போன்ற தானியங்களைச் சேகரித்து வைக்கும் போது அவற்றுடன் நொச்சி இலை, வேப்பிலைகளையும் போட்டு வைக்கும் வழக்கம் இன்றுவரை காணப்படுகிறது.

அதுமட்டுமன்றிப் பயிர்களைத் தாக்கக் கூடிய பூச்சிகள், களைகள் முதலியவற்றை அழிக்கும் சக்தி நொச்சியிலைச் சாற்றுக்கு உள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அது மட்டுமன்றி சில பக்ரீரியாக் கிருமிகளையும் நொச்சிச் சாறு கட்டுப் படுத்துவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. நொச்சியின் இத்தகைய பயன்களை அறிந்திருந்ததாலேயே முற்காலத்தில் வயல், தோட்ட எல்லைகளில் நொச்சியை வேலியாக வளர்த்திருக்கிறார்கள்.

நொச்சி சிறுமர வகுப்புக்குரியது. இலைகள் கூட்டிலைகளாகக் காணப்படும் இலைகளைக் கொண்டு மூன்றிலை நொச்சி, ஐந்திலை நொச்சி, எழிலை நொச்சி என்று அடையாளப்படுத்துவர். ஒவ்வொரு சிற்றிலையும் ஈட்டி வடிவமாக இருக்கும். பூக்கள் நீல நிறம். பூங்கொத்தில் அடர்த்தியாகக் காணப்படும். ஆடி-புரட்டாதி மாதங்களில் பூக்கும். காய்கள் உண்டாவது அரிது.

இதன் இலை, பூ, வேர், பட்டை என்பன மருத்துவத்திற்குப் பயன்படுகின்றன.

நொச்சியிலையைத் தனித்தாவது, பாவட்டையிலை, ஆமணக்கிலை என்பவற்றுடன் சேர்த்தாவது அவித்து அந்த நீரினால் குழந்தை பெற்றவர்களைக் குளிக்கவார்க்கும் வழக்கம் இன்றும் காணப்படுகிறது. இவ்விதம் குளிப்பாட்டுவதால் குழந்தை பெற்றவளின் உடல் வலி குறைவதுடன், தாய்ப்பாலும் அதிகம் சுரக்க ஏதுவாகும்.

நொச்சியிலையையும் சிறிது வேர்க்கொம்பையும் சேர்த்தரைத்து நெற்றியில் பற்றிட தலைவலி தீரும்.

நொச்சியிலையை உலர்த்தி தலையணை போல பரப்பி, அதில் தலைவைத்துப் படுத்து வந்தால் பீனிசம், மண்டைக்குத்து, தலைவலி என்பன மாறும். கழுத்துப்பிடிப்பு, பிடரிவலி என்பனவும் தீரும்.

நொச்சியிலையை வாட்டி வாதவீக்கமுள்ள இடங்களுக்கு ஒத்தடம் கொடுக்க, அல்லது அவ்வீக்கத்தின் மேல் கட்டிவர வீக்கம் வற்றும், வலியும் குறையும் மூட்டுவாத நோய்களுக்கும் இது மிகவும் நன்மை பயக்கும்.

நொச்சியிலை-2, மிளகு-4, கராம்பு-1, உள்ளிப்பூடு-1 பல், என்பவற்றைச் சேர்த்து வாயிலிட்டு கொஞ்சம் கொஞ்சமாக மென்றுதின்று வந்தால் 'இரைப்பிருமல்' எனப்படும் தொய்வுநோய் மாறும்.

நொச்சிப்பூவை உலர்த்திப் பொடி செய்து சிறிது கற்கண்டு, தேன் சேர்த்து இரத்தவாந்தி, இரத்தபேதிக்குக் கொடுக்க மாறும்.

நொச்சி வேர்ப்பட்டையை உலர்த்தி பொடி செய்து காலை, மாலை 500மி.கி அளவில் தேனில் குழைத்துக் கொடுக்க வாதப்பிடிப்பு, வயிற்றுவலி, நீர்க்கோவை என்பன மாறும்.

### அகில்

வேறுபெயர் - அகரு, காகதுண்டம், பூழில்
தாவரவியற் பெயர் - அக்குயிலேரியா (Aquilaria Agallocha)
குடும்பம் - தைமெலியேசியே (Thymelacaceae)
சிங்களப் பெயர் - அகில், அகரு
சமஸ்கிருதப் பெயர் - அகரு
ஆங்கிலப் பெயர் - Aloe wood

இது பெருமர வகுப்புக்குரியது. கூட்டிலைகள், சிற்றிலைகள் சமமற்றுக் காணப்படும். இதன் கட்டை, பிசின் என்பன நறுமணமுடையதால் தூபமிடப் பயன்படும்.

அகிற் கட்டையைப் பொடிசெய்து, தணலில் தூவ வெளிவரும் புகையை முகர்ந்தால் மூக்கடைப்பு, மயக்கம், உடல் அயர்ச்சி என்பன நீங்கும்.

அகிற் கட்டையைச் சந்தனக்கட்டையைப் போன்று நீர் விட்டரைத்து உடம்பிற் பூசினால் உடற்சோர்வு நீங்கி உற்சாகம் ஏற்படும்.

அகிற்கட்டை கொண்டு தயாரிக்கப்படும் தைலத்தைத் தலைக்கு வைத்துவர மண்டைப்பீநிசம், தலைவலி என்பன குணமாகும்.



Dr.சே.சிவசண்முகராஜா M.D (S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 141

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | ■ | 5 | 6 |
| 7 | | ■ | 8 | | 9 | | |
| | ■ | 10 | | ■ | 11 | | ■ |
| 12 | | | ■ | 13 | | ■ | 14 |
| 15 | | | 16 | | ■ | 17 | |
| | ■ | 18 | | | 19 | | |
| ■ | 20 | | ■ | 21 | | ■ | |
| 22 | | ■ | 23 | | | | |

### இடமிருந்து வலம்

1. காப்பியக் கதாப்பாத்திரம்/ மேனகைக்கும் விசுவாமித்திரருக்கும் பிறந்தவள்.
5.பாய்.
7.ஆடு,குதிரை,மான் போன்றவற்றின் பெண் குட்டி/ தடு.
8.கலையை ரசிப்பவள்.
10. மறி.
11. பழம்.
12. மிகச்சிறிய/நுண்ணிய துணிக்கை.
13. பயிருக்கு இடையில் வளரும் வேண்டாத தாவரம்.
15.குறளைத் தந்தவர்.
17.பெருக்கல் குறி.
18.வாசிக்கும் இடம்.
20.ஒரு தமிழ் மாதம்.
21. இசை
22. சத்தம்
23. தாமரை.

### மேலிருந்து கீழ்

1.சகலருக்கும் சமமாக அனைத்தும் கிடைப்பது.
2.அடையாளம்.
3.உலோகத்தை மெல்லியதாகத் தட்டையாக வளைத்தால் வருவது
4.மஜ்னு மனம் கவர்ந்தவள்.
5.அடுப்பங்கரையை இப்படி அழைப்பர்.
6.அதிர்ந்து போய் நில்.
9.குழப்பம்/கலாட்டா
10. கழிவு
13. கருத்தரித்த நிலை.
14.தொடக்கம்.
16.(மதுசாரம்,சாராயம் என்பவற்றை) பிரித்தெடு
17. இணங்க
19. ஒருவரின் குண இயல்பு
20. அவா/விருப்பம்.

அனுப்புபவர் பெயர்:..............................................

விலாசம்:..............................................

..............................................

கையொப்பம்:..............................................

### போட்டி விதிகள்

*1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.*
*2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்*
*3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.*
*4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவான தாகும்.*
*5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.*
*6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,*

**சொற்சிலம்பம் போட்டி இல. 141**

*நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,*
*இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*
*என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், 22.12.2010 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.*
*7. சொற்சிலம்பம் போட்டி இல.141இல் வெற்றி பெறுவோர் களது விவரம் 26.12.2010 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.*

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத்தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம்தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 139 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1)உபவாசம். (5)சுப. (7)பட்டம். (9)காடு. (10)பகலவன். (12)சந்தம். (13)மொத்தம். (14) உன். (15)அந்தம். (16)மிடறு. (17)சதம். (18)பதம். (19)தின். (20)கரும்பு

**மேலிருந்து கீழ்**

(1)உபகாரி. (2) பட்டு. (3) வாட. (4)சம்பந்தம். (6)பதின்மூன்று. (8) கோலம். (11)கதம். (12)சத்தம். (13)மொந்தன். (14)உடம்பு. (15)அசதி. (16)மிதம். (18)பரு.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 139 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு** — **கு.பிரியதுக்ஷி**
இல.129,தம்பசிட்டி வீதி, பருத்தித்துறை.

**2 ஆம் பரிசு** — **ஆ.விஜிதா,**
ஆலங்கேணி,பூநகரி,கிளிநொச்சி

**3 ஆம் பரிசு** — **தி.நிசாந்தன்,**
தரம்-8 யாழ்.மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.

**4 ஆம் பரிசு** — **யூ.பீற்றர் கொலாஸ்கோ,**
12 ஆம் வட்டாரம், புங்குடுதீவு

**5 ஆம் பரிசு** — **டிலானி மோகனதாஸ்,**
யா/நாவற்குழி மகா வித்தியாலயம், நாவற்குழி.

### பாராட்டுப் பெறுவோர்

(1) **எஸ்.அபிராமி,**
மே/பா கே.சுந்தரகாந்தன் உரும்பிராய் வடக்கு,உரும்பிராய்.

(2) **தே.பவித்ரா,**
இல.620/13, தர்மபுரம், கிளிநொச்சி.

(3) **க.ஜெயாநிதி,**
பாடசாலை வீதி,கட்டுடை, மானிப்பாய்.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்.மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோருக்கான பணப் பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால்மூலம் அனுப்பி வைக்கப்படும்.

# ஆத்ம சாந்தி

*(13 பக்கத் தொடர்ச்சி)*

தளதளத்த குரல் அந்த அம்மாவின் இயலாமையைச் சுட்டிக்காட்டியது. மளமளவென சாந்தி ஒரு துவாயை எடுத்து நீரில் நனைத்தாள். ஜெனிற்றாவின் சட்டையைக் கழற்றி விட்டு ஈரத்துணியினால் மேனியெங்கும் துடைத்தாள். பின்னர் மேசையில் இருந்த ஓடிக்கலோனை எடுத்து தனது கைக்குட்டையில் நனைத்து நெற்றியில் போட்டாள். சிறிது முனகலுடன் ஜெனிற்றா கண் விழித்தாள்.

சாந்திக்கு போன உயிர் மீண்டு வந்தது. ''ஜெனி! ஜெனி!!'' என மெதுவாக அழைத்தாள்.

''டீச்சர்! நான் உங்களை அம்மா எண்டு தான் கூப்பிடுவன். எனக்கு.... எனக்கு அம்மா வேணும். அ...ம்....மா! ....அ...ம்....மா!''

ஈனஸ்வரத்தில் முனகுகிறாள் ஜெனி, சாந்தியின் உள்ளம் ஒரு தரம் சிலிர்த்தது. அப்படியே அவளை அணைத்து ஆரத் தழுவிக் கொண்டாள். ''ஜெனி! ஜெனிம்மா!!''

வாசலில் நுழையும் போதே மகளை அழைத்தவாறு உள்ளே வந்தான், ஜோன்சன் அங்கு வேற்று முகத்தைக் கண்டதும் சற்றுப் பின் வாங்கினான்.

சாந்தி எழுந்து நின்று கொண்டாள்.

''நான் ....நான்.... இவாவுடைய கிளாஸ் டீச்சர்''

தயங்கியவாறே கூறினாள்.

''ஓ .... ஜெனி அடிக்கடி உங்களைப் பற்றி சொல்லுறவள்''

''பிள்ளைக்கு மருந்து எடுக்கேல்லையோ?''

''நேற்றுப் பின்னேரம் டொக்டரிட்டைக் கூட்டிக் கொண்டு போனனான். வைரஸ் காய்ச்சல் எண்டு சொல்லி மருந்து தந்தவர். இப்பவும் மருந்து குடுத்திட்டுத்தான் சோடாவும் பிஸ்கட்டும் வாங்கப் போனனான்''

''இஞ்சை தாங்கோ நான் சோடாவை வாத்துக் குடுக்கிறன்''

அடம் பிடிக்காமல் ஜெனிற்றா சோடாவை வாங்கிக் குடித்தது அவனுக்கு ஆச்சரியத்தைத் தந்தது. தாயைப் பிரிந்த நாளிலிருந்து அவள் எதற்கெடுத்தாலும் அழுவதும் ஆர்ப்பாட்டம் செய்வதும் வழக்கமாகிவிட்டது. இப்போது அவனது அடிவயிற்றிலிருந்து நிம்மதியான ஒரு பெருமூச்சு வெளியேறிக் காற்றுடன் சங்கமித்தது. அவனது பிள்ளைக்கு அன்புகாட்ட இந்த உலகத்தில் தன்னை விட ஒரு ஜீவன் இருக்கிறது என்ற நினைப்பு அவனை முற்றாக ஆட்கொண்டிருந்த விரக்தி நிலையில் விரிசலை ஏற்படுத்தியது.

இப்படியாக ஆரம்பித்த அவர்களது உறவு நாளடைவில் வளர்ந்து வளம் பெற்றது. காந்தத்தினால் ஈர்க்கப்படும் இரும்பு போல அந்த இருவரும் ஜெனியைச் சுற்றி விலகாமலிருந்தனர். சாந்தியின் நிலையில் ஏற்பட்ட மாற்றத்தைக் கண்டு தாய் நிம்மதியடைந்தாள்.

அன்றும் வழமைபோல் சாந்தி பாடசாலை வாசலில் ஜெனியின் வரவுக்காகக் காத்து நின்றாள். 'கிறீச்' என பிறேக் போட்டு அவள் முன் வந்து நின்றது ஜோன்சனின் மோட்டார் சைக்கிள்.

''ஜெனி! ஏன் லேற்?''

சாந்தி குழந்தையிடம் விசாரித்தாள்.

''அது வந்து.... ஜெனி இரவு சரியாய் நித்திரை கொள்ளேல்ல அம்மாவை கனவிலை கண்டிட்டு... ஒரே அழுகை. என்னால சமாளிக்க ஏலாமப் போச்சு..ம்..!''

ஜோன்சன் தனது கன்னங்களில் கோடிட்டு வழிந்த நீரைச் சுண்டிவிட்டு சைக்கிளை முறுக்கிக் கொண்டு போனான். அவன் போய் மறையும் வரை பச்சாத்தாபத்துடன் பார்த்திருந்தாள் சாந்தி. அவளது மனத்தில் அவன்மீது இனம் புரியாத ஆதங்கம் ஏற்பட்டது. ஜெனியை அணைத்தவாறு வகுப்பறைக்கு அழைத்துப் போனாள். அவளைக் கடந்து சக ஆசிரியர் ஒருவர் போய்க் கொண்டிருந்தார்.

''சாய்! நல்லாத்தான் உலகம் கெட்டுப் போச்சுது. புருசன் இல்லாதவ, பிள்ளையும் செத்து முழுசாய் இன்னும் ரெண்டு மாசம் ஆக இல்லை. இப்பிடி.... றோட்டில வந்து நிண்டு..... இன்னொருத்தனோட கதைக்கிறதெண்டா....சீ! ...... வெட்கங் கெட்ட ஜென்மங்கள்...''

சாந்திக்குப் பகீரென்றது. ஓராயிரம் ஊசிகள் கொண்டு அவளது மேனியைத் துளைப்பதாக ஒரு பிரமை. நிதானமிழந்து தவித்தவள் ஒருவாறு பாடசாலை நேரம் முடியும் வரை பொறுமையைக் கடைப்பிடித்து வீடு திரும்பினாள்.

'பொத்'தெனப் படுக்கையில் விழுந்தவள் பொங்கி வந்த அழுகைக்கு அணையிடாது கண்ணீர் ஓயும் வரை பாய விட்டாள். ஓய்ந்ததும் நிதானமாகச் சிந்திக்கத் தொடங்கினாள்.

திருமணமாகிச் சில காலங்களே அவளுடன் வாழ்க்கை நடத்திய அவளது கணவன் நரேன் ஒரு முற்போக்குவாதி. உண்மை, நேர்மை, அஞ்சாமை எனும் இயல்புகள் கொண்ட ஊடகவியளாளனான அவன் உண்மையான ஒரு செய்தியைச் சேகரிக்க வேண்டி குண்டுவீச்சு நடந்த இடத்துக்குப் போயிருந்த போது 'ஷெல்'லடி பட்டு இறந்து போனான். புழுவாகத் துடித்த சாந்தியை இந்த ஊர் இராசியில்லாதவள் என்று தூற்றியது. வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதற்கென்றே சிலர் இங்கு இருக்கிறார்கள். அது அவர்களது பொழுதுபோக்கு, காலம்தான் அவர்களுக்குப் பதில் சொல்ல வேண்டும்.

கணவன் இறந்த போது மூன்று மாதக் கர்ப்பிணியாய் இருந்த அவள் அழகான பெண் குழந்தையொன்றைப் பெற்றெடுத்தபோது .... மீண்டும் வாழ்க்கையில் ஒரு பற்று ஏற்பட்டது. கண்ணும் கருத்துமாகத் தன் ஆருயிர் மகள் கவிதாவை வளர்த்து வந்தாள். காலனுக்கு அது பொறுக்கவில்லை. பாடசாலையிலிருந்து வந்து கொண்டிருந்தவளை வாகனம் மோதி அவளது உயிரைக் குடித்து விட்டு ஓடி ஒளிந்து கொண்டது. கதி கலங்கிப்போன சாந்தி விதியை நொந்து நடைப்பிணமானாள்.

இப்போது... புதிய உறவாக ஜெனி கிடைத்திருக்கிறாள். தாயை இழந்து பரிதவிக்கும் சேய்க்கும் மகளின் இழப்பினால் மறுகி நிற்கும் தாய்க்கும் கிடைக்கும் ஆத்மசாந்தியைக் கூட கொச்சைப்படுத்த நினைக்கும் இந்த உலகத்தின் மீது அவளுக்கு வெறுப்பு ஏற்பட்டது. ஆனால் மறுகணமே அதை ஒரு சவாலாக ஏற்று வாழ்ந்து காட்ட வேண்டுமென்ற ஆக்ரோஷமும் ஏற்பட்டது. 'ஒன்றே குலம். ஒருவனே தெய்வம்'

ஒரு முடிவுக்கு வந்தாள் சாந்தி.

திங்கட்கிழமை காலை ஜோன்சனது மோட்டார் சைக்கிள் பாடசாலை வாசலில் வந்து நின்றது. அதிலிருந்து இறங்கிய சாந்தியும் ஜெனியும், கையசைத்து ஜோன்சனிடமிருந்து விடை பெற்றுப் பாடசாலை வளவினுள் நுழைந்தனர். இமைக்கமறந்த விழிகள் பல அவர்களைப் பார்த்து வியந்து நின்றன. எனினும் வாய்திறந்து பேச அங்கு வார்த்தைகள் ஏதும் கிடைக்கவில்லை. *(முற்றும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மியான்மர் குறித்த இந்திய அணுகுமுறை இலங்கை விடயத்துக்கு ஒரு முன்னுதாரணம்

காரை ஆனந்தன்

மியான்மரில் மூன்று தசாப்தங்களாக நடைபெற்ற இராணுவ ஆட்சியின் பலாபலன்களை நடந்து முடிந்த தேர்தல் காட்டி நிற்கின்றது. இந்நாட்டின் தொடர்ச்சியான சர்வாதிகார ஆட்சி முறைகளுக்குச் சர்வதேசம் தொடர்ந்தும் கையசைத்தது ஏன் என்பதன் உண்மைப் பொருளை அதன் அண்டை நாடான இந்தியா அறிந்திருக்கும்.



### இந்திய - மியான்மர் உறவுகள்

1935 வரை பிரிட்டனில், இந்திய சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியாக மியான்மர் இருந்து வந்தது. 1947 இல் மியான்மர் சுதந்திரமடைந்த பின்னர் இந்தியாவுக்கும் மியான்மருக்கும் இடையிலான உறவுகள் வலுப்பெற்றிருந்தன. இந்த வேளையில் இந்தியாவின் பிரபல வர்த்தகக் கம்பனிகள் மியான்மரின் பிரதான நகரங்களில் கால்பதித்து வர்த்தகத் தொடர்புகளை மேம்படுத்திய அதேவேளையில் அரசியல், கலாசார விவகாரங்களிலும் விரிவாக்கம்பெற்று இந்நாட்டுடன் இறுக்கமான பிணைப்பை உருவாக்கி இருந்தது இந்தியா.



ஜவஹர்லால் நேரு

இச்சமயத்தில் இந்தியாவின் முதல் பிரதமரான ஜவஹர்லால் நேரு மியான்மரின் தேசிய வீரர் 'ஆங் சாங்' உடன் நெருக்கமான நட்புறவைப் பூண்டிருந்தார். ஜவஹர்லால் நேருவின் நண்பர் ஆங் சாங்கின் மகள் ஆங் சாங் சூகி சமாதானத்திற்கான நோபல் பரிசு பெற்றவர் என்பதையும் நாம் அறிவோம். சர்வதேச அரசியல் அரங்கில் மிக நீண்டகாலமாக தனது நாட்டு மக்களுக்காக வீட்டுக் காவலில் வாடிய ஆங் சாங் சூகி புதுடில்லியிலேயேதான் தனது இளமைக் காலக் கல்வியைப் பெற்றிருந்தவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

### இந்தியக் கொள்கை

பல ஆண்டுகளாக பலவாக மியான்மரின் ஜனநாயகம், சுதந்திரம், மனித உரிமைகள் போன்ற விடயங்களில் இந்தியா தொடர்ந்தும் வெளிப்படையான தனது ஆதரவை நல்கிவந்துள்ளது. இக்கால கட்டத்தில் இந்தியா மேற்கத்தைய நாடுகளுடன் பூண்டிருந்த நட்பிலும் அதிகமான நட்புறவைப் பர்மாவுடன் வளர்த்து வந்துள்ளது.

ஆங் சாங் சூகியின் ஜனநாயகத்திற்கான தேசிய கட்சி 1990இல் நடைபெற்ற தேர்தலில் வெற்றியீட்டியதை அப்போதைய இராணுவ ஆட்சியாளர்கள் இரத்துச் செய்தனர். மாணவர்கள் மீது துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்துத் தேர்தலில் புதிதாகத் தெரிவானோரைக் கைது செய்தனர். மியான்மரில் எதிர்க் கட்சிகளுக்கும் ஆளுங்கட்சியினருக்குமிடையே இத்தகைய முறுகல் நிலை ஏற்பட்டபோது அங்கிருந்து இடம்பெயர்ந்த மாணவர்களுக்குப் புகலிடம் அளித்தது இந்தியா. அத்துடன் அவர்கள் இந்தியாவில் தளம் அமைத்து மாணவர் இயக்கம் என்ற ஒன்றை உருவாக்கக் கூடியதாகப் பண உதவியும் செய்தது. அந்த மாணவர் இயக்கத்தினால் வெளியிடப்பட்ட பத்திரிகைக்கும், ஜனநாயகத்தின் குரலாக ஒலித்த அவர்களது வானொலி நிலையத்துக்கும் இந்தியா தனது வெளிப்படையான ஆதரவை வழங்கியது.

### பாக்-சீன ஊடுருவல்

இந்தியாவின் நிலைப்பாடு இவ்வாறிருக்கையில் மறுபுறத்தில் இந்தியாவின் பரம எதிரிகளான சீனாவும், பாகிஸ்தானும் மியான்மர் அதிகாரிகளுடன் நட்புறவைப் பலப்படுத்தி மியான்மருக்குள் தடம் பதித்துப் பொருண்மிய மற்றும் பல்துறை அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கலாயினர். கல்கத்தாவை அண்மித்த மியான்மரின் கடல் எல்லையில் துறைமுகம் ஒன்றைக் கட்டியெழுப்பும் பணியில் சீனா ஈடுபட்டிருந்தது. இச்செயற்பாடுகள், காலப்போக்கில் இந்திய எதிர்ப்புத் தீவிரவாதிகள் மியான்மரில் தளம் அமைக்க ஏதுவாயிருந்தது. இந்தியாவின் வட கிழக்கு மாநிலங்களில் சர்ச்சைகளை உருவாக்கக் கூடிய தீவிரவாத இயக்கத்தின் சரணாலயமாக இன்றைய மியான்மர் விளங்குகின்றது.

இது இந்தியாவின் கொள்கை வகுப்பாளர்களுக்குப் பெரும் தலையிடியைக் கொடுத்துள்ளது. இச்சமயத்தில்தான் மியான்மரில் பெருமளவிலான இயற்கை வாயுவும் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது. எனினும் இந்தியாவின் மீதுள்ள பகைமை உணர்வு காரணமாக இந்தியாவிற்கு இது வழங்கப்படவில்லை. இக்கால கட்டத்தில் இந்தியாவின் எதிரிகள் இந்தியாவிலேயே தளமிடலாயினர்.

இதன் காரணமாக புதிய பொருளாதாரக் கொள்கைகளில் இந்தியா தளர்வுற்றதினால் வியாபாரம் மந்தகதியில் நகரலாயிற்று. இதனால் மியான்மருடனான வெளியுறவுக் கொள்கைளிலும் பாரிய மாறுதல்கள் ஏற்படலாயின.

> "மியான்மரில் இந்தியக் கொள்கை நிலைப்பாடும், இராணுவ ஆட்சியாளர்களை அனுசரித்தபடியே ஆங் சாங் சூகிக்காக ஒப்புக்காக குரல் கொடுக்கும் போக்கும் இலங்கையில் இனிமேல் காலங்களில் புதுடில்லி எடுக்கப்போகும் நடவடிக்கைகளுக்கான முன்னுதாரணமாக இருக்கும்."

### பதிலடி நடவடிக்கை

மியான்மருடன் உறவுகளைப் புதுப்பிக்கும் நோக்கில் பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் அங்கு சென்று திரும்பியதும், அதைப் பின்பற்றி இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வன்ந் சிங்கும் அங்கு சென்றிருந்தார். இந்திய, மியான்மார் எல்லையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தபோதிலும் குறிப்பிடத்தக்களவு எதுவித அசம்பாவிதங்களும் தொடரவில்லை. மியான்மர் தீவிரவாதிகள் நேருக்கு நேர் மோதிக்கொள்ளும் சந்தர்ப்பங்களிலும்கூட இந்தியா, மியான்மர் ஜெனரலின் தேநீரைச் சுவைத்தவாறு அவர்களுக்கு இராணுவ மற்றும் புலனாய்வு வசதிகளை வழங்கிவந்தது. ஆயினும் தீவிரவாதிகளின் மோதல்கள் எக்காலத்திலும் முடிவுறுவதாக இல்லை.

இந்த நிலையில் இந்தியா, மியான்மரின் ஜனநாயகத்திற்கான பாதையில் இருந்து விலகித் தற்போது யாங்கூன் என அழைக்கப்படும் 'றங்கூன்' இராணுவ ஆட்சியாளர்களின் உபகாரியாக இருந்து வந்தது. 2006 ஆம் ஆண்டில் றங்கூன் தலைநகர் வீதிகளில் மதகுருமார்கள் வெட்டப்பட்டபோது இந்திய அரசு பேச்சுவார்த்தைக்கு அழைத்துத் தேசிய நல்லிணக்கம் பற்றி பழைய பல்லவிகள் பாடியது.

### இரட்டைப் போக்கு

இதனிடையே இந்திய ராஜதந்திரிகள் சிலர் ஆங் சாங் சூகியின் விவகாரங்களையும் அவ்வப்போது புத்திசாலித்தனமாக எடுத்துக் கூறினராயினும் இதன் பின்னணியில் இந்திய அரசு மௌனஞ் சாதித்ததை அனைவரும் அறிவர். அவ்வேளையில் தேசிய பொருளாதாரக் கொள்கையில் அதிசிரத்தையுடன் எரிபொருள், வர்த்தகப் பேச்சுவார்த்தைக்கென இந்தியா தனது அமைச்சரையும் மியான்மருக்கு அனுப்பியிருந்தது. அன்றைய நாள்களில் மியான்மர் உடனான இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைகள் இவ்வாறிருந்தது. சுருங்கக்கூறின் மேற்கத்தைய நாடுகளின் கொள்கைளைப் பிரதிபலிப்பதாய் இருந்தது.

இந்தச் சமயத்தில் தெற்காசியப் பிராந்தியங்களில் இந்தியாவின் அண்டை நாடுகள் சிலவற்றில், குறிப்பாக பாகிஸ்தானில் அமெரிக்காவினதும், பிரிட்டனினதும் இராணுவ ஆதிக்கம் வலுப்பெற்றிருந்தது. இந்தியா இவ்விரு நாடுகளினதும் ஆலோசனைகளை அப்போது எதிர்பார்த்திருக்கவில்லை.

காலங்காலமாக இந்திய அரசு தமது நாட்டு மக்களின் நலனில் அக்கறை செலுத்தி வருவதனால் அந்த நேரத்தில் மியான்மர் வழங்கிய எரிபொருள், எரிவாயுக்களின் மூலம் பொருளாதார ரீதியில் நற்பயனடைய முடியுமா? எனும் சந்தேகமும் இந்திய மக்களுக்கு ஏற்பட்டிருந்தது. இந்தியா தனது எல்லைப் புறத்தில் எதிரிகளின் நடமாட்டத்தை ஒருபோதும் விரும்புவதில்லை. பூகோள ரீதியாக இந்தியா தனது எல்லைகளைப் பாதுகாப்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கின்றது. ஆயினும் தனது அயலவர்கள் யார் என்பதை இந்தியா மறந்து விடக்கூடாது.

### படிப்பினை

மியான்மரின் ஜனநாயகக் கோட்பாட்டைப் புறந்தள்ளித் தனது தேசிய நலன் கருதி மியான்மருடன் உறவு கொள்வதைக் குற்றமென நாம் கருதக் கூடாது. தென்கிழக்கு ஆசிய நாடுகளின் அங்கத்துவ நாடுகளும் மியான்மரைப் பற்றிய இதே கணிப்பீட்டைத் தான் கொண்டுள்ளன.

ஜனநாயகத்தின் தந்தை என வர்ணிக்கப்பட்ட நேரு இன்றிருந்தால், மியான்மர் மீதான இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைபற்றி என்ன கூறுவார்? கலாசாரத்தில் மேம்பாடுடைய இந்தியாவின் தற்போதைய கொள்கை என்ன என்பன பற்றியெல்லாம் சிலர் புலம்புகின்றனர்.

முன்னாள் இந்தியப் பிரதமர் நேருவின் இதயத்தில் இருந்தல்லாது அவரது மூளையில் இருந்து வெளியானதே அவரது ஜனநாயகக் கோட்பாடாகும். அன்றைய நாள்களைப் போல் அல்லாது இன்றைய நாள்களில் அவரது கொள்கையில் தளர்வு நிலை ஏற்படுவதை நாம் அவதானிக்க முடிகிறது.




ஆங் சாங் சூகி

மியான்மரில் இந்தியக் கொள்கை நிலைப்பாடும், இராணுவ ஆட்சியாளர்களை அனுசரித்தபடியே ஆங் சாங் சூகிக்கு ஒப்புக்காகக் குரல் கொடுக்கும் போக்கும் இலங்கையில் இனிமேல் காலங்களில் புதுலில்லி எடுக்கப்போகும் நடவடிக்கைகளுக்கான முன்னுதாரணமாக இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் செல்லப்பா சின்னத்தம்பி**

(ஓய்வுபெற்ற ஆசிரியர் - அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்)

(புலவர் வாத்தியார்)

தோற்றம்: 1929.05.13
மறைவு: 2009.11.24

திதி: ஸப்தமி (12.12.2010) ஞாயிற்றுக்கிழமை

ஓராண்டு ஆனாலும் எங்கள் ஈரவிழி காயவில்லை
ஓயாது தேடுகிறோம் காணவில்லை உங்கள் முகம்
ஆலமரமாய் நீங்கள் இருந்தீர்கள் அதில்
விழுதுகளாக நாங்கள் இருந்தோம் ஆலமரம் சாய்ந்ததே இன்னும்
ஆறவில்லை எங்கள் நெஞ்சம் பாரினில் பலயுகம் கழிந்தாலும்
என்றும் மறவோம் உங்கள் நினைவுகளை பார்போற்ற வாழ்ந்தீரோ
நாங்கள் தொடருவோம் .... நீங்கள் நடந்த பாதையில்...

கலாமதி இல்லம்,
அச்செழு, நீர்வேலி. (107180)

சின்னத்தம்பி அன்னம்மா
(மனைவி).

## பதினெட்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 12.08.1941
மறைவு: 22.12.1992

**அமரர் இளையதம்பி நடராசா**

(முன்னாள் இ.போ.ச.நடத்துநர்)

திதி: 12.12.2010

எங்கள் குடும்பத்தின் குல விளக்கே
என்றும் உங்கள் நினைவுகளுடன்

குடும்பத்தினர்
'திருத்தணி'
கைதடி தெற்கு, கைதடி. (107045)

## வீதி அகலிப்புப்பணி பாதிப்பு

கோப்பாய், டிசெ.12

தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழை காரணமாக யாழ். பருத்தித்துறை வீதி அகலிப்பு பணிகள் தற்காலிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

வீதி அகலிப்புப் பணிகளுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த முன் பணிகள் மழை காரணமாக சிதைவடைந்துள் ளன.

இதனால் போக்குவரத்தில் அசௌ கரியங்கள் ஏற்பட்டுவருவதாகத் தெரி விக்கப்படுகிறது. (204-72)

## சிமெந்துக் கல் விழுந்து இளைஞன் காயம்

தென்மராட்சி, டிசெ.12

கட்டடத்தில் வைக்கப்பட்டிருந்த சிமெந்துக் கல் தவறி வீழ்ந்து கீழே நின்ற இளைஞரின் தலையைத் தாக்கி காயப் படுத்தியது.

இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை புலோப்பளையில் இடம் பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த விஜயகாந் (வயது 23) என்பவர் காயமடைந்த நிலையில் பளைப் பிரதேச வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

## இளைஞர் காயம்

தென்மராட்சி, டிசெ.12

வீதியிலுள்ள குழிகளால் மோட்டார் சைக்கிளில் இருந்து தூக்கி வீசப்பட்டு இளைஞர் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் கடந்த புதன் கிழமை நுணாவில் ஏ-9 வீதியில் இடம் பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த குமார் ( வயது 23) என்பவரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். ( 201- 202)




"ஜெய் குருதேவ்"
ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் அவர்களின்
இலங்கைக்கான வருகையை முன்னிட்டு
சிறப்புப் பயிற்சிகள் (பாகம் 1)
(யோகாசனம், தியானம், சிறப்பு மூச்சுப் பயிற்சி உள்ளடக்கியது)

THE ART OF LIVING

**அறிமுக உரை**

இடம்: 132, பலாலி வீதி, கந்தர்மடம்
காலம்: நாளை (13.12.2010) திங்கட் கிழமை
நேரம்: பிற்பகல் 5 மணிக்கு

இந்த அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பயன்பெறுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

குறிப்பு: ஏற்கனவே பயிற்சி பெற்றவர்களுக்கான சுதர்சனக் கிரியா 13/12/2010 காலை 6.15 இக்கு நடைபெறும். தொ.பே.: 0770474757, 0777740593 (107187)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் கந்தையா பரமேஸ்வரி**

மண்ணுலகம் 28.08.1928
விண்ணுலகம் 24.11.2009

திதி ஸப்தமி

வையத்துள் வாழ்வாங்கு வாழ
எங்களை வாழவைத்த
அன்பு அம்மாவே!
ஆண்டு ஒன்று ஆனதம்மா
உங்கள் முகம் பார்த்து
தீராத கவலையதை
எமக்குகளித்து விட்டுப்
பறந்து விட்டீர்.
உங்கள் ஆத்மா சாந்தி
பெறப்பிரார்த்திக்கிறோம்.

"கமல வாசம்"
வட்டு. மேற்கு,
வட்டுக்கோட்டை. (107010)

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்-




# STUDY MEDICINE

## BELARUS

MD பட்டம் 5 1/2 வருடங்கள்
விண்ணப்ப முடிவுத்திகதி 17.12.2010
வகுப்பு ஆரம்பம் 27.12.2010
முதல் கட்டணம் 18,000 USD
கோடை கால விடுமுறைக்கு ஜேர்மனி, UK, ஐரோப்பிய நாடுகளுக்கு சென்று வரலாம். படிப்பு முடித்ததும் USA, அவுஸ்திரேலியா, UK போன்ற நாடுகளுக்கு நேரடியாகக் குடியேறலாம்.

## NEPAL

தெற்காசியா
MBBS - 4 1/2 வருடங்கள்
முழுக்கற்கைக் கட்டணம் 39, 000 USD
ஆரம்பம் 01.03.2011

## PHILIPPINES

தென்கிழக்கு ஆசியா
MD பட்டம் - 5 1/2 வருடங்கள்
முழுக்கற்கைக் கட்டணம் 15,000 USD
ஆரம்பம் 26.01.2011

ECFMG- USA- WHO மற்றும் UK பொது மருத்துவசபை, இலங்கை மருத்துவ சபை உட்பட உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட பட்டங்கள்.

* கற்கைநெறி உட்பட யாவும் ஆங்கிலத்தில் நடைபெறும்
* சிறப்புக்கடன் அட்டை மூலம் ஒருவருடத்திற்கு வட்டியில்லாக் கடன்
* வங்கியால் சிறப்புக் கல்விக்கடன்
* அரைவருட கற்கை நெறிகட்டணங்கள் செலுத்துவதற்கு தவணைக் கட்டணமுறை வசதி.
* வழிகாட்டலில் 15 வருடங்களுக்கு மேலான அனுபவமுடைய நம்பிக்கையுடையவர்களுடன் வந்து சேர்ந்து மருத்துவ மாணவர்களாவதற்கு உரிய சந்தர்ப்பத்தை தவறாது பெற்றுக்கொள்ள..

மாகாண மட்ட/ பாடசாலை மட்டத்தில் பயின்ற, பயின்று கொண்டிருக்கும் மாணவர்களிடம் தொடர்பு கொள்ள வசதிகளும் உண்டு.

அனுமதி இலவசம்! நம்பிக்கையான விசா, விண்ணப்பங்கள் சமர்ப்பித்து 20 நாள்களில் பிரயாணம்.

எல்லாத்துறைகளிலும் Ph.D. செயற்திட்டங்கள் உண்டு.

LEADER IN MEDICAL EDUCATION
PATHE ACADEMY The People's Academy...
PEOPLE'S ACADEMY FOR TERTIARY AND HIGHER EDUCATION

For inquiries contact
Dr. D. Bakthaseelan
0773 017883

Overseas Student Placement Department. 111- 1/2, Maya Avenue, Kirulapone, Colombo- 06 Tel :011-2502012 www.patheacademy.org


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 18.01.1936

மறைவு 12.11.2010

திருமதி
**தியாகராஜா தெய்வானை**
(பவளம்)

அன்னாரின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டு எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவிய அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரின் ஆத்மா சாந்தியடை இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

45, கல்வளை சதுக்கம்
சண்டிலிப்பாய். (107208)

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் : 15-09-1948
விண்ணில் : 11-12-2009



**அமரர் பூபாலசிங்கம் குலராஜசிங்கம்**

பின்பு விண்ணகத்திலிருந்து ஒரு குரலைக்கேட்டேன் "இது முதல் ஆண்டவரோடு இணைந்த நிலையில் இறப்போர் பேறுபெற்றோர்" என எழுது என்று அது ஒலித்தது.

திருவெளி 14:13

டடா! நீங்கள் எமக்கு கடவுளின் வரம் - அதனால் தான்
ஒரு நொடியில் தன்னோடு அழைத்துச்சென்றுவிட்டார்
டடா என்றழைக்க நாவு துடிக்கின்றது - எம்
கண்களுள் உங்கள் முகம் தோன்றி மறைகின்றது - இனி
உங்களைப் போல் அன்பு கிடைக்காது டடா!
நீங்கள் சொல்லித்தந்த கௌரவம் என்றும் எம் மனதில் - அன்று
நீங்கள் விட்டுச் சென்ற மரியாதை இன்றும் நிழலாய் எம்மை தொடர்கிறது.

அருகில்,
தெற்கு, கோப்பாய். (107222)

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்:
அன்பு மனைவி, பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் கதிர்

## உன்னால் முடிந்தால்...

இல்லாத ஒருவன் பசிபோக்க உன்னால் முடிந்தால் உணவு கொடு
கல்லாச் சிறுவன் கடைந்தேற உன்னால் முடிந்தால் கற்றுக்கொடு
பாதை தெரியாத ஒருவருக்கு உன்னால் முடிந்தால் வழிகாட்டு
பேதை மக்கள் முன்னேற உன்னால் முடிந்தால் உணர்வூட்டு
தோல்வி கண்டு துவண்டவனை உன்னால் முடிந்தால் தேற்றி விடு
நால்வர் நடுவில் வீழ்ந்தவனை உன்னால் முடிந்தால் தூக்கிவிடு
கண்ணீர் சிந்தும் வறியவனை உன்னால் முடிந்தால்
ஆற்றிவிடு
உன்னால் முடிந்தால் இவற்றைச் செய்.

கு.காயத்திரி, 9 'சி',
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

## பீனிக்ஸ் பறவை

பா.சாருஜன், 8 'சி',
யா/கனகரத்தினம் ம.ம.வி.

நெருப்பில் கருகி இறந்து தன் சாம்பலில் இருந்து மீண்டும் எழும் பீனிக்ஸ் பறவையைப் போல் என்று கதை ஆசிரியர்கள் அல்லது கவிஞர்கள் தாங்கு சக்தியை அல்லது இறவாமையை அல்லது மீள்பிறப்புத் தன்மையை வருணிக்கப்பயன்படும் கற்பனைப் பறவையே பீனிக்ஸ். இது ஒரு புனித தீப் பறவையாக வருணிக்கப்படுகின்றது. எகிப்திய, கிரேக்க, கிறிஸ்தவ புராண (தொன்மவியல்) கதைகளிலும், நவீன வரை கதைகளிலும் பீனிக்ஸ் பறவை இடம்பிடிக்கிறது. 'தானே தீக்குளித்துப் பின் தன் சாம்பலில் இருந்து உயிர்த்தெழுவதாகப்' புராண கதைகளில் மட்டுமன்றி தற்காலத்திலும் எடுத்தாள்வதைக் காண்கின்றோம். பீனிக்ஸ் பறவை தீயினால் உருவாக்கப்பட்டது எனக் கருதி செந்தீ நிறத்தில் பொதுவாக வரையப்படும்.

## நீங்களும் எழுதலாம்

மாணவர்களே!

'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பி வையுங்கள். தரமானவை பிரசுரமாகும். அனுப்பவேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர்:-..............................
தரம் :-..............................
பாடசாலை :-..............................
..............................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.

(தரம் 9 - இற்கு உட்பட்ட மாணவர்கள்

## விடை தெரியுமா? 85

**உங்களுக்கும் பரிசில்கள்**

01. யாழ். மாவட்டத்தில் அறிமுகம் செய்யப்படவுள்ள புதிய பப்பாளி இனம் எது?
02. உலக எயிட்ஸ் தினம் எப்போது கொண்டாடப்படுகின்றது?
03. யாழ் மாவட்டத்தில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டி எது?
04. உலகிலேயே அதி வேகமாக இயங்கும் ரயில் எது?
05. அமெரிக்க விஞ்ஞானிகளால் தயாரிக்கப்பட்ட நவீன துப்பாக்கியின் பெயர் என்ன?

**விடை தெரியுமா?**

தெரிந்தால் 18.12.2010 இற்கு முன்னர் சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.


**விடைகள் - 83**

1. ஆங்கிலேயர்.
2. 17.11.2010.
3. யாழ். இந்துக் கல்லூரி.
4. யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி
5. ஒக்ரோபர் 14ஆம் திகதி


**பரிசுபெறுவோர் விவரம்**

01. சிவரஞ்சினி, தரம் - 8 மட்டுவில் கமலாசனி ம.வி. வி.லபோறன்ஸ், தரம் - 9 'சி' மல்லாகம் ம.வி
02. வி.சோபிதன், தரம் - 8 'பி' சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி
03. க.தர்ஷன், தரம் - 6 'பி' யா/வண்ணை நாவலர் ம.வி
04. நிலக்ஷிகா, தரம் - 2 யா/ஏழாலை மேற்கு சன்மார்க்க வித்தி.

## மாணவர் தூரிகை




ர.றுபேக், தரம் 07.
யா/மட்டுவில் தெற்கு அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை.



செ.டானியல் சுபர்சன்,
தரம் 09 ஏ.
யா/கோண்டாவில் இராமகிருஸ்ண ம.வி.

செலோஜிதன்,
தரம் 07 ஏ,
யா/மத்திய கல்லூரி.





க.சருமிதா,
தரம் 01,
நீர்வேலி மத்தி, நீர்வேலி.

## விடுகதைகள்

ஆயிரம் கிளிகள் கூடி அந்தரத்தில் தொங்குது. அதை யாரும் பார்க்காவண்ணம் அழகுத் திரை மூடுது. அது என்ன?

**வாழைப்பூ**

குண்டு குண்டு கோமாளி. குடுமி வைத்த கோமாளி. வண்ண வண்ணக் கோமாளி. வயிறு பெருத்த கோமாளி அவன் யார்?

**கத்தரிக்காய்**

ஆயிரம் கண்ணுடையாள் ஆனாலும் பார்க்க மாட்டாள். கால்கள் நான்குடையாள் ஆனால் நடக்க மாட்டாள். அவள் யார்?

**நாற்காலி**

தையல்காரர் தைக்காத சட்டை தனக்கு மட்டுமே உதவும் சட்டை அது என்ன?

**பாம்பு**

## தீபம் ஏற்றி வணங்குவோம்...

அன்பெனும் நெய்யெடுத்து
தீபங்கள் ஏற்றிடுவோம்
இன்பம் செழித்து
இதயம் மகிழ்ந்துவர
அன்பு பெருக்கெடுத்து
அருமையுடன் எல்லா நலனும் பெற்று
இனிதாக வாழத் தைத்திருநாளே ஓடோடி
[illegible]டு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடிசன வீட்டுவசதி ......

(17ஆம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு கிழக்கில் பொதுத்தேர்தலோ ஜனாதிபதி தேர்தலோ நடைபெற்றால் கருத்திற் கொள்ளப்படும் வாக்காளர் இடாப்பு, 1981 இல் இடம்பெற்ற கணீப்பீட்டை அடிப்படையாகக் கொண்டே இன்னும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. கடந்த ஜனாதிபதி தேர்தலில் கூட யாழ். தேர்தல் மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களாக கருத்திலெடுக்கப்பட்ட தொகை 721, 359 பேர். உண்மையில் இந்த எண்ணிக்கையிலான வாக்களர்கள் தற்போது இங்கு இல்லை.

அவுஸ்திரேலியாவை தளமாக கொண்டு இயங்கும் சமாதானம், ஐக்கியம் மற்றும் மனித உரிமைககளுக்கான சமூகம் (SPUR) தனது செய்திக்குறிப்பொன்றில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் நடைமுறையில் உள்ள சனத்தொகைக்கு அதிகளவிலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதிநிதித்துவம் செய்வதாக கூறி உடனடியான மக்கள் கணக்கெடுப்பிற்கு வேண்டுகோள் விடுத்திருந்தது. வடக்கு கிழக்கு பிரதேசங்களில் ஒரு நாடாளுமன்ற உறுப்பினரை தெரிவு செய்வதற்கு தேவையான வாக்குகளின் எண்ணிக்கை, மற்றைய மாவட்டங்களில் தேவைப் படுவதை விட 10% குறைவானது என்கிறது. அந்த அமைப்பு. பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களில் தற்போது வதியும் வாக்காளர்களின் எண்ணிக்கை குறைவு, அதிலும் வாக்கைச் செலுத்தச் செல்பவர்கள் இன்னும் குறைவு. இதனால் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களுடன் ஒப்பிடுமிடத்து வாக்களித்தோர் வீதம் மிகக்குறைவு. இது அரசின் ஜனநாயக செயற்பாடுகளுக்கு தமிழரிடத்தில் ஆதரவு இல்லை என்ற தவறான எண்ணக் கருத்திற்கு இட்டுச் செல்வதாகவும் தமிழ்தேசியக் கூட்டமைப்பு அதிகளவு ஆசனங்களை கைப்பற்ற வழி செய்வதாகவும் குற்றம் சாட்டப்பட் டிருக்கிறது.

### ஒதுக்கீடுகள்

பலவகையான ஒதுக்கீடுகள் சனத்தொகையை அடிப்படையாக வைத்தே (இத்தனை பேருக்கு ஒருவர்) மேற்கொள்ளப் படுகின்றன. 1981ஆம் ஆண்டில் பெற்ற கணக்கெடுப்புடன் ஒப்பிடுமிடத்து, 2001 முழு இலங்கைக்குமென வெளியிடப்பட்ட மதிப்பீட்டு கணக்கெடுப்பின் படி இலங்கைத்தமிழர் சனத்தொகை வீதம் 12.7 இலிருந்து 11.9 ஆக குறைந்துள்ளமை தெரியவந்திருக்கிறது. அப்படியெனில் 2011 இல்....? மேலும் குறையவே சாத்தியமிருக்கிறது. அதன் தொடர்ச்சியாக ஒதுக்கீடுகளின் குறைப்பும் தொடர ஆயத்தமாகியிருக்கின்றது.

கடந்த காலப் போர் பிரசவித்து விட்ட விதவைகள், அநாதைகள் (ஊனமுற் றவர்கள்) மாற்று ஆற்றல் உள்ளவர்கள், மனநிலை பிறழ்ந்தவர்கள் பற்றிய அதிர்ச்சி தகவல்கள் மாத்திரமல்லாது கல்வி சார் பின்னடைவுகள், பாடசாலை இடை விலகல்கள் போன்ற பல விவரங்கள் வடக்கு கிழக்கிலிருந்து வெளிச்சத்திற்கு வரவிருக்கின்றன.

நாடுயுத்தத்திலிருந்து விடுபட்டு இயல்பு நிலைக்கு திரும்பி விட்டது; சொந்த நாட்டுக்கு திரும்புங்கள் என அழைப்பு விடுவிக்கப்பட்டுள்ள நிலையிலும் புலம்பெயர் தமிழர்கள் சுற்றுலா பயணிகளாக வந்து சுகம் விசாரித்து செல்கிறார்களே ஒழிய, மீள இலங்கை திரும்பும் எண்ணம் அவ்வளவாக பிரதிபலிக்கப்படவில்லை. மாறாக படகு வசதிகள் விவகாரம் தான் பரவலாக பேசப்படுகின்றது.

ஆனால்.....?

கர்த்தினால் மல்கம் றஞ்சித் ஆண்டகை கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவிற்கு அளித்துள்ள சாட்சியத்தில் குறிப்பிட்டது போல வடக்கு கிழக்கில் இனப்பரம்பலில் மாற்று வகையிலான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நாவற்குழியில், மடுவீதியில், முருங்கனில் எல்லாம் சிங்களவர்(மீள) குடியேறியிருக்கிறார்கள்! பௌத்த கோவில்களும் ஆங்காங்கு அமைக்கப்பட்டு வருவதனை காணக் கூடியதாக இருக்கிறது. வடக்கில் காணித்துண்டுகளை தருவதாக கூறி கொழும்பின் சேரிப்புற தமிழ் மக்களை அங்கிருந்து பெயர்த்த திட்டமிட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. இதற்கப்பால், 2011 இற்கான வரவு செலவுத்திட்டத்தில் படையினரின் குடும்பத்தில் உதிக்கும் மூன்றாவது மகவுக்கு 100,000 ரூபா அன்பளிப்பு வழங்கவும் திட்டமிடப்பட்டிருக்கிறது.

இந்த பின்னணியில் எதிர்வரும் குடிசன வீட்டுவசதி தொகை மதிப்பு - 2011, நிச்சயம் சில மாற்றங்களுக்கு வழிகோலப் போகின்றது என்பது புலப்படவே செய்கின்றது.


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் முன்னாள் அதிபர்

இணுவையூர் சுப்பிரமணியம் (கடவுள்)

அவர்கள் காலமானதையிட்டு அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது பாடசாலைச் சமூகம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், யா/ கட்டுடை சைவ வித்தியாசாலை.

## உங்கள் நகரில் JAFFNA

STUDY @ UK

18-12-2010

HOTEL LOVUSI

(Hospital Junction Jaffna - Near BOC)

காலை 9.00 மணி முதல் ....

SPOT ADMISSION

2011 மார்ச் மாதம் அமுலாகவுள்ள UK மாணவர் வீசா புதிய சட்ட அமுலாக்கலுக்கு முன்னர் உங்கள் வீசாவினை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.....

அடிப்படைத்தகமை GCE (O/L)

IELTS - தேவையில்லை

சிறந்த சட்டவல்லுனர்களின் ஆலோசனை

நம்பகரமான Sponsorship

முற்பதிவுகளுக்கு.....

0777113777

100% VISA GUARANTEED

IBt INSTITUTE OF BRITISH TECHNOLOGY (PVT) LTD

No:538-3/1, Galle Road, Colombo - 03, Sri Lanka. | Branch: Kalmunai

E-mail: info@ibtedu.lk | Web : www.ibtedu.lk

*We raise the limits to your Success.....*

## நாய்கள் விற்பனைக்கு

German shepherd பெண் ஒரு வயது

Boxer பெண் 2 வயது

Boxer ஆண் 3½ வயது

Boxer பெண் 55 நாள்

நாய் கூடுகள், பூங்கன்றுகள்

2 Love Birds கூடுகள் (4½ X 3) (2½ X 3) அடி, மீன்தொட்டிகள்.

மலிவு விற்பனை.

No-80, Pets and Plants, ஆடியபாதம் வீதி, கோக்குவில் கிழக்கு. T.P : 0757149159

## G.C.E. (A/L) - 2011

பரீட்சை முடிவுகள் வெளிவந்துவிட்டன. மீட்டல் முதற்தடவை (A/L) தோற்றுபவர்களுக்கு CHEMISTRY, BIOLOGY வகுப்புகள் வீடுவந்து கற்பித்தல். அழையுங்கள்!

வித்யா சுழற்றுங்கள் - 0777730838

0212264814 (இரவு)

## ஐங்கரன் திருமணசேவை

எங்களிடம் யாழ் இந்து உயர்குலம் UK Citizen 37, 33, 30 வயது, Canada Citizen 39, 35, 33வயது, நெதர்லாந்து Citizen 34 வயது, சுவிஸ் PR 33, 28 வயது ஆகிய மணமகன்மார் உள்ளனர். இவர்கள் மிகவிரைவில் இலங்கை வரவுள்ளனர்.

லண்டன் தொடர்பு:- 0044 7508295863

0044 7405647455

(107230)

## வீடு வாடகைக்குத் தேவை

அரச உத்தியோகத்தரின் இரண்டு பேர் கொண்ட குடும்பத்திற்கு சகல வசதிகளுடனான தனி வீடு வாடகைக்குத் தேவை. புங்கங்குளம், அரியாலை, மாம்பழம்சந்தி, கச்சேரி கிழக்கு, கண்டிக்குளி, நாவலர் வீதி பகுதிகள் விரும்பத்தக்கது.

தொடர்பு:-

077 6087227, 077 6279385

(107152)

## அபூர்வ ஜோதிடம்

மரணப்படுக்கையில் விழுந்து பாரிசவாதம், விஸிமவாத ரோகம், மர்மகட்டிகள், ஆஸ்மா குணமாக்கும் சித்துடைய மருந்தியல், அதிர்ஷ்ட பலன் அறிதல்.

தினமும் 8.30 am - 2 pm

உயரப்புலம் பிள்ளையார் கோயிலடி, தால்பெட்டி லேன், ஆனைக்கோட்டை. T.P:- 077 3212740

## தேவை

யாழ் நகர எல்லைக்கு உட்பட்ட பகுதியில் 2 வாகன தரிப்பிட வசதிகளுடன் கூடிய வீடு அல்லது களஞ்சியம் (Store) வாடகைக்கு உடன் தேவை.

தொடர்பு: 0114851284. (573955)

## மணமகள் தேவை

யாழ். இந்து உயர் குலம் UK பிரஜா உரிமை பெற்றவர். 12.09.1972 இல் பிறந்தவர். சொந்தமாக வியாபாரம் நடத்துபவர். பரணி நட்சத்திரம், செவ்வாய்க்குற்றம் எதுவும் இல்லை. இவர் மிக விரைவில் யாழ்ப்பாணம் வரவுள்ளார். பெற்றோர் தகுந்த மணமகளை எதிர்பார்க்கின்றனர்.

லண்டன் தொடர்பு:- 0044 7904535905.

## மணமகள் தேவை

யாழ்ப்பாணம் இந்து கௌரவமான குடும்பம் 49 வயது. சிறு நிறுவனமொன்றை பல்லாண்டு காலமாக நடத்திவரும் விவாகரத்துப்பெற்ற (பிள்ளைகள் இல்லை) நல்ல குடும்பப் பின்னணியைக் கொண்டவருக்கு வாழ்க்கைத் துணை ஒன்றைத் தேடுகிறார். தார மிழந்தவர்களும், மணமாகாதவர்களும் சாதகக் குறிப்பு, தொலைபேசி இலக்கம் மற்றும் குடும்ப விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

விளம்பர இல.4100, உதயன் (107230)

## காணி விற்பனைக்கு

ஸ்ரான்லி வீதி, சிறீதர் தியேட்டருக்கு முன்பாக உள்ள பழைய இலக்கம் 48 இலுள்ள வீட்டுடன் கூடிய 1.5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :

வெளிநாடு (கனடா) - 001647835656

இலங்கை (யாழ்ப்பாணம்) - 0773151245

## CENTRAL TUITION CENTER [C.T.C]

Brown Road, Jaffna.

சிங்களம் எழுத, பேச, வாசிக்க

E.S. பியதாச

அரச உத்தியோகத்தர்களுக்கும், மாணவர்களுக்கும்.

உங்கள் தரத்துக்கேற்பவும் வசதிக்கேற்பவும் ... நடைபெறுகின்றன. ...

... இவாகி -

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் நாகமுத்து

சின்னையா

(வீரவாகு)

தோற்றம்: 02.04.1939

மறைவு: 12.12.2006

பொங்கும் கடல் சூழ் புண்ணிய நயினையில்,
மங்களமாய் நாகபூசணி மகோற்சவம் கண்ணுற்று
அலை மீது தெப்பத்தில் அம்மை வரும் அழகுற்று
நிலையாய் என்றும் நீள் சீர் பரவி நின்றீர்!
விந்தை அறிவு நிரப்பி எமை வாழ்வித்தீர்!
எந்தையே உமை எண்ணித் தவிக்கின்றோம் - நாளும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய நாகபூசணி அம்மையை
பிரார்த்திக்கின்றோம்.

அன்பான மனைவி, பிள்ளைகள், மருமக்கள் , பேரப்பிள்ளைகள், சுற்றத்தார்.

6 ஆம் வட்டாரம், நயினாதீவு.

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் இராசையா

விக்கினேஸ்வரன் (ரவி)



ஆலமரம் ஒன்று அடியோடு சாய்ந்ததுவோ
காலன் தொடுத்த கணை கணக்காகப்
பாய்ந்ததுவோ அப்பா!
ஞாலந்தனி லெமக்கு நல்வழி காட்டிநின்ற
ஞானத் திருவிளக்கு நழுவி மண்ணில்
வீழ்ந்ததுவோ அப்பா!
தீபம் அணைந்ததுவோ திசைகள் இருண்டதுவோ
யாவும் முடிந்ததுவோ எமக்கு யாருமற்றுப்
போனதுவோ அண்ணா !
வருடத்தில் ஒருமுறை உம்மை உற்றவர்கள்
நினைத்து விட நாம் உம்மை எழுதிவிட
மறந்து விடமாட்டோம் அண்ணா
நான்கு ஆண்டுகள் ஆனதண்ணா
ஆனாலும் உம் ஞாபகங்கள் தான்
மறைய மாட்டாதண்ணா!
அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தாயின் மடியில்
23.12.1970

ஆண்டவன் அடியில்
27.11.2006

கற்பகப்பிள்ளையார் கோயிலடி, உடுவில் கிழக்கு. (107236)

அப்பா, அம்மா, சகோதரர்கள், மனைவி, பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

## சுப்பையா பொன்னம்பலம்



(மயில்வாகனம் ஆசிரியர்) (ஓய்வுபெற்ற அதிபர்)

நயினாதீவைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும்கொண்ட சுப்பையா பொன்னம்பலம் நேற்று (11.12.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா-இராமாசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்- சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற நாகமுத்து மற்றும் நாகரெத்தினம் ஆகியோரின் பாசமிகு கணவரும், வாசுகி (இந்தியா), குமுதினி (ஜேர்மனி), தேவகி (ஜேர்மனி) காலஞ்சென்ற சகாதேவன் மற்றும் சிவகாந்தா, பெறாமகன் மோகன்ராஜ் (செட்டி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சித்தானந்தன், சுரேஜன் (ஜேர்மனி), பகீரதன் (சிவா-ஜேர்மனி), நிரஞ்சினி, சாந்தகுமாரி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான பாலசுந்தரம், சுந்தரமூர்த்தி, பாலம்பிகை மற்றும் பவாணியம்மா, அன்னபூரணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான பார்வதிப்பிள்ளை, தங்கேஸ்வரன், ஐயாத்துரை, நாகமுத்து, பொன்னம்பலம், சின்னம்மா, முருகேசு, விசாலாட்சி மற்றும் கனகரெத்தினம், குழந்தைவேலு, விசாலாட்சி, பொன்னம்மா, முத்துக்குமாரு, மாணிக்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற சோபிகா மற்றும் சுலக்ஸ்சணா, சுகர்னியா, துசிகா, அஸ்வின், அனிஸ் அக்ஷயா, மகிழினி, மேனகா, நந்தினி, அனுராஜ், தனராஜ், மயூரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப.11மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நயினாதீவு சல்லிபரவை மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: க.சித்தானந்தன் (மருமகன்), பொ.சிவகாந்தா (மகன்).


தொ.பே: 0213008877, 0776146351.

5ஆம் வட்டாரம், நயினாதீவு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளம் பெருகிய பின்னும்...

ஔண்யன்



"ஆறு பெருக்கெடுக்கிறது. அணை கட்ட எல்லோரும் வாருங்கள்.'' செம்மனச்செல்வியின் கதையில் பெருமழையால் வைகையாறு பெருக்கெடுத்தபோது அவசரஅவசரமாக முரசறையப்பட்டு சொல்லப்பட்ட செய்தியே இது. அப்போதும் தற்போதுஉள்ளதுபோலவே தமிழ் பிரதேசங்களில் ஆறு பெருக்கெடுத்த பின்னே அணை கட்ட ஓடுவதுதான் வழக்கமாக இருந்திருக்கிறது போலும். அதனால்தான் எதுவுமே நடந்துமுடிந்த பின்னரே அதற்குரிய பரிகாரத்தைத் தேடுவது அல்லது அந்தரித்து அலைவது நம்முடைய சாபக்கேடாக மாறி விட்டது. கடந்த வாரம் முழுதும் நாடு முழுதும் பேயாட்டம் போட்ட மழை இப்போது ஓய்ந்திருக்கிறது. ஆனாலும் அது விட்டுச் சென்ற பாதிப்புகளிலிருந்து இன்னமும் மீள முடியாதவர்களாக மக்கள் - குறிப்பாக வன்னி மக்கள் - தவிக்கின்றனர்.

தமது பிள்ளைகளுக்குத் திருமணம் செய்துவைத்த பின் அவர்களின் நினைவுகளை மெல்லமெல்ல தூர வைக்கின்ற பெற்றோரைப் போல நாமும் மீள்குடியேற்றத்தின் பின்னர் வன்னிமக்களை மறந்துதான் போனோம். திருமணம் போல மீள்குடியேற்றம் மகிழ்வான விடயம் இல்லை. அது மிகப்பெரும் சவால்களின் நடுவிலான வாழ்வியலையே வன்னிமக்களுக்குக் கொடுத்துள்ளது. கையில் எந்தப்பொருளும் இல்லை. குடியிருந்த வீடு கூட யுத்தத்தினால் எலும்புக்கூடு போல உருக்குலைந்து விட்டது. பெரும்பாலான குடும்பங்களுக்குப் பெண்களே தலைமையேற்க வேண்டிய நிலைமை. ஏனெனில் போர் அவர்களின் குடும்பத் தலைவர்களைக் கொன்றிருந்தது. அரசாங்க உதவிகளும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே கிடைத்ததால் வன்னிமக்களின் மீள்குடியேற்றம் என்பது அர்த்தபூர்வமான வாழ்வினைக் கட்டியெழுப்ப உதவவில்லை. வன்னியில் இறுதிப் போருக்கு முன்னர் கோடீஸ்வரர்களாக இருந்தவர்கள் கூட கொட்டிலில் வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கையில், அப்போது கொட்டிலில் வாழ்ந்தவர்களின் இப்போதைய நிலைபற்றிச் சொல்லத் தேவையில்லை. தமக்குக் கிடைத்த தறப்பாள்களையும் ஒருசில தடிகளையும் கொண்டு வீடு என்ற பேரில், சிறு கூடாரம் ஒன்றுக்குள்ளேயே மீள்குடியேற்றத்தின் பின்னர் வன்னி மக்கள் பலரின் வாழ்வு முடங்கிக் கிடந்தது. 'இந்திய அரசின் உதவியுடன் மீள்குடியமர்ந்தோருக்கு வீடுகள் கட்டித்தரப்படும்' என்று அறிவிக்கப்பட்டதால் பலரும் இடிந்துகிடந்த தமது முன்னைய இருப்பிடங்களைப் புனரமைக்க ஆர்வம் காட்டவில்லை. வீடு இருப்போருக்கு இத்திட்டத்தின் கீழ் புதிய வசிப்பிடங்கள் அமைத்துக் கொடுக்கப்பட மாட்டாது. எனவே ஏற்கனவே சொத்துகளின் பெரும்பகுதியை இழந்துவிட்டவர்கள் தம்மிடம் எஞ்சியிருந்த பணத்தைக் கொண்டு வீடுகளைத் திருத்த விரும்பவில்லை. 'எப்படியும் இந்திய அரசு தரும் வீடு கிடைக்கும் தானே.?' என்ற நம்பிக்கையில் அதுவரைக்கும் கூடாரங்களுக்கு உள்ளேயே தமது காலத்தை ஓட்டத் தீர்மானித்திருந்தனர். ஆனாலும் இந்திய அரசின் உதவித்திட்டம் வந்துசேர்வதற்கிடையில், மாரிமழை மிக வேகமாக வந்திறங்கித் தனது கைவரிசையை வன்னியில் காட்டிவிட்டது.

மழைக்கு மீள்குடியமர்ந்த இடம், குடியமராத இடம் என்றெல்லாம் (எங்கள் அரச அதிகாரிகள் போல) பாகுபாடு காட்டத்தெரியாது. அது தன்னிஷ்டப்படி எல்லாத் திசைகளிலும் தன் வலிய நீர்க்கரங்களைப் பரவ விட்டது. மிக நீண்டகாலத்துக்குப் பின்னர் விக்ரோறியா நீர்த்தேக்கத்தின் அணைக்கதவுகள் தம்பாட்டிலேயே திறந்து நீர் பாய்ந்தோடும்போது, வழமையாகவே ஒவ்வொரு மாரிக்கும் உடைப்பெடுப்பது போல பயமுறுத்துகின்ற இரணைமடு மட்டும் சும்மா இருக்குமா? வெள்ளம் இராட்சத வேகத்தோடு பாய்ந்து வரத்தொடங்கியதால் இரணைமடுக் குளத்தின் 12 வான்கதவுகளும் திறந்து விடப்பட்டன. அப்படியிருந்தும் வெள்ளம் வற்றியபாடாக இல்லை. குளத்தின் வான் கதவுகள் திறந்துவிடப்பட்டதால் அதனைச் சுற்றியுள்ள தாழ்ந்த நிலப்பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கவேண்டியிருந்தது.

இம்முறை மழையின் தீவிரத்தால் சகல வசதிகளும் கொண்ட, எல்லா முன்னேற்பாடுகளையும் கைவசம் வைத்திருந்த கொழும்பு நகரே ஸ்தம்பித்துப் போயிருந்தது. அப்படியிருக்கையில் வெறும் தறப்பாளுக்குள் ஒடுங்கிக் கிடந்தவர்களை மட்டும் மழை விட்டு வைக்குமா என்ன? எல்லாத் தறப்பாள் கூடாரங்களுக்குள்ளும் வஞ்சனையின்றித் தன் வலது காலை எடுத்துவைத்த வெள்ளம் நாலைந்து நாள்கள் வாடகையின்றியே குடியிருந்தது. சில இடங்களில் வெள்ளம் தம்மை நாடி வந்த 'புளுகத்தில்' தறப்பாள்களும் அவற்றைத் தாங்கி நின்ற தடிகளும் இறக்கை கட்டியதுபோல வெள்ளத்தில் நீச்சலடித்து தூரச்சென்ற கதைகளுமுண்டு. கீழே வெள்ளம், மேலே பேயாய்ப் பொழிகின்ற மழை. இவற்றுக்கிடையே அல்லாடிய வன்னிமக்கள் மேட்டுப்பாங்கான இடங்களை நோக்கி, மீள்குடியமர்ந்த பின்னரும் இடம்பெயர்ந்தோடினார்கள். ஆனாலும் அத்தனை பேரையும் தாங்கக்கூடிய கட்டட வசதிகள் இன்னமும் வன்னியில் மீளமைக்கப்படாததால் பலர் தமது உறவினர் வீடுகளில் ஒட்டிக்கொண்டனர். இதைவிட மக்களின் கல்வீடுகளில் இராணுவத்தினரும் அதற்கருகாமையில் கூடாரங்களில் மக்களும் குடியிருந்த பகுதிகளில் மழையைக் கண்டுகூட அவர்களது சொந்த வீடுகளில் குடியிருக்க அல்லது தஞ்சமடைய அனுமதி கொடுக்கப்படவே இல்லை.

கொட்டும் மழையிலும் மக்களுக்குச் சேவை செய்யவெனச் சென்ற ஒருசில உத்தியோகத்தர்கள் திடீரென அவர்கள் பயணிக்க வேண்டிய பாதையை வெள்ளம் மூடியதால் தம் வீடுகளுக்குத் திரும்பிச் செல்லமுடியாமல் அவதிப்பட்டனர். குறிப்பாக பண்டாரவன்னிக் கிராம அலுவலர் பிரிவில் உள்ள குருவிச்சையாறு, விரால்மடு ஆறு, கிடாரஞ்சன் ஆறு என்பன காலையில் சாதுவாக இருந்துவிட்டு மதியம் பெய்த மழையால் மாலையில் பாதைகளை மூடிப் பாய்ந்தோடின. இதனால் அக்கரையிலிருந்த அந்த ஆறுகளைக் கடந்து பணிபுரிய வந்தவர்கள் ஆற்று வெள்ளம் பாதையை விட்டு வடியும்வரை இக்கரையிலேயே காத்திருக்க வேண்டியதாயிற்று. மாங்குளம் - முல்லைத்தீவு வீதியின் நிலை படுமோசமாக மாறியது. நீண்டகாலமாக இவ்வீதி புனரமைக்கப்படாமல் கிரவல் மண் கொண்டே நிரப்பப்பட்டுத் தற்காலிகமாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது. இந்தக் கிரவல் மண்ணுக்குள் மழை புகுந்து விளையாடியதால் சேறும் சகதியுமாக இந்த வீதி மாறிப்போனது. ஏறக்குறைய பெரும்போகத்துக்காக உழுது தயார் நிலையில் இருக்கும் ஈரப்பதமான வயலைப் போலவே இந்த நெடும் வீதி காட்சியளித்தது. இதைவிட வன்னியில் ஒருசில இடங்களுக்கான பிரதான வீதிகளை மழை வெள்ளம் துண்டித்து விட்டதால் அப்பகுதிகளுக்கான சகல விநியோகங்களும் தடைப்பட்டுப் போயின. ஏற்கனவே மழையால் தவித்துக்கொண்டிருந்த மக்களுக்கு பாதைத் துண்டிப்பு இன்னும் அவலத்தையே கொடுத்தது. எனினும் நிலைமை கட்டுமீறிப் போனதையடுத்து கடற்படையினர் உதவிக்கு வந்தனர். திருகோணமலைக் கடற்படைத் தளத்திலிருந்து விரைந்துவந்த படகுகள் மூலமாக பாதை துண்டிக்கப்பட்டு வெள்ளத்தால் தனித்தீவாக மாறிப்போயிருந்த கண்டாவளை, கட்டுவன்கொட்டிப் பிரதேசங்களுக்கு உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. மக்களின் தற்காலிக இருப்பிட வசதிகளை ஒழுங்குபடுத்துவதற்காக இராணுவத்தின் 57ஆவது படைப்பிரிவின் உதவியும் நாடப்பட்டது. ஏறக்குறைய வன்னியில் கொட்டித் தீர்த்த மழையினால் 14 ஆயிரம் பொதுமக்கள் மீளவும் இடம்பெயர்ந்து வாழவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். இதைவிட நிறையக் கனவுகளோடு இவர்கள் விதைத்திருந்த வயல்களையும் அங்கிருந்த நெற்பயிர்களையும் மழைவெள்ளம் காவு கொண்டுவிட்டது.

வன்னிமக்களுக்கு இடம்பெயர்வதென்பது அடிக்கடி நிகழ்ந்து பழகிப்போன விடயம் தான். ஆனாலும் முன்னர் அவர்களைக் குண்டுமழை துரத்தியது; இப்போது மாரிமழை துரத்தியுள்ளது. அவ்வளவுதான் வித்தியாசம். ஆனாலும் தம் உறவுகளையும் உடைமைகளையும் யுத்தத்தால் தொலைத்துவிட்டு, கைதிகள் போல நலன்புரி நிலையத்தில் வாடிவிட்டு, இனியாவது கூழோ கஞ்சியோ குடித்தாவது தம்முடைய சொந்த இடத்தில் நிம்மதியாக இருப்போம் என மீள்குடியேறியோர் மீது மழை கருணை காட்டவில்லை. அதுவும் தன்பங்குக்கு அவர்களை இடம்பெயர வைத்துள்ளது. வழமையாக மாரிகாலத்தில் வன்னியில் வெள்ளப்பெருக்கு ஏற்படுவது வழமைதான். ஆனாலும் பெருந்தொகையான மக்கள் பாதிக்கப்படுவதில்லை. ஏனெனில் மழையைத் தாங்கக்கூடிய வகையில் அவர்களின் இருப்பிடங்கள் அமைக்கப்பட்டிருந்தன. உடனுக்குடன் மாற்று நடவடிக்கைகளை செய்யக்கூடிய ஆண்கள் குடும்பத்தில் இருந்தார்கள். கையிலே காசும் இருந்தது. இதனால் வெள்ளத்தால் ஏற்படும் அனர்த்தங்களில் இருந்து பெருமளவில் அவர்கள் தப்பிக்க முடிந்ததோடு அதன்போது ஏற்படும் பாதிப்புகளுக்குத் தாமே உடனடியாக மாற்றுத் தீர்வையும் எடுக்கக்கூடிய வல்லமை ஏற்பட்டிருந்தது. ஆனால் இன்றைக்கு இவையொன்றும் வன்னிமக்களிடத்தே இல்லை. பெரும்பாலான குடும்பங்கள் பெண்களின் தலைமைத்துவத்தைக் கொண்டுள்ளதோடு, பொருளாதார நிலையிலும் மிகவும் பின்தங்கியனவாகவே உள்ளன. அத்தோடு ஒழுங்கான இருப்பிட வசதியும் இல்லை.

மீள்குடியேறிகளின் இத்தகைய நிலைமை அரச அதிகாரிகளுக்கு மிக நன்றாகத் தெரியும். அத்தோடு மாரிமழை பெய்யும்போது தறப்பாள் வாசிகளின் வாழ்வு சேற்றுக்குள்ளேயே புதைந்துவிடும் என்பதும் அவர்களுக்குத் தெரிந்த விடயம் தான். ஏனெனில் கைப்புண்ணுக்குக் கண்ணாடி தேவையில்லைத் தானே. இருந்தும் தம்முடைய வழமையான அசட்டையீனத்தையே அவர்கள் மக்களின் மீது காட்டியதால் வெள்ள அனர்த்தத்திலிருந்து மக்களைக் காக்க முடியவில்லை. மழை தூறத்தொடங்கியபோது அதிகாரிகள் அமைதியாக இருந்தார்கள்.

தூறல் மழையானது. அப்போது எந்தவித அசுமாத்தமும் அரச அதிகாரிகளிடம் இல்லை. மழை பெருமழையானது. அதன்போதுதான் கொஞ்சம் விழித்துக் கொண்டார்கள் அதிகாரிகள். ஆனாலும் நடவடிக்கை எடுப்பதில் அவர்கள் அக்கறை காட்டவில்லை. பெருமழை வெள்ளமானது. அப்போதும் அதிகாரிகள் மழைவீழ்ச்சியை அளவிடுவதில்தான் அக்கறை காட்டினார்களே தவிர மக்களைப் பற்றிச் சிந்திக்கவில்லை. வெள்ளம் குளங்களை, ஆறுகளை உடைப்பெடுக்கச் செய்தது. வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்தது. பாதைகள் வெள்ளத்தால் மூடுண்டன. கிட்டத்தட்ட வன்னிமக்களின் வாழ்வியலை வெள்ளம் மூடியபோதுதான் - தலைக்குமேல் வெள்ளம் போன பின்னர் தான் - இக்கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்ட செம்மனச்செல்வியின் கதைபோல நடவடிக்கை எடுக்க அரச அலுவலகங்கள் முன்வந்தன. அதிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தொண்டர் நிறுவனங்கள் ஊடாகவே உணவுப் பொருள்களும் ஒருசில அத்தியாவசியப் பொருள்களும் வழங்கப்பட்டுள்ளன. மாவட்டச் செயலகம் இதுவரை மக்களுக்கான துயரைத் துடைப்பதில் எவ்வித அக்கறையும் காட்டவில்லையெனக் கிளிநொச்சி மக்கள் புலம்புகிறார்கள். ''வெள்ளத்தால் ஏற்பட்ட அழிவுகளுக்கு நஷ்ட ஈடு தராவிட்டாலும் பரவாயில்லை. ஆனால் அத்தியாவசிய உணவுப் பொருள்களைக்கூட ஏன் தர மறுக்கிறார்கள்? வெள்ளம் பெருக்கெடுத்தபின் கூட இவர்களின் கண்கள் திறக்கவில்லையா?'' என அவர்கள் ஏங்குகிறார்கள். இத்தனைக்கும் தென்னிலங்கையில் ஏற்பட்ட வெள்ளப் பாதிப்புகளுக்கு மக்களுக்கு உதவிக்குமேல் உதவிகள் அரசாங்கத்தால் வழங்கப்பட்டுவருகின்றன. ஆனால் ஏற்கனவே போரின் வலியில் துவண்டுபோய்க் கிடந்த வன்னி மக்களுக்கு மழையும் துயரைக் கொடுத்து இன்னமும் அவர்களின் வாழ்வைச் சிதைத்திருக்கிறது. ஆனாலும் பாதிப்புப் பற்றிய கணக்கெடுப்புகளோடு தம் கடமை முடிந்துவிட்டதாக உரிய அதிகாரிகள் எண்ணிக் கொண்டு பேசாமல் இருந்துவிடுகிறார்கள். உண்மையில் வெள்ளம் பெருக்கெடுக்க முன்னரேயே மக்களைக் காக்கும் நடவடிக்கையில் இறங்கியிருக்க வேண்டிய இவர்கள் அந்தக் கடமையில் இருந்தும் தவறியுள்ளதோடு, வெள்ளத்தால் பாதிப்புற்ற பின்னரும் அவர்களுக்கான உதவிகளைச் செய்ய ஏன் மறுக்கிறார்கள் என்பது எவருக்குமே புரியவில்லை, வானம் இன்னமும் கறுத்தபடியேதான் இருக்கிறது. அடுத்த பெருமழை எப்போதும் பொழியலாம். அதிகாரிகள் சொகுசாக உறங்கட்டும். மக்கள் இன்னொரு இடம்பெயர்வுக்காக - அவலங்களைச் சுமப்பதற்காக - வன்னியில் துயர் படர்ந்த விழிகளோடு காத்திருக்கிறார்கள். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## துயர் பகிர்வு

எமது பாடசாலையின் விஞ்ஞான
ஆசிரியை திருமதி சிவஞானம்
சிறிஸ்காந்தன் அவர்களது அன்புத் தாய்
**திருமதி அம்பிகை பாலசுப்பிரமணியம்**

அவர்களின் மறைவுச் செய்திகேட்டு மிக்கதுயர் அடைகின்றோம். அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு குடும்பத்தவரின் துயரிலும் பங்குகொள்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம்

## ஸ்கந்தாவின் இதய அஞ்சலி

எமது வகுப்பு மாணவன்
மயூரனின் அன்புத் தந்தையார்
**அமரர் நாகலிங்கத்திற்கு**
எமது இதய அஞ்சலியைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

கலைப்பிரிவு 2012 A II
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

## 9ஆம் ஆண்டு நினைவு

### அமரர் முத்தையா சதானந்தன்



(ஓய்வுபெற்ற ஆசிரியர்
யா/ஹாட்லிக் கல்லூரி,
அறங்காவலர் ஸ்ரீ வல்லிபுர
ஆழ்வார் தேவஸ்தானம்)

அன்னை மடியில்:
20.08.1923

பரந்தாமன் அடியில்:
23.11.2001

திதி: 12.12.2010

அன்பின் திருவுருவே
நவ ஆண்டுகள் கடந்ததையா!
நாங்கள் படும் துயர் தீரவில்லை
நீங்கள் பாடிய பதிக பாசுரங்கள்
எங்கள் செவியில் ஒலிக்கிறதே!
அருவமாய் எம்முடன் நடமாடியதை
ஆனந்தமாய் உணர்கின்றோம்

மனைவி, பிள்ளைகள், குடும்பத்தினர்.

(சி-573960)

## நான்காம் ஆண்டு

### நினைவலைகள்



தோற்றம்:
10.01.1932

மறைவு:
12.12.2006

### திருமதி கமலாவதி நடராஜா

(ஓய்வுபெற்ற ஆசிரியை-
யா/கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி, காரைநகர்)

அன்பின் திருவுருவாய் பாசத்தின் இலக்கணமாய்
குடும்பத்தின் ஒளிவிளக்காய் வழிநடத்தி வாழ வைத்த தெய்வமே
நான்கு வருடங்கள் ஓடி மறைந்தாலும் என்றும் எம் மனதில்
உங்கள் நினைவு நிலைத்திருக்கும்
உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

தபாற்கந்தோர் வீதி,
காரைநகர்.

உங்கள் பிரிவால் வாடும்:
குடும்பத்தினர்


## ARE YOU READY FOR JANUARY INTAKE...?

IELTS தகைமைஇன்றி UK,
A தர கல்லூரிகளில் அனுமதி
பெற்றுத் தரப்படும்

அடிப்படைத் தகைமை G.C.E. O/L மட்டுமே



**BEST OFFER:**
**PAY ONLY AFTER VISA**

BANK SPONSORSHIP
ஆலோசனைகளும் வழங்கப்படும்

Call now for free assessment

**0713 588 266**

## மணமகள் தேவை

வயது 31 B.Sc Computer Science படித்து அரச நிறுவனத்தில் பணிபுரியும் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த மணமகனுக்கு A/L படித்த மணமகள் தேவை
தொடர்பு- 0712924878

அனைத்து நாடுகளுக்குமான, அனைத்து வகையான விசாக்களுக்குமான

## Financial Sponsorship

Racas Travels & Tours (Pvt) Ltd.
No. 7/1, W.A. Silva Mawatha, Wellawatta.
Tel/Fax: 011 2583575 நாதன் : 077 3152327

## Racas Travels & Tours (Pvt) Ltd.

எமது சேவைகள்

மிகவும் குறைந்த விலையில்
அனைத்து நாடுகளுக்குமான
விமானப் பயணச்சீட்டு ஒழுங்குகள்.

**UK Student Visa Arrangements**
**(Study & Get post Study work in UK)**

No. 7/1, W.A. Silva Mawatha, Wellawatta.
Tel/Fax: 011 2583575 Hotline: 077 3152327

## கோழிக்குஞ்சு விநியோகம்

BAIRAHA No-1 புறொயிலர் குஞ்சுகள் 15.12.2010 விநியோகிக்கப்படும். பதிவுகளை முன் கூட்டியே மேற்கொள்ளவும்.

★ராஜீவ்,
நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
தொ.பே:-
0776090926, 0212222867

## பொருளியற் கல்லூரி

யாழ்ப்பாணம் - இணுவில் (இரு இடத்திலும்)

**A/L DAY CLASS**

**கலை,**
**வர்த்தகப் பிரிவு**

நாளை ஆரம்பம்:-13.12.2010
திங்கள்- 8 A.M

உங்கள் அனுமதிகளைப்
பெற்றுக்கொள்ளவும்.

### வணிகமாணவர்களை ஆர்வமூட்டும் போட்டிப் பரீட்சை விசேட கருத்தரங்கு

ஆரம்பம்- திங்கள் (13.12) காலை 9.00 மணி திங்கள் முதல் வெள்ளி வரை 9.00 தொடக்கம் 1.00 மணி வரை.
✱20 மணித்தியால வகுப்பு
✱ கட்டணம் 600/ -
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்பு கள் பிரிவு யாழ். போதனா வைத்தியசாலை எதிரே.

### SHAM ROCK
ஈச்ச மோட்டை, யாழ்.

A/L 2012 பொருளியல்
✱ பேரினப் பொருளாதாரம்
ஆரம்பம் புதன் 15/12 - 5.30 P.M
✱ நெகிழ்ச்சிக் கோட்பாடு
திங், வெள். 5.30 P.M
V. ஞானவேல் B.B.A (F.M spl)
அரசியல் சனி, ஞாயிறு 11 A.M
S.S. சேந்தூரன் B.A (Hons) (P.sc. spl)

புதிய கல்வி ஆண்டு 2011
Gr. - 1 முதல் O/L வரை
ஆரம்பமாகிவிட்டது.

## கொழும்பில் பெரும் வரவேற்பைப் பெற்ற

## Jeya Beauty Saloon



Jeya Beauty Saloon உரிமையாளர் N.Nagularani
(Dip.in BTHD in Sri Lanka & India)
அவர்களால் அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க 2ஆவது முறையாகவும் அழகுக்கலைக் கருத்தரங்கு எதிர்வரும் 20ஆம், 21ஆம் திகதி (டிசெம்பர்) இரு நாள் கருத் தரங்கில் பங்குபற்றும் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்படும்.
இடம்: சொர்ணாம்பிகை மண்டபம்
(நாவலர் மண்டபம் முன்பாக)
இல.527, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
மற்றும் அழகுக்கலை டிப்ளோமாக் கற்கை நெறியும் நடை பெற்றுவருகிறது என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருவதுடன்

* Hair spa
* Hair cuts
* Hair colour
* Re-Bonding
* Bleaching
* Preming
* Mahindi Appling
* Pig mentation Treatment
* special Facial
* All type of Facial
* Skin care
* manicure
* pedicuer
* Waxing
* Threading
* Straightening
* Treatment
* All type of BridalDressing
* All type of Make up

ஆகிய ஓடர்களும் ஏற்றுக்கொள்ளப்படும். நுழைவுச் சீட்டுப் பெற்றுக் கொள்ளும் இடம் திரேசா தளபாட மாளிகை, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். மற்றும் நுழைவாயில் மண்டபத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் தொடர்புகளுக்கு:
T.P. 0772378726
சாந்தி பவனம்,
நாவலடி லேன், திருநெல்வேலி.


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பு

அமரர்
### இராசம்மா இராசதுரை



தோற்றம்
09.05.1948

மறைவு
12.11.2010

கடந்த 12.11.2010 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் இறுதிக்கிரியைகளில்கலந்து கொண்டவர்கள் மற்றும் நேரிலும், தொலைபேசி, தொலை நகல், தந்தி, கண்ணீர் அஞ்சலி மூலம் ஆறுதல், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு இன்று (12.12.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப.11மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருக்கும் வீட்டுக்கிருத்தியத்திலும் அதனைத்தொடர்ந்து நடைபெறவிருக்கும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் அன்புடன் அழைக் கின்றோம்.

யாழ்.பருத்தித்துறை வீதி,
புத்தூர்.

க.இராசதுரை
குடும்பத்தினர்.


வட பிராந்தியத்திற்கான DHL சேவையினை
நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு
விசேட விலைக் கழிவுடன் கொண்டாடுங்கள்

ஆகாய கடல்வழி மார்க்கமாக 220க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான
துரித தபால்கள் பொதிகள் சேவை

உங்களிற்கான அன்பளிப்புக்களையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

கடிதங்கள், ஆவணங்கள், அன்பளிப்புப்பொருட்கள்
உணவுப் பொருட்கள், உடுபுடவைகள், CD,DVD
மற்றும் சகல விதமான பொருட்களையும்
மிக விரைவாக அனுப்பிடலாம்

DHL WORLDWIDE EXPRESS

➤ TCN Express
No-2B,Nelson Place, Colombo-6

திருமுருகன் கொம் நெற்
இல-259, கே. கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
➤ இல-46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. ➤ பிரதான வீதி, நெல்லியடி.
➤ இல-6,திருநகர் பிரதான வீதி ,கிளிநொச்சி. ➤ 4, மில் றோட் ,வவுனியா.

## மாணவ மணிகளுக்கோர் நற்செய்தி

சென்ற ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் உங்களின் தேவைகளுக்கேற்ப அட்லஸ், N.S.P, லக்கி போன்ற தரமான அப்பியாசப் புத்தகங்கள், பாடசாலைப் பயிற்சிப் புத்தகங்கள் பேனை, பென்சில் வகைகள், மற்றும் அனைத்து ஸ்ரேசனரி பொருள்களும் மிகமிக மலிவு விலையில் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

லஷ்மி ஸ்ரேசனரி
24, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

மொத்த வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவு உண்டு.

கிளை- லஷ்மி ஸ்ரேசனரி,
இல 111, பழைய சந்தை, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொர்க்கவாசல் ஏகாதசி தீர்த்தம்

வண்ணை, டிசெ. 12

அளவெட்டி மேற்கு, நாகேஸ்வரம், ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் எதிர்வரும் 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை சொர்க்கவாசல் ஏகாதசி தீர்த்தம் பக்தி பூர்வமாக நடைபெறவுள்ளது.

காலை 8 மணிக்கு விசேட அபிஷேகம் செய்யப்பட்டு ஆராதனையுடன் பூசை ஆரம்பமாகும். 4 மணிக்கு சிறப்பு சமயச் சொற்பொழிவு நடைபெறும். முற்பகல் 10 மணிக்கு வசந்தமண்டப பூசையைத் தொடர்ந்து ஸ்ரீமத் நாராயணர் ஸ்ரீதேவி, பூமாதேவி சகிதராக வீதியுலா எழுந்தருள்வார். (ஒ-160)



# விபத்தில் சிக்கிய சிறுத்தை மரணம்

களுவாஞ்சிக்குடி, டிசெ.12

மட்டக்களப்பு - கல்முனை நெடுஞ்சாலையின் களுவாஞ்சிக்குடி நாகதம்பிரான் கோயிலுக்கு அருகில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 7 மணியளவில் இடம்பெற்ற விபத்தொன்றில் சிறுத்தைப் புலி ஒன்று உயிரிழந்துள்ளது.

மோட்டார் சைக்கிளில் வேகமாக வந்த இருவர் சிறுத்தையின் மீது மோதுண்டதால் இவ்விபத்து ஏற்பட்டுள்ளது உயிரிழந்த சிறுத்தையை களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்துக்கு பொதுமக்களின் உதவியுடன் பொலிஸார் எடுத்துச் சென்றுள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரும் தப்பிச்சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு காட்டுப்பகுதியில் சிறுத்தைகளின் நடமாட்டம் இருப்பதாகவும் படுவான்கரைப் பகுதியிலிருந்து இந்த புலி வந்திருக்கக் கூடும் எனவும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (ஒ)

## மரண அறிவித்தல்கள்



### செல்லையா நடேசு

இத்தாவிலைப் பிறப்பிடமாகவும், வத்திராயன் வடக்கு, தாளையடியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா நடேசு 74 வயதில் 09.12.2010 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசம்மாவின் அன்புக் கணவரும், புவனேஸ்வரன் (தலைவர், தனியார் பேருந்து சேவைச் சங்கம் - வடமராட்சி கிழக்கு), யோகேஸ்வரன் (கனடா), ஞானேஸ்வரன், சற்குணேஸ்வரன் (கணக்காளர் பிரதேச செயலகம், தம்பலகாமம், திருகோணமலை), சிவனேஸ்வரன் (கனடா), பரமேஸ்வரன், மகேஸ்வரன் (கனடா), கேதீஸ்வரன் (கனடா) மற்றும் காலஞ்சென்ற ஜெகதீஸ்வரி மற்றும் சுதாகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வத்திராயன் வடக்கிலுள்ள ஞானேஸ்வரன் (துரை) மகனது இல்லத்தில் இன்று (12.12.2010) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மருதங்கேணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வத்திராயன் வடக்கு,
தாளையடி.
T.P. 0770475960 (ஒ/573971)

தகவல்:
பிள்ளைகள்



### திருமதி பொன்னையா தெய்வானைப்பிள்ளை

(மருதங்கேணி தெற்கு, தாளையடி)

மருதங்கேணி தெற்கு, தாளையடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாவும் கொண்ட திருமதி பொன்னையா தெய்வானைப் பிள்ளை (10.12.2010) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையாவின் அன்பு மனைவி ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2010) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு இல. 10, நடுத்தெரு லேன், அரியாலை என்னும் முகவரியில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

ப.வினோதன்,
இல-10, நடுத்தெரு லேன்,
அரியாலை.
T.P-0770869851,0217201419

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்


## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவகுடும்பம் 1983 ஆம் ஆண்டு 7 செவ்வாய் 32 கிரகபாவம் உயர் அரச தொழில்புரியும் மணமகள் தேவை.

தொடர்பு : 0777 176854

## விற்பனைக்

300 XXXX தொடர் இலக்கமுடைய நவீன கொரியன் கார் மலிவான விலையில் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு : 0777 176854

## மாபெரும் இலவசக் சிறப்பு கல்வி கருத்தரங்கு
## (DEUTSCH மொழி)

ஜேர்மன், சுவிற்சலாந்து, நாடுகளுக்கு நிரந்தர விசா பெற்றுச் செல்ல இருப்பவர்களுக்கான "டொச்மொழி" அறிவின் முக்கியத்துவம் பற்றிய இலவசக்கருத்தரங்கு

December 27th, யாழ்பாணம் ப.நோ.கூ (சங்கம்) 2வது மாடி கேட்போர் கூடம்
Opposite Post Office, Jaffna, Morning 09:30 AM to Morning 12:30 PM
Meet Mrs. Santhini Selvarathnam (இலங்கையின் டொச்மொழி முன்னாள் ஆசிரியை)

## வெளிநாட்டு உயர்கல்விகான இலவசக்கருத்தரங்கு
குறைந்த செலவில் வெளிநாட்டில் உயர்கல்வி

Holland
Malta
Italy
Poland
UK

Meet Mr.KARAN

VISA கிடைத்த பின்
College கட்டணம்

Are you worried about IELTS test?
It is no criteria!

Registration now on 0778583832 0773618139 0777410884

Colombo IDEAL ACADEMY
No: 240/2/1,3/1, Galle Road, 2nd Floor, Colombo - 06., Email: idealacca@yahoo.com


## மரண அறிவித்தல்

### திருமதி சரஸ்வதி சுப்பிரமணியம்

இளவாலையைப் பிறப்பிடமாகவும், வழக்கம்பரையை வசிப்பிடமாகவும் மானிப்பாய் வடக்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி சுப்பிரமணியம் நேற்று (11.12.2010) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசா சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், திலகவதி, மகாதேவன் (மகேந்திரம்), காலஞ்சென்ற இந்திராதேவி, மற்றும் கனகேந்திரன், குலேந்திரன், காலஞ்சென்ற இராசேந்திரன், மற்றும் சந்திராதேவி (டென்மார்க்), ஆகியோரின் தாயாரும், காலஞ்சென்ற மகேந்திரலிங்கம் மற்றும் மகேஸ்வரி, காலஞ்சென்ற தெய்வேந்திரம் மற்றும் பத்மினி, ராதிகா, நந்தினி, நிர்மலானந்தன் (டென்மார்க்) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2010) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அன்னார் வசித்து வந்த மானிப்பாய் வடக்கு என்னும் முகவரியிலுள்ள இல்லத்தில் நடைபெற்று, பி.ப 2.00 மணியளவில் பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

மானிப்பாய் வடக்கு,
மானிப்பாய். (107253)

தகவல்:
குடும்பத்தினர்.


## STUDY AND WORK IN UK

COLOMBO HIGHER EDUCATION CONSULTANSY (CHEC)

Janurary Fabruary March Intake

★ UK இற்கான புதிய சட்ட அமுலாக்கல் கூடிய சீக்கிரம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. எமது CHEC உங்கள் விசாவுக்கான சேவையை வழங்க காத்திருக்கிறது
★ குறைந்த தகைமை GCE O/L
★ IELTS ஆவசியம் தேவைப்படாத கல்லூரிகளில் குறைந்த அனுமதிக் கட்டணம் 1000 GBP முதல் உங்கள் விசாவை பெற்றுத்தர காத்திருக்கிறது.
★ மாணவர்கள் தம் விருப்பத்துக்கமைய ஆங்கிலம் மற்றும் ஏனைய பாடநெறிகளைத் தெரிவுசெய்யலாம்.
★ IELTS கற்பதற்கு 3 மாதம் இலங்கையில் செலவழிப்பதைவிட, UK இல் IELTS இனைக் கற்கமுடியும் என்பதை தெரிவித்து நிற்கின்றோம்.
★ 'A' தரம் மற்றும் Higher Trusted Collges, மற்றும் University களில் அனுமதிகளை பெற்றுக் கொள்ள முடியும்.
★ இம்முறை A/L பெறுபேற்றை எதிர்பார்த்திருக்கும் மாணவர்கள் உங்கள் எதிர்காலத்தை சிறந்த முறையில் குறுகிய காலத்தில் வெற்றிகரமாக்க எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

Colombo Office:
No:51,Dharmapala Mawatha, Colombo- 07
Tel: 0117549600

UK Office:
28, College Road, Harrow Ha1be, London.
T.P: 00447717571137, 00447501035073 (Haris)

Jaffna Contact: Mobile: 0779265447, US.Remindas(Chavakachcheri)

## பணியாளர்கள் தேவை

மேற்படி வியாபார ஸ்தாபனத்துக்கு சப்பாத்து வியாபாரத்தில் அனுபவம் உள்ள, அனுபவம் அற்ற பணியாளர்கள் தேவை. நேரில் வரவும்.

யாழ். காலணியகம், YARL BATA
11, நவீன சந்தை, ஆஸ்பத்திரிவீதி, யாழ்.

## தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள BROWNS TOURS புதிய விமான சேவைக் காரியாலயத்தை நிர்வகிக்க விமானப் பயணச் சீட்டு மேலதிகாரி (TICKETING EXECUTIVE) தேவைப்படுகின்றது.

தொடர்பு கொள்க:- திரு. வசந்த 0773868529

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

யாழ். நகரில் இருந்து 3km தூரத்தில் யாழ் பல்கலைக்கழக சூழலில் கொக்குவில் கிழக்கு கோயில் வீதியில் 4 பரப்புக் காணியில் தனி வீடு, நன்னீர்த் தனிக் கிணறு மற்றும் இதர வளங்களுடன் விற்பனைக்குண்டு

தொடர்பு -0783251872

## பிரத்தியேக கணினி வகுப்புகள்

MS.OFFICE, INTERNET, E-MAIL, GRAPHIC & WEB DESINING, C,C++, Java, VB6.0, VB. NET, VBC#, BTC...அனைத்து கணினி வகுப்புகளும் உங்கள் வீடுகளுக்கு வந்து கற்பித்துக்கொடுக்கப்படும். பூரண தமிழ் விளக்கத்துடனும், அனைத்து வயதினருக்கும் கற்றுக் கொடுக்கப்படும். தொடர்பு:-0776951680

CeyLabs Solutions (Pvt) Ltd.



குறைந்த கட்டணத்தில் தரமான கண்காணிப்பு கமரா பொருத்தும் சேவை

வணிகநிறுவனத்தை பாதுகாக்க.





வேலையாட்களை கண்காணிக்க.

* இணையத்தினூடாக எங்கிருந்தும் கண்காணிக்கும் வசதி.
* 100m வரை தெளிவான வீச்சு.
* காட்சி சேமிப்பு வசதி.
* சுழற்சி கமராக்கள்.
* Remote Zooming.



ஒரு வருட உத்தரவாதம்.

CeyLabs Solutions (Pvt) Ltd.
204, Brown Road,
Jaffna.
Hotline : 021-2221807
General : 077-2517223
Web : www.ceylabs.com
Email : contact@ceylabs.com


## மரண அறிவித்தல்



### இராசதுரை ஜெயானந்தம் (ஜெயா)

ஏழாலை மத்தியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட இராசதுரை ஜெயான்நதம் 08.12.2010 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசதுரை மற்றும் ப்வளமலர் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், கவிதாவின் அன்புக் கணவரும், சேரனின் அன்புத் தந்தையும், ஜீவானந்தம், சசியானந்தம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சசிகலா, நிசாந்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும், வைஸ்ணவி, பிரணவி ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2010) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழு கோயிலடி,
ஏழாலை மத்தி. (107244)

தகவல்:
மு.இந்திரன் (சிறியதந்தை).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னிலங்கைப் பாடசாலை அணிகளும் பங்குபற்றும் ருவென்ரி-20 கிரிக்கெட்

## யாழ்ப்பாணக் கல்லூரி நடத்துகிறது

வலி.வடக்கு, டிசெ.12

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி நோயல் விமலேந்திரன் வெற்றிக்கிண்ணத்துக்காக நடத்திவரும் பாடசாலை அணிகளுக்கு இடையேயான 'ருவென்ரி-20' கிரிக்கெட் போட்டியில் தென்னிலங்கைப் பாடசாலை அணிகளும் கலந்து கொள்வதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஏற்கனவே மூன்று ஆண்டுகள் இப்போட்டி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி விளையாட்டுத் துறையினால் நடத்தி முடிக்கப்பட்ட நிலையில் அடுத்தாண்டு முதல் தென்னிலங்கைப் பாடசாலைகளையும் இணைத்துப் போட்டிகளை நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் இரண்டு நாள்களுக்கான போட்டியாக அமைந்த இப்போட்டிகள் அடுத்தாண்டு முதல் தென்னிலங்கைப் பாடசாலை அணிகளும் கலந்து கொள்ளும் நிலையில் நான்கு நாள்களுக்கான போட்டியாக நடைபெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

யாழ். மாவட்டத்தில் இதுவரை காலமும் 'ருவென்ரி -20' கிரிக்கெட் போட்டிகள் யாழ். மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற நிலையில் முதல் தடவையாக அடுத்தாண்டில் தென்னிலங்கைப் பாடசாலை அணிகளும் இதில் கலந்து கொள்ளவுள்ளன.

முதல் தடவையாக தென்னிலங்கைப் பாடசாலைகள் அதிக எண்ணிக்கையில் யாழ் மாவட்டத்தில் நடைபெறும் 'ருவென்ரி -20' போட்டியில் கலந்துகொள்கின்றமை கிரிக்கெட் மேலும் பாரிய வளர்ச்சியை யாழ். மாவட்டத்தில் ஏற்படுத்தும் என்பதில் சந்தேகம் இல்லை. (86)

# வடமாகாண வீரர்களுக்கான 2 வார காலப் பயிற்சி முகாம்

## யோகபுரம் ம.வியில் ஆரம்பம்

வலிவடக்கு, டிசெ.12

வட மாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்கான இரண்டு வார காலத்திற்கான பயிற்சி நெறி கடந்த 8 ஆம் திகதி மல்லாவி யோகபுரம் மகா வித்தியாலயத்தில் ஆரம்பமாகியுள்ளது.

துணுக்காய் கோட்ட கல்விப் பணிப்பாளர் தலைமையில் ஆரம்பமாகிய இந்நிகழ்வில் வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டு அமைச்சின் செயலாளர் எஸ்.இளங்கோவன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு முதல் நாள் நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்தார்.

இப்பயிற்சி முகாமுக்கு வேண்டிய அனைத்து ஏற்பாடுகளையும் முன்னாள் விளையாட்டு வீரர் கலாநிதி என்.எதிர்வீரசிங்கம் மேற்கொண்டுள்ளார். இப்பயிற்சி முகாம் ஏனைய பயிற்சி முகாம்களைப் போன்று அல்லாமல் இரண்டு வாரங்களுக்கான வதிவிடப் பயிற்சி முகாமாக நடைபெறுவதுடன் பல்வேறு பாட அலகுகளையும் உள்ளடக்கியதாக அமைந்துள்ளது.

குறிப்பாக விளையாட்டுடன் தொடர்புடைய செயல் முறைகளைக் கொண்டுள்ளதுடன் ஆங்கில மொழி, கணித அறிவு, விஞ்ஞானம், மருத்துவம், விளையாட்டு விஞ்ஞானம் போன்ற பாடவிதானங்களையும் உள்ளடக்கிய பயிற்சி நெறிகளையும் இது கொண்டுள்ளது.

இப்பயிற்சி நெறியில் 36 வீரர்கள் வீராங்கனைகள், 4 விளையாட்டு அலுவலர்கள், 10 ஆசிரியர்கள் கலந்து கொண்டுள்ளார்கள்.

பயிற்சி நெறியின் இணைப்பாளராக வட மாகாண கல்வித் திணைக்களத்தின் விளையாட்டு உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். சத்தியபாலன் கடமையாற்றுகின்றார். (த-86)

# தப்பினார் சச்சின்




கேப்டவுன், டிசெ.12

பயிற்சியின் போது உமேஷ் யாதவ் வீசிய பந்து, சச்சின் தலைக் கவசத்தைப் பலமாக தாக்கியது. இதில், அவர் காயமின்றி தப்பினார்.

இந்தியா, தென்னாபிரிக்க அணிகள் மோதும், டெஸ்ட் தொடர் வரும் 16ஆம் திகதி துவங்குகிறது. இதில், பங்கேற்பதற்காக சில இந்திய வீரர்கள் முன்னதாகவே தென்னாபிரிக்கா சென்றுள்ளனர். இவர்களுக்கு கிறிஸ்டன் கடின பயிற்சிகளை அளித்து வருகிறார்.

நேற்றுமுன்தினம் உமேஷ் யாதவ் வீசிய பந்து, சச்சினின் தலைக் கவசத்தின் இடது பக்கத்தில் பலமாகத் தாக்கியது. உடனே யாதவ் உள்ளிட்டவர்கள் பதட்டம் அடைந்தனர். ஆனால் சச்சின் மிகவும் சாதாரணமாகத் தனது தலைக்கவசத்தைக் கழற்றி, ஏதாவது பாதிப்பு ஏற்பட்டிருக்கிறதா என்று பார்த்தார். பின் பயிற்சியைத் தொடர்ந்தார். அடுத்து ஸ்ரீ சாந்த் மிக கவனமாக வீசிய பந்து, சச்சினின் முழங்கால் அளவுக்கு மட்டும் எழும்ப, அனைவரும் சிரித்து விட்டனர். இது குறித்து சச்சின் கூறுகையில்,''வலை பயிற்சியின் போது இத்தகைய சம்பவங்களை தவிர்க்க முடியாது. காயம் ஏற்படாமல் இருக்க வேண்டும். அவ்வளவு தான்'' என்றார்.

# கராத்தே வீரர்கள் கௌரவிப்பு



யாழ்ப்பாணம், டிசெ.12

யப்பான் கராத்தே மொறோசிக்காய் கராத்தே கழகமும், அக்கடமி ஒவ் ஒறியண்டல் மாசல் ஆட்ஸ் கராத்தே கழகமும் இணைந்து இலங்கை கராத்தே சம்மேளத்தினால் நடத்தப்பட்ட 2010ஆம் ஆண்டுக்கான தேசிய கராத்தே சுற்றுப்போட்டியில் வெற்றி பெற்ற வீரர்கள், வீராங்கனைகளை கௌரவிக்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி இளைஞர் சேவைகள் மன்ற காரியாலயத்தில் நடைபெற்றது.

சென் சேய் விஜராஜ் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஜப்பான் மொறோசிக்காய் கராத்தே கழகத்தின் இலங்கை கிளையின் தலைவர் சென் சேய் கே.ராமச்சந்திரா கலந்து கொண்டார்.

கிளிநொச்சி பிரிகேட் தளபதி ஹத்துருசிங்க, கிளிநொச்சி பொலிஸ் நிலைய அதிகாரி சிறிவர்த்தன ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டனர். (த-23)

# கொலிங்வூட் கப்டன்




மெல்போர்ன், டிசெ.12

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 'ருவென்ரி-20' தொடருக்கு கோலிங்வூட் புதிய கப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார்.

அவுஸ்திரேலியா சென்றுள்ள இங்கிலாந்து அணி 2 'ருவென்ரி-20', 7 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. 'ருவென்ரி-20' போட்டிகள் அடுத்த மாதம் 12 (அடிலெய்ட்), 14ஆம் (மெல்போர்ன்) திகதிகளில் நடக்கிறது. ஒருநாள் தொடரின் முதல் போட்டி வரும் ஜன. 16ஆம் திகதி மெல்போர்னில் நடக்கிறது. இந்த இரண்டு தொடர்களுக்கான வீரர்களை, இங்கிலாந்து கிரிக்கெட் சபை அறிவித்தது.

இதில் ஒருநாள் தொடருக்கு ஸ்டிராஸ் கப்டனாக நீடிக்கப்பட்டுள்ளார். ஆனால் 'ருவென்ரி-20' தொடருக்கு கொலிங்வூட் புதிய கப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார். விக்கெட் காப்பாளர் கிரைக் கீஸ்வெட்டர், 'ருவென்ரி-20' போட்டிக்கு மட்டும் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இங்கிலாந்து அணி: ஸ்டிராஸ் (ஒருநாள் கப்டன்), கோலிங்வூட் ('ருவென்ரி-20' கப்டன்), கிரைக் கீஸ்வெட்டர், அண்டர்சன், இயான் பெல், டிம் பரஸ்னன், ஸ்டீவன் டேவிஸ், மார்கன், கெவின் பீட்டர்சன், அஜ்மல் ஷக்சாத், 'வான், ஜேம்ஸ் டிரட்வெல், கிறிஸ் டிரம்லட், டிராட், கிறிஸ் வோயக்ஸ், லுக்ரைட், மைக்கேல் யார்டி.

# கம்பீர் மகிழ்ச்சி



சச்சின், சேவாக், டோனி, ஹர்பஜன் போன்ற சிரேஷ்ட வீரர்கள் இல்லாமல் கம்பீர் தலைமையிலான இளம் அணி இம்முறை சாதித்து காட்டியுள்ளது.

இது குறித்து கப்டன் கம்பீர் கூறுகையில்,''இரண்டாவது துடுப்பாட்டம் செய்யும் போது ஆடுகளத்தில் திருப்பம் ஏற்படும் என நினைத்தேன். முதலிலேயே சுழலுக்கு ஒத்துழைக்கும் என நினைக்கவில்லை. இருப்பினும், தொடரை முழுமையாக வென்றதன் பெருமை, ஒட்டுமொத்த அணியைச்சாரும். துடுப்பாட்ட வீரர்கள், பந்துவீச்சாளர்கள் என ஒவ்வொரு இளம் வீரர்களும் தங்கள் பங்கிற்கு ஓட்டங்களைக் குவிப்பது, விக்கெட்டுகளை வீழ்த்துவது என தொடர்ந்து எதிர்பார்ப்புக்கு ஏற்ப அசத்தினர்'' என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேற்கிந்திய தீவுடனான ஆட்டம் ஒத்திவைப்பு

# இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையிடம் 50 மில்லியன் கோருகிறது 'ரென் ஸ்போட்ஸ்'

கொழும்பு, டிசெ.12

இலங்கை - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான ஒருநாள் கிரிக்கெட் தொடர் ஒத்திவைக்கப்பட்டமைக்கான இழப்பீடாக 50 மில்லியன் ரூபாவை வழங்குமாறு 'ரென் ஸ்போட்ஸ்' தொலைக் காட்சி நிறுவனம் இலங்கைக் கிரிக்கெட் கட்டுப் பாட்டுச் சபையிடம் கோரியுள்ளது.

இலங்கை - மேற்கிந்திய அணிகளுக்கிடையிலான 5 ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடர் கடந்த வியாழக்கிழமை அம்பலாந்தோட்டை சூரிய வெவ மைதானத்தில் ஆரம்பமாகவிருந்தது. எனினும் அங்கு பெய்த கடும் மழை காரணமாக மைதானத்தில் வெள்ளம் தேங்கி நின்றமையால் இந்தத் தொடரை ஒரு மாதத்துக்குப் பிற்போடுவதென இலங்கைக் கிரிக்கெட் கட்டுப் பாட்டுச் சபை அறிவித்திருந்தது.

இந்தத் தொடரை ஒளிபரப்புவதற்கான உரிமையை 'ரென் ஸ்போட்ஸ்' தொலைக் காட்சி நிறுவனம் பெற்றிருந்தது.

தொடர் பிற்போடப் பட்டதன் காரணமாகத் தனக்குப் பெரும் நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் இதற்கான இழப்பீடாக இலங்கைக் கிரிக்கெட் கட்டுப் பாட்டுச் சபை 50 மில்லியன் ரூபாவை வழங்கவேண்டும் என அந்த நிறுவனம் கோரியுள்ளது.

சூரியவெவ மைதானத்தில் வெள்ளம் தேங்கி நின்றமையால் அங்கு ஆட்டத்தை நடத்த முடியவில்லை. அத்துடன் இந்த மைதானம் இப்போது புதிதாக அமைக்கப்பட்டு வருகின்றது. அதன் புனர மைப்புப் பணிகள் இதுவரை பூர்த்தியாகவில்லை. தற்போது பணிகள் இடம்பெற்ற வண்ணமே உள்ளன.

இந்த மைதானத்தைப் பார்வையிட்ட மேற்கிந்தியத் தீவுகள் அணியும் அதிர்ச்சியடைந்துள்ளதாகத் தெரிவிக் கப்படுகின்றது. ஆட்டம் நடை பெறுவதற்கான சூழல் அந்த மைதானத்தில் இல்லை எனவும் மேற்கிந்தியத் தீவுகள் அணியினர் தெரிவித்துள்ளனர்.

இந்த மைதானம் முழுமையாக அமைத்து முடிக்கப்பட்டபின்னர் மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டு அரங்கு எனப் பெயர் சூட்டப்படவிருந்தது. அடுத்த ஆண்டு பெப்ரவரியில் நடைபெறவுள்ள உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் இரண்டு ஆட்டங்கள் இந்த மைதானத்தில் தான் இடம்பெறவுள்ளன.

இந்த மைதானத்தில் நடைபெறவிருந்த இலங்கை மேற்கிந்திய அணிகளின் ஒருநாள் தொடர் ஒத்தி வைக்கப்பட்டமை இலங்கை கிரிக்கெட் சபைக்குப் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

உலகக் கிண்ணப் போட்டிகளில் 12 ஆட்டங்கள் இலங்கையில் நடைபெறவுள் ளன. இதற்கென சர்வதேச கிரிக்கெட் கட்டுப் பாட்டுச்சபை இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு 75 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது.

ஒத்திவைக்கப்பட்ட இலங்கை - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளின் ஒருநாள் தொடர் 5 ஆட்டங்களில் இருந்து 3 ஆட்டங்களாகக் குறைக்கப் பட்டு ஜனவரி 31 ஆம் திகதி, பெப்ரவரி 3 ஆம், 5 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. நடைபெறும் மைதானம் இது வரை தீர்மானிக் கப்படவில்லை. (த)

# தொடரை வென்றது இந்தியா

இந்தியா மற்றும் நியுசிலாந்து அணிகளுக்கு இடையிலான ஒரு நாள் போட்டித் தொடரை இந்தியா அபாரமாக வெற்றி கொண்டது. 5 ஒரு நாள் போட்டி தொடர்களை கொண்ட போட்டியில் நேற்றுமுன்தினம் இறுதி போட்டியில் இந்திய அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் நியுசிலாந்து அணியை வீழ்த்தியதன் மூலம் 5-0 என்ற அடிப்படையில் தொடரை தனதாக்கிக் கொண்டது.



சென்னை சிதம்பரம் மைதானத்தில் இரவு பகல் ஆட்டமாக நடைபெற்ற போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிப் பெற்ற நியுசிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 27 ஓவர்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 103 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

துடுப்பாட்டத்தில் அதிகூடுதல் ஓட்டங்களாக ஸ்ரயிர்ஸ் 24 ஓட்டங்களையும், ஹவ் 23 ஓட்டங்களையும் பெற்றனர். ஏனைய வீரர்கள் பெரிதாக சோபிக்கவில்லை.

இந்திய அணியின் பந்து வீச்சு அதிரடியாக காணப்பட்டது. அஸ்வின் 3 விக்கெட்டுகளையும், நேரா, யுவராஜ் மற்றும் பதான் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

104 எனும் வெற்றி இலக்கை அடைய பதில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 21.1 ஓவர்களில் 2 விக்கெட்டுகளையும் இழந்து 107 ஓட்டங்களை பெற்று 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

துடுப்பாட்டத்தில் கம்பீர் ஓட்டம் எதுவும் பெறாது ஆட்டமிழந்து அதிர்ச்சியளித்தார். இருப் பினும் தொடர்ந்த வீரர்களான பட்டேல் 56 ஓட்டங்களையும், யுவராஜ் 42 ஓட்டங்களையும் பெற்று அணியை வெற்றி பெற செய்தனர்.

இங்கிலாந்து அணியின் பந்து வீச்சில் மெக்கலம் மற்றும் வெற்டோரி ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுகளை கைப்பற்றினர்.

இந்நிலையில் இந்திய அணி தொடரை கைப்பற்றியதோடு, போட்டியின் ஆட்டநாயகனாக யுவராஜ் தெரிவு செய்யப்பட்டதோடு, தொடரின் ஆட்டநாயகனாக கம்பீர் தெரிவு செய்யப்பட்டார். (த)

# மைக்கேல் பயருக்கு வாய்ப்பு

இங்கிலாந்துக்கு எதிராக, பேர்த் டெஸ்டில் விளையாடும் ஆஸ்திரேலிய அணியில் சுழற்பந்துவீச்சாளர் மைக்கேல் பயர் வாய்ப்பு பெற்றுள்ளார்.

ஆஸ்திரேலியா வந்துள்ள இங்கிலாந்து அணி, வரலாற்று சிறப்பு மிக்க 5 போட்டிகள் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. பிரிஸ்பேனில் நடந்த முதல் டெஸ்ட் சமனானது.

அடிலெய்டில் நடந்த 2 ஆவது டெஸ்டில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்று 1-0 என முன்னிலை வகிக்கிறது. இந்நிலையில் 3 ஆவது டெஸ்ட், வரும் 16 ஆம் திகதி பேர்த்தில் நடக்கிறது. இதில் பங்கேற்கும் 12 பேர் கொண்ட வீரர்களை ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை அறிவித்தது.

**ஆஸ்திரேலிய அணி:**

ரிக்கி பொண்டிங் (கப்டன்), மைக்கேல் கிளார்க் (துணைக் கப்டன்), ஷேன் வாட்சன், பிலிப் ஹியுஸ், மைக்கேல் ஹசி, ஸ்டீவன் ஸ்மித், பராட் ஹாடின், மைக்கேல் பயர், ரேயான் ஹாரிஸ், மிட்செல் ஜான்சன், பீட்டர் சிடில், பென் ஹில்பென்ஹாஸ்.




# செஸ் ஆட்டம் சமநிலையில்



லண்டன் செஸ் கிளாசிக் தொடரின் 2ஆவது சுற்று ஆட்டத்தை, இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த் சமநிலை செய்தார்.

லண்டனில் உள்ள கென்சிங்டன் நகரில், கிளாசிக் செஸ் தொடர் நடக்கிறது. இதன் 2ஆவது சுற்றில் இந்தியாவின் ஆனந்த், இங்கிலாந்தின் டேவிட் ஹோவெல் மோதினர். விறுவிறுப்பான இப்போட்டி, 50ஆவது நகர்த்தலின் போது சமநிலை ஆனது. இதன்மூலம் இரண்டு சுற்றின் முடிவில் ஆனந்த் 2 புள்ளியுடன் 6ஆவது இடத்தில் உள்ளார். மூன்றாவது சுற்றில் ஆனந்த், நோர்வே வீரர் மக்னஸ் கார்ல்சனை சந்திக்கிறார். (23)

# சவாலை சந்திக்கத் தயார்

நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் அடுத்தடுத்து சதம் அடித்த இந்திய சுழல் பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங் விரைவில், தென் ஆப்ரிக்க வீரர்களின் சவாலையும் சந்திக்க தயாராக இருக்கிறார் என்று தெரிவித்துள்ளார்.

அண்மைக் காலமாகப் பந்துவீசி ஏமாற்றி வந்த இவர், அதிக விமர்சனங்களை சந்தித்து வந்தார். இந்நிலையில் நியூசிலாந்து டெஸ்ட் தொடரில் புதிய அவதாரம் எடுத்தார். அடுத்தடுத்து இரண்டு சதங்கள் உட்பட 315 ஓட்டங்கள் குவித்தார்.

விரைவில் தொடங்க உள்ள தென் ஆபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரையும் நம்பிக்கையுடன் எதிர்கொள்ளத் தான் தயாராக இருக்கிறார் என்று தெரிவித்துள்ளார். இதுகுறித்து ஹர்பஜன் அளித்த பேட்டி:

கே: நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில், தொடர் நாயகன் விருது வென்றது எப்படி உள்ளது?

ப: மகிழ்ச்சியாகவும், வித்தியாசமாகவும் உள்ளது. தேசத்துக்காக பந்துவீச்சுடன் சேர்ந்து ஓட்டங்கள் எடுப்பது எப்போதும் சற்று விசேடம் தான். எனது திறமை மீது எனக்கு நம்பிக்கை உள்ளது. தென் ஆப்ரிக்காவிலும் ஓட்டங்கள் சேர்க்க முடியும் என நம்புகிறேன்.

கே: அடுத்தடுத்த சதத்துக்குப் பின், உங்கள் மீது அதிக எதிர்பார்ப்பு ஏற்பட்டுவிட்டது. இதை எப்படி நிறைவேற்றுவீர்கள்?

ப: எனது துடுப்பாட்டம் மீது, அணி எப்போதுமே நம்பிக்கை வைத்துள்ளது. என்னால் முடிந்த அளவுக்குப் பங்களிப்பை தருவேன் என்பது எல்லோருக்கும் தெரியும். இதைத்தான் ஆமதாபாத், ஐதராபாத் டெஸ்ட் போட்டிகளில் சதம் அடித்து நிறைவேற்றினேன். இது மிகவும் உற்சாகம் தருகிறது. தொடர்ந்து இதுபோன்று ஓட்டங்கள் சேர்க்க முயற்சிப்பேன்.

கே: பந்து வீச்சில் 500 விக்கெட்டுக்களை வீழ்த்த வேண்டும் என்பது குறித்து ஏதாவது இலக்கு வைத்துள்ளீர்களா?

ப: 500 விக்கெட்டுக்களை குறித்து எண்ணம் மனதில் உள்ளது. ஒருவேளை அப்படி நடந்தால் மகிழ்ச்சிதான். இதற்காக கடினமாகப் போராட வேண்டும். ஒவ்வொரு தொடரிலும் 15 [illegible] விக்கெட்டுகளை வீழ்த்த வேண்டும். தொடர்ந்து சிறப்பான பந்துவீச்சு இருந்தால் கட்டாயம் சாதிக்க முடியும்.

கே: எதிர்வரும் தென்னாபிரிக்கத் தொடர் சவால் நிறைந்ததாக இருக்குமா?

ப: தென்னாபிரிக்க ஆடுகளங்கள் சுழலுக்கு அதிகம் கைகொடுக்காது என்றாலும், இந்தச் சவாலைச் சந்திக்கத் தயாராக உள்ளேன். இதுபோலத் தான் நியூசிலாந்து மண்ணும் சுழலுக்கு ஒத்துழைக்காது என்றனர். ஆனால் அங்கு எங்கும் இல்லாததை விட அதிக விக்கெட்டுகள் (16) வீழ்த்தினேன். அதேபோல இங்கும் இந்திய அணியின் துருப்பு சீட்டாக இருப்பேன் என்று நம்புகிறேன்.



கே: தென்னாபிரிக்க தொடரில் இந்திய அணிக்கு என்ன தேவை?

ப: இத்தொடர் மிகவும் சவால் நிறைந்தது. சாதாரணமாகவே, தென்னாபிரிக்க அணி வலுவானது. அதிலும் அதன் சொந்த மண் என்பதால் கூடுதல் பலத்துடன் இருக்கும். இந்திய அணியின் பந்துவீச்சு மற்றும் களத்தடுப்புக்கு இங்கு சோதனை காத்திருக்கிறது. ஆனால் இந்தியா, எந்த அணியையும், உலகின் எந்த இடத்திலும் வீழ்த்தியுள்ளது. இந்த வெற்றிநடையைத் தொடர, வீரர்கள் பாடுபட வேண்டும் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறியாமை எனும் இருளிலிருந்து நாம் விடுபடுவது எப்போது?

தங்களைத் தாங்களே மேதாவிகள் என்று சொல்லிக்கொண்டு மற்றவர்களை மட்டம் தட்டிக் கதைக்கும் யாழ்ப்பாணத்தவர்களைப்போல உலகில் வேறு எங்கும், எவரும் இருக்க மாட்டார்கள். தங்களை யூதர்களுடன் ஒப்பிடும் யாழ்ப்பாணத்தவர்கள் பல தருணங்களிலும் அறிவு முதிர்ச்சியின்மையைத் தொடர்ச்சியாக நிரூபித்து வருகின்றனர். யதார்த்தத்தைப் பேசுபவர்கள் யாழ்ப்பாணத்தவர்கள்'' என்ற நாமம் சுட்டி அழைக்கவும் அவர்கள் தவறுவதில்லை.

கடந்த வாரம் நடைபெற்ற மூன்று விடயங்களை எடுத்து விரிவாக ஆராய்ந்து பார்த்தால் யாழ்ப்பாணத்தவர்களின் விவேகம் என்ன என்பதை இலகுவாகப் புரிந்து கொள்ளலாம்.

கடந்த வாரம் மூன்று விடயங்கள் ஊடகங்களில் - சர்வதேச ரீதியில் மிகவும் முக்கிய இடத்தைப் பிடித்திருந்தன.

1. விக்கிலீக்ஸ்
2. ஜனாதிபதியின் லண்டன் விஜயம்
3. மாவீரர் தினம்

முதலாவதாக விக்கிலீக்ஸ், என்ற இணையத் தளத்தைப் பற்றி பார்ப்போம். விக்கிலீகஸ் என்ற இணையத்தளத்தைப் பற்றி ஊடகங்களில் அதிலும் குறிப்பாக தமிழ் ஊடகங்களில் பரபரப்பான செய்திகளாக கடந்த வாரத்தில் வெளிவந்தன. விக்கிலீக்ஸ் இணையத்தில் வெளியான தகவல்கள் யாவும் இரண்டு மூன்று வருடங்களுக்கு முன்னர் நடைபெற்ற சமாச்சாரங்கள் யோகர் சுவாமிகளின் மொழியில் சொன்னால் ''எப்பவோ முடிந்து காரியம். குப்பைத் தொட்டிகளுக்குள் போடப்பட்டிருந்த கடிதங்களையே விக்கிலீக்ஸ் வெளியிட்டது என்றும் சொல்லலாம்.

விக்கிலீக்ஸில் வெளியான விடயங்கள் குறித்து கருத்துத் தெரிவித்த அமெரிக்க இராஜங்கச் செயலர் ஹிலாரி கிளின்டன், இது சாதாரணமான இராஜ தந்திரியின் கடமை என்று கூறியுள்ளார்.

விக்கிலீக்ஸ் எதையுமே புதிதாகக் கண்டுபிடிக்கவில்லை. அத்துடன் விக்கிலீக்ஸ் வெளியிட்ட தகவல்களால் ஈழத்த தமிழர்களுக்கு எதுவித நன்மையும் ஏற்படப்போவதுமில்லை.

அடுத்ததாக, ஜனாதிபதி மஹிந்தவின் லண்டன் விஜயத்தைப் பார்ப்போம். ஜனாதிபதி மஹிந்த லண்டன் சென்ற போது அங்கு வாழந்து வரும் புலம் பெயர்ந்த விடுதலைப் புலிகளின் இயக்க ஆதரவாளர்கள் புலிக்கொடிகளைத் தாங்கியவாறு ஜனாதிபதிக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் நடத்தினர். இவர்கள் தமிழ் ஆதரவாளர்கள் என்று யாராவது சொல்லக்கூடும்.

இவர்கள் உண்மையில் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகச் செயற்படுவர்களாயிருந்தால் புலிகள் இயக்கத்தின் கொடியை தூக்கிப் பிடித்திருக்கத் தேவையில்லை. இவர்களது புலிக் கொடியுடனான போராட்டம் தான் முள்ளிவாய்க்காலில் இனச் சுத்திகரிப்பு நடைபெற்ற போது உலகம் கண்ணை மூடிக் கொண்டு பார்த்துக்கொண்டிருந்ததற்கான காரணங்களில் ஒன்று என்பதை இன்றும் இவர்கள் உணர்ந்து கொள்ளவில்லைப் போலிருக்கிறது.

இவர்கள் லண்டனில் ஜனாதிபதி மஹிந்தவுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்திக்கொண்டிருக்க, தமிழ் இணையத்தளங்கள் ''மஹிந்த சுற்றி வளைப்பு, சுற்றி வளைப்பை உடைத்துக் கொண்டு மஹிந்த தப்பியோட முயற்சி'' என்று செய்தி வெளியிட்டுக் கொண்டிருந்தன. தமிழ் இணையத் தாளங்களை மட் டும் பார்க்கும் இனப்பற்றாளர்களோ ஒரு படி மேலே போய், ''லண்டனில் மஹிந்தவைக் கைது செய்யப் போகிறார்களாம்!மஹிந்த வைக் கைது செய்து விட்டார்களாம்'' என்று தமக்குள் பேசிக்கொண்டனர்.

அடுத்ததாக மாவீரர் தினம். நவம்பர் 27 ஆம் திகதி தமது உயிர்களைத் தியாகம் செய்த புலிகளை நினைவு கூர்ந்து மாவீரர் தினம் கடந்த இருபது வருடங்களாக இலங்கையின் வடகிழக்குப் பகுதிகளில் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. இந்த ஆண்டும் யாழ்ப்பாணத்தில் மாவீரர்களை நினைவு கூர்ந்து துண்டுப்பிரசுரம் விநியோகிக்கப்பட்டதாகவும் ஒரிரு இடங்களில் சுடர் ஏற்றப்பட்டதாகவும் வதந்திகள் பரவின.

தாண்டவன்

விளைவு யாழ்ப்பாணத்திலுள்ள இந்து, கிறிஸ்தவ ஆலயங்களில் மணி அடிக்காமலே பூசைகள் நடைபெற்றன. இவ்வாறான செயல்களால் யாருக்கு என்ன இலாபம்?

யாழப்பாணத்தில் அல்லது வடக்கு - கிழக்கில் எத்தனை மாவீரர் குடும்பங்கள் ஒரு வேளை சோற்றுக்காகத் திண்டாடுகின்றன? உண்மையில் இவர்கள் மாவீரர்களுக்கு ஏதாவது செய்ய விரும்பினால் அல்லற்படும் மாவீரர் குடும்பங்களைத் தேடிச்சென்று அவர்களது பசியைப் போக்க உதவுவதே உண்மையில் மாவீரர்களுக்குச்செலுத்தும் அஞ்சலி.

## கௌரவிப்பு விழா

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம் நடத்தும் 13ஆவது தொடர் ஆண்டின் கல்விசார் சேவைத் திட்டத்தில் கீழ் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த வலி. தென் மேற்கு பிரதேச மாணவர்களைக் கௌரவிக்கும் விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறும்.

லயன் எஸ்.ஜே.செல்வராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவுக்கு முதன்மை விருந்தினராக யாழ்.பல்கலைக் கழக வெளிவாரிப் பட்டப்படிப் புப் பீடாதிபதி பேராசிரியர் எஸ். சத்தியசீலனும், சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய் கோட் டக் கல்விப் பணிப்பாளர் இ.கந்த சாமியும், சர்வதேச லயன்ஸ் கழ கங்களின் மாவட்டத் தலைவர் லயன்.வி.மாணிக்கமும், யாழ். போதனா வைத்தியசாலை நிர் வாக உத்தியோகத்தர் எஸ்.பிரசாத் ஆகியோரும் கலந்துகொள்வர்.

கௌரவ விருந்தினர்களாக சர்வதேச லயன்ஸ் கழகங்களின் மாவட்டம் 306 பி1 பிரிவின் இரண்டாவது உப ஆளுநர் லயன் எஸ்.எஸ்.தங்கராஜா, வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராசேந்திரம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் சித்தியடைந்த மாணவர்கள், கற்பித்த அதிபர், ஆசிரியர் ஆகி யோர் கௌர விக்கப் படவுள்ளனர்.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எம்மிடம் தரம் 1- 4 முதல் O/L வரை கற்று எமக்குப் பெருமை சேர்த்துத் தந்து கா.பொ.த. உயர்தர உயிரியல் பிரிவில் சித்தி பெற்று மருத்துவத் துறைக்கு தெரிவு செய்யப்பட்ட எமது நிறுவன இயக்குநர் சரா.புவனேஸ்வரன் அவர்களின் மகள்

### செல்வி பு.துவாரகா

அவர்களை வாழ்த்துவதோடு இவரை வழிப்படுத்திய யாழ்.சயன்ஸ் ஹோல் ஆசிரியர்களையும் பாராட்டுகின்றோம்.

இவருடன் மருத்துவத்துறைக்கு (5பேர்) பொறி யியல் துறைக்கு(4பேர்) வர்த்தகத்துறைக்கு (6பேர்) கலைத்துறைக்கு (16பேர்) தெரிவு செய்யப்பட்ட எமது ஏனைய மாணவர்களையும் வாழ்த்துகின்றோம்.

''இளமையில் கல்வி சிலையில் எழுத்து''

சயன்ஸ் அக்கடமி,
நல்லூர், அரியாலை.

வாழ்த்துவோர்
ஆசிரியர்கள்.



தேவை

அரைக்கும் ஆலை, ரயர் வேக்ஸ், மோட்டார் சைக்கிள் சுத்திகரிப்பு என்பவற்றில் அனுபவம் உள்ள வரும் பழக விரும்புபவர்களும் தேவை.
தொடர்பு: பிருந்தா மில்ஸ், இல.18, றக்கறோட், யாழ்ப்பாணம், தொ.பே.: 0772231096



GENUINE FINANCIAL SPONSORSHIP
From Trusted and Recognised Banks
Reasonabale Interest
UK / CANADA / AUSTRALIA
100% Visa Guaranteed
Contact Now : 0777113777





புதுக்கடைத் திறப்பு விழா
அழைப்பு

இன்று (12.12.2010)
ஞாயிற்றுக்கிழமை மு.ப.11 -12 மணி வரையுள்ள சுபவேளையில் சங்கானை நகரில் செலான் வங்கிக்கு அருகில் எம்மால் அமைக்கப்பட்ட நவீன நகைகளின் காட்சியறையான

புதிய வினோ நகைமாடம்

எனும் புதிய ஸ்தாபனத்தினை செலான் வங்கியின் சங்கானை கிளையின் முகாமையாளர் திரு.இராசதுரை சிறிரமணா (ரமணா) அவர்களால் இனிதே திறந்து வைக்கப்படவுள்ளது. அத்தருணம் தாங்களும் வருகைதந்து வாழ்த்துக்களைத் தெரிவிக்கும் வண்ணம் அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரதான வீதி, சங்கானை.
தொ.பே: 0776002588

உரிமையாளர்:
மு.வினோதன்

(107248)



புதுக்கடை திறப்பு விழா

இன்று (12.12.2010) ஞாயிற்றுக்கிழமை
காலை 6.21 மணியளவில்
இல. 379, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தில்.

ஆதித்தியா
சைவ உணவகம்



என்னும் ஸ்தாபனத்தை ஆரம்பிக்கவுள்ளதால்
அத்தருணம் வருகைதந்து விழாவினை சிறப்பிக்கும்
வண்ணம் அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்.

★ இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தரும்படி வேண்டுகின்றோம்.

ஆதித்தியா சைவ உணவகத்தினர்



NALIN INFORMATION TECHNOLOGIES PVT LTD

2010 ம் ஆண்டு நிறைவை முன்னிட்டு
மிகக்குறைந்த விலையில் கணனிகள் மற்றும் அதன் உதிரிப்பாகங்கள்

| | A (39800/-) | B (44900/-) | C (58800/-) |
|---|---|---|---|
| MOTHER BOARD | ASUS G31 | ASUS P5G41T | INTEL DH55HC |
| PROCESSOR | 3.06 GHz DUAL CORE | 3.06 GHz DUAL CORE | CORE i3 |
| RAM | KING DDR2 1GB 800 | KING DDR3 2GB 1333 | KING DDR3 2GB 1333 |
| HARD DISK | SAMSUNG 500GB | SAMSUNG 500GB | SAMSUNG 500GB |
| DVD WRITER | SAMSUNG | SAMSUNG | SAMSUNG |
| MONITOR | 16" ACER LCD | 16" ACER LED | 19" SAMSUNG LED |
| KEY/MOUSE | MULTI LANGUAGE | MULTI LANGUAGE | MULTI LANGUAGE |
| CASING | POWER LOGIC | POWER LOGIC | POWER LOGIC |

கணனிகள் ஒவ்வொன்றிற்கும் 3 வருட உத்தரவாதம் வழங்கப்படுவதுடன் B, C கணனிகளிற்கு 4GB Kingston or HP Flashdrive, Card Reder இலவசமாக வழங்கப்படும்

| | | |
|---|---|---|
| SAMSUNG 20" LED MONITOR | 16500/- | (3Y) |
| SAMSUNG 19" LED MONITOR | 14800/- | (3Y) |
| LITEON LABELTAG DVD WRITER | 3750/- | (1Y) |
| FLASHDRIVE HP 4GB | 1500/- | (1Y) |
| FLASHDRIVE Kingston 4GB | 1200/- | (1Y) |
| HSDPA MODEM | 5200/- | (1Y) |

Processor i3, i5, Hard disk, Memory, LCD, LED, Web Cam என்பன மிகவும் மலிவான விலையில்

மேலதிக விபரங்களை எமது நிறுவனத்தில் நேரடியாக பெற்றுக் கொள்ள முடியும்

NALIN information Technologies PVT LTD

PARAMESWARA JUNCTION, TP: 021 2221166, 0777667974


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்க் குற்றங்கள் தொடர்பாக

# பிரிட்டனில் வெளிநாட்டுத் தலைவர்களுக்கு எதிராக இனிமேல் வழக்குத் தொடர முடியாது

## விரைவில் சட்டத்திருத்தம் வருகிறது

லண்டன், டிசெ.12

பிரிட்டனுக்கு வெளியே உள்ள நாடுகளில் இடம்பெற்ற யுத்தக்குற்றங்கள் தொடர்பாகக் குறிப்பிட்ட நாடுகளின் தலைவர்களுக்கு எதிராக பிரிட்டன் நீதிமன்றங்களில் வழக்குத் தொடர முடியாது. வெளிநாடுகளைச் சேர்ந்த பொது மக்களுக்குக் கிட்டியிருந்த இந்த உரிமையை 2011 ஆம் ஆண்டு மே மாதத்துக்கு முன்னர் நீக்கிக்கொள்ள அந்நாட்டு அரசு நடவடிக்கை மேற் கொண்டு வருகின்றது.

இதற்கு முன்னர் இஸ்ரேல் மற்றும் இந்தோனேசிய நாடுகளின் அரசுத் தலைவர்கள் பிரிட்டனுக்கு விஜயம் செய்த சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு எதிராக யுத்தக்குற்றமிழைத்ததான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி அவர்களுக்கு எதிராக நீதிமன்றப் பிடியாணை உத்தரவைப் பெற்றுக்கொள்வதற்கு பிரிட்டனில் உள்ள சில தரப்பினர் முயற்சித்து வருகின்றனர்.

இதன் காரணமாக பிரிட்டனுக்கும் இஸ்ரேல் மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகளிற்குமிடையே பாரதூரமான இராஜ தந்திரச் சிக்கல்கள் உருவாகின.

இதன் காரணமாக பிரிட்டனுக்கு வெளியே இடம்பெற்ற யுத்தக்குற்றங்கள் தொடர்பாக வெளிநாட்டவர்களுக்கு எதிராகப் பிரிட்டன் நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்வதற்கான உரிமையை வழங்கும் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்வதென அந்நாட்டு அரசு முடிவுசெய்துள்ளது.

இது தொடர்பான புதிய சட்ட மூலமொன்று தற்போது அரசால் தயாரிக்கப் பட்டுள்ளது. அப் புதிய சட்டத்தின் படி பிரிட்டனுக்கு வெளியே இடம்பெறும் யுத்தக் குற்றங்கள் தொடர்பாக நீதிமன்றத்தின் பிடியாணைக்கு விண்ணப்பிப்பதற்கு முன்னர் பிரிட்டன் அரசின் குற்றங்களுக்கான வழக்குகளுக்குப் பொறுப்பான பணிப்பாளர் நாயகத்தின் முன் அனுமதியைப் பெற்றாக வேண்டும். அத்தகைய அனுமதியின்றி நீதிமன்றத்தின் அனுமதிக்காக விண்ணப்பித்தல் தடைசெய்யப்படுகிறது.

அண்மையில் இலங்கை ஜனாதிபதி லண்டனுக்குவிஜயம்மேற்கொண்டவேளையில் அவருக்கு எதிராக இத்தகைய நீதிமன்ற பிடியாணையொன்றைப் பெற்றுக் கொள்ள விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆதரவாளர்கள் முயற்சித்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 2011 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29ஆம் திகதி பிரிட்டனில் இடம்பெறவுள்ள இளவரசர் வில்லியம் மற்றும் கேட்மிட்லன் ஆகியோரின் திருமண வைபவத்தில் கலந்துகொள்ள வெளிநாடுகளின் அரச பிரமுகர்கள் அழைக்கப் படவுள்ளதால் இத்தகைய சம்பவங்கள் எதுவும் இடம்பெறாது தவிர்ப்பதற்காக அரசு குறிப்பிட்ட இப்புதிய சட்டமூலத்தை மிக விரைவாக நிறைவேற்றிக்கொள்ளும் எனத் தெரியவருகின்றது. (ஒ-22)

## ஜி.சீ.ஈ. பரீட்சைப் பணிகள் பூர்த்தி

கொழும்பு,டிசெ.11

நாளை ஆரம்பமாகும் ஜி.சீ.ஈ. (சாதாரண) தரப் பரீட்சைக் கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியாகியுள்ளன என்று வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வன்னி உட்பட சகல மாவட்டங்களிலும் அமையும் இணைப்பு நிலையங்களுக்கு வினாத்தாள்கள் நேற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. சகல பணிகளும் பூர்த்தியாகிவிட்டன என்றும் அவர் கூறினார்.

பரீட்சைக்குத் தோற்றும் மாண வர்கள் நல்ல பெறுபேறுகளைப் பெறுவதற்கு வாழ்த்துக்களையும் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ஒ-ஐ)

## அந்தணர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணப்படுகின்றன.

சிவானந்த சர்மாவுக்கு காலிலும் வயிற்றுப் பகுதியிலும் ஜெகானந்தசர்மா வுக்கு காலிலும் இடுப்புப் பகுதியிலும் சூட்டுக் காயங்கள் காணப்படுகின்றன.

சூட்டுச் சத்தங்களைக் கேட்டு முன் வீட்டில் இருந்து அங்கு விரைந்துவந்த அவரது மூத்த மகனான சிவதாண்ட சர்மாவையும் அந்த நபர்கள் சுடமுனைந்தனர்.

அவர் மன்றாடியதை அடுத்து அவரது கையில் இருந்த இரண்டு மோதிரங்களையும் கைச்சங்கிலியையும் பறித்துச் சென்றனர் முகமூடி நபர்கள்.

ஆனால் வீட்டில் நகை எதனையும் கொள்ளையிடவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. சம்பவத்தை அடுத்து அங்கு படையினரும் பொலிஸாரும் வந்து விசாரணை களை மேற்கொண்டனர்.

முகமூடி நபர்களைச் சுற்றிவளைக்கும் நோக்கத்துடன் படையினர் காங்கேசன்துறை வீதி ஊடாகச் சென்ற சகல வாகனங்களையும் மறித்துச் சோதனையிட்டனர். எனினும் எவரும் கைது செய்யப்பட்டதாகத் தெரியவரவில்லை.

(ஒ-ஐ-9-29-86)

## மழையால்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேட்டபோது -

மக்கள் மீள் குடியமர்வுக்காக கண்ணிவெடி அகற்றும் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப் பட்டன. ஹலோ ரஸ்ட், டெனிஷ், இராணுவத்தின்பொறியியற்பிரிவு என மூன்று குழுக்கள் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட் டுள்ளன.

அண்மையில் பெய்த கடும் மழையால் நிலம் ஈரலிப்பாக உள்ளது. இதன் காரணமாக கண்ணி வெடிகளை அகற்ற முடியாத நிலை காணப்படுகிறது. இதனால் தற்சமயம் அந்தப் பணி தற் காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

நிலத்தில் ஈரலிப்புத் தன்மை நீங்கிய பின்பே கண்ணி அகற்றும் பணி ஆரம்பிக்கப்படும்.

இதன் காரணமாக உடனடி யாக மீள் குடியமர்வுக்கான வாய்ப்பு இல்லை - என்று தெரிவிக்கப் பட்டது. (ஒ-ஐ)

## ஐரோப்பிய... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுக்காகதான் வெளி நாடுகளுக்கு சென்று குடியேறி உள்ளனர். வெளிநாடுகளில் ஆடம்பரமாக வாழ்ந்து கொண்டு இலங்கைக்குள் தனி நாடு ஒன்றை கோரி நிற்கின்றார்கள்.

பிரிட்டன் அமெரிக்கா, நோர்வே மற்றும் ஏனைய ஐரோப்பிய நாடுகளின் அரசுகள் தேர்தல் காலங்களில் புலம் பெயர் தமிழர்களின் வாக்குகளைப் பெறு வதற்காக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் தங்கி இருக்கின்றன. புலி ஆதரவு சக்திகளின் நிதி தேர்தல் பிர சாரங்களின்போது இந்நாடுகளின் அரசு களுக்கு தேவையாக உள்ளது. அதனால் தான் புலிகளை கண்டு கொள்ளாமல் இருக்கின்றன.

அங்குள்ள அரசியல் முக்கியஸ்தர்கள் தமிழ் மக்களின் வாக்குகளுக்காகவும், புலிகள் இயக்கத்தால் தேர்தல் பிரசாரங் களுக்காக வழங்கப்படுகின்ற நிதிக்காக வுமே முக்கியமாக புலிகளை ஆதரித்து வந்தனர் என்பது தற்போது பகிரங்கமாகி விட்டது.

பிரிட்டனில் தற்போது கருத்துச் சுதந் திரம் இல்லை. அமெரிக்காவின் இரகசிய ஆவணங்களை வெளியிட்டு வரும் 'விக்கிலீக்ஸ்' இணையத்தளத்தின் நிறுவுநரை பிரிட்டன் கைது செய்துள்ளது. இவரைக் கைதுசெய்வதற்குப் பதி லாக ஆப்கானிஸ்தான், ஈராக் போன்ற நாடுகளில் அமெரிக்காவால் மேற்கொள் ளப்பட்டன என்று கூறப்படும் யுத்தக் குற்றச் சாட்டுக்கள் குறித்து பிரிட்டன் நீதி விசாரணை நடத்தி இருக்க வேண் டும். - என்றார் சம்பிக்க. (ஒ-ஐ)

## தீர்வுக்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இணைந்து செயலாற்றுவது என்றும் நேற்றைய கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

கூட்டமைப்பின் கொழும்பு அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது. பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பித்த கூட்டம் இரண்டு மணி நேரம் நீடித்தது.

''இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வுகுறித்து தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பிற்குள் ஒரே கருத்து நிலவுகிறது. ஆனால், அரங்கத்தில் உள்ள ஒவ்வொரு கட்சிகளும் ஒவ்வொரு கருத்தைக் கொண்டுள்ளன. எனவே தீர்வுக்கான அடிப்படைகள் குறித்து அனைத்துத் தமிழ்க் கட்சிகளுக்கும் இடையில் ஓர் இணக் கப்பாட்டைக் கொண்டுவருவதற்கான முயற்சியே இப்போது மேற்கொள்ளப் பட்டுள்ளது'' என்று கூட்டமைப்பின் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேந்திரன் தெரிவித்தார்.

